# இலக்கியத் திறனாய்வியல்

**நோக்கம்**

1. இலக்கியக் கோட்பாடுகளையும் கொள்கைகளையும் அறிதல்
2. இலக்கியத் திறனாய்வின் வகைகளைத் தெளிவுறப் புரிதல்
3. இலக்கியத் திறனாய்வின் பயன்களை அறிந்து கொள்ளுதல்

**முன் தேவை**

1. இலக்கியம் குறித்த தெளிவு
2. திறனாய்வு குறித்த அடிப்படை அறிவு
3. இளங்கலையில் இலக்கியத்திறனய்வைக் கற்று அறிந்திருத்தல்

**கற்றலின் பயன்**

1. திறனாய்வு மற்றும் அதன் வகைகளைப் பற்றிய ஆழமான அறிவு பெறல்.
2. இலக்கியக்கொள்கைகள், கோட்பாடுகள் குறித்தத் தெளிவு பெறல்
3 இலக்கியத்தில் சரியான அணுகுமுறையைப் பயன்படுத்தித் திறனாய்வு செய்யும் தகுதி பெறுதல்
4 திறனாய்வின் மூலம் தமிழ் இலக்கியத்தின் தரத்தை உலகறியச் செய்தல்

**அலகு: 1**

இலக்கியம் சொற்பொருள் விளக்கம் - இலக்கியம் சொல்லாட்சி - இலக்கியம் பற்றி அறிஞர்கள் விளக்கம் - நிலைபெறும் இலக்கியங்கள் -இலக்கியத்தின் பயன்கள் - இலக்கியத் தோற்றத்திற்கான காரணங்கள் இலக்கியமும் வாழ்க்கையும் - இலக்கியப் பாகுபாடுகள்:

**அலகு: 2**

இலக்கியக் கொள்கை விளக்கம் - இலக்கியக் கோட்பாடு - இலக்கியக் கொள்கைகளால் ஏற்படும் நன்மைகள் - இலக்கியக் கொள்கைகளின் வகைகள் - இலக்கியத் திறனாய்வு - இலக்கியவரலாறு - உறவுகள்.

**அலகு : 3**

மதிப்புரை - திறனாய்வு - ஆராய்ச்சி விளக்கம் - தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு - திறானய்வின் பயன்கள் - திறனய்வாளளின் தகுதிகள்

**அலகு : 4**

இலக்கியத் திறனாய்வு - விளக்கமும் வகைகளும்

**அலகு : 5**

பகுப்புமுறைத்திறணய்வு - பொருத்திக்காட்டல் ஏதேனும் ஒரு இலக்கிய வகையில் பொருத்திக் காட்டி விளக்குதல் ( செய்முறைத்திட்டத்திற்கு கொடுக்க வேண்டும்.)

அலகு:1

# இலக்கியத் திறனாய்வு

## இலக்கியம் : சில விளக்கங்கள்

ஆர்ப்பரித்து எழும் உணர்ச்சியை அடக்கவும், அடங்கி ஒடுங்கிக் கிடக்கும் உள்ளத்திற்கு உணர்ச்சி ஊட்டவும் முனையும் மொழிப்புனைவு இலக்கியம் எனலாம். எனினும் “இலக்கியம்“ என்றால் என்ன? என்பது குறித்துப் பல விவாதங்கள் எழுந்துள்ளன. இலக்கியம் பற்றி விளக்க முற்படும் போது அது பற்றிய பல தகவல்களை அறிமுகப்படுத்த வேண்டியுள்ளது. இலக்கியம் தொடர்பான பலவற்றை வகைப்படுத்தி விளக்கும்போது இலக்கியம் பற்றிய கருத்தாடல் முழுமை பெறுகிறது. இலக்கியம் சார்ந்த கருத்துக்களைப் பின்வருமாறு பிரித்துக் கொள்ளலாம்.

1. இலக்கியம் சொற்பொருள் விளக்கம்
2. சொல்லாட்சி
3. இலக்கியம் பற்றி அறிஞர்கள் விளக்கம் (Critical Analyse)
4. நல்ல இலக்கியங்கள்
5. இலக்கியப் பயன்கள்
6. இலக்கியத்தோற்றத்திற்கான காரணங்கள்
7. இலக்கியமும் வாழ்க்கையும்
8. இலக்கியப் பாகுபாடுகள்

என்பன.இத்தலைப்புக்களில் ஆராய்ச்சி செய்வது இலக்கியம் பற்றிய அனைத்துச் சிந்தனைகளையும் வளர்த்துக் கொள்ள வழி வகுக்கும். இந்நோக்கத்தின் அடிப்படையில் மேற்குறிக்கப் பெற்றுள்ள தலைப்புகள் விளக்கப் பெறுகின்றன. இத்தலைப்புகள் விளக்க முறைத்திறனாய்வின் (Descriptive Critisicm) அடிப்படையில் எடுத்துரைக்கப் பெறுகின்றன.

## இலக்கியம் - சொற்பொருள் விளக்கம்

“இலக்கியம்“ என்னும் சொல்லின் பொருள் பற்றியும் அச்சொல்லின் தோற்றம் பற்றியும் இதுநாள் வரை விளக்கங்கள் எழுந்த வண்ணம் உள்ளன. இலக்கியப் படைப்பாளர்களும் திறனாய்வாளர்களும் இச்சொல்குறித்துப் புதுப்புது விளக்கம் தருகின்றனர். இவர்களுள் பெரும்பகுதியினர் இச்சொல்லுக்கு நேரடியான பொருள் தர இயலாது என்றே எழுதுகின்றனர். தமிழ் இலக்கியங்களில் இச்சொல் இடம் பெற்ற காலம் மற்றும் தோற்றம் குறித்தும் பல ஆய்வுக் குறிப்புகள் இங்குத்தரப்பட்டுள்ளன.

இலக்கு + இயம் என்னும் இருசொற்களாகப் பிரித்து இதற்குப் பொருள் கூறுவர். அதாவது “இலக்கு“ என்னும் சொல்லுடன் “இயம்“ சேர்ந்தது. இலக்கு என்பது நோக்கு, கொள்கை

எனப்பொருள்படும். இயம் என்பது தன்மை அல்லது பண்பு எனப்பொருள்படும். ஒரு கொள்கையின் தன்மை, பண்பு என இதற்குப் பொருள் கூறுவர். ஒரு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மொழிப்படைப்பு இலக்கியம் என்று கருதலாம். இலக்கு என்ற சொல்லே திரிந்து இலக்கியம் என்று வந்தது எனவும் பொருள் உரைப்பர். இது போலவே ‘இலக்கணம்’ என்ற சொல்லையும் இலக்கு + அணம் எனப் பிரித்துப் பொருள் கூறுவர். இலக்கு - விதி, அணம் - அழகு. விதிகளைஅழகுடன் அல்லது முறையுடன் தருவது “ இலக்கணம்“ எனப் பாவலர் பாலசுந்தரம் தம் இலக்கணக் கலைச்சொல் அகராதியில் விளக்கியுள்ளார்.

இலட்சியம் என்னும் சொல் தமிழ் மொழியில் பயின்று வருவது. இச்சொல்லை “இலக்கு“ (கொள்கை) என்னும் பொருளில் கையாளுகிறோம். ”உங்களுடைய இலட்சியம்தான் என்ன?” எனக்கேட்கிறோம். “நன்றாகப் படித்துக் கலெக்டர் ஆவதே என் லட்சியம் மருத்துவர் ஆவதே என் லட்சியம்” எனத் தேர்வு முடிவுகள் வெளிவரும்போது மாணவர்கள் பேட்டி கொடுக்கின்றனர். 1967 பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா “படியரிசித் திட்டம்“ அறிவித்தார் (ரூபாய்க்கு 3 படி அரிசி). பின்னர் ஒரு சந்தர்ப்பத்தில் அதை விளக்கிப் பேசும்போது ”மூன்று படி இலட்சியம் ஒரு படி நிச்சயம்” என்றார். இங்குப் பயன்படுத்தப் பெறும் “இலட்சியம்“ என்ற சொல் கொள்கை, நோக்கம், உறுதிப்பாடு என்னும் பொருளைத் தருகின்றது. எனவே இலட்சியம் என்ற சொல்லே இலக்கியம்“ என மாறிற்று என்றுணர இடமுள்ளது.

இலக்கியம் என்பது ஒரு கொள்கையைக் கூறுவது என்பது பொருத்தமானால் அது இலட்சியம் என்பதன் திரிபு என்று கொள்வதில் தவறில்லை. எனவே இலட்சியம் என்பது இலக்கியம் ஆனது எனக் கொள்ள வாய்ப்புண்டு. இலங்கு என்பது இலக்கு என வலித்தல் விகாரமாகிப் பின்னர் அது திரிந்து “இலக்கியம்“ என்னும் சொல் உருவானது என்றும் கருதலாம். “இலங்கு பூண்வரைமார்புடை இராவணன்” என்று திருஞானசம்பந்தர் பாடியுள்ளார். விளங்கிய, ஒளி பொருந்திய அணிகலன்களை இராவணன் அணிந்திருந்தான் என்கிறார் அவர். இலங்கு என்பது நன்றாக விளங்குதல் எனப்பொருள்படுகிறது.

வடமொழியில் உள்ள லட்சிய என்னும் சொல் திரிந்து இலக்கியம் என வந்தது என்றும் இச்சொல் சாகித்ய என்னும் இருசொற்களும் இலக்கியத்தைக் குறிக்கின்றன். எனவே லட்சிய என்னும் வடசொல் இலக்கியத்தைக் குறிப்பதாகக் கொள்ள இயலாது என இக்கருத்தை மறுக்கின்றனர்.தமிழில் “இயம்“ என்னும் பின்னொட்டு அல்லது சொல்லுருபு முதன்மைச் சொற்களுடன் இணைத்துக் கூறப்படுகிறது. பலபொருள்களை நோக்கும்போது இலக்கம் என்பதற்கு “விளக்கமானது“ என்னும் பொருளைக் கொள்ள முடிகிறது. இலக்கு என்னும் சொல்லும் தொல்காப்பியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு நோக்கம். எல்லை எனப் பொருள் கொள்ளப்படுகிறது.

இலக்கண நூல் வரிசையில் தொல்காப்பியத்தில்இடம்பெறாத “இலக்கியம்“ என்னும் சொல் நன்னூலில் இடம் பெற்றுள்ளது. நன்னூலின் காலம் கி.பி.13ஆம் நூற்றாண்டு. கால இடைநிலைகளின் இலக்கணம் கூறும் பவணந்தி முனிவர் நன்னூலில் இச்சொல்லைக் கையாண்டுள்ளார்.

**“இலக்கியம் கண்டதற் கிலக்கணம் இயம்பலின்**
**பகுதி விகுதி பகுத்திடை நின்றதை.**
**வினைப்பெயர் அல்பெயர்க் கிடைநிலை எனவே“**

என்பது நன்னூல். இலக்கியம் என்னும் சொல் இதனுள் இடம் பெற்றிருப்பதுடன் இலக்கியத்தை வைத்தே இலக்கணம் எழுதப்படுகிறது என்ற இலக்கண மரபும் இதில் உணர்த்தப்படுகின்றது. நன்னூல் இலக்கண அமைப்பு இளம்பூரணர் உரையின் அடிப்படையில் எழுந்தது என்பர். ஆனால் இளம்பூரணர் உரையில் எங்கும் இச்சொல் இடம்பெறவில்லை. எனவே இச்சொல்லை நன்னூலாரின் தேர்வு எனக் கொள்ளலாம். மேலும் நன்னூல் காலத்திற்கு முன்பே பழம்பாடலொன்றில் இச்சொல் பயின்று வருவதாகவும் சிலரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

**“இலக்கியம் இன்றி இலக்கண மின்றே**
**எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே**
**எள்ளினின்று எண்ணெய் எடுப்பது போல**
**இலக்கியத் தினின்று எடுபடும் இலக்கணம்”**

(இலக்கியக்கலைஇஅ.ச.ஞானசம்பந்தம்)

என்பது அப்பாடல். இப்பாடல் நன்னூலுக்கு முந்தையது எனில் நன்னூல் காலத்திற்கு முன் சமூக நடைமுறையில் இச்சொல் இடம்பெற்று விட்டது என்பதை அறியலாம்.

இலக்கிய வரிசையில் “இலக்கியம்“ என்னும் தோலாமொழித்தேவர் எழுதிய “சூளாமணி“யில் பயன்படுத்தப்பட்டுள்ளது. “காம நூலினுக்கு இலக்கியம் காட்டிய வளத்தால்” என்பது சூளாமணி. இது நன்னூலுக்கு முன்னர்ப் பாடப்பட்ட நூல் என்பர்.தமிழ் இலக்கியங்களில் உலகப் புகழ்பெற்ற இலக்கியமாகத் திகழ்வது திருக்குறள். வள்ளுவனைத் தமிழ்நாடு உலகினுக்கே தந்துவிட்டது எனப் பெருமையுடன் பாடுகிறார் பாரதி. இத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளிலும் “இலக்கியம்“ என்னும் சொல் இடம்பெறவில்லை. கல்வி, நூல், நூல் நயம் முதலியவற்றை வள்ளுவர் குறிப்பிடுகின்றார். எனினும் இவற்றிற்கு “இலக்கியம்“ என்னும் சொல் குறிக்கப் பெறவில்லை. தொடர்புடைய சிலப்பதிகாரம், கம்பராமாயணம் போன்ற காவியங்களிலும் இச்சொல் பதிவாகவில்லை. எனினும் கம்பர் “கவி“ என்னும் சொல்லொன்றைக் குறிப்பிடுகின்றார். இச்சொல் இடம்பெற்றுள்ள சூழல் எண்ணத்தக்கது. கோதாவரி நதி “சான்றோர் கவி எனக் கிடந்தது“ என்று வருணிக்கிறார் அவர். சான்றோர் கவி என்பது புலவர்கள் பாடிய பாடல்களாகிய இலக்கியத்தைக் குறிப்பதாகக் கொள்ளலாம்.

“இலக்கு“ என்னும் சொல் தமிழ் இலக்கியங்களில் பயின்று வருகின்றது. இது ‘இலக்கியம்“ எனத் திரிந்தது என்னும் கருத்தும் முன்னர்க் கூறப்பட்டது. தொல்காப்பியர் குறிப்பிடும் “இலக்கம்“ என்னும் சொல் புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது.

**“தோல்துவைத் தம்பின் துளை தோன்றுவ்**
**நிலைக்கொராஅ இலக்கம் போன்றன”.**
**கானச் சீறியாற்று அரங்கரைக் காலுற்றுக்**

**கம்பமொடு துலங்கிய இலக்கம் போல”**

என்னும் பாடல் அடிகளில் இடம்பெற்றுள்ள “இலக்கம்“ என்பது விளங்குதல், ஒளிபெறுதல் என்னும் பொருளையே கொண்டுள்ளது. “இலங்கு“ என்பது ஒளி பொருந்திய என்னும் பொருளில் இங்கு அமைந்துள்ளது. நம்பியாண்டார் நம்பி “இலக்கிதம்“ என்னும் சொல்லை ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் என்னும் நூலில் குறிக்கிறார். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இச்சொல்லைக் குறிக்கிறார்.” இச்சொல் சிறந்த கருத்து என்னும் பொருளில் வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் குறிப்பிடும் “இலக்கிதம்“ என்ற சொல் இலக்கியம் என்னும் சொல்லிற்குச் சமமானது.மேற்குறிப்பிடப்பட்டுள்ள கருத்துக்களின் அடிப்படையில் சில முடிவுகளை மேற்கொள்ளலாம். “இலக்கு“ என்ற சொல் பின்னொட்டுப் பெற்று இலக்கியம் என வந்தது. இலக்கு என்பது நுண்ணிய நோக்கம், கொள்கை எனப் பொருள்படுகின்றது. சீரிய நோக்கத்தை இயம்பும் மொழி வடிவம் இலக்கியம் எனலாம். “இலங்கு“ என்னும் சொல் இலக்கு என்றாகி அதுவே இலக்கியம் ஆயிற்று எனவும் கொள்ளலாம். மற்றக் கருத்துக்கள் மேலும் ஆராயத்தக்கன.

## இலக்கியம் பற்றி அறிஞர்கள் விளக்கம் (Critical and Descriptive Analyse)

“இலக்கியம்“ என்னும் சொல் பரந்துபட்ட பொருளில் விளக்கப்படுகின்றது. இலக்கியம் பற்றி விளக்கப் புகுந்த பலரும் அதன் பொருளை வரையறுக்க இயலாது என்று கூறுகின்றனர். எனவே இச்சொல்லின் இயக்கத்தையும் பண்பையும் நுணுக்கமாக ஆராய வேண்டியுள்ளது.இலக்கியம்“ என்பது ரசனையின் அடிப்படையில் தோன்றுவது. படைப்பாளி ரசனை உணர்ச்சிக்கு ஆட்படும்போது இலக்கியம் இயல்பாகத் தோன்றுகிறது. இலக்கியத்தைப் படிக்கும் வாசகனுக்கும் ரசனை உண்டு. அவனும் அதை ரசிக்கிறான். அங்கு இலக்கியம் சிறப்பினை அடைகிறது. படைப்பாளியின் மனக்கண் முன்னே அப்படைப்பு அடிக்கடி தோன்றுகிறது. இலக்கியத்தில் அமைந்த சொல், பொருள். ஓசை, உவமை, உருவகம், சித்திரிப்பு ஆகிய அனைத்தும் ரசனை உணர்ச்சியை ஏற்படுத்தும் கூறுகள் ஆகும். ரசனை என்பது ஒன்றை அறிந்து மகிழ்வது. இலக்கியத்தில் அறிவியல், வரலாறு, சமூகக்கூறுகள் முதலியன இருக்கலாம். ஆனால் இவற்றை வெளிக்காட்ட வேண்டும் என்னும் நோக்கில் இலக்கியம் படைக்கப்படுவதில்லை. நல்ல ரசனை உணர்ச்சியைத் தூண்டி மகிழ்ச்சியையும் புத்துணர்வையும் உண்டாக்கும் நோக்கமே இலக்கியப் படைப்பின் அடிப்படை. அது தோன்றுவதற்கு வேறுசில காரணங்கள் இருந்தாலும் பிறர் ரசித்து மகிழும் முறையில்தான் இலக்கியம் படைக்கப்படுகிறது.

இலக்கியத்தின் உள்ளே அமைந்திருக்கும் கருத்து வெளிப்படும்போது ரசனை உணர்ச்சி முழுமையடைகிறது.ஆங்கிலத்தில் லிட்டரேச்சர் (Literature) என்று கூறப்படும் சொல்லிற்கு இணையான சொல்லாக “இலக்கியம்“ என்னும் சொல்லைக் குறிப்பிடுகின்றனர். இலக்கியம் என்ற சொல்லிற்குத் தமிழ் அகராதிகள் பொருள் கூறுவது போலவே ஆங்கில அகராதிகளும் பொருள் கூறி விளக்குகின்றன. 'The Advanced Learner's Dictionary' என்னும் ஆங்கில அகராதியில்,

”கலைத்திறம் மிகுந்த படைப்புகள் இலக்கியம் கலையழகுடன் எழுதப்படும் எழுத்துக்கள் இலக்கியம். குறிப்பாகப் புனைகதை, நாடகம், செய்யுள், கவிதை முதலியன இதில் அடங்கும்.(Writings that are valued as works of art fiction , drama and poetry) எனக்குறிக்கப்பட்டுள்ளது. இலக்கியம் என்பது மொழியினால் உண்டாகும் கலை வடிவம் என்பது இதன் மையக்கருத்தாகும். "English Reference Dictionary". “கலை இயல்புடன் எழுதப்படுவனவும் குறிப்பிட்ட பொருள் குறித்து எழுதப்படும் நூல்களும் இலக்கியம் என்றே கொள்ளப்படுகின்றன (Written works that are regarded as having atrtistic merit books and writing as a particular subject)" எனக் கூறுகின்றது.

“இலக்கியம்“ பற்றிய அடிப்படைப் பொருள் தமிழில் விளக்கப்படாமல் இருப்பது தவறிவிட்ட நிகழ்வாகவே கொள்ளப்படுகின்றது. ”அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற்பயனே” என்று இலக்கியத்தின் நோக்கத்தையும் பயனையும் கூறுவர். தமிழில் நூலின் இலக்கணம், காவிய இலக்கணம் போன்றவற்றை இயற்றியோரும் இது பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டனர் என்று குற்றஞ்சாட்டுவர்.”இலக்கியம் பற்றிய முழுமையான விளக்கம் இன்னும் தேடவில்தான் உள்ளது எனத் திறனாய்வாளர்களும் படைப்பாளிகளும் கூறி வருகின்றனர்.“இலக்கியம் “என்பது இதுதான் என வரையறுக்க முயலும் போது சிக்கல்கள் ஏற்படுகின்றன. ஒரு சரியான முடிவுக்கு வரமுடியவில்லை. ஏனக் கருதும் தமிழவன் இலக்கியம் என்ற ஒன்று தான் எனப் பேச முடிகின்றது. இதுதான் இலக்கியம். அதுதான் இலக்கியம் என்று கூச்சல்கள் அர்த்தமிழக்கின்றன (தமிழவன் கட்டுரைகள்)என்கிறார்.

இலக்கியத்திற்குரிய பொருள் சமூகம். பொருளாதாரம். அரசியல் என்னும் துறைதோறும் மாறுபட்டு நிற்கிறது. எனவே அதனைப் புரிந்து கொள்ளும் முயற்சியே தேவை என்பதும் அதுபற்றி விளக்க முற்படுவது தேவையற்றது என்பதும் இவர் கருத்து.

இலக்கியம் வாழ்க்கை பிரதிபலிக்கும் கண்ணாடி (Literature is the mirror of the Life) எனக் கூறப்படுகிறது. வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் சில கூறுகள் இலக்கியத்தில் உள்ளன ஆனால் அது முழுமையாக வாழ்க்கையைப் பிரதிபலிக்கிறது எனக் கூறமுடியாது. தலைசிறந்த புனைகதைப் படைப்பாளியான புதுமைப்பித்தன் இலக்கியம் என்றால் என்ன என்பது பற்றி விளக்க முயன்றுள்ளார். அவர் இலக்கியத்தைப் பற்றி விஸ்தரிக்கலாம் விவாதிக்க முடியாது சூத்திரத்தால் விளக்க முடியாது தர்க்கத்திற்கு அடங்கியதல்ல (புதுமைப்பித்தன் கட்டுரைகள்) என்கிறார்.

“இலக்கியம்“என்பது செய்யுளையே குறிப்பதாக உரையாசிரியர்கள் எண்ணுகிறார்கள். அவர்கள் உரையெழுதுங்கால் இலக்கண நூற்பாக்களுக்கு எடுத்துக்காட்டுத் தராமல் இதற்கு இலக்கியம் வந்த வழிக் கண்டு கொள்ள“ எனவும் இதற்கு இலக்கியம் இல்லை எனவும் சில இடங்களில் கூறிச் செல்வதுண்டு. இங்கு இலக்கியம் என அவர்கள் குறிப்பிடுவது மேற்கோள், எடுத்துக்காட்டு உதாரணம் எனப் பொருள்படுகிறது. ஆனால் அது செய்யுள் வடிவில் அமைந்தது என்பதையே அவர்கள் இவ்வாறு கட்டுகின்றனர். பொதுவாக மேற்கோள். எடுத்துக்காட்டு, பிராமணம் என்னும் பொருளில் இலக்கியத்தை இலக்கண உரையாசிரியர்கள் அனைவரும்.

குறிப்பிட்டுள்ளனர்," மொழி எனும் ஊடகத்தின் மூலம் சுவைபடச் சொல்லப்படும் கருத்துரு யாவும் இலக்கியம் என்றே கொள்ள வேண்டும். இலக்கியம் மனித மனத்துக்குச் சுகந்தைச் கொடுக்கிறது. மொழிக் கொண்டே இருக்கும் சமூகத்திற்கு அவ்வப்போது உண்டாகும் கவலைகளையும் சலிப்பையும் போக்க அது துணை செய்கின்றது. இலக்கியத்தில் இன்பத்தையும் ரசனை உணர்வையும் வெறும் சொல் அடுக்குகள் கூட உண்டாக்கிவிடும். சூர்ப்பனகை நடந்து வருவதை இராமாயணத்தில் கம்பர்

**"பஞ்சியொளிர் விஞ்சுக்குளீர் பல்லவம் அனுங்க**
**செஞ்செவிய கஞ்சம்நிகர் சீரடியள் ஆகி**
**அஞ்சொலிள மஞ்சையென அன்னமென மின்னும்**
**வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்"**

எனப் பாடுகின்றார். மென்மையான அடியெடுத்து அழகிய சொற்களைப் பேசும் மயில்போல் மின்னும் அன்னம் போல அவள் வந்தாள் என்பது இப்பாடலின் சுருக்கம். இப்பாடலைச் சொல்லிப்பார்க்கும்போது ஏற்படும் ஒளியுணர்வு, ஓசை அமைவு முதலியன இன்பம் தருகின்றன. சொற்களால் ஆகிக் குறியீடுகளாகத் தோன்றிப் படிமமாக மாறிப் பலவிதமான பொருள் தந்து உள்ளத்தில் கிளர்ச்சி செய்துவிடும் ஆற்றல் கொண்டது இலக்கியம். குயில் பாட்டில் பாரதியார் பாடும் சில பகுதிகளை இதற்கு எடுத்துக்காட்டாசுக் கூறலாம். தன் கனவில் குயில் மறைந்து பெண்ணொருத்தி அழகும் இனிமையும் நிரம்ப நின்றதைப் பாடுகின்றார்.

**பெண்ணொருத்தி அங்குநின்றாள் பேருவகை கொண்டுதான்**
**கண்ணெடுக்காது என்னைக் கணப்பொழுது நோக்கினாள்.**
**சற்றே தலைகுனிந்தாள் சாமிஇவளழகை**
**எற்றே தமிழில் இசைத்திடுவேன்? கண்ணிரண்டும்**
**ஆளை விழுங்கும் அதிசயத்தைக் கூறுவனோ?**
**மீள விழியில் மிதந்த கவிதையெலம்**
**சொல்லில்அகப்படுமோ? தூயசுடர் முத்தையொப்பும்**
**பல்லில் கனிஇதழில் பாய்ந்த நிலவினையாள்**
**என்றும் மறுத்தல் இயலுமோ? பாரின்மிசை**
**நின்றதொரு மீன்கொடிபோல் தேர்ந்தமணிப் பெண்ணரசின்**
**மேனி தவத்தினையும் கட்டினையும் வெட்டினையும்**
**தேனில் இனியாள் திருந்த நிலையினையும்**
**மற்றவர்க்குச் சொல்ல வசமாமோ ஓர்வார்த்தை.**
**கற்றவர்க்குச் சொல்வேன் கவிதை கனிபிழிந்த**
**சாற்றினிலே பண்கூத்து எனும்இவற்றின் சாரமெல்லாம்**

**ஏற்றி அதனோடே இன்னமுதைத் தான்கலந்து**
**காதல் வெயிலிலே காயவைத்த கட்டியினால்**
**மாதவளின் மேனி வகுத்தான் பிரமனென்பேன்”**

என்பது அவர் பாடல், இலக்கியம் சுவையுடன் கிளர்ந்தெழும் என்பதற்கு என்பது இப்பகுதி ஓர் எடுத்துக்காட்டு குயில்பாட்டு இயற்கைச்சித்திரிப்புடன் கூடிய மாயாவாதம் (Illusionism) என்றாலும் அதில் கள்ளக் கிளர்ச்சியூட்டும் சொல்லமைவுகள் வருவதைக் காணமுடிகிறது.

**“புல்லாய் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்விருகள் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்**
**மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்”**

எனத்திருவாசகத்தில் மாணிக்கவாசகர் பாடுகின்றார். பிறவிகள் பல தொடர்வதை அழகுடைய சொற்செட்டுக்களால் அமைத்துப் பாடும் இக்கவித்திறன் இன்புறத்தக்கது.

மக்களுக்கான கருத்தை, மக்களுக்குரிய சிந்தனையை அவர்கள் விரும்பும் வண்ணம் - மனங்கொள்ளத்தக்கவகையில் எடுத்துக் கூறுவது இயக்கியம் எனக் கா.சு.பிள்ளையின் “தமிழ் இலக்கிய வரலாறு கூறுகிறது.இலக்கியம் என்பது மக்களுக்குத் தேவையான கருத்துக்களை அல்லது மக்களது சிந்தனைகளைச் சிறந்த சொற்களால் சொல்லக் கூடிய கருவியாகும் என்பது அவர் கூற்று. மேற்குறிப்பிட்டுள்ள பாடல் அடிகள் இதற்கும் சான்றாய் அமைகின்றன.தமிழ் இலக்கிய வரலாறு வகைமை திறனாய்வு, மொழி முதலிய தளங்களில் காலத்திற்கேற்ப நூல்களைப் படைத்த மு.வ. அவர்கள் இலக்கியம் பற்றி மிக எளிமையாக விளக்குகின்றார்.கலைகளுள் இலக்கியமே மிகச் சிறந்தது. மனித வாழ்வின் சிறப்பியல்பாக அமையும் மொழியின் சொற்களையே ஊஈடுபொருளாகக் கொண்டு அமைவது இலக்கியம் என்பது அவர் கருத்து.

இலக்கியம் ஒரு கலை. அது கலைகளில் பிறந்த கலை. உள்ளத்து உணர்ச்சியே கலை வடிவமாக அமைகிறது. உள்ளத்து உணர்ச்சியைச் சொற்களால் தீட்டும் ஓவியம் என்றும் கூறலாம். ஆகவே உள்ளத்தின் வேறுபாட்டிற்கு ஒப்ப இலக்கியமும் பல்வேறு வகையாக வேறுபட்டு நிற்கும்,மொழியில் உருவாகும் சிறந்த கருத்தாடல்கள் யாவும் இலக்கியம் என்றே கூறப்படுகின்றன. செய்யுள், பாட்டு, கவிதை முதலியன. இலக்கியம் என்று தொடக்கத்தில் கருதப்பட்டன. காலப்போக்கில் மொழியில் உருவாகும் பலவற்றையும் இத்துடன் இணைத்தனர். நாவல், சிறுகதை, நாடகம். திரையிசைப் பாடல் மேடைப் பேச்சு நாட்டுப்புறப் பாடல், விடுகதை வாழ்க்கை வரலாறு, பழமொழி முதலியனயும் “இலக்கியம்“ எனக்கொள்ளப்படுகின்றன. “ஒருமுறை மட்டுமின்றி மறுமுறையும் படிக்கும் படியாக அமைவதே இலக்கியம்’ என்று சைரில் (Cyril

Comnolly) என்னும் அறிஞர் குறிப்பிடுகின்றார். இலக்கியம் சுவையுணர்ச்சிமிருந்து காணப்படுகிறது. என்பதே இவரது கருத்து.

மனிதர்கள் வாழிக்கையில் சிறப்பாகக் கண்டவை, அனுபவித்தவை எல்லார்க்கும் பன்னெடுங்காலத்திற்குப் பிறகும் கவர்ச்சி ஊட்டுவன எவையோ? காலந்தோறும் நம் கவிஞர்கள் சிந்தித்து கருகின்றவை எனவயோ? உணர்த்தவை எவையோ? அவற்றையெல்லாம் அறிவிக்கும் உளிர்த் துடிப்புடைய பதிவேடே இலக்கியமாகும் மொழி என்னும் கருவி வாயிலாக வெளிப்படும் வாழ்க்கை அனுபவமே இலக்கியம் என்று கூறப்படும் கருத்தும் எண்ணத்தக்கது. அழகுணர்ச்சியைத் தூண்டும். சொற்கள் இலக்கிய உருவாக்கத்திற்குத் தேவையாகின்றன. அழகும் ஆழ்ந்த பொருளும் கொண்ட சொற்கள் இலக்கியத்தை முழுமை அடையச் செய்கின்றன.

இலக்கியம் என்பது அழகுணர்ச்சி எழுதியனவற்றையே குறிக்கும் மக்கள் எழுதியுள்ள பல இதன்கண் அடங்காது நீங்கும்"என்கிறார் வையாபுரிப்பிள்னள, இலக்கியம் வடிவத்தோடு இணைந்தது என்பதை, பொருத்தமான வடிவத்துடன் வெளிப்பிடுத்தப்படும் கலை இலக்கியமாகும் லெனின் கூறுகிறார். இலக்கியம் குறிக்கோள் ஒன்றை அடிப்படையாகக் கொண்டது. இலக்கியம் மனித வாழ்க்கையின் குறிக்கோள் பற்றிக் கூறு வேண்டும்" என்பது பாவாணர் கருத்து, இறந்த வாழ்க்கைக் குறிக்கோளை எடுத்துக் கூறுவறு இலக்கியம் என்றும் சிறந்த மொழி அமைப்பைக் கூறுவது இலக்கணம்" என்றும் அவர் குறிப்பிடுகின்றார்.பிரச்சினைகளைப் பதிவு செய்தால் மட்டும் போதாது. அது மக்கள் மனத்தில் நிலைத்து நிற்குமாறு செய்வதே இலக்கியம் என்று ஓ.மௌனகுரு தெரிவிக்கின்றார். இலக்கியம் வாழ்க்கையின் விமரிசனம், எழுத்து வடிவத்தில் தோன்றும் கலை இயற்கை அழகைப் படம் பிடித்துக் காட்டும் மொழிப்படைப்பு. வாழ்க்கையில் அனுபவக் கருவூலம் வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு என்று அறிஞர்கள் பலவிதத்தில் விளக்கம் தருகின்றனர்.

## நிலைபெறும் இலக்கியங்கள்

நல்ல இலக்கியங்கள் வாமும் இலக்கியம், நிலைபேறுடைய இலக்கியம் என அழைக்கப் பெறுகின்றன. இவை காணத்தோறும் மக்களோடும். அவர்கள் பிரச்சினைகளோடும். தொடர்பு கொண்டிருப்பவை சமூக உறவுகளைக் கூறும் இலக்கியங்கள் நிலைந்த புகழ் உடையவையாக விளங்குகின்றன. மகாபாரதம், இராமாயணம் போன்ற வியங்கள் சமூகத்தில் மக்களுக்கு இருக்கும் பிரச்சினைகளையும் சமூக உறவு, அரசியல் போன்றவற்றையும் அவற்றின் உயர்ந்த நோக்கத்தையும் அவற்றில் ஏற்படுகின்ற சிக்கல்களையும் அவற்றிற்குரிய தீர்வுகளையும் செப்புவதால் இக்காவியங்களை மக்களிடமிருந்து பிரிக்க முடியவில்லை. இவை இதற்கு மேலும் இலக்கியச் சுவையுடையவனவாகவும் உள்ளன. மேற்சொல்லப்பட்ட கருத்துக்களைப் பல்வேறு இலக்கிய உத்திகளைக் கண்டு கவிஞர்கள் பாடியுள்ளனர். இவை எப்போதும் ரசனை குன்றாமல் இருக்கின்றன.

சிற்றிலக்கியங்களாகவும் தொடர்நிலைச் செய்யுட்களாகவும் எத்தனையோ இலக்கியங்கள் தோன்றியுள்ளன. பணவிடு தூது நன்னூல் விடு தூது செருப்பு விடு தூது போன்ற தூது

நூல்களும் பல அம்மானை இலக்கியங்களும் எழுதப்பட்டுள்ளன, அவை யாவும் அக்காலத்திலேயே கொஞ்சநாள் இருந்துவிட்டு மக்களிடமிருந்து அன்னியப்பட்டு விட்டன. ஆனால் தமிழ்விடு தூது மூவருலாவும். இன்னும் சிறப்பிக்கப்படுகின்றன. மனிதர்களின் உயர்ந்த பண்புகளையும் காதல், வீரம், கொடை, துயரம் முதலியவற்றையும் அழகுற எடுத்தியம்பும் இலக்கியங்கள் என்றும் போற்றப்படுகின்றன. மனித வாழ்க்கையின் குறிக்கோள்களை எடுத்துக் கூறி நல்வொழுக்கத்துடன் மக்கள் வாழ்த்திடத் தேவையான நெறிமுறைகளை அவை இலக்கியங்கள் எடுத்துக் கூறுகின்றன. இவை என்றும் வாழும் இலக்கியங்களாகத் தோன்றுகின்றன. படிக்கும் போது ஏதோ ஒருவகை இன்பத்தை உண்டாக்கிப் பின்னர் அந்த இன்பம் குறைந்து போகும் அளவில் இலக்கியச் சுவை அமையக்கூடாது வாழும் இலக்கியங்களுக்குரிய சிறப்பம்சங்கள் என்று சில உள்ளன. அவை இங்குத்தரப் பெற்றுள்ளன.

1.சமகாலத் தேவையை மட்டும் நிறைவு செய்யாமல் நல்ல கொள்கைகள் பயன்படும்படியாக அமைத்தல்
2.கவர்ச்சி மூலமாகக் கொள்ளாமல் நல் கொள்கைகளை அடிப்படையாகக் கொள்ளுதல்
3.மனிதனின் இயற்கைப் பண்புகளாகிய காதல், வீரம், கொடை தியாகம் முதலியவற்றைச் சிறப்பித்தல்
4.மனித ஒழுக்கம் வலியுறுத்தல்,
5.இலக்கியப் பண்பு நிறைந்திருத்தல், அதாவது உண்மைகளை எடுத்துரைத்தல்
6.இழிந்த உணர்வுகளை மறுத்தலித்தல்
7.உயர்ந்த குறிக்கோள் கொண்டிருந்தல்
8.உள்ளத்துணர்வுகளைக் கவரும் ஆற்றல் பெற்றிருத்தல்.
9.கற்பனை, வருணனை. பின்னணி ஆகியன சுவைபட அமைதல்.
10.அறிவை மட்டும் தொடாமல் உணர்ச்சிகளையும் உண்டாக்குதல்,
11.அல்ல வடிவமும் இனிய ஓசையுடைய பாடல்களையும் கொண்டிருந்தல்,
12.எடுத்துரை உந்திகள் (Narration) சிறப்பாக அமைதல்,
13,மக்களது உரிமை குறித்துப் பேசுதல்.
14.இன்புறுத்தலையும் அறிவுறுத்தலையும் முறையாகப் பயன்படுத்துதல்,
15,உண்மைகளோடு அனுபவத்தைக் கூறல்.
16.ஆழமும் அழகும் கொண்ட சொற்களால் வாழ்க்கையைச் சித்திரித்துக் காட்ட
17,துன்பத்தை நீக்கி இன்பத்தைப் பெருக்குதல்.
18,சமூகத்தின் உயர்ந்த மதிப்புகள் கற்பு, நீதி, ஆவாமை முதலியவற்றை மதித்துப் போற்றல்
19.செய்யுளாயின் யாப்பு, அணி எதுகை. மோனை, உவமை. உருவகம் என்பன நிறைவாக இருத்தல்

ஆகியவற்றை வாழும் இலக்கியத்திற்குரிய பண்புகளாகக் கொள்ளலாம்.

இலக்கியம் அந்த நேரத்திற்குரிய இலக்கியமாக இல்லாமல் (Books for the hour) என்றும், வாழும் நூல்களாக (Books for Ever) இருக்க வேண்டும். திருக்குறள் இலட்சிய மனிதனையும் இயல்பான மனிதனையும் காட்டுகிறது. இவர்களில் இயல்பான மனிதன் எங்கும் எப்பொதும் இருக்கிறான். இலட்சிய மனிதனைக் காணும் நோக்கம் திருவள்ளுவருக்கு இருந்தது. அந்த இலட்சிய மனிதனை உடனடியாகக் காண முடியாது. இயல்பு வாழ்க்கையில் இயங்கும் மனிதனின் பண்புகளைப் பெருமைப்படுத்தி அவன் இலட்சிய மனிதனாய் உருவாக வேண்டும் என்று அவர் உறுதி கொள்கிறார். அதனால் திருக்குறள் என்றும் வாழும் இலக்கியமாக இருக்கிறது. இயல்பு மனிதன் இருக்கும் வரை இலட்சிய மனிதன் உருவாகும் வரை திருக்குறள் சாகாவரம் பெற்ற நிலைத்த இலக்கியமாகவே திகழும்.

கன்பூசியஸ், நீட்சே போன்றவர்கள் தனிமனிதனை உருவாக்குவது பற்றிக்கூறியுள்ளனர். அவர்களைப் போலவே திருவள்ளுவரும் தனிப்பட்ட மனிதன் எவ்வாறிருக்க வேண்டும் எனக் கூறுகின்றார். தனிமனிதன் தன்னுடைய ஒழுக்கம் முதலியவற்றில் தவறாமல் இருந்தால் அவன் மாண்புமிகு மனிதனாக மாற முடியும் எனக் கூறுகின்றார். மனிதர் உயர்த்தவர்களாகக் காணப்படுவதற்கு அவர்களின் ஒழுக்கமே முக்கியம் என்கிறார் வள்ளுவர், கன்பூசியஸ் விரும்பிய மாண்புமிகு மனிதனுக்கு “சுன்ஸீ˙” (ஊஊரனெ-வளந) எனப் பெயர், வள்ளுவர் சான்றோன் என்று குறிப்பிட்டார். மாண்புமிகு மனிதனை நீட்சே பேராற்றல் உடைய மனிதனாக (ளுரிநச அயஎ) உருவாக்க முயன்றார். இம்மூன்று வகை மனிதனையும் இலக்கியம் உருவாக்குகின்றது. இவ்வாறு சமூகத்தில் நல்ல மனிதர்களை உருவாக்குவதும் மனிதர்களைத் திருந்துவதுமான இயல்பையுடையது. அழியா இலக்கியமாக விளங்குகின்றது.இலக்கியம், படிப்போர் அனைவர்க்கும் ஒரே விதமான உணர்ச்சியை ஏற்படுத்துவதில்லை. அவரவர் மனநிலைக்கேற்றவாறு..
உணர்ச்சியை எழுப்பவல்லது. ஒருவாக்கே வெவ்வேறு சமயங்களின், வெய்வேறு உணர்ச்சியை ஏற்படுத்தும். ஆகவே இலக்கிய அனுபவம் பலருக்கும் பலவிதமாகவும் ஒருவர்க்கு ஒருசமயம் ஒருவிதமாகவும் பிறிதொரு சமயம் வேறொன்றாகவும் தோன்றும் இவ்வாறு வேறுபடும் அனுபவ உணர்வும் இலக்கியத்தின் அழியாத தன்மைக்கு ஒரு காரணமாக அமைகிறது.

## இலக்கியத்தின் பயன்கள்

சமுதாயத்திற்காகப் படைக்கப்பட்ட இலக்கியங்களைப் படிக்கும்போது உள்ளம் சமூகச் சூழலைப் புரிந்து கொள்கிறது. அவற்றுள் கூறப்படும் விழுமிய கருத்துக்களால் உள்ளம் தூய்மையும், அமைதியும் பெறுகின்றது பிற உயிர்கள் மேல் இரக்கம் காட்டும் குணம் உண்டாகிறது. மற்ற மனிதர்களின் துயரத்தைக் கண்டு மனம் வருத்துகிறவனே சிறந்த படைப்புக்களைப் படைக்க முடியும் அவையே உள்ளம் கவரும் தன்மை கொண்டனவாக அமையும். இலககியங்கள் மாந்தர்களிடையே காணப்பெறும் குறுகிய மனப்பான்மையை அகற்றி உள்ளத்தைப் பரந்த நோக்கில் அமைத்துக் கொள்ள உதவுகின்றன. துன்பியல் உணர்வுகள் வெளிப்படும் இலக்கியங்களைப் படிக்கும் போது மனம் இரக்கம் கொள்கிறது. அதனால்

ஏற்கனவே நமக்கிருக்கும் தாழ்வு உணர்ச்சிகள் நீங்குகின்றன. அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் “நூற்பயமே“ என்று கூறப்படுகிறது. இலக்கியத்தால் உண்டாகும் பயன்கள் இவை எனக் கொள்ளலாம். வாழ்க்கையில் உண்டாகும் இன்பத்தை அனுபவிப்பதற்கும் துன்பத்தைப் பொறுத்துக் கொள்வதற்கும் இலக்கியம் கற்பிக்கின்றது. எதையும் தாங்கும் இதயத்தை இளக்கியம் மளிதர்களுக்கு வழங்குகின்றது. பொதுவாகச் சொல்லப் போனால் மக்களை இன்புறச் செய்வதே இலக்கியத்தின் முக்கியப் பயனாக முடிகிறது.

நன்று இலக்கியத்தைக் கற்கும் வாசகன் இலக்கியப் பாத்திரங்களோடும் கவிஞனின் கற்பனைகளோடும் ஒன்றி விடுகிறாள். அப்போது “தான்“ என்னும் தன் உணர்வை அவன் மறக்கிறான். தன்னை மறந்த நிலையில் இலக்கிய இன்பத்தை அடைகிறான். அவன் அவ்வின்பத்தைப் பெற அவனுடைய சுய உணர்வுகள் தடையாய் இருப்பதில்லை. இலக்கியம் முழுமையான இன்ப உணர்ச்சியை ஊட்டுகின்றது.சமுதாயச் சிந்தனைக்கான இலக்கியங்கள் உருவாக்குகின்றன. அன்பு இரக்கம், கருணை, தொண்டாற்றும் பண்பு ஆகியன மனித சமூகத்தில் நிலைபெற இலக்கியங்கள் உதவுகின்றன. புதினங்களும், சிறுகதைகளும் சமூகத் தொண்டனாக வாசகனை மாற்றும் ஆற்றல். கொண்டவையாக அமைகின்றன.

இதற்கு முன்அனுபளித்தறியாத அனுபவங்களை இலக்கியங்கள் தருகின்றன. கல்வியறிவையும் அனுபவம் பெற்ற உள்ளத்தையும் இலக்கியம் தருகின்றது. சில இலக்கியங்களைப் படித்தபின் தம் கொள்கைகளையே மாற்றிக்கொண்டோரும் உளர். சமூகப் புரட்சிக்கு இலக்கியங்கள், என்று உறுளித்திடுகின்றன. ஆண், பெண் ஆகிய இருவரும் சமமே வலியுறுத்த பயன்படுகின்றன. உணர்ச்சிக்கு வேண்டுமாயின் அதற்கு இலக்கியங்கள் இலக்கியப் படைப்புகள் அடிகோலுகின்றன. டால்ஸ்டாயின் நூல்களைப் படித்துத் தம் கொள்கைகளைச் செழுமையாக்கிக் கொண்டதாக மேலை நாட்டுப் படைப்பாளரான சார் மொழி வளர் உகந்ததாகக் காந்திஜி கூறியுள்ளார், சார்லஸ் டிக்கன்ஸ் (Charles Dickens) எழுதிய அனாதைச் சிறுவன் (The Orfan Boy) என் நூலினைப் படித்த ஆங்கில நாட்டு இளவரசியார். தொழிலாளர் என்ற குழந்தைத் தடுப்புச் சட்டம்“ ஒன்று கொண்டு வந்ததாகக் கூறுவர். மார்ட்டின் லூர்தர்கிங் (Martin Luther King) ஆகிய அமெரிக்கத் தலைவரின் சிந்தனைகள் தமக்கு வழிகாட்டியாய் அமைந்தன என டாக்டர் அம்பேத்கர் கூறியுள்ளார். மு.வ.வின் “கள்ளோ காவியமோ“ என்னும், புதினம் பல குடும்பங்களை நல்வழிப்படுத்தியது கணவன் மனைவி இடையில் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தது என்று கூறுவர். ஆசிரியர் போதிக்கிறார் புத்தகங்கள் கற்பிக்கின்றன (Teacher teaches, but Books educate) என்பர்.

## இலக்கியத்தோற்றத்திற்கான காரணங்கள்

“இலக்கியம்“ ஏன் தோன்றுகிறது என்னும் வினா மிக முக்கியமானது. இலக்கியம் தோன்றுவதற்குப் பல அடிப்படைக் காரணங்களை அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறு கூறப்படும் கருத்துக்களுக்கிடையில் சில வேறுபாடுகள் தோன்றினும் பொதுவாக அனைவரின் கருத்தும்

ஒன்றாக அமைகின்றன.உலக இலக்கியத் தோற்றங்களை ஆராய்ந்து பார்த்தால் செய்யுள் வடிவமே முதலில் தோன்றியது என்பதை உணர முடியும். யாப்பில் அமைந்த செய்யுள் வடிவத்திற்குப் பாடல் வடிவம் முதன்மை பெற்றிருந்தது. தமிழ் மொழியில் பழமைவாய்ந்த இலக்கியமாகக் கொள்ளப்படும் எந்த நூலும் செய்யுள் நடையில் அமைத்திருப்பதை அறியலாம். தொல்காப்பியர் காலத்திற்கு முன்பே தமிழில் யாப்பமைதி கொண்ட செய்யுட்களைப் படைத்துள்ளனர். செம்மை செய்யப்பட்ட மொழியாகிய செந்தமிழ் என்பது தொல்காப்பியருக்கு முன்னரே கருவாகிவிட்டது. உரைநடை போன்ற இலக்கிய வளாச்சி பிற்காலத்தின் ஏற்பட்டதாகும். உரைநடை பற்றிய சில குறிப்புக்களை மட்டும் தொல்காப்பியம் கூறும் மிகச் சிறிய அளவில் உரைப்பகுதி இலக்கியங்கள் இருந்திருக்கலாம்.இலக்கியம் தெய்வ அருளால் தோன்றுவது என்பது தமிழ் இலக்கிய உலகில் தொடக்க காலத்தில் நம்பப்பட்ட கொள்கை

இராமலிங்க அடிகள், காளமேகப் புலவர், அருணகிரிநாதர் குமரகுருபரர். திருஞானசம்பந்தர் முதலியோர் இறையருள் பெற்றப் பாக்களைப் புனைந்தவர்கள் என்பர். இவர்கள் பயிற்சியினால் கவிபுனையும் ஆற்றல் பெற்றதில்லை என்பது கருந்து. இவ்வாறு பாடியோரைக் கருவிலேதிருவுடையார் பிறவிக் கவிஞர்கள் (The bori poet) எனக்கூறுவர். காளமேகப்புலவருக்குக் காளி அருள்வாக்குத் தந்ததாகக் திருச்செந்தூர் முருகன் குமரகுருபரர் பாடத்தொடங்கினார். உமையம்மையிடம் ஞானப்பால் உண்டு ஐந்து வயதிலேயே ஞானசம்பந்தர் பாப்புனைந்தார். கவிஞரும் கவிதை இயற்றுவது அவனுக்கு ஏற்பட்ட கலை உணர்வு, கற்பனைத் திறன் முதலியவற்றாலன்று அ்.்.து தெய்வீக ஆற்றலால் வந்தது என்கிறார் பிளேட்டோ.” இதே கருத்தை ஆங்கிலப் புலவர் வோட்ஸ்ஓர்த்தும் (Words worth) வலியுறுத்துகிறார்.” (Poctry is the Spontancous overflow of powerfilfcclings) பாணினிக்கு வடமொழியையும் அகத்தியருக்குத் தமிழ் மொழியையும் சிவபெருமான் கற்பித்தார் படைப்பாளி தன் உள்ள மகிழ்ச்சிக்காகவும், சமுதாயத்துக்காகவும் .இலக்கியத்தைப் படைப்பது உண்டு, சமுதாயம் குறித்துப்பாடும் போது பிரச்சினைகளை எடுத்துக் கூறுவதும் அவற்றிற்குத் தீர்வு காணுவதும் என இரண்டின் அடிப்படையில் இலக்கிய வெளிப்பாடுகள் ஏற்படுகின்றன. இவை தன்பொருட்டுக் கவிதை பிற பொருட்டுக் கவிதை சமுதாயநிலை கவிதை எனப் பல வகைகளாகும் என்றெழுதுகின்றார் வையாபுரிப்பிள்ளை

ஒரே கவிஞன் இம்மூன்று நிலையிலும் பாடங்களை எழுதுகிறான். பிறர் பொருட்டுப் பாடுவதும் சமுதாய நிலை குறித்தும் பாடுவதும் ஒன்றே எனக் கொள்ளல் வேண்டும். ஆதிகாலச்சமுதாயச் செயல் மக்களிடையே பாடல்களாகத் தோன்றின, அதைத் தொடர்ந்து தனித்தனி இலக்கியங்கள் உருவாயின.இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையது வாழ்க்கைக்கு அது அடிப்படையாக இருக்கிறது. நல்ல வாழ்க்கை அமைவதற்குரிய கருவியாக இலக்கியம் படைக்கப்படுகிறது. இலக்கியம் படைக்கப்படுவதற்குரிய சக்திகளை இலக்கியத் துடிப்புகள் (Literature impulses) எனக்கூறுகின்றனர். இலக்கியம் மனித முயற்சியால் அன்றித் தெய்வீக அருத்தூண்டலால் (Divine inspiration) வெளிப்பட்டு வருகின்றது. சிறந்த

இலக்கியத்தை இறையருள் பெற்றவரே படைக்க முடியும் என்னும் கருத்து மேலை நாடுகளிலும் நம்பப்பட்டு வருகின்றது. மதுரையில் கடைச்சங்கம் நிறுவியபோது பெருமானே தோன்றி நக்கிரனுடன் வாதிட்டதும் தருமிக்கும் பொருளழகுடைய பாடலொன்று இயற்றி தந்தார் என்பதும் புராணக் கதைகள், இறையனார் என்னும் பெயரில் இறைவனே புலவராகத் தோன்றி இறையனார் அகப்பொருளுரையைப் படித்ததாகவும் அந்நூலைப் படிக்கப் படிக்க ஊமை வாய்திறந்து பேசியதாகவும் கூறும் கதைகள் யாவும் இலக்கிய ஆக்கத்திற்கு இறையருள் துணை புரிகிறது என்னும், கொள்கையை மக்கள் கொண்டிருந்தனர் என்பதை வலியுறுத்துகின்றன. இவை யாவும் புலவரின் கவிதைத்திறனையும் படைப்பாக்கச் சிறப்பினையும் கண்டு வியந்தோர் கூறிய கூற்றுக்கள். இவை உண்மைக்கு மறுதலையானவை எனக்கூறுகின்றனர்.

இலக்கியத் தோற்றத்திற்குரிய காரணங்களைப் பின்வருமாறு அறிஞர்கள் கூறுகின்றனர்.1.தெய்வ சக்தியால் இலக்கியம் தோன்றுகிறது.2 இலக்கியத் தோற்றம் மனித முயற்சிக்கு அப்பாற்பட்டது. 3.இயற்கையின் சக்திகளைப் புரிந்து கொள்ள இயலாது. அவற்றைப் புதிர்களாக எண்ணி வியந்த மனிதர்களின் மந்திரச் சொற்களிலிருந்து இலக்கியம் தோன்றுகிறது. 4.இலக்கியம் கருவிலே சிலரால் படைக்கப்படுகிறது. 5.இலக்கிய திருவுடைய பயிற்சியினால் வருவது. 6.சமுதாயத்தில் கூடி வாழும் மனிதர்களின் கூட்டு முயற்சியாலும் அச்சமூகம் கடைப்பிடித்த உற்பத்தி முறையின் அடிப்படையாலும் தோன்றியது இலக்கியம் 7. பாலியல் உறவு முறையில் ஏற்பட்ட கட்டுப்பாட்டில் ஒடுக்குமுறையில் இருந்து தோன்றியது. 8, உடைமைச் சமூக அரசு அதிகாரத்தை ஏற்றுக் கொள்ளும் மனநிலையை ஏற்படுத்த இலக்கியம் நோன்றியது. 9, ஒன்றை அறிவுறுத்தும் நோக்கில் தோன்றுகிறது.10.அழகை அனுபவித்தல், அதனை வெளிப்படுத்தல். இவற்றை இலக்கியத் தோற்றம் பற்றிய கொள்கைகளாகவும் மனிதர்கள் கொண்டிருந்தனர்.

பிராய்டு (Freud) போன்ற உளவியலாளர்கள் மனிதனின் அடிமனத்தில் பதிந்து கிடக்கும் உணர்ச்சிகள் அகத்தூண்டுதலால் வெளிப்படுகின்றன என்கின்றனர். இந்த அகத்தூண்டல் செயலும் இலக்கியப் படைப்பிற்குக் காரணமாக அமையலாம். “மனிதன் ஒரு “புரியாத புதிரி“ என்று கூறுவர். இதற்கு அடிப்படைக் காரணம் அவனிடம் இருக்கும் மனம்“ என்னும் சிந்தனை சக்தி, வாழ்க்கை அனுபவங்களை அங்கிகரிப்பதும். வெறுப்பதும் வெளிப்படுத்துவதும் மனமே அனுபவம் வெளிப்படும் முறை மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது ஒரே துறையில் பயிலும் இருவர் தங்களுடைய அனுபவங்கள்: வெவ்வேறாக இருப்பதைக் கூறுகின்றனர். சங்க இலக்கியப் புலவர்கள் விதவிதமாக எழுதிய பாடல்கள் அவர்களது அனுபவம் வெவ்வேறாக இருப்பதைக் காட்டுகின்றன.கலை தோன்றுவதற்குரிய காரணங்கள் நான்கை மு.வ. குறிப்பிடுகின்றார் 1.தன்னுணர்ச்சியை வெளிப்படுத்தும் ஆர்வம், 2.பிற வாழ்வில் உள்ள அக்கறை 3. உண்மை மீது உள்ள ஈடுபாடு 4.கற்பனை உலகைப் படைக்கும் ஆர்வம் ஆகிய நான்கையும் அவர் குறிப்பீடுகின்றார்.

படைப்பாளர்களும் தங்கள் அனுபவத்தையே படைப்பாக வெளிப்படுத்துகின்றனர். “அனுபவத்தின் வெளிப்பாடு படைப்பு என்று பலரும் கூறுகின்றனர். அனுபவம் இல்லாமல் ஒன்றை எழுத முடியாது என்பது இவர்கள் கருத்து. இக்கருத்து சீர்தூக்கிப் பார்க்க தக்கது நேரடியாக

அனுபவம் இல்லையெனினும் ஒரு அனுபவத்தின் மூலம் பிறிதொன்றை ஒப்பிட்டுப் பார்த்துத் தம் கற்பனையையும் சேர்த்துக் கவிஞர்களும், எழுத்தாளர்களும் படைப்பாக்கம் செய்ய முடியும். இது தான் நேரில் அனுபவித்துச் செல்வது போன்ற பிரமையை (Image) நமக்கு உண்டாக்கி விடுகிறது. இதுதான் கலைப்படைப்பின் சிறப்பு. இந்த அடிப்படையில் இலக்கியம் உருவாக அனுபவம் துணை செய்கிறது எனக் கூறலாம். ஒவ்வொரு படைப்பாளனும் தன் அனுபவத்தைக் கூறும்போது வாசகன் பலவித இலக்கியச் சுவையைப் பெறுகிறான். அனுபவம் படைப்பாளிகளின் ஒருவருக்கொருவர். புதிய தகவல்களையும் தருகின்றது.

**“ வான்கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை**
**நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன்கலந்து பால் கலந்து தீங்கனிக் கலைகலந்து**
**ஊன்கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே”**

என்று இராமலிங்க அடிகள் மாணிக்கவாசகரின் பாடலைப் படித்தபோது தனக்கேற்பட்ட இன்பவுணர்வு அனுபவத்தைக் குறிப்பிடுகின்றார். கவிச்சக்கரவர்த்தி கம்பர் இறந்தபோது அந்தத் துயரத்தை எண்ணிப் புலவர் ஒருவர் பாடிய தனிப் பாடலொன்று அப்புலவர் பெற்ற துயரஅனுபவத்தைக் காட்டுகின்றது.

**“இன்றன்றோ கம்பன் இறந்தநாள் என்கவிதை**
**இன்றன்றே ராசசபைக்கேறும் நாள்- இன்றன்றோ.**
**பூமகள் வாழப் புவிமகள் வீற்றிருக்க.**
**நாமகள் நூல்வாங்கும் நாள்”**

என்பது அப்பாடல்,

கம்பன் இறந்ததால் கல்விக்குரிய நாமகளாகிய கலைமகளின் “தாலி“ எனும் நூல் அருந்து விட்டது எனப்பாடுகிறார் புலவர், மேலும் புதுமையான செய்திகளைக் கூற விரும்புவதும் தனக்கேற்பட்ட இன்ப அனுபவத்தை பிறகுக்கு எடுத்துக் கூற எண்ணுவதும் புகழ் பொருள் முதலியவற்றைக் கருதுவதும் இலக்கியத் தோற்றத்திற்குரிய உந்து சக்திகளாக விளங்குகின்றன. படைப்பாளன் தன் கொள்கைகளை வெளிப்படுத்தும் நோக்கில் படைக்கும் இலக்கியங்களும் உண்டு பாரதி, பாஞ்சாலி சபதத்தை நாட்டு விடுதலை என்னும் தன் நோக்கம் குறித்து எழுதியதாகக் கூறுவர்.பாரதிதாசனின்,

**“சித்திரச் சோலைகளே-உமைநன்கு**
**திருத்தஇப் பாரினிலே – முன்பு**
**எத்தனை தோழர் இரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே”**

என்னும் பாடல் அவரது பொதுவுடைமைச் சிந்தனையைக் காட்டுகின்றது. இங்குத் “தோழர்“ என்பது தொழிலாளர்கள்.சமுதாயத்தில் இலக்கியம் தோன்றப் பொதுவான காரணங்களும்

தனிமனிதன் என்னும் வகையில் ஒரு படைப்பாளி இலக்கியம். “படைக்கத் தூண்டுதலாக இருக்கும் உந்து சக்திகளும் அடிப்படையாய் அமைகின்றன.

## இலக்கியமும் வாழ்க்கையும்

1.மனித சமூகம் பல விரிக்கங்களாகப் பிரிந்து கிடக்கிறது. வர்க்கங்களுக்கிடையில் முரண்பாடுகள் வளர்கின்றன. முரண்பாடுகளைத் தீர்த்து ஒரு வர்க்கமாக ஆக்கும் முயற்சியும் தொடர்கிறது. வர்க்கப் பின்புலத்தில் வாழும் மனிதர்களுக்கு அந்தந்த வர்க்கம் குரலுக்கேற்ற வாழ்க்கை அமைகிறது.இலக்கியங்கள் இந்த வர்க்கங்களின் வாழ்க்கையை ஓட்டியே அமைகின்றன.எந்தக் காலத்தில் எந்த வர்க்கம் ஆக்கம் செலுத்துகிறதோ அந்த வர்க்கச்சாயலும், பண்புகளும் இலக்கியத்தில் பதிவாய் விடுகின்றன. இது தவிர்க்க இயலாதது. இயங்கியல் முறை சார்ந்தது. பாட்டாளி வாக்கம் தலையை தாங்கும். சமுதாயத்தில் மனிதனை அடிமைப்படுத்தும் நிலை மாற்றப்படுகிறது.

2.மனிதர்களின் சிந்தனைகள் அவர்கள் சார்ந்துள்ள வர்க்கத்திற்கேற்பவும் வாழ்நிலைக்கு ஏற்பவும் அமைகின்ற இத்தகைய வாழ்க்கை முறைக்கு ஒத்த இலக்கியங்கள் அந்தந்த சமூகத்திலும் படைக்கப்படுகின்றன. குறிப்பிட்டதொரு சமுதாயத்தில் படைக்கப்பட்டுள்ள இலக்கியங்களின் உள்ளடக்கத்தைக் கொண்டு அந்தச் சமுதாயம் எந்த வர்க்கத்தைச் சார்ந்தது என்றும் கண்டு கொள்ளலாம். எனவே இலக்கியங்கள் மனித சமூகத்தோடு கொண்டுள்ள உறவு பிரிக்க இயலாதது. இலக்கியம் மனித வாழ்வை சுலபமாகக் கொண்டது. கற்பனையே ஆனாலும் அது மனித மனம் சம்பந்தப்பட்டது இலக்கியத்திற்குப் பாடுபொருள் மனித வாழ்க்கையாக உள்ளது. மனிதனை அது நிழல்போலத் தொடர்கிறது. இலக்கியமின்றி வாழ்க்கை இல்லை எனக் கருதத்தூண்டுகிறது. இலக்கியங்கள் மனித வாழ்வில் மறைந்து கிடக்கும் சில உண்மைகளை அழகியல் உணர்ச்சிகள் வெளிப்படுத்த உதவுகின்றன

3.மருதநிலத்தில் ஒரு குளத்தில் குவளை மலர்கள் பூத்திருந்தன. பக்கத்தில் மயில்கள் ஆடிக்கொண்டிருந்தன, அது கார்காலம், இந்தச்சூழலை நேரில் பார்க்கும்போது நம்மை ஓரளவுக்குப் பார்க்கும்படி செய்வது மயில்கள் மட்டுமே. மேலிருக்கும் மேகத்தையோ தாமரை மலரையோ ஒவ்வொன்றாக எண்ணிப் பார்க்க முயலுவதில்லை. ஆனால் அங்கு நிகழும் நிகழ்ச்சிகளையும் உள்ள பொருள்களையும் தொடர்புபடுத்திக் கம்பர் கூறுகிறார். அந்நிகழ்ச்சிகளைப் பாட அவர் பாடியதைக் காணும்போது உண்மை நிகழ்ச்சிகளாகிய தாமரை குவளை ஆகிய மலர்கள் பூத்திருந்தமை, மேகம் இடித்தது, கார்காலமாக இருந்தது போன்றவை நமக்குப் புலப்படுகின்றன. இதனை அவர்,

**“தண்டலை மயில்களாடந் தாமரை விளக்கந்த தாங்க**
**கொண்டல்கள் முழவின்ஏங்கக் குவளைகண் விழித்து நோக்கத்**
**தெண்திரை எழினிகாட்டத் தேம்பிழி மகரயாழின்**
**வண்டுகள் இனிதுபாட மருதம்வீற்றிருக்கும் மாதோ”**

என்று பாடுகிறார். இது உண்மை நிகழ்ச்சியை மாதிரி வடிவமாக, பிறிதொரு காட்சியாகக் கற்பிக்கப்பட்டிருப்பதாகும்.இது கற்பனையின் அடிப்படையில் எழுந்தது.

4.இலக்கியங்கள் எத்தனையோ மர்மங்களை நாசுக்காக வெளிப்படுத்தி விடுகின்றன. வாழ்க்கையில் காணும் ஒன்றை அப்படியே இலக்கியத்தில் காண இயலாது. வாழ்க்கையில் நேரில் காணும் ஒன்றில் உண்டாகும். உணர்ச்சியை விடஅதிகமாகவோ அல்லது மேலும் சுவைக்கத்தக்க அளவிலோ நம் மனக்கண்முன் காட்சிகளைக் கொண்டு வந்து இலக்கியம் நிறுத்தி விடுகிறது. கலையின் சிறந்த வேலைப்பாடு இதுதான். நேரில் பார்த்ததைவிடவும் அதைப்பற்றிக் கூறும் இலக்கியம் பரவசம் அடையச் செய்து விடுகிறது. இலக்கியத்துடன் வாழ்க்கைக்குள்ள உறவு. உள்ளதை வெளிப்படுத்துதல் அன்று, உள்ளதை அவ்வாறே கூறாமல் உண்மையின் மாறுவேடத்தில் நிகழ்வுகளை இலக்கியம் கொண்டு வருகிறது.

5.தொழுநோயால் கை கால்கள் புண்ணாகிப் பிச்சையெடுக்கும் ஒருவரைப் பார்த்து அருவருக்கும் உள்ளம். தொழுநோயாளனைப் போல் மேடையில் நடிக்கும் ஒருவனைப் பாராட்டுகிறது. அவனுக்குப் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. காரணம் என்ன? உண்மையை வேறொன்றின் மூலமாகக் கலை உணர்த்துகிறது. கலைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள மெச்சத்தகுந்த பண்பு அதுதான். கவிதையைப் பற்றி கி.மு. நான்காம் நூற்றாண்டளவில் பிளாட்டோ சிந்தித்துளார். அவர் கூறிய அனைத்துக் கருத்துக்களும் இலக்கியம் என்பதற்கும் பொருந்துவதாக உள்ளன. நீதியையும் அவ்வப்போது எடுத்துச் சொல்லுவன இலக்கியங்கள்

6.இலக்கியம் பொழுதுபோக்குச் சூழ்நிலைகளிலும் பயன்படுகிறது. மனிதனின் எத்தகைய ஊழ்வோடும் ஒட்டிச்செல்லும் படைப்புகள் உண்டு. வாழ்வின் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஆற்றல் அதற்குண்டு. ஆனால் கலை, இலக்கியங்கள் அசல் அனுபவத்தை எப்பொழுதுமே அளிப்பதில்லை. ஒரு காலகட்டத்தில் நிலவிய தொழில், சமயம். தத்துவம் ஆகியவற்றின் மூலம் கிடைத்த அனுபவங்களைக் கலையிலக்கியங்கள் பிரதி செய்கின்றன. நினைவூட்டுகின்றன. இலக்கியம் நமக்கு அளிக்கும் இத்தகைய அனுபவ நிலையை ஆய்வு செய்தால் அது ஒரு நினைவூட்டல் என்பதைக் காண முடியும்.

வாழ்க்கைப் பிரதிபலிப்பு அனைத்தும் இலக்கியத்தால் கடன் வாங்கப்பட்டவை. பிரதி எடுக்கப்பட்டவை. அசல் அன்று. அவை உண்மை நிகழ்வுகளின் மாதிரிகளாக அமைந்தவை. படியெடுக்கப்பட்டவை. ஆனாலும் இலக்கியம் தரும் அந்த ஆழ்ந்த பரவச நிலையை அசல் அனுபலம் பல சமயங்களில் தருவதில்லை.

**“வாழ்க தீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்**
**தாழ்வுற்று வறுமைமிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்**
**பாழ்பட்டுப் போனதாமோர் பாரத தேசந்தன்னை**
**வாழ்விக்க வந்த காந்தி மகாத்மா வாழ்க வாழ்க”**

என பாரதியார் காந்தியைப் பாடுகின்றார். அவருடைய தேசத்தொண்டுகளை - தியாகச் செயல்களை உள்வாங்கிக் கொண்ட பாரதி அவற்றைச் சுருக்கிச் சாரமாக்கிப் பிறிதொரு வடிவமாகக் கூறுகிறார். இதில் காந்தியடிகள் உழைப்புச் சொல்லப்பட்டிருக்கிறது. அது பாரதி

அனுபவித்ததை அப்படியே பதிவு செய்யவில்லை, அதனை வேறு சொற்களால் பதிவு செய்கிறார். காந்தியின் உழைப்பை நேரில் கண்டால் மகிழ்வதைக் காட்டிலும் அதிகப்படியாக மகிழும் வண்ணம் பாடியுள்ளார். மனித வாழ்க்கையின் முழுமை எழுத்தாலோ, இசையாலோ, ஓவியம், சிற்பம் முதலியவற்றாலோ மாதிரிப் படிவம் எடுக்கப்படுகிறது. இம்மாதிரியை உண்மையெனக் கருதி ரசிக்கும் அளவுக்கு இலக்கியம் நம்மை இழுத்துச் செல்கிறது. இலக்கியத்தின் இத்தன்மை போன்றத்தன்மை (imitation) எனக் கூறப்படுகிறது. இது பற்றி வ.ரா. தமது நூலொன்றில்,

**சித்திரம், சாகித்தியம். சங்கீதம், அபிநயபாவம். மனத் தத்துவ நாடித்துடிப்புகள் இவைகளை ஒன்று சேர்த்துப் பொருத்திப் பார்த்தால் அது நாடகக்கலையாக அமையும். இயற்கையின் படைப்பு வேலைக்குப் போட்டியாக அமைந்திருப்பது மனிதனுடைய கலை வேலை. இயற்கையின் படைப்பில் உயிர் இருக்கிறது. சுலையில் கிடையாது. அதற்குப் பதிலாக ஈடாக என்று சொல்லலாம் வேறொன்று இருக்கிறது. கலையிலே ஒருவகை தன்மயக்கம் இருக்கிறது. அந்தத் தன்மயக்கம்தான் கலையின் ஆகர்ஷணசக்தியாகும். உண்மையைப்போல் தோன்றும், தொனிக்கும் தன்மை கலையில் இருக்கிறது. விகடகவி. குருவியைப்போல் கத்தினால்தான் சபாஷ் பட்டம் பெறுகிறான், குருவிக் கொண்டு அல்லது குருவியாகக்கத்தினால், சபாஷ் பட்டம் “வாங்கமுடியாது. எனவே கலை என்பது உண்மையப்போல அசல்சரக்கைப் போலத் தோன்றும் தன்மை கொண்டதாகும்**.

எனக் குறிப்பிடுகின்றார். இலக்கியமும் ஒரு தலை ஆவதாக கலைக்குரிய பண்பு அதற்கும் உண்டு. எனவே வாழ்க்கையின் உணவை நிலையைப் பிறிதொரு விதமாக உணர்த்த இலக்கிகங்கள் முற்படுகிறது இலக்கியத்தின் இந்த முயற்சியினாய் வாழ்க்கைப் பாதையின் பல்வேறு மேடு பள்ளங்களை மனிதன் உணர்ந்து கொள்கிறான். வாழ்க்கையை மாற்றி அமைத்துக்கொள்ளவும், புதுமையை நாடிச்செல்ல இலக்கியம் பயன்படுகிறது

7.இலக்கியம் மக்களின் உழைப்போடு சம்பந்தப்பட்டது நாட்டுப்புறப் பாடல்களும் கலை வடிவங்களும் இதை உணர்த்துகின்றன. ஏற்றம் இறைக்கும் பாட்டாளி, ஏர் உழும் உழவும், நடவு ஆடும் பெண்கள் போன்றோர் தங்கள் உழைப்பின் போது பாடுகிறார்கள். எழுதப்படாத எழுத்துக்களாகவும் சுற்றுத்தரப்படாத பாடமாகவும் அவர்கள் மனதில் பதிகின்றன. வேலையின் சுமையைக் குறைக்க மட்டுமின்றி மரபு சார்ந்த பண்பாகவும் இப்பாடல்கள்அமைகின்றன. ஒரு காலத்தில் உழைக்கும் மக்கள் யாவரும் இவ்வாய்மொழி இலக்கியங்களைத் தெரிந்து வைத்திருந்தனர் ஏனெனில் எல்லோரும் உழைக்கிறவர்கள். இன்று உலகம் மாறிவிட்டது. காரணம் அத்தகைய உழைப்பு எல்லோருக்கும் இல்லை அந்த நிலை என்பதுதான். உழைப்பின் உன்னதத்தை அதில் ஈடுபடும் மக்களின் வாழ்க்கைச் குழலை இவ்வியாகியங்கள் விளக்குவனவாக அமைகின்றன. அவர்கள் வாழ்க்கையை அவை பிரதியலிக்கின்றன. இலக்கியம் இனம். மதம், தேசம் கடந்து மக்களை இணைக்கிறது. இணைக்க வேண்டும்.

சுருங்கச் சொன்னால் பின்வரும் வகைகளில் இலக்கியம் வாழ்க்கையோடு தொடர்புடையதாக இருக்கிறது.

1. ஏழை பணக்காரன் என்ற நிலை மாறி பாட்டாளி வர்க்க உறவுகளை மேம்படுத்துகிறது.
2 இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்கும் நெருக்கமானஉறவுண்டு.

3. இலக்கியத்துக்குரிய பாடுபொருளை வாழ்க்கை தருகிறது
4. படைப்பாளனின் வாழ்க்கை அனுபவத்தை வெளிப்படுத்துகிறது
5.வாழ்க்கையை மாதிரிப்படமாகக் காட்டுகிறது. அப்பட்டமாக காட்டுவதில்லை.
6. உண்மைத் தன்மையை உள்ளவாறு காட்டாமல் வேறொன்றாகக்காட்டிப் பரவசம் தருகிறது.
7.போன்மைப்படைப்புகள் (ஒன்றைப் போல) உருவாகச் செய்கிறது. இது
8.பொழுதுபோக்குச்சாதனமாகும்.
9 உழைப்புடன் நெருங்கிய உறவுடையது
10. இனம், சாதி, மதம். நாடு கடந்து வாழ்க்கையை உணர வைக்கிறது,
11. வாழ்க்கையின் சிறப்புத்தன்மை, சிறப்பற்ற நிலை ஆகியன வெளிப்படுத்தப்படுகின்றன.
12.நீதியை உணர்த்தும் சட்ட நூலாக இலக்கியம் விளங்குகிறது.
13.மனிதனை அது நிழல்போலத் தொடர்ந்து ஒவ்வொரு சமயத்திலும் அவனை வாழ்க்கைப்பிரச்சினைகளிலிருந்து காக்கிறது.

இவ்வாறு மனித வாழ்க்கையின் அனுபவங்களிலிருந்தும், செயற்பாடுகளிலிருந்தும் இலக்கியம் தொடர்கிறது. இலக்கியமும் வாழ்க்கை ஒட்டிப் பிறந்த இரட்டைக்குழந்தைகள், ஒன்றையொன்று பிணைத்துக்கொண்டுள்ளன.

## இலக்கியப் பாகுபாடுகள்

அக இலக்கியம். புற இலக்கியம், நீதி இலக்கியம், பக்தி இலக்கியம் காப்பியங்கள், இதிகாசங்கள், புராணங்கள், சமய நூல்கள், சிற்றிலக்கியங்கள், சித்தர் பாடல்கள், தனிப்பாடல்கள், இஸ்லாமிய இலக்கியங்கள், கிறித்துவ இலக்கியங்கள். உரையாசிரியர். இலக்கியங்கள். பயண இலக்கியங்கள், கட்டுரை இலக்கியங்கள், கடித இலக்கியங்கள், மேடைப் பேச்சு, சிறுகதை, நாவல், மரபுக் கவிதை, நாடக இலக்கியம், புதுக்கவிதை, வானொலி இலக்கியம், திரைப்பட இலக்கியம், மொழிபெயர்ப்பு இலக்கியம். மூச்சந்தி இலக்கியம், கானாபாடல்கள் முதலியன இதில் அடங்கும். நாட்டுப்புற இலக்கியம். தன் வரலாற்றிலக்கியம் எனவும் பல பிரிவுகள் உள்ளன.

எழுத்திலக்கணம், சொல்லிலக்கணம் பொருள் இலக்கணம்,யாப்பிலக்கணம், அணியிலக்கணம் பாட்டியல் நூல்கள். நிகண்டுகள் என இலக்கண நூல்கள் பகுக்கப்படுகின்றன. தமிழ் இலக்கியங்களை வகைப்படுத்தியும் அவற்றின் பாகுபாடுகளைப் பிரித்தும் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் கூறியுள்ளனர். பாகுபாடு என்பது சிறு பிரிவுகளைக குறிக்கும். வகை என்பது பெரும் பிரிவுகளைக் கட்டும். இவ்விலக்கன இலக்கிய வகைகளைத் தமிழ்விடுதூநில் சொல்லப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கது. ஐரோப்பியரின் வருகைக்குப் பிறகு இலக்கியங்களை வகைப்படுத்தும் முயற்சி பெரிதும் நிகழ்ந்துள்ளது. இந்தளத்தில் கால்டுவெல் (1856), ஜே.வில்சன் (1832-1910) போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள், தமிழில் சூரியநாராயண சாஸ்திரி (870-1903), தாமோதரம்பிள்ளை (1832-1901), சீனிவாச ஐயங்கார், எம்.எஸ்.பூர்ணாலிங்கம்பிள்ளை, தெ.பொ.மீ, ஆ.வேலுப்பிள்ளை, மு.வ.. தமிழ்ண்ணல், கமில்சுவலபில் கைலாசபதிசிவத்தம்பி முதலியோர்

இலக்கியவகை மற்றும் பாகுபாடுகள் உருவான நிலை பற்றி விவரித்துள்ளனர். தமிழ் இலக்கிய வரலாற்றில் இலக்கணம் இலக்கியம் எனும் இரு வகைகள் உள்ளன. அவற்றுள்ளும் சிறு சிறுபாகுபாடுகள் கூறப்படுகின்றன.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினாக்கள்

1.இலக்கியம் என்றால் என்ன?

2.இலக்கியம் பற்றிய அறிஞர்கள் விளக்கம் தருக

3.இலக்கியம் சொற்பொருள் விளக்கம் தருக.

4.இலக்கியவடிவங்கள் குறித்து எழுதுக.

5.இலக்கிய வகைகள் எவை எவை

6.தமிழில் தோன்றிய ஆரம்ப கால இலக்கியங்களைத்தருக

7.பண்டைய தமிழ் இலக்கியங்கள் எவை எவை

8.தமிழ் இலக்கிய தோற்றம் குறித்து எழுதுக

9.இலக்கியத்தின் கூறுகள் குறித்து எழுதுக.

10..இலக்கியப்பயன்கள் விளக்குக.

### கட்டுரை வினாக்கள்

1.இலக்கியத்தின் பயன்கள் குறித்து எழுதுக

2.சமுதாயத்திற்கான இலக்கிய தேவையை விரித்துரைக்க.

3.நிலைபெறும் இலக்கியங்கள் குறித்து கருத்துரைக்க.

4.இலக்கியங்கள் தோன்றுவதற்கான காரணங்களை எடுத்துரைக்க.

5.மனிதனின் வாழ்வை தகவமைப்பது இலக்கியமே என்ற கூற்றை நிரூபிக்க.

6.இலக்கியத்திற்கும் வாழ்க்கைக்குமான தொடர்பினை விரித்துரைக்க

7.இலக்கியப் பாகுபாடுகள் குறித்து கட்டுரைக்க.

8.இலக்கியம் என்பது வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்ற கூற்றை நிறுவுக.

9.தமிழ் மொழியில் இலக்கியங்கள் வளர்ச்சியை விரித்துரைக்க

10.இலக்கியங்கள் உருவாவதற்கான தோற்ற சூழல்களை எடுத்துரைக்க

அலகு: 2

## இலக்கியத்திறனாய்வு : இசங்கள் கொள்கைகள்

### இலக்கியக் கொள்கை - விளக்கம் - வகைகள்

“இலக்கியக் கொள்கை“ என்னும் தொடர் ஆழமான பொருள் உடையது. ஆங்கிலத்தில் இதனை 'Literary Theory எனக் கூறுகின்றனர். இத்தொடரில் அமைத்துள்ள கொள்கை என்னும் சொல் இலக்கியப் பகுதியில் கையாளும் போது உண்டாக்கும் பொருட்பாகுபாட்டை நன்கு உணர்ந்து கொண்டால் இலக்கிய கொள்கை என்பதன் பொருளும் விளங்கும்.

“கொள்கை” என்பது ஒன்றைக் கொள்ளுதல் என்னும் பொருள் உடையது. ஒருவரால் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்துக்கள் இத்தன்மைகள், முடிபுகள் ஆகியவற்றை இது குறிக்கிறது. சங்கஇலக்கியங்களிலும் கொள்கை“ என்னும் சொல் பெற்றுக் கொள்ளுதல் என்னும் பொருளில் வந்துள்ளது. வருகை செல்கை என்பன போல கொள்கை என்பதும் தொழிற்பெயராக அமைகின்றது. ஆங்கிலத்தில் வுாநழசலஜீசைஉெிடநஇ னுழஉவசைநெ முதலிய சொற்கள் இதனை உணர்த்துவன. எனினும் ”வுாநழசல“ என்ற சொல்லே “கொள்கை“ என்பதற்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றது. ஆஸ்டின் ரெனவெல்லர்க் என்பவர் எழுதிய “டுவைநயசல வுாநழசநைள“ என்ற நூலை ”இலக்கியக் கொள்கை எனத் தமிழில் குளோரியா சுந்தரமதி மொழிபெயர்த்துள்ளார். படைப்பு கொள்கை என்பதற்குரிய ஆங்கிலச் சொல் இலக்கியத் தளத்தில் வுாநழசல என்று கொள்ளப்படுகின்றது.தியரி(வுாநழசல)என்பது அறிவியல் அல்லது கலை பற்றிய விதிமுறைகளுக்குத் தரப்படும் கறார்தன்மையற்ற பொதுப்படையான விளக்கம்: சில உண்மைகள் அல்லது நிகழ்ச்சிகளுக்கு அடிப்படைச் காரணமாக அமைவது இன்னது என நியாயப்படுத்திக் கூறப்படும். அனுமானங்கள் நடைமுறைக்கு மாறானது பரிசோதனை செய்து பார்க்கப்படாதது அனுமான அளவிலானது என்று விளக்கம் கூறுகின்றனர்.இலக்கியத்தைப் படைப்போன், அதனைப் படிக்கும் வாசகன் ஆகிய இருவருக்கும் படைக்கும் செயல் படைக்கப்பட்ட பொருள் ஆகியன பற்றிப் பொதுவாக விளங்கும் கருத்துக்களே இலக்கியக் கொள்கைகள் ஆகும். இலக்கியத்தின் தோற்றம், இயல்பு பயன் பண்பு குறித்துக் கூறப்படும் கருத்துக்களே இலக்கியக் கொள்கை எனவும் வரையறை செய்கின்றனர்.

இலக்கியக் கொள்கை என்பதை இலக்கியம் பற்றிய கொள்கை என்றும் இலக்கியத்தில் பெறப்படும் கொள்கை என்றும் இருவகையாகப் பிரிப்பார்“ கம்பராமாயணம் எவ்வாறு காப்பிய இலக்கணங்கள் பொருந்த அமைந்துள்ளது என்று பார்ப்பதும் அதன் அமைப்பு முறை பற்றிய கருத்துக்களும் இலக்கியம் பற்றிய கொள்கையாகும். அக்காவியத்தும் பேசப்படும் கற்பு அரசியல் உறவுமுறை முதலிய பற்றிய கருத்துக்கள் இலக்கியத்தில் பேசப்படும் இலக்கியக் கொள்கைகளாகும். முதலில் உள்ளது இலக்கியத்தின் அமைப்பையும் பின்னது அதன்

உள்ளடக்கச் சிறப்பையும் பேசுகின்றன. இலக்கியக் கொள்கை இலக்கியத்தின் அடிப்படை விதிகளைக் கூறுகின்றது. இலக்கியம் படைப்பதற்குரிய விதிமுறைகள் பற்றிக் கூறப்படும் கருத்துக்கள் இலக்கியத்தின் கொள்கைகளாக அமைகின்றன. ஓர் இலக்கியத்தில் ஒன்றோ இரண்டோ கொள்கைகள் அமையலாம். இலக்கியம் வடிவம் (Form), உள்ளடக்கம் (Content), உத்தி (Technique of Expression). படைப்போன் (Author), படிப்போர் (Readers) என்னும் ஐந்து கூறுகளை கொண்டது. இவ்வைந்து கூறுகள் பற்றிச் சொல்லப்படும் கருத்துரைகளே இலக்கியக் கொள்கைகள் எனவும் வரையறை செய்கின்றனர்.திருக்குறளை எடுத்துக் கொண்டு மேற்சுட்டிய ஐந்து கூறுகளையும் பொருத்திப் பார்க்கலாம். திருக்குறளின் வடிவம் பற்றிய கொள்கை ஒரே யாப்பமைதியில் சொல்வது என்பதுதான், வடிவத்தைப் பொருத்த வரையில் திருக்குறள் எளிமையான முறையைப் பின்பற்றுகிறது. குறள் வெண்பாவில் தோற்றம் வளர்ச்சி முதலியன அவ்வக்காலக் கவிதைச் சூழலையும் குறிக்கிறது. எதுகை, மோனை. அணிகள் என்று பலமுறைகள் (Methods) பின்பற்றப்படுகின்றன. இவ்வாறு வடிவம் பற்றிய ஒரு முடிபு கொள்ளப்பட்டால் அது திருக்குறளின் வடிவம் பற்றிய இலக்கியக் கொள்கை எனலாம்.

ஓர் இலக்கியத்தில் உள்ளடக்கம் எதனை முதன்மையாகக் கொண்டமைகிறதோ அதுவே அதன் இலக்கியக் கொள்கை என்றும் கூறலாம். சிலப்பதிகாரம் கற்பையும் ஊழையும் முதன்மைப்படுத்துகிறது.திருக்குறளின் உள்ளடக்கம் அறக்கருத்துக்களை மிகுதியும் கொண்டதாக அமைகிறது. திருக்குறள் “நீதி இலக்கியம்’ என வரையறுக்கப்பட்டிருப்பதும் அதன் இலக்கியக் கொள்கை ஆழமும் நீதியும் கொண்டது என்பதை வலியுறுத்துகின்றது. சமூக வாழ்க்கை நெறிகள் அதன் உள்ளடக்கமாக அமைகின்றன. திருக்குறளின் கருத்துச் சொல்லப்படும் முறை “வேண்டுகோள் முறையிலும் எடுத்துரை (Narration) முறையிலும் அமைந்துள்ளது. திருக்குறளைப் படிக்கும் ஒருவர் திருவள்ளுவர் பற்றிய படிமம் (Image) ஒன்றை உருவாக்குகிறார். திருக்குறளில் ஆசிரியர் தன்னைக் காட்டிக் கொள்ளாமல் கருத்தையே பெரும்பகுதி முன்வைக்கும் போக்கும். பின்பற்றப்பட்டுள்ளது. சமூகச் சிந்தனைகளை எளிமையாகத் தருகிறார். வள்ளுவர் என்று ஆசிரியரைப் பற்றிய கருத்துருவரக்கம் உண்டாக வாய்ப்பிருக்கிறது. திருக்குறளின் வாசகன் யார்? என்ற வினா வாசகன் பற்றிய இலக்கியக் கொள்கைக்கு வழிவகுக்கிறது. அரசியல் பொருளாதாரம் சமூகநீதி முதலியன காக்கப்படுவதற்கான நீதிகள் சொல்லப்படுகின்றன. இறுதியாகப் படைப்பின் பயன் பற்றிச் சிந்திக்கப்படுகிறது திருக்குறளின் பயன் நீதிக் கருத்துக்கள். அறச்சிந்தனைகள் பற்றிய உணர்வுகளைத் தோற்றுவித்தலாகும். அறக்கருத்துக்களால் சமுகம் எத்தகை பயனடைகிறது என்பது பயன் பற்றிய கொள்கையாகும். எனவே வடிவம் முதல் பயன் ஈறாகச் சொல்லப்பட்ட அதன் கூறுகள் பற்றிய செய்திகள் குறளில் இலக்கியம் பற்றிய கொள்கைகளாக அமைகின்றன.

இலக்கியம் எந்த நோக்கத்திற்காக எழுதப்பெற்றதோ அந்த நோக்கமே அதன் இலக்கியக் கொள்கையாகவும் கூறலாம். ஆகவே கொள்கையும் நோக்கமும் ஒன்றாகவே இயங்குகின்றன. கொள்கையும் நோக்கமும் ஒன்றல்ல வேறு வேறானவை எனக் கூறப்படும் கருத்தும் உள்ளது.

ஒரு குறிப்பிட்ட வகை இலக்கியம் அதற்குரிய முறைகளைப் பின்பற்றி அவ்வொழுங்கு முறை இயற்றப்பட்டிருக்குமாயின் அவ்வொழுங்குமுறை அவ்விலக்கியத்தின் இலக்கியக் கொள்கையாகவும் அமைகிறது. தமிழ் லெக்சிகன் (Lexicon) ஒழுங்கு விரதம், கடமை என்னும் பொருள்களைக் “கொள்கை“ என்னும் சொல்லிற்கு வழங்குகிறது.“ குடிப்பிறப்பாளர் தம் கொள்கையில் குன்றார் என்பது நாலடியார். இங்கு “கொள்கை“ ஒழுக்கம் என்னும் பொருளில் வந்துள்ளது. “இன்னா நாற்பது“ இன்னாதவற்றை மட்டும் கூறுகிறது. ஒவ்வொரு இலக்கியத்திற்கும் தனிப் பண்பும் பொதுப் பண்பும் உள்ளன. ஒரு நூலாசிரியன் அவன் படைக்கும் இலக்கியப் படைப்பில் இவ்விரண்டையும் அமைக்கவே முயல்கிறான். இலக்கியக் கொள்கைகளை ஆராயும்போது இலக்கியத்தின் தனிப் பண்பையும் அறிய முடியும், இலக்கியம் குறிப்பிட்ட கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு படைக்கப்படும் போது அதற்குரிய தனிச்சிறப்பும் சமூகத்தில் உண்டாகிறது.

பல்வேறு இலக்கியச் சிறப்புகள் இணைந்து அமைவதே இலக்கியத் கொள்கை என்று ரெனவெல்லக் முதலியோர் குறிப்பிடுகின்றனர். எந்த வகை இலக்கியமாக இருந்தாலும் சமுதாயத்திற்கும் அதற்கும் உறவு உண்டு. இலக்கியத்தைச் சமுதாய நோக்குடன் பகுத்து ஆராயும்போது கிடைக்கும் முடிபுகள் இலக்கியக் கொள்கைகளாக அமைகின்றன. உருவம், உள்ளடக்கம். உத்தி ஆகியவை குறித்துப் படைப்பாளன் கொண்டிருக்கும் திண்ணிய கருத்தும் இலக்கியக் கொள்கையாகும்.ஒரு படைப்பாளனின் படைப்புக்களை வைத்துக் கொண்டு அவனுடைய இலக்கியக் கொள்கைகளைக் கண்டறிய முடியும். அவனுடைய புறவாழ்க்கையையும் பிற சிந்தனைகளையும் இதற்கு உதவியாகக் கொள்ள வேண்டும். பாரதியார். பாரதிதாசன் ஆகியோருடைய கொள்கைகளை அவர் தம் படைப்புக்களைக் கொண்டும் அரசியல் வாழ்க்கை முறையைக் கொண்டும் அறிந்திடமுடியும்.

## இலக்கியக் கோட்பாடு

இலக்கியப் படைப்புக்களில் பின்பற்றப்படும் வரையறுக்கப்பட்ட விதிமுறைகள் இலக்கியக் கோட்பாடு ஆகும். ஆங்கிலத்தில் இதனை Principle என்பர். அறிவினால் ஆராய்ந்து ஒத்துக்கொள்ளப்பட்ட தத்துவங்களும் கருத்துக்களும் கோட்பாடுகள் என்றழைக்கப்படுகின்றன. கொள்கை என்பது கருத்தில் மட்டும் நிற்கக்கூடியது. ஆனால் கோட்பாடு நடைமுறையில் ஆராயப்பட்டு ஒத்துக்கொள்ளப்பட்ட விதிகளைக் குறிக்கின்றது.

இன்றைய நிலையில் கொள்கை, கோட்பாடு ஆகிய இருசொற்களும் பயன்படுத்தப்படுகின்றன, இவை பொருள் வேறுபாடற்ற சொற்களாகவும் நிலவுகின்றன. எனினும் இவற்றிற்குள் சிறுவேறுபாட்டைக் காணலாம். ஒரு பொருளைப் பற்றிப் பல சிந்தனைகள் எழலாம். இச்சிந்தனைகளின் தொகுப்புக் கோட்பாடு என வழங்கப்படுகின்றது. பொருளாதாரம் என்னும் கருத்துருவாக்கத்தில் பாட்டனிவர்க்கம் முதலாளி வர்க்கம், உழைப்பு, உழைப்பின் சக்தி, அளவு மாற்றம் - குணமாற்றம் போன்றவை பேசப்படுகின்றன. இவை யாவும் மார்க்சியக் கொள்கைகள்.

ஆனால் இவை பொருள் முதல்வாதம் (Materialism) என்னும் கோட்பாட்டில் அடங்குகின்றன. பாரதி தேசத்தலைவர்கள், தேசியக்கொடி பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி எனப் பல பொருளில் பாடியுள்ளார். இவை அவருடைய தேசியச்சிந்தனைகள் அல்லது கொள்கைகளாகும். ஆனால் இவை “தேசப்பற்று“ என்னும் கோட்பாட்டினுள் அடங்குகின்றன. செய்யுளில் உவமை, உருவகம். தற்குறிப்பேற்றம் முதலியன இலக்கியம் கொள்கைகளாகும். இவை அணி இலக்கணக் கோட்பாட்டில் அடங்குகின்றன.

பெரியபுராணம் அருவருக்கத்தக்க கதைகளை உடையது. என்கிறார் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை. ஏன் இவ்வாறு கூறினார். அக்கருத்துச் சமூகத்திற்குப் பயன்படாது என்பதால் அவ்வாறு சொன்னார். இவ்வாறு கூறுவதற்கு அவருக்குப் பயன்பட்டது ஒருகோட்பாடு.அது “பயன்பாட்டுக் கோட்பாடு (Pragmatism) ஆகும். ஓர் இலக்கியம் பற்றிச் சில முடிபுகளைச் சிலர்கொண்டிருப்பர் அந்த முடிபுகளுக்கு உதவியாக அவர்களுக்கு இருப்பது இலக்கியக்கோட்பாடாகும்.அறிவு நிலையில் ஒன்றைக் கருத்தாக வைத்திருப்பதுதான் கொள்கை அந்தக் கொள்கையை வரன்முறை செய்து படைப்பாளி தான் படைக்கும் இலக்கியத்திற்குத் தக்கவாறு பயன்படுத்துகிறான். வெவ்வேறு கருத்துக்களைக் கொண்டு உருவாக்கும் போது ஒவ்வொரு படைப்பிற்கும் தனித்தனி நெறிமுறைகள் படைப்புக்களை உண்டாகின்றன. இந்நெறிமுறைகளே இலக்கியக்கோட்பாடுகள் என்று கூறுபடுகின்றன. ஒரு கோடபாட்டில் அடங்கிருக்கின்றன. காந்தியக் கோட்பாட்டில் அகிம்சை தீண்டாமை ஒழிப்பு, மதுவருந்தாமை போன்ற பல கொள்கைகள் அமைந்திருக்கின்றன.

## இலக்கியக்கொள்கைகளால் ஏற்படும் நன்மைகள்

1.இலக்கியங்கள் பல்வேறு கால கட்டங்களில் எழுத்தவை கொள்கைகளும் அவ்வக்காலங்கட்கு உரியனவாக உள்ளன. எனவே அடிப்படையில் இலக்கியம் பற்றி ஆய்வு செய்யவும் புரிந்து கொள்ளவும் இலக்கியக் கொள்கைகள் பயன்படுகின்றன,

2.அவ்வப்போது எழுந்துள்ள இலக்கியக்கொள்கைகளை வைத்து கொண்டு சமூக மாற்றத்தையும் இலக்கிய வளர்ச்சி நிலையையும் கண்டறிய முடியும்.

3.இலக்கியங்களின் வகைகளை அமைத்திட முடியும்

4.ஆராய்ச்சியாளர்கள் இலக்கியக் கொள்கைகளின் துணையுடன், மூலச்சான்றுகளைத் தேட இயலும்.

5.ஆய்வு சிக்கல்களை கண்டறிய இது உதவுகிறது.

## இலக்கியக்கொள்கைகளின் வகைகள்

மேலை நாட்டறிஞர் ஆப்ராம்ஸ் (Abrams) என்பவர் 21 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலக்கியக் கொள்கைகளை ஐந்து வகையாகப் பிரித்துக்காட்டினார். அதையே தமிழிலும் பிறமொழிகளிலும் பின்பற்றுகின்றனர். இக்கொள்கைகள் இலக்கியத் தோற்றத்திற்குரிய காரணங்களை விளக்குகின்றன. எனவே இவை இலக்கியத் தோற்றம் குறித்து எழுந்த இலக்கியக் கொள்கைள் ஆகும்.

1 அகவெழுச்சிக்கொள்கை (Inspirational Theory). 2. அவயவிக் கொள்கை (அ) உறுப்பியக் கொள்கை (Organic Theory), 3, அறவியல் கொள்கை (Ethical Thony), 4. அழகியல் அல்லது முருகியல் கொள்கை (Aesthetic Theory), 5. சமூதாயக் கொள்கை (Sociological Theory) என்பன அவர்களும் இலக்கியக் கொள்கைகளாகும்.

## I.அகவெழுச்சிக் கொள்கை

இலக்கியம் மனிதனால் படைக்கப்படும் உற்பத்திப் பொருள். இலக்கியம் ஏன் படைக்கப்படுகிறது? என்று சிந்திப்போமாயின் பல்வேறு கருத்துக்கள் தோன்றும். வரலாற்றுக் காலமுதல் மாறிவகும் சமூகத்தின் தேவைக்கு ஏற்ப எல்லாம் மாறுகின்றன. இலக்கியமும் மாறுகின்றது. காலத்தேவையே இலக்கியத்தின் வடிவம் உள்ளடக்கம் அனைத்தையும் தீர்மானிக்கிறது. எனவே இலக்கியம் படைக்கப்படுவதற்கான உந்துதல் சக்தி சமூகத் தேவையே (Demands of man and the society) என்பதாகும். இதனை இலக்கியவாதிகள் இலக்கியத்துடிப்புகள் (Literature Impulses) என்கின்றனர்.இத்தகைய உந்து சக்திகளுள் முதலாவதாக நிற்பது அகவெழுச்சியாகும் (Inspiration). இதனையே அகவெழுச்சிக் கொள்கை எனக் குறிப்பர். அசுத்தூண்டுதல் என்பது மனிதனிடம் ஏற்படும் ஒருவகை மன ஆற்றல், கவிஞர்கள் பிறக்கிறார்கள். அவர்கள் உருவாக்கப்படுவது இல்லை (Bom poets) என்பது மரபு வழியாகச் சொல்லப்படும் கருத்து. தனிமனிதனின அறிவுத்திறனால் உண்டாகாமல் அதனினும் மேம்பட்ட ஓர் ஆற்றலால் உந்தப்பட்டு உண்டாக்கப்படும் இலக்கியங்களே சிறந்த படைப்புக்கள் என்பதும் சமூகத்தில் வழங்கி வரும் கருத்தாகும். எனவே படைப்பாளன் தன் தகுதியினும் பிறிதொரு சிறந்த அகத்தூண்டுதளினால் தான் இலக்கியம் படைக்கப்படுவதாக நம்புகிறான்."கருமமே கண்ணாயினார்" என்பது போல ஒரு காரியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொள்கிறவர்கள் ஒரு கட்டத்தில் தன்னை மறந்து, தன் தர்மம் கெட்டு ஈடுபடுகின்றனர். இதனால் மனித இயல்புக்கு மாறான பேரார்வமும் மன எழுச்சியும் உண்டாகி உலகை மறந்தவர்களாகத் தம் பணியில் ஈடுபடுகின்றனர்.

**"மீட்டும் குயிலோசை செவியில்**
**மொய்ம்புறவே வேண்டும் - என்**

**பாட்டுத்திறத்தாலே - இவ்வையம்**

**பாலித்திட வேண்டும்''**

என்று பராசக்தியிடம் பாரதி வேண்டுகிறார். தன் கவிதை ஆற்றலைக் காட்டிலும் தெய்வீக ஆற்றலொன்று உண்டு என்பதை அவர் உணர்ந்து பாடுகின்றார். இதனை அறிவியல் உலகம் ஏற்பதில்லை. ஆனால் இவ்வாறு தன்னை மறந்து பாடும் நிலையை "தன்னை மறந்த படைப்புத்தூண்டல்" (Unconscious Creative Impulse) என்று உளவியலாளர் கூறுவர். அது ஏற்றுக்கொள்ளப்படுகிறது .கவிஞனின் கடினஈடுபாட்டாலும் உழைப்பாலும் இந்த அகத்தெழுச்சி உண்டாகிறது. இலக்கியம் படைக்கப்படுகிறது. இவ்வாறு அமைவனவெல்லாம் அகத்தெழுச்சித் தூண்டலால் ஆக்கப்படுபவை ஆகும்.

## தெய்வீக அகத்தெழுச்சி

தெய்வீக அகத்தெழுச்சி (Divine Inspiration) என்பது சமூக வரலாற்றுடன் எண்ணத்தக்கது. தெய்வீக அருள் படைப்பாளனில் மனத்தில் தோன்றுகிறது. அந்தத் தெய்வ அருளே அவனைப் பாடத்தூண்டுகிறது என்று இக்கொள்கை பேசுகிறது. இது பற்றிப் பிளேட்டோ பின்வருமாறு குறிப்பிடுகிறார்.ஒளிமயமான வடிவுடன் இறக்கைகளை விரித்துப் பறக்கின்ற ஒரு தெய்வீகப் பொருள் கவிஞனின் உள்ளத்திற்குள் வந்து நுழைகிறது. அப்பொழுது அவன் தன்னை மறக்கிறான். ஒருவகை ஆவேச உணர்ச்சியால் உந்தப்படுகிறான். இத்தகைய உணர்ச்சி மயமான நிலையில் ஒருவகை வெறியுணர்வோடு இலக்கியப் படைப்பில் அவன் ஈடுபடுகிறான். அந்த உணர்ச்சிக்கு ஆட்பட்டு உந்தப்படுகிற வரையில் அவன் பல வகையான படைப்புக்களைப் படைக்க இயலுகிறது. அந்த உணர்ச்சிக் குன்றியவுடன் அவன் செயலற்றுச் சோர்த்து விடுகிறான். எனவே தெய்வீக அசுத்தாண்டுதல் பொதுவாகக் கலைப் படைப்புக்களுக்கும். சிறப்பாக இலக்கியப் படைப்பிற்கும் உந்துதல் சக்தியாக அமைகிறது" என்பது அவர் கருத்து.

காளமேகப் புலவருக்கும் கம்பருக்கும் காளியின் திருவருளால் கவிபாடும் ஆற்றல் உண்டானது என்பது வழிவழியாகத் தமிழில் கூறப்படும் கதை. திருஞானசம்பந்தர் மூன்று வயதில் உமையம்மையிடம் ஞானப்பாலுண்டு கவிபாடினார் என்றும் முருகன் திருவருளால் குமரகுருபரர் வாய் திறந்து பேசினார். கவி புனைந்தார் என்றும் சமயக்குரவர்கள் இறைவனைப் பாடி அற்புதச் செயல்கள் செய்தனர் என்றும் கூறப்படுகின்றனர். இராமலிங்க அடிகளும் இறையருள் பெற்றார் என்பதும் அது. எனவே இறையருள் பெற்றவர்களே இலக்கியம் படைக்கக் கூடியவர்கள் என்னும் கருத்து மேலைநாடுகளிலும் சென்ற பதினெட்டாம் நூற்றாண்டு வரை உலகெங்கிலும் பரவியிருந்தது.

**"பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான்தருவேன் - கோலஞ்செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத்தமிழ் மூன்றும் தா''**

என்று அவ்வையார் பாடுகிறார். விநாயகனைப் போற்றினால் மூன்று தமிழும் கிடைக்கும் என்ற கருத்து தெய்வீக அகத்தெழுச்சியாகும். அதாவது தெய்வ அருள் கிடைத்தால் இலக்கியம் பிறக்கும் என்பது கருத்து.

## II.அவயவிக் கொள்கை

அவயவம் என்பது உறுப்பு. அவயவி என்பது உறுப்புடையது ஆகும். இலக்கியம் ஒரு முழுப்பொருள். அதற்குப் பல உறுப்புக்கள் உள்ளன. செய்யுள் என்னும் முழுவடிவிற்கு மாத்திரை முதலாக அளவியல் ஈறாகப் பன்னிரண்டு கூறுகளும் உறுப்புக்களாக அமைவதைத் தொல்காப்பியர் கூறுகின்றார். உறுப்புக்களும் உறுப்பை உடைய பாடலும் ஒன்றை ஒன்று விஞ்சாமல் சமமாய் நிற்பது அவயவிக்கொள்கையாகும். அவயவிக்கொள்கையில் செய்யுளின் வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றிற்கு இடையில் வேறுபாடு இன்றி இரண்டும் சம அளவில் செல்லும். அதாவது பாடுவோர், கேட்போர். பாடுபொருள். வடிவம், அறிவு. உணர்ச்சி, உண்மை-கற்பனை, அழகு-பயன்பாடு, குறிக்கோளியல்பு-நடைமுறை முதலியவற்றின் இடையே இசைவும். இணக்கமும் சேர்ந்துள்ளமை காணலாம். பொருள். வடிவம் என்னும் பாகுபாடு இக்கொள்கையில் காணப்பெறவில்லை. செய்யுளில் உள்ள உறுப்புக்கள் யாவும் ஒரே நிலையில் உள்ளது இது. சங்கப்பாடல்களில் சோகம், வீரம், காதல், புகழ், வருணிப்பு ஆகியவை கிட்டத்தட்ட ஒரே யாப்புடைய பாடல்களால் அமைந்துள்ளன. உள்ளடக்கத்திற்கு ஏற்ற வடிவம் அவற்றில் அமையவில்லை.

ஒரு தலைவன் பொருள் தேடச் சென்றான். அவன் தலைவி பால் கொண்ட காதல் உணர்வு அவனைத் திரும்பித் தலைவி இருக்கும் இடத்திற்குச் செல்லுமாறு தூண்டுகிறது. அவனது புறச்சூழல் பொருள் தேடுவதையே வற்புறுத்துகிறது. அறிவு பொருள் தேடுவதற்கும் உணர்ச்சி தலைவியைக் காணுவதற்கும் முந்துகின்றன. இரண்டனுக்கிடையில் அவன் தள்ளாடுகிறான். வலிமையுடைய இரு யானைகளால் இருபக்கமும் இழுக்கப்படும் கயிறுபோல அவன் இன்னலுறுகிறான். இதனைச் சங்கப் பாடல் தெரிவிக்கிறது.

**“புறந்தாழ்பு இருண்ட கூந்தற்போதின்**
**நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்**
**உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்**
**செல்லல் தீர்க்கம் செல்வாம் என்னும்**
**செய்வினை முடியாது எவ்வஞ் செய்தல்**
**எய்யா மையொடு இளிவுதலைத் தருமென**
**உறுதி தூக்கத் தூங்கி அறிவே**

**சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை**

**ஒளிறேந்து மடுப்பில் களிறுமாறு பற்றிய**

**தேய்புரிப் பழங்கயிறு போல**

**வீவதுகொல்என் வருந்திய உடம்பே”**

தலைவியைப் பிரிந்த பிரிவுத் துயரைத் தலைவன் இவ்வாறு கூறுகின்றான். இப்பாடல் வடிவம், பொருள், பாடுவோர். கேட்போர் என்னும் எப்பாகுபாடுமின்றிச் சமச்சீராக அமைந்துள்ளது. உணர்ச்சியோ, ஓசையோ, கருத்தோ தனிப்பட்டுத் தலை தூக்கவில்லை. படிப்போர். கருத்தை மட்டும் புரிந்து கொள்ள முடிகிறது

பாரதியாரின் பாடலொன்றில் தலைவி தன் காதலுணர்வைப் பாடுவதாக ஒரு நிகழ்ச்சி அமைந்துள்ளது.

**“பாலும் கசந்ததடி - சகியே**
**படுக்கை நொந்த தடி**
**நாலு வைத்தியரும் - இனிமேல்**
**நம்புதற்கில்லை என்றார்**
**கோலக் கிளிமொழியும் - செவியில்**
**குத்தலெடுத்த தடி**
**பாலத்துசோசியகும் - கிரகம்**
**படுத்தும் என்று விட்டான்**
**எண்ணியெண்ணிப் பார்த்தேன்- சகியே**
**ஏதும் விளங்க வில்லை**
**கண்ணன் திருவுருவம் - அங்ஙனே**
**கண்முன் நின்றதடி”**

என்னும் பாடலில் இனிய இசையும், மெய்ப்பாடுகளும், அதற்கேற்ற தனித்தனியே வடிவமும் பிரிவுத்துயரும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இதில் உள்ளடக்கமும். வடிவமும் உத்திகளும் தனிச்சிறப்புக்களுடன் நிற்கின்றன. மேற்குறித்த சங்கப்பாடலும் இப்பாடலும் “பிரிவு“ என்னும் உட்பொருளைக் கொண்டு பாடப்பட்டுள்ளன. எனினும் பாரதியின் பாடலில் இலக்கியக் கூறுகள் பல சிறப்பிக்கப்படுகின்றன. இதன்கண் ஓசை (பாடல்) அமைப்பு மிகுந்து காணப்படுகிறது. சொற்கள் படிப்போரின் உள்ளத்தை உடனடியாகத் தூண்டுமாறு அமைந்துள்ளன. பாலும் காத்தது. படுக்கை நொந்தது, நாலூ வைத்தியர், பாலத்துசோரியா, கிரகம் படுத்தும் என்பன பொதுமக்கள் உணர்ச்சி நிலையில் வழங்கும் சொற்களாக நிற்கின்றன. சொல்லின் ஆற்றலை உணராவிட்டால் மனிதர்களையே புரிந்து கொள்ள முடியாது என்கிறார். கன்பூசியஸ்.” மக்களின் இயல்பான பேச்சு வழங்கும் இங்குப் பிரதிபலிக்கிறது. சங்கப்பாடலில் இவ்வாறின்றி எல்லாம் ஒரே சீராக நின்று அமைதியான நதியினிலே ஓடம் போலப் பாடலின் இயக்கம் அமைந்துள்ளது.

## III.அறவியல் கொள்கை

தமிழில் அறவியல் நூல்களுள் பெரும்பகுதியும் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களாகும். அறவியல் இலக்கியங்களை 'Didactic Literature' என்று அழைப்பர். இந்நூல்கள் அறம், பொருள், இன்பம் ஆகிய உறுதிப்பொருள்களையும் நீதி, ஒழுங்கு, வாய்மை, நேர்மை, நன்றி மறவாமை, கள்ளுண்ணாமை, பொய்யாமை, பிறர் மனை நயவாமை நிலையின்மை, ஊழ்வினை ஆகியவற்றையும் வலியுறுத்திப் பேசுகின்றன.இக்கருத்துக்கள் பின்னர் எழுந்த நவீன இலக்கியங்களுக்கும் பரவின. இவை யாவும் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்காக உண்டாக்கப் பெற்றவை.இலக்கியம் படைக்கப்படுவதே மனித வாழ்க்கைக்கு வழிகாட்டுதற்கும வாழ்க்கையைச் செம்மைப்படுத்த உயர்த்துவதற்கும் மனிதன் ஆன்மீக விடுதலை பெறுவதற்கும் உதவுவதற்காசுவே என்ற எண்ணப்போக்குப் பண்டை உலகில் முனைப்பாக இருந்து வந்தது.இந்த உலகம் முழுதும் அறநெறிக் கருத்துக்கள் பேசப்படுகின்றன. ஆனால் அதிகாரக் குவியல் ஒன்றுசேர்ந்த இடத்தில் ஆளுகிறவர்கள் அறநெறிக் கருத்துக்களை ஏற்றுக் கொள்வதில்லை. என்று பிற்காலத்தில் சொல்லப்பட்டது. ஆளுகிறவர்கள் ஆண்டவனாக(God) இருந்தாலும் அவர்களிடம் அறச்செயல்கள்உண்டாவதில்லைஎன்பா.” (No Morality can be Founded on Authority Even If The Authority Were Divine) அற இலக்கியங்கள் ஆளப்படும் மக்களுக்காக உண்டானவை எனக் கொள்ளலாம். அறஇலக்கியங்கள் நீதி இலக்கியங்கள் எனவும் கூறப்பெறும். இத்தகைய நூல்களில் நீதியை உணர்த்தும் செய்யுட்கள் எல்லாம் பாட்டாவதில்லை. பாட்டின் இயல்பற்றுக் கருத்துக் குவியலாகவும் இவை காணப்பெறும்.

அறவியற் கொள்கை என்பது அறத்தை முதன்மைப்படுத்தும் கொள்கை ஆகும். இதன் இலக்கியங்கள் அதத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அறவியற் கொள்கை, கருத்துக்கு முதன்மை தருகிறது. இது அறத்தை வலியுறுத்துகிறது. தமிழில் அறவியல் என்பது நீதிக்கருத்துக்களைப் போதிப்பதாகும். இவற்றுள் சில, சில சூழ்நிலைகளில் இறைவன், விதி என்பனவற்றையும் வலியுறுத்துகின்றன.

**“தன்னைத்தான் போற்றா தொழுகுதல் நன்கின்னா**
**முன்னை உரையார் புறமொழிக் கூற்றின்னா**
**நன்மை யிலாளர் தொடர்பின்னா ஆங்கின்னா**
**தொன்மை யுடையார் கெடல்”**

என்று இன்னா நாற்பது கூறுகிறது.இவ்வாறு இன்னாதவற்றை எடுத்துக் கூறி அவற்றைச் செய்வதற்குத் தடைவிதிக்கப்படுகிறது. அதனால்தான் அறிவுறுத்துவதும் வழிகாட்டுவதும் அறவுரையாளரின் கடமை என்று சொல்லப்படுகிறது. சமுதாயத்தில் நிகழும் தீமைகளையும் நன்மைகளையும் அறநூல்கள் மக்களுக்கு அடையாளம்-காட்டுகின்றன. குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம், பதினெண்கீழ்க் கணக்கு நூல்கள் போல்வன நன்மை தீமைகளை எடுத்துக்காட்டுவதில் முதன்மை பெறுகின்றன.

தமிழில் சிறந்த நீதிநூலாகத் “திருக்குறள்“ விளங்குகிறது. இதன் முதற்பகுதி“ “அறத்துப்பால்“ எனக்குறிக்கப்படுவதும் அதனுள்ளும் “அறன்வலியுறுதல்“ என்றோர் அதிகாரம் இருப்பதும் அறத்தின் முதன்மையைக் குறிக்கின்றன.“கம்பன் என்றொரு மானிடன் பிறந்ததும்“ என்று பாடிய பாரதியார் “தெய்வ வள்ளுவன் வான் மறை செய்ததும் என்று பாடியுள்ளார். திருவள்ளுவர் இயற்றியது “வான்மறை“ என்பது அதன் நீதிக்கருத்துக்களின் அடிப்படையில் சொல்லப்பட்டது. திருக்குறளைப் பின்பற்றி நாலடியார் போன்ற நூல்கள் அமைந்தன. தமிழில் அறநூல்கள் பொதுமக்களுக்கும் மன்னர் முதலாயினார்க்கும் உரிய அறக்கருத்துக்களைக் கூறுகின்றன. எனவே “அறவியல் கொள்கை’ இலக்கியத்தில் கூறப்படும் அறக்கருத்துக்களைக் கொண்டு உருவாகிறது.

**“ஆன்முலைஅறுத்தஅறனிவோர்க்கும்**
**மானிழைமகளிர்க்கருக்சிதைத்தோர்க்கும்**
**குரவர்தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய்மருங்கில்கழுவாயும்உளவென்**
**நிளப்புடைபெயரின்யினும் ஒருவன்ரேஆவிழை”**

என்னும் சங்கப்பாடம் அறம் அல்லாதனவற்றைக் கூறி அவற்றைச் செய்தால் வரும் தீமையை உணர்த்துகிறது. இதில் “அறம் பாடித்து என கூறுவது அலல் அல்லது அறமெனும் பொதுவிதி என கொள்ளலாம். சிலர் இதனைத் “திருக்குறள்” என்பர்.

## IV.அழகியல் கொள்கை

இலக்கியத்தில் வடிவத்திற்கு (உருவம்) முதன்மை தரும். கொள்கை இது. இதனை முருகியல் கொள்கை எனவும் கூறுவர். கண்ணால் காணப்பட்ட பொருள் மனத்திற்குத் தரும் இன்பத்தை விளக்குவது அழகியற்கொள்கையாகும். கவிதையில் அழகு என்பது உள்ளடக்கத்திற்கு ஏற்ற வடிவம் அமைவதாகும். அழகு என்பது எவ்னார்க்கும் பொதுவாகவும் ஒரே மாதிரியாயும் தோன்றுவதில்லை. அவரவர் அனுபவத்திற்கேற்ப அமைகின்றது. அழகு காணப்படும்பொருளில் இல்லை என்றும் காண்பவரின் உள்ளத்தில் இருக்கிறதென்றும் கூறுவர். அழகு பொருளின் வெளித்தோற்றத்தில் பதிந்து கிடக்கிறது. உள்ளடக்கத்திற்குச் சிறப்பை உண்டாக்குகிறது. திரு.வி.க.வின் ‘முருகன் அல்லது அழகு“ என்னும் நூல் இலக்கிய அழகியல் கொள்கையைப் பிரதிபலிக்கும் நூலாகும். கலை கலைக்காவே (Art for Art Sake) என்பது அழகியலின் அடிப்படை அழகு என்பதை ஒரு பெண்ணாக்கி அவளைக் கனவில் கண்டதாகப் பாரதி பாடுகின்றார். அப்பாடலில் உருவ (வடிவம்) அழகு உள்ளடக்கத்தையும் சிறப்பிப்பதைக் காணலாம்.

**"மங்கியதோர் நிலவினிலே கனவினிது கண்டேன்**
**வயது பதினாறிருக்கும் இளவயது மங்கை**
**பொங்கிவரும் பெருநிலவு போன்ற ஒளிமுகமும்**
**புன்னகையின் புதுநிலவும் போற்றவரும் தோற்றம்**
**தங்கமணிமின் போலும்வடிவத்தாள் வந்து**
**நூல்காதே எழுந்தென்னைப் பாரென்று சொன்னாள்**
**அங்கதனில் கண்விழித்தேன் அட்டாலோ அட்டா**
**அதிகன்னும்தெய்வந்தான் அதுவென்றே அறிந்தேன்ன"**

எனப் பாடுகின்றார் அவர்.பெண்ணின் உருவ அழகை வருணிப்பதற்கு பயன்படுத்தும் சொற்கள் எதுகை, மோனை என்பன இலக்கிய அழகை உண்டாக்குகின்றன. அழகு என்பது அனுபவமாகும். அது அனுபவிக்கப்படும் பொருளன்று, அழகியல் கொள்கையினர் இலக்கியத்தில் உருவத்துக்கே முதன்மை தருகின்றனர். ஒரு மனிதன் அழகுடையவன் என்பது தோற்றத்தைக் கொண்டே முடிவு செய்யப் படுகிறது.கதிரவன் மறையத் தொடங்கும் போது உலகில் இருளும் பரவத் தொடங்குகிறது. வானத்தின் நிலவு தோன்றுகிறது. இந்தக் காட்சியைப் "பார்க்காதவர்களே இருக்க இயலாது. ஆனால் பாரதிதாசன் நிலவில் ஒளியைக் கண்டு அனுபவித்து உணர்த்துவது கவிதையின் அழகியல் உணச்ச்சியை வெளிப்படுத்துகின்றது அவர் மாலைப்பொழுது வருவதை

**"அந்தியிருள் கருகும் உலகு கண்டேன் அவ்வாறே வான்கண்டேன்**
**திசைகள் கண்டேன் பிந்தியந்தக் காரிருந்தான் சிரித்த துண்டோ**
**பெருஞ்சிரிப்பின் ஒளி ஒத்தோ நிலவே நீதான்**
**சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம் சேகரித்துக்**
**குர் ஏற்றி ஒளியும் ஊட்டி இந்தா**
**என் தேலியற்கை அன்னை வானிலங்**
**எழில் வாழ்வைச் சிந்திரித்த வண்ணம் தானே"**

எனப் பாடுகின்றார்.இந்தப் பாட்டைச் சுட்டிக் காட்டும் பேராசிரியர் மு.வ. பாட்டைப் படிக்கும் போது நாம் அரைகுறையாகக் கண்டு உணர்ந்து மறைந்து போகும் பேரழகைப் புலவரின் உள்ளம் நன்கு உணர்ந்து ஒழுங்குறக் காத்துப் பதிய வைத்துள்ளது என்பதைத் தெளியலாம் என்றெழுதியுள்ளார். இவ்வாறு இலக்கியத்தில் அழகியல் இடம் பெற்றிருப்பதைப் பல கோணங்களில் காணலாம்.

## V.உணர்ச்சிக் கொள்கை

இலக்கியத்தில் காணும் பொருளை விடவும் பொருள் பற்றிய உணர்ச்சியை இக்கொள்கை பிரதிபலிக்கிறது. ஓர் இலக்கியப் படைப்பாளன் ஒரு பாடலைப் பாடும் போது பாடும் பொருள் பற்றிய உணர்ச்சியை அவன் அடைகிறான். அதுபோலப் பாடலைக் கேட்கிறவரும் படிக்கிறவரும் உணர்ச்சியைப் பெறுகின்றனர். இவ்வாறு படைப்பாளிக்கும் படிக்கிறவர்கள் கேட்கிறவர்களுக்கும் உண்டாகும் உணர்ச்சி நிலையை எடுத்துக்காட்டுவது உணர்ச்சிக் கொள்கை இந்த இலக்கிய உணர்ச்சி பாடலினுள் அமைந்த பொருளின் அடிப்படையில் உண்டாகிறது. படைப்பாளிக்கு ஏற்படும் உணர்ச்சி மற்றவர்களுக்குப் புலப்படுத்துவதாக அமையது உணர்ச்சியின் பண்பாகும். உணர்ச்சிக் கொள்கைக்கு "வியஞ்சக் கொள்கை" என்று வடமொழியில் பெயர். பக்தி இலக்கியங்களை இவ்வகை இலக்கியங்களாகக் கொள்ளலாம். நாவலும் சிறுகதையும் படித்தபின் அவற்றிலிருந்து விழுமிய உணர்ச்சி உள்ளத்தில் படிவதாக அமைகின்றது. 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என்று பயிர்வாடுவதைத் தனக்கு ஏற்பட்ட துன்ப உணர்ச்சியாகவே வள்ளலார் பாடுகிறார்

**"உச்சிதனை முகந்தால் - மனது உன்மத்தமாகுதடி**

**நிச்சியுணை ஊரார் புகழ்ந்தால்"**

என்று பாடும் பாரதியின் பாடல் தன் குழந்தையை எண்ணிப் பாடும் தந்தையின் உள்ளத்து உணர்ச்சியைப் புலப்படுத்துகிறது உணர்ச்சிகள் பொதுவானவை. அவை உண்டாகும் காரணங்கள் வேறுபட்டவை வீரம். காதல், இரங்கல் போன்றவை எப்போதும் ஒரேமாதிரியா இருப்பவை. ஆனால் இவை உண்டாகும் சூழ்நிலை அல்லது காரணங்கள் காலத்துக்குக் காலம் மாறுபடலாம். உணர்ச்சியில் நல்ல உணர்ச்சிகளும் உண்டு தீய உணர்ச்சிகளும் உண்டு. பொருந்துவ பொருந்தாதனவும் உள்ளன. எனினும் மனித மனத்துக்கு உணர்ச்சிகளே என்றும் நிலைக்கும் அத்தகைய உணர்ச்சிகளை உண்டாக்கும். இலக்கியங்களும் நிலைத்து வாழும், மேலும், உணர்ச்சிகள் பல அவை 1. நல்ல காரணத்திற்காக நல்வதாக, அமைவன 2.ஆற்றலுடைய உணர்ச்சி, ஆசிரியரின் உள்ளத்து உள்ளமயாய வெளிப்படுத்துவது 3. மாறாது ஒரே நிலையாக அமைவது பொருத்துவதாக அமையும் உணர்ச்சி. இயல்பாக அமைவது 4. வாழ்க்கையின் அனுபவங்களை விளக்குவன 5. மிக விழுமிய உணர் புஸ்லின்பம் காரணமாக அமையாமல் நீதி அறம் காரணமாக அமையும் உணர்ச்சி என்பனவாகும். வடிவிலும் பொருளிலும் பொருத்தி உள்ளம் கவரும் பாடலொன்று கீழே தரப்படுகிறது. மணவறையில் அமர்ந்த மணமகன் விதியின்படி காலனின் தூண்டுதலால் மாடுமுட்டி இறந்து விடுகிறான். அதனைப் பரஞ்சோதி முனிவர், திருவிளையாடற்புராணத்தில்

**"மணமகனே பிண்பிகளாய் மணப்பறையே பிணப்பறையாய்**

**அணியிழையார் வாழ்த்ொலி போய் அழுகை ஒலியாய்க் கழிய**

**காணமதனில் பிறந்தினும் இக்காலத்தின் வரும் பயனை**

**உணர்யுடையாள் பெறுவர்உணர்வு ஒன்றுயியார்க் கொன்றுவிலை”**

எனப் பாடுகின்றார். ஆசியஜோதியில் (மலரும் மாலை) மகனை இழந்த தாய் புத்தரிடம் முறையிடுவதைக் கவிஞர் தேசிய விநாயகம் பிள்ளை

**“வாய் முத்தம் நாராமல் மழலையுரையாடாமல்**

**செய்கிடத்தல் கண்டெனக்குச் சிந்தை தடுமாறுதையா**

**முகம் பார்த்துப் பேசாமல் முலைப்பாலும் உண்ணாமல்**

**மகன் கிடக்கும் கிடைகண்டு மனம்பெறுக்குதில்லை ஐயா”.**

எனப் பாடுகின்றார். இரங்கல் உணர்ச்சி இவ்விதமாகச்சிறப்பிடம்பெறுகின்றது. இதுபோல நகை முதலிய பல உணர்ச்சிகளும், வெளிப்படும்.

## VI.சமுதாயக் கொள்கை

இலக்கியக் கொள்கைகளுள் பயன்பாட்டு முறையில் அமைந்த முக்கியக் கொள்கை இது. கலை கலைக்காவே என்பது அழகியல் கொள்கை. கலை மக்களுக்காக (Art for people sake) என்பது சமுதாய கொள்கையாகும். ஒரு வகையில் தூய அழகியல் கொள்கைக்கு எதிராக இது அமைகின்றது. 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இலக்கிய மாற்றங்கள் நிகழ்ந்தன. அவை சமூக மாற்றத்தால் உண்டாயின. சமுதாய மாற்றத்தை உண்டாக்கிச் சமூகம் முன்னேறத் தேவையான பாடுபொருள்களைக் கொண்டிலங்குவதே சமுதாய இலக்கியக் கொள்கையாகும். இது ஒரு பாடலிலும் அமையலாம். ஒரு நூல் முழுமையிலும் இடம் பெறலாம். சமுதாயத்தை இலக்கியப் பொருளாக்கி இழந்த உண்மைகளை மீண்டும் அடைவதே சமுதாயக்கொள்கையின் நோக்கமாகும். டால்ஸ்டாய் எழுதிய “தாய்’ நாவல் சமுதாயக் கொள்கையை நோக்கமாகக் கொண்டது. பாரதிதாசனின் “புரட்சிக்கவி“ இவ்வகையில் அமைகிறது. பாரதியின் சிறுகதைகள் சில விடுதலை உணர்வை ஊட்டக்கூடியனவாய் அமைகின்றன. சமுதாயத்தின் வளர்ச்சி மற்றும் இயக்கப் போக்கை அறிந்து அதற்கேற்ப எதார்த்தப் பின்னணியில் படைக்கப்படும். இலக்கியங்கள் இத்தன்மையில் அமையும். வால்ட்விட்மனின் (Walt witman) புல்லின் இதழ்கள் (Grass of Lcaves) சமூக நோக்குடைய கவிதை நூலாகும்.இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சமூக நாடகங்கள் இவ்வகை இலக்கியங்கள். நாவல், சிறுகதை, புதுக்கவிதை. சில மரபுக்கவிதைப் படைப்புகள் இதிலடங்கும்.

**“இருட்டறையில் உள்ளதடா உலகம்**

**சாதி இருக்கின்றதென்பானும் இருக்கின்றானே**

**மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே**

**வாயடியும் கையடியும் மறைவதெந்நாள்**

சுருட்டுகின்றார் தம்கையில் கிடைத்த வற்றைச்
சொத்தெல்லாம்.தமதென்று சொல்வார் தம்மை
வெருட்டுவது பகுத்தறிவே இல்லையாயின்
விடுதலையும் கெடுதலையும் ஒன்றே ஆகும்!"

என்று பாரதிதாசன் பாடுவது சமுதாயக் கொள்கையை வற்புறுத்துகிறது.சமுதாயம் காலந்தோறும் மாறிக்கொண்டே இருக்கிறது. பழக்கவழக்கங்கள் பண்பாடு முதலியனவும் மாறுகின்றன. பழமைகள் நீங்கிப் புதுமைகள் உருவாகின்றன. அதற்கேற்றாற் போலப் புதுக்கொள்கைகளும் தத்துவங்களும் இலக்கியங்களும் வெளிவருகின்றன. சமூகச்சீரழிவுகள் எதிர்க்கப்படுகின்றன. சமூகத்தின் தேவையை நிறைவு செய்யும் இலக்கியங்கள் படைக்கப்படுகின்றன. பாரதி, பாரதிதாசன் போன்றோரும் அவர்களுக்குப் பின் வந்த பல கவிஞர்களும் சிந்தனையாளர்களும் இந்தக்கொள்கையினர் ஆவர்

இலக்கியத் திறனாய்வுக் கொள்கை பற்றி அறிதற்கு இலக்கியக் கொள்கைகள் பற்றி அறிதல் வேண்டும் க.கைலாசபதி இலக்கியமும் திறனாய்வும் என்ற தமது நூலில் இலக்கிய ஆய்வாளர்கள் வகைப்படுத்தும் இலக்கிய கொள்கைகளை பின்வருமாறு பகுப்பார் 1. அவயவிக் கொள்கை 2. அறவியற் கொள்கை 3. உணர்ச்சிக் கொள்கை 4. அழகியற் கொள்கை 5. சமுதாயக் கொள்கை திறனாய்வு பற்றி பல்வேறு கொள்கைகள் உள்ளதால் இலக்கியத் திறனாய்வு குறித்து அறிஞர்கள் வெவ்வேறு விளக்கங்களைக் கூறுகின்றனர் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் ஏற்ப காலந்தோறும் புதிய புதிய இலக்கிய கோட்பாடுகள் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. உலக இலக்கியப் போக்கினைத் தழுவி அவற்றினை ஆராய்ந்த ஏபிரம் என்ற அறிஞர் நான்கு விதமான இலக்கியக் கோட்பாடுகளை எடுத்துக் கூறுகிறார். அவை 1. அநுகரணக் கொள்கை 2. பயன்வழிக் கொள்கை 3. வெளிப்பாட்டுக் கொள்கை 4. புறநிலைக் கொள்கை இக்கோட்பாடுகளில் ஒன்று மட்டுமே குறிப்பிட்ட காலக்கட்டத்தில் இருந்தது என்பது பொருளல்ல. ஒவ்வொரு கால கட்டத்திலும் ஒன்று மட்டுமே தலைமை பெற்றுத் திகழ்ந்தது என்பதே பொருள் என்பர் ஜி.ஜான்சாமுவேல்.

## 1.அநுகரணக் கொள்கை (Mimetic Theory)

அநுகரணம் என்பது போலச் செய்தல் எனப்படும் எனவே இக் கொள்கையை போலச் செய்தல் என்று அழைக்கின்றனர். இக் கொள்கைப்படி கலை, இலக்கியம், என்பன மனிதனால் நகல்களாகச் செய்யப்படுவன என்பதாம். உலகம், இயற்கை, மனித வாழ்வின் பிரதிபலிப்பு என்று கருதுகின்ற இலக்கியக் கோட்பாடுகளை இப்பிரிவில் அடக்கலாம் இக் கொள்கையைப் பின்பற்றியே அரிஸ்டாட்டில் 'ஒரு நிகழ்வைப் பின்பற்றி அது போல அமைக்கப்பட்டதே நாடகம் என்கிறார். ஆனால் போலச் செய்வது என்பது புற உலகக் காட்சிகளை அப்படியே படம் பிடித்துக் காட்டுவதன்று படைப்பாளன் தம் உள்ளத் தன்மைக்கும் விருப்பத்திற்கும் ஏற்பப் புறப் பொருள்களையும் காட்சிகளையும் அடிப்படையாகக் கொண்டு அவை போன்ற ஒன்றைப் புதிதாகப்

படைப்பதே போலச் செய்தல்' என்று திறனாய்வாளர்கள் விளக்குகின்றனர். இவ்வமைப்பிலேயே டாக்டர்.கைலாசபதி, அரிஸ்டாட்டில் போன்றோர் அநுகரணம் என்பது கேவலம் வெறும் பிரதி செய்யும் முயற்சி எனக் கருதியவரல்லர் பிரபஞ்சத்தில் காண்பவற்றில் இருந்து வேண்டியவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றுக்கு இன்றியமையாத உருவத்தை இலக்கியகர்த்தா அளிக்கிறான் என்பதே அவர்கள் கருத்தாகும். எனச் சுட்டுகிறார் அது மேலோட்டமாகப் பார்க்கும் நிலையில் இலக்கியப் படைப்புத் தொடர்பான கொள்கையாகத் தோன்றலாம். ஆனால் நுணுகி நோக்கினால் இது இலக்கியத்தை மதிப்பீடு செய்யும் வரைவிலக்கணம் என்பது புலனாகும். திறனாய்வு கொள்கையில் இது முதன்மையானது தொடக்க நிலைப் படைப்புகளில் இத்திறனாய்வுக் கோட்பாடே தலைமை இடம் பெற்றிருந்ததாகக் கருதுகின்றனர் கவிதையைக் காட்டிலும் நாடகம், சிறுகதை, புதினம் ஆகியவற்றில் நாம் அறிந்தோ அறியாமலோ இக்கொள்கையைக் கொண்டே பாத்திரங்கள் நிகழ்ச்சிகள் என்பனவற்றை நாம் மதிப்பீடு செய்கிறோம்.

## 2.பயன் வழிக் கொள்கை

இக்கொள்கை அறவியற் கொள்கையுடன் பெரிதும் ஒப்புமையுடையது. இலக்கியத்தைப் படிக்கும் சுவைஞருக்கு ஏற்படும் பயனை அளவுகோலாகக் கொண்டு அதன் இயல்புகளையும் பண்புகளையும் ஆராய்வது இக்கொள்கையின் நோக்கமாகும். இது சிறப்பாக நல்லொழுக்கத்தைக் கற்பிப்பது படைப்பிற்கும் சுவைஞனுக்கும் இடையிலான உறவு அதிகமாக வலியுறுத்தப்பட்ட காலத்தில் இக் கொள்கை பிற கொள்கைகளை விட ஆதிக்கம் பெற்றிருந்தது இது போலச் செய்தல் என்ற கொள்கையைத் தொடர்ந்து எழுந்தது எனக் கருதுகின்றனர். தமிழ் இலக்கியத்தைப் பொறுத்தவரை தொல்காப்பியரே இக் கொள்கையை வலியுறுத்தியுள்ளார் எனக் கருதலாம். நூற்படைப்புக் குறித்து 'இழுமென் மொழியால் விழுமியது நுவலா' என்றார் ஒரு நூல் சுவைஞனைக் கவரும் வகையில் இசையோடு இணைந்த மொழி நடையும் விழுமிய பொருளும் அமையும் வகையில் படைக்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறார் மேலும் மரபியல் நூற்பாவினை கேட்போனுக்கு விளங்கும் வகையில் தெளிவாக அமைக்க வேண்டும் எனக் குறிப்பிடுகிறார் நன்னூலரோ சுவைஞனைக் கருதி இலக்கியப் படைப்பு அடைய வேண்டியதன் இன்றியமையாமையினை மிகவும் விளக்கமாகக் கூறுகிறார். சுருங்கக் சொல்லல் என்ற நூற்பாவில் சுவைஞனைக் கவரும் பத்து அழகுகளை விளக்கமாக காட்டுகிறார். மேலும் சுவைஞனை மயங்க வைக்கக் கூடாது பயனற்றவற்றை விரித்துப் பேசக் கூடாது என்றும் அறிவுரை கூறுகிறார் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவற்றை நல்குவது நூலின் பயன் என்ற பயன் வழிக் கொள்கை தண்டியலங்கார ஆசிரியராலும் பெரிதும் வலியுறுத்தப்படுகிறது எனவே இலக்கியத்தில் பயன் சுவைஞனுள்ளத்தில் மகிழ்வுணர்வை ஊட்டுவதோடு அறிவுரை நல்கி மனித சமுதாயத்தை நல்வழிப்படுத்துவதே என்னும் அறநெறி சார்ந்த கோட்பாடும் இக்கால கட்டங்களில் வலுபெறுகின்றது எனக் குறிப்பிடுகிறார்.ஜீ.ஜான்சாமுவேல்.

## 3.வெளிப்பாட்டுக் கொள்கை (Expressive Theory)

இக்கொள்கை உணர்ச்சிக் கொள்கை, அழகியற் கொள்கை ஆகியவற்றோடு உறவுடையது படைப்பாளியின் கற்பனை, மனநிலை, ஆளுமை முதலியனவெல்லாம் தெளிவாக வெளிப்படுவதே இலக்கியத்தின் சிறப்பியல்பு என்பது இக் கொள்கையின் கருத்தாகும். பொருளைப்பாடி எடுத்துக் காட்டுவதே கவிதை என்னும் கொள்கைக்கு மாறாக கவிஞனின் அக உணர்ச்சிகளையும் அவன் மனதில் இடம்பெறும் உள்ள காட்சிகளையும் வெளிப்படுத்துவதே கவிதை என்கின்ற கோட்பாட்டை வெளிப்பாட்டுக் கொள்கையாளா் வலியுறுத்துகின்றனா் இக் கொள்கை 19 ஆம் நூற்றாண்டிற்குப் பின்னா் ஆங்கில இந்திய இலக்கியப் படைப்புகளில் இடம் பெற்ற போதிலும் தமிழில் பக்தி இலக்கியங்கள் தோன்றிய கால கட்டத்திலேயே இக் கொள்கை தோற்றம் பெற்று விட்டதென்றும் குறிப்பிடுகின்றனா் பக்தி இலக்கியங்களில் படைப்பாளா்கள் தங்கள் உள் உணா்வினையும் ஆற்றொழுக்காகப் படைப்பு நுட்பம் சிறக்கப் படைத்துக் காட்டியுள்ளதனை அவ்வியக்கிய வகையினைப் படிப்போா் பெரிதும் உணா்வா் .

## 4.புறநிலைக் கொள்கை (Objective Theory)

இக்கொள்கை வெளிப்பாட்டுக் கொள்கைக்கு மறுதலையானதாகும். இக் கொள்கை எடுத்துக் கொண்ட படைப்பையே அதாவது பொருளையே அறிந்து தெளிய வேண்டிய தொன்றாய்க் கொள்ளும் குறிக்கோளினை உடையது இங்குப் பொருள் என்று நாம் சொல்லும் பொழுது புலனால் அறியும் பொருள் நூல் நுதலிய பொருள் என்பனவற்றையே கருதுகிறோம். இதனை மனத்திலிருத்துவது நல்லது. எனக் கூறுகிறாா் டாக்டா்.கைலாசபதி. இக் கொள்கைப்படி ‘கலைப் படைப்பைக்’ கலைஞன், சுவைஞன் உலகம் ஆகியவற்றோடு இணைத்துக் காணலாம். அதைத் தனித்த ஒன்றாக தன்னிறைவுடையதாகப் பல கூறுகளால் இணைத்து முழுமை பெற்ற ஒன்றைக் கருதி அக்கதைப் படைப்பிலிருந்து கிடைக்கும் சில விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டு புறச்சாா்பின்றிக் கவிதையை ஆய்வதைப் புறநிலைக் கொள்கையை உயிா்நாடியாகக் கொண்ட திறனாய்வாளா்கள் வற்புறுத்திப் பேசுகின்றனா் என எடுத்துக் காட்டுகிறாா் ஜி.ஜான் சாமுவேல் இக் கொள்கை 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் இருந்தே மேநாடுகளில் அதிக அழுத்தம் பெற்றுள்ளது தமிழ் இலக்கிய உலகில் இக் கொள்கை தற்காலத்தில் படிப்படியாக வலுப்பெற்று வருகின்றது. இவ்வாறு இத்துறையில் அமைந்த பல்வேறு கொள்கைகளினாலேயே இலக்கியத் திறனாய்வு குறித்துப் பல்வேறு விளக்கங்கள் நமக்குக் கிடைத்துள்ளன.

## இலக்கியக் கொள்கை - திறனாய்வு - வரலாறு உறவுகள்

இலக்கியக் கொள்கை இலக்கியத் திறனாய்வு இலக்கிய வரலாறு ஆகிய மூன்றும் ஒன்றற்கு ஒன்று தொடா்புடையன, சில வேறுபாடுகளும் உள்ளன. இலக்கியங்கள் உருமாறிக் கொண்டே இருக்கின்றன. இலக்கியத்தைக் கற்கும் போதும் கற்பிக்கும் போதும் அதன் காலம் கூறுவதும் அவ்வப்போது மக்களுக்கு எடுத்துச் சொல்லப்படுகின்றா. தேவைப்படுகிறது. இதற்கு

வரலாறு தேவைப்படுகிறது. இலக்கிய ரசனையை விரும்பி அதில் உள்ள நன்மைகளை எடுத்துக் இலக்கியக் கல்வியில் அடங்குகிறது. இது திறனாய்வாகிறது. இலக்கியம் காலந்தோறும் வெளிப்படுத்தும் நெறிமுறைகளையும் இது உணர்த்துகிறது. இந்த நெறிமுறைகள் கொள்கையாகின்றது. இலக்கியம் கற்றுக் கொள்ள இம்மூன்றும் உதவுகின்றன.இலக்கியத் திறனாய்வு, இலக்கியக் கொள்கை. இலக்கிய வரலாறு என்னும் மூன்றும் ஒன்றை ஒன்று தழுவி நிற்கின்றன. இம்மூன்றனுள் ஒன்றை மற்ற இரண்டின் துணையின்றி அறிய வரலாற்றுத் தகவல்களும், சில ஒப்புநோக்குப் பகுதிகளும் தேவை இலக்கிய வரலாறு அமைத்து அதிலிருந்து திறனாய்வையும் இலக்கியத் திறனாய்வுகளிலிருந்து இலக்கிய வரலாற்றையும் அறிந்து கொள்ள முடிகிறது. இவை இரண்டும் ஒன்றற்கு ஒன்று உறவுடையன எனத் தெரிகிறது. இலக்கிய வரலாறு இலக்கியத்தை வரிசைப்படுத்துகிறது. இவை உண்மையானவையா என்று ஆராயும் வாய்ப்பு இலக்கிய வரலாற்றில் உண்டு. இலக்கியத் திறனாய்வு இலக்கியத்தில் சொல்லப்பட்ட கருத்து முடிபுகளை ஆராய்கிறது. அது இலக்கியக் கொள்கையை உருவாக்குகிறது.

இலக்கிய வரலாறும் ஓர் ஆய்வின் அடிப்படையில்தான் செய்யப்பட்டு ஒத்துக் கொள்ளப்படுகிறது. அதுபோலத் திறனாய்வும் சில விதிமுறை ஆய்வுகளின்படியே நிகழ்கிறது. இலக்கியத் திறனாய்விற்கு முடிவு செய்யும் ஆற்றல் உண்டு. இலக்கிய வரலாறு எழுதுவோரும் தேர்ந்தெடுத்து ஆய்வு செய்த முடிபுகளைக் கொண்டே படைக்கின்றனர். படைப்புப் பற்றியும் மதிப்பீடு பற்றியும் அறிந்து கொள்ளாமல் இலக்கிய வரலாறு எழுதப்படுவதில்லை. எனவே வரலாற்று அறிஞர்கள் இலக்கியத் திறனாய்வாளர்களாகவும் செயல்படுகின்றனர்.ஒவ்வொரு இலக்கியப் படைப்பும் உருவான காலம் வெவ்வேறாக இருக்கும். தொகுக்கப்பட்ட காலமும் வேறுபடலாம். திறனாய்வுக் கொள்கையின் உதவியுடன் இவ்விலக்கியங்களின் காலத்தை அறிய முடியும். எனவே இலக்கிய வரலாறு சிறப்பாக அமைய இத்திறனாய்வு முறை தேவைப்படுகிறது. வரலாற்றுத் தொடர்பின்றி அமையும் திறனாய்வும் தவறாகி விடும். வரலாறு பற்றிய அறிவு இன்றிக் கலைப் படைப்பை மதிப்பீடு செய்வது இயலாது தவறுகள் நிகழும்.இந்த அடிப்படையில் இலக்கியக் கொள்கை, இலக்கியத் திறனாய்வு, இலக்கிய வரலாறு மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையனவாய் உள்ளன.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினாக்கள்

1.கொள்கை என்றால் என்ன?

2.கோட்பாடு விளக்கம் தருக.

3.கொள்கை கோட்பாடு உருவாக்கம் குறித்து எழுதுக.

4.அநுகரணக் கொள்கை விளக்குக.

5.பயன் வழிக் கொள்கை விளக்குக.

6.வெளிப்பாட்டுக் கொள்கை விளக்குக.

7.புறநிலைக் கொள்கை விளக்குக.

8.முருகியல் கொள்கை விளக்குக.

9.சமூதாயக் கொள்கை கொள்கை விளக்குக.

10.உறுப்பியக் கொள்கை கொள்கை விளக்குக.

### கட்டுரை வினாக்கள்

1.இலக்கியக் கொள்கை குறித்து விரித்துரைக்க

2.இலக்கியக்கோட்பாடுகள் எவ்வாறு உருவாகின்றது என்பதை குறித்து விரித்துரைக்க

3.இலக்கியகொள்கைகளின் வகைகள் குறித்து எழுதுக

4.இலக்கியவரலாற்றின் தேவை குறித்து விவரிக்க

5.இலக்கியத்திறனாய்வின் தேவைகள் குறித்து கட்டுரை

6.அகவெழுச்சிக்கொள்கை எடுத்துக்காட்டுடன்விரித்துரைக்க

7.இலக்கிய திறனாய்வு வரலாறு உறவுகள் தொடர்புபடுத்துக.

8.அவயவிக் கொள்கை குறித்து விவரிக்க

9.அறவியல் கொள்கை குறித்து விவரிக்க

10.அழகியல் கொள்கை குறித்து விவரிக்க

அலகு: 3

# திறனாய்வு விளக்கங்கள்

தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றைக் காண்பதற்கு முன்பு. திறனாய்வு தொடர்பான சில விளக்கங்களைக் கண்டு கொள்ளுதல் பயனுள்ள முயற்சியாக அமையும். அந்த அடிப்படையில் இவ்வியல், தமிழிலக்கியத் திறனாய்வுத் துறையில் பயின்று வரும் மதிப்புரை, திறனாய்வு, ஆராய்ச்சி ஆகிய சொற்களின் தன்மைகளை விளக்குகிறது. திறனாய்வின் தன்மைகளை விளக்குகிறது. திறனாய்வின் வகைகளையும் தேவைகளையும் எடுத்துக்காட்டுகிறது. படைப்பாளனுக்கும் திறனாய்வாளனுக்கும் இடையே உள்ள உறவு நிலைகளை ஆராய்கிறது. திறனாய்வுப் பணியின் கடுமையைப் புலப்படுத்துகிறது. மேலும் இன்றைய தமிழிலக்கியத் திறனாய்வில் பயன்படுத்தப்படும் கலைச் சொற்களில் காணப்படும் குழப்பங்களையும், கலைச் சொல்லாக்கத்தின் இன்றியமையாமையையும் எடுத்துக்காட்டுகிறது.

## மதிப்புரை-திறனாய்வு-ஆராய்ச்சி-ஒரு விளக்கம்

இன்று தமிழிலக்கியத் திறனாய்வுத் துறையில் மதிப்புரை. திறனாய்வு, ஆராய்ச்சி ஆகிய அடிப்படைச் சொற்கள் முறையே ரிவியூ (Review), கிரிட்டிசிசம் (Criticism), ரிசர்ச் (Research) ஆகிய ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களாகப் பயன்படுத்தப் படுகின்றன. ஆனாலும் இச்சொற்களுக்குப் பதிலாகப் பலர், பல தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

**“ரிவியூ“** என்ற சொல்லிற்கு மட்டும் மதிப்புரை, நூல் மதிப்பாய்வு நூல்நிறை நூல்கள் அறிமுகம், ஆய்வுரை, மதிப்பாய்வுரை, புத்தக விமர்சனம் முதலிய சொற்களைத் தமிழ் அறிஞர்கள் பலர் கையாண்டுள்ளனர்.

**“கிரிட்டிசிசம்”** என்ற சொல்லிற்கு ஆராய்ச்சி, விமர்சனம் ,விளக்கம், இரசனை திறனாய்வு நூல்நயம் போன்ற சொற்களைத் தமிழ் அறிஞர்கள் பயன்படுத்தியுள்ளனர்.

**“ஆராய்ச்சி”** - விளக்கம், இலக்கியத் திறனாய்வு விளக்கம், ஆராய்ச்சி , விமர்சன இலக்கியம், மதிப்பீடு, பாநலன் ,திறன் ஆய்தல், விமர்சனம் , இலக்கியமதிப்பீடு, பரிசோதனை முதலிய சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன இக்கலைச் சொற்களில் பல, உரைகளாக அமைந்துகிடக்கின்றன. மேலும் மதிப்புரை வேறு, திறனாய்வு வேறு ஆராய்ச்சி வேறு என்ற வேறுபாடுகள் இன்றியும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1948-இல் ‘சிலப்பதிகார ரசனை’என்ற நூலுக்கு எழுதிய அணிந்துரையில் அ.ச.ஞானசம்பந்தன் ”இலக்கியத் திறனாய்வு”என்ற சொல்லாக்கத்தை உருவாக்கினார்.தொடர்ந்து,தன்னுடைய

“இலக்கியக்கலை’’நூலில் பயன்படுத்தினார். மு. வரதராசனாரும் “விமர்சனம்’ என்ற சொல்லோடு திறனாய்வு என்ற சொல்லை பயன்படுத்தினார். இவ்வாறு கல்வியாளர்கள் பயன்படுத்தியதால் இச்சொல் வழக்கில் நிலைபெற்றுள்ளது. மேலும் மரபைச் சார்ந்து தோன்றி நிலைபெற்றது எனலாம். “திறனறிதல்” என்ற கூட்டை ஏற்கனவே திருவள்ளுவர் உருவாக்கித் தந்துள்ளார். மேலும் கலைச் சொற்கள் வடமொழிச் சொற்களாக இல்லாமல் தமிழ்ச்சொற்களாக இருக்க வேண்டும் என்ற எண்ண ஓட்டம் இருந்து வந்துள்ளதும் குறிக்கத்தக்கதாகும். ஜி. சுப்பிரமணிய பிள்ளை இவ்வாறு எழுதினார்.அதற்குத் தமிழில் ஆராய்ச்சி என்றுதான் பொருள். இலக்கிய விமர்சனம் என்பதற்கு “நூலின் திறனாய்ந்து தெளிதல்” என்று பொருள் கொள்ளலாம்.“திறனாய்வு“ என்ற பெற்றுள்ளது என்றாலும், “விமர்சனம்“ என்ற சொல்லும் இன்றுவரை வழக்கில் பயன்படுத்தப்படுகிறது.ஆய்வுரை, ஆராய்ச்சி முதலிய சொற்கள் பயன்படுத்தப்படுகின்றன. தொல்காப்பியத்திலேயே ‘‘ஆராய்ச்சி“ என்ற பயின்று இச்சொல்லாக்கத்தில் பல்வேறுபட்ட சொற்கள் தோன்ற வழியில்லை எனலாம். இன்றைக்குத்தான் மதிப்புரை, திறனாய்வு, ஆராய்ச்சி ஆகிய சொற்கள் தங்களுக்குரிய தனித் தன்மையோடு பயன்படுத்தப்படுகின்றன என்பது உண்மை, கலைச் சொல்லாக்கம் என்பதும் வரலாற்றுக் குணம் கொண்டது என்பதைப் புலப்படுத்துகிறது எனலாம்.

## மதிப்புரையும் திறனாய்வும்

செய்தி இதழ்களில் எழுதப்படுவது அறிமுகப்படுத்துவதையே அடிப்படை நோக்கமாகக் கொண்டது.மதிப்புரை படைப்பாகத்தான் இருக்க வேண்டும் என்பதும் இல்லை.வணிக அமைப்புகளுடனும் நெருங்கிய தொடர்புடையது.

மதிப்புரை என்பதற்கு அகரமுதலி புதிதாக வந்திருக்கும் அல்லது நாட்களுக்கு வந்திருக்கும் புத்தகங்கள் பற்றிய பொதுவான கணிப்பு அல்லது திறனாய்வு என்று.விளக்கம் தருகிறது. இது பெரும்பாலும் இதழ்களில் அல்லது நாளிதழ்களில் வெளிவரும். மதிப்புரைக்கு இருப்பதை அறிய இயலுகிறது. திறனாய்வு என்பதற்கு அகரமுதலி கொடுக்கும் விளக்கம் மதிப்புரைக்கும் திறனாய்வுக்குமுள்ள வேறுபாட்டைத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.கலை, இலக்கியங்களைப் பகுத்தாய்ந்து, அவற்றின் தன்மைகளை மதிப்பிட்டு, தீர்ப்பளிக்கிற செயற்பாடு என்கிறது. எனவே திறனாய்வின் தன்மைகளாகக் கீழ்க்கண்டவற்றைக் கூறலாம்.

1.திறனாய்வு என்பது, மதிப்புரை அனைத்துப் புத்தகங்களுக்குமென்று இல்லாமல், கலைத்துறையில் தனித்துறையாக உணரப்படுவது.

2.இலக்கியங்களுக்கே கட்டுரையாக அறிவார்ந்த இதழ்களில் மட்டுமே கூடியது. அறிவார்ந்த தளத்தில் புத்தக வடிவம் பெறக் கூடியது.

3.அறிமுகப்படுத்துவது என்ற நோக்கத்தையும் தாண்டி, இலக்கியத்தைப் புரித்து கொள்ளும் தரத்தை உயர்த்துவது. இலக்கியத்தின் பன்முகத் தன்மையை வெளிக் கொணர்வது.இலக்கியப் புலமை வாய்ந்தவர்கள் நடுவே மிகவும் உயர்த்த ஒரு தனத்தில் இயக்கம் கொண்டிருப்பது.

4.கலைத்தன்மை வாய்ந்தது..சில நேரங்களில் அறிவியல் குணத்தையும் ஏற்பது.

எனவே திறனாய்விற்கென்று சில தனிப்பட்ட தன்மைகள் அமைந்துள்ளன எனலாம்.

மேற்கண்டவாறு மதிப்புரைக்கும் திறனாய்விற்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்தாலும், ஒன்றையொன்று நெருங்கிய நிலையிலும் இருக்கின்றன. மதிப்புரை எழுதும் தொழிலில் ஈடுபடுபவனின் பரந்துபட்ட அனுபவத்திற்கு ஏற்ப, மதிப்புரையானது திறனாய்வாக உயர்ந்து விளங்குவதற்கும் வாய்ப்பு ஏற்படுகிறது. இதைத்தான் ந.சிதம்பர சுப்பிரமணியன் இவ்வாறு விளக்குகிறார்.

"இலக்கிய விமர்சனத்திற்கும் மதிப்புரைக்குமுள்ள வித்தியாசம் அவ்வளவு திட்டமாகப் பாகுபடுத்தக் கூடிய விஷயமல்ல, எந்த இடத்தில் மதிப்புரை அதன் சுயஆகிருதியைக் கடந்து விமர்சனம் ஆகிறது என்பதும் சொல்ல முடியாத நிலையில் ஒன்றை ஒன்று நெருங்கியிருக்கின்றன.

## திறனாய்வும் ஆராய்ச்சியும்

ஏதாவது ஒன்றில் புதிதாக ஒள்ளறக் கண்டுபிடிப்பதற்காகவோ, இருக்கின்ற உண்மைகளை மறுத்துக் கோட்பாடுகளைத் திருத்துவதற்காகவோ. ஒரு குறிப்பிட்ட ஒழுங்கு முறைக்கு உட்பட்டு ஆராய்ச்சி செய்வது ஆராய்ச்சி ஆகும் என்று ஆராய்ச்சியை வரையறை செய்கிறது அகரமுதலி.

"ஆய்தல்" என்பதற்கு "உள்ளதன் நுணுக்கங்கள்" என்று தொல்காப்பியர் கூறுவது பொருத்தமாக அமைத்திருக்கிறது. திருவள்ளுவரும் ஆராய்தல் ஆய்தல், தேர்தல், நாடுதல் முதலிய பல சொற்களைப் பயன்படுத்தி உள்ளார். இச்சொற்கள் இக்கால ஆராய்ச்சியில் அணுகுமுறைகளைப் பாகுப்படுத்துவதாகக் திருநாவுக்கரசர் கருதுவர் "மெய்ப் பொருள் காண்பதறிவு"" என்றும், வள்ளுவர் கூறும் கருத்துகள், ஆராய்ச்சியாளனுக்கு இருக்க வேண்டிய தற்சார்பற்ற நிலையை வலியுறுத்துகின்றன எனக் கருதலாம்.

1.திறனாய்வுத் துறையில் இத்தயை ஒழுங்கு முறைகள் அமைப்பது, இன்றுவரை ஒரு முயற்சியாகவே இருக்கிறது.

2.ஆராய்ச்சி மதிப்புரை போல எந்த நூலைப்பற்றியும் எழுதப் பயனாகும்.ஆனால் திறனாய்வோ இலக்கியங்களைப் பற்றி மட்டும் ஆராய்கிற தனித்துறையாகும்.

3.திறனாய்வு இலக்கியத்திற்கு முதலிடம் கொடுக்கிறது.ஆனால் ஆராய்ச்சியோ உண்மைகளுக்கு (Facts) முதலிடம் தந்து ஆராய்கிறது.

4..திறனாய்வாளர் படைப்பாளி படிப்பாளிக்குக் காட்டுவதை நோக்கமாகக் கொளகிறார். ஆனால் ஆய்வாளர் ஏதாவது ஒரு சிக்கலை எடுத்து கொண்டு தேடுகிறார்.

4. இரண்டிற்குமுள்ள வேறுபாட்டை. கீழ்க்கண்டவாறு குறிக்கலாம்.

ஆய்வு என்பது. இது இப்படி இப்படி இருக்கிறது என்று புட்டுவைப்பது, பட்டியல் இடுவது, பாகுபாடுகள் செய்வது, பாகம் குறித்துப் பெயர் எழுதுவது. விமர்சனம் என்பது. இது இப்படி இருக்கிறது. இப்படி இருப்பதற்கு இதுதான் காரணம், இது இப்படி இருந்திருக்கலாம் அல்லது இருக்கக் கூடாது. ஆகஆய்வுக்கு அப்புறம் அபிப்ராயமும் கூற வேண்டும். ஆய்வு – அகம். விமர்சனம் - புறம்.

அகமும் புறமும் இணைந்ததுதாம் எல்லாம். உணர்ச்சி இல்லாமல் உண்மையை இதுவரைத் தேடியது இனித் தேடப் போவதுமில்லை எனலாம். திறனாய்விற்கும் இடையே சில வேறுபாடுகள் இருந்தாலும், உயர் மட்டத்தில் ஒன்றையொன்று நெருங்கி விளங்குகின்றன. எல்லா நிலையிலும் அறிவியவின் தாக்கம் நிறைந்த இந்தக் காலகட்டத்தில், இலக்கியத் திறனாய்விலும் அறிவியவின் செல்வாக்கு ஏற்படுகிறது. அறிவார்ந்த இதழ்களில் திறனாய்வுக் கட்டுரைகள் பல, அறிவியல் ஆய்வுக் கட்டுரை எல்லாக் குணங்களையும் பெற்று விளங்குகின்றன. எனவே ஆராய்ச்சியாய் வளர்கிற நிலையும் உண்டு.

## திறனாய்வு-சில விளக்கங்கள்

இலக்கியத் திறனாய்வு, இலக்கியத்தின் பிரிவாகத், தனித் துறையாக இன்று வளர்ந்திருக்கிறது. வேதியியல், பூவியியல், விலங்கியல், பயிரியல் முதலியன இயற்கையைப் பற்றியே கற்கின்றன என்றாலும், ஒவ்வொன்றும் தனக்கே உரிய விதிமுறை கூடிய தனித் துறையாக விளங்குகின்றதோ, அவ்வாறே கற்கிறதுறை இது இயக்கம் கொள்ள வேண்டும் என்கிறார் நார்த்தரோப் ப்ரை

## திறனாய்வு-வரையறை

வாழ்க்கையைப் பற்றிய பார்வை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அதுவும் இக்காலத் தொழிற் சமூகத்தில் ஒருவருக்கே பலவிதமாகவும், என்றுமில்லாத குழப்பமாக இருக்கிறது. இந்த இவ்வாழ்க்கையில் இருந்து இலக்கியத்திலும் அவ்விலக்கியத்தில் இருந்து தோன்றும் திறனாய்விலும் காணக்கிடக்கின்றன. எனவே திறனாய்வை, ஒரு வரையறைக்குள் பிடிப்பது பெரிதும் கடினம்.

‘‘திறனாய்வு ஓர் எல்லையில் வெறுமனே புத்தக மதிப்புரையாகவும், மறுஎல்லையில் புரிந்து கொள்ள முடியாத கடுஞ்சிக்கல் உடையதாகவும் உள்ளது.ஆனாலும், இங்கே பயன்படத் தக்க வகையில் மிகப் பரந்த அளவிலும் இல்லாமல், மிகக் குறுகிய அளவிலும் இல்லாமல் இலக்கியத் திறனாய்வை வரையறை செய்து கொள்வது நல்லது.

அனுபவ”ஒரு கலையாக்கத்திலிருந்து, தான் பெறுகிற உணர்வைத் தெளிவுபடுத்தி, மதிப்பிட்டு, மற்றோர்க்கு உணர்த்துகிற செயற்பாடே திறனாய்வாகும். இது அழகியல் அனுபவத்தில் இயற்கையாகவும் தவிர்க்க முடியாததாகவும் அமைகிற ஒன்று.என்று அமெரிக்கக் கலைக் களஞ்சியம் வரையறை செய்கிறது. பிரிட்டானியா கலைக் களஞ்சியமோ ”இலக்கியத்தில் அல்லது நுண்கலைகளில் உள்ள அழகியல் கூறுபாடுகளின் பண்பையும் மதிப்பையும் பற்றித் தீர்ப்பளிப் பதே திறனாய்வு என்கிறது.இது போலவே ஆக்கபோர்டு புதிய ஆங்கில அகர முதலியும், சிப்ளே (ளூாிடநல) என்பாரின் உலக இலக்கிய அகர முதலியும் மதிப்பிடுவதும், தீர்ப்பளிப்பதுமே திறனாய்வு எனக் குறிக்கின்றன. ஆனால் பிரெஞ்சு மொழிக் கலைக் களஞ்சியம், தீர்ப்பளிப்பதும் திறனாய்வாளரின் கடமைதான் என்று கருதினாலும், ஒரு படைப்பை விரித்து விளக்குவதே திறனாய்வின் இன்றியமையாத பணியாக மாறியுள்ளதைச் சுட்டிக்காட்டுகிறது. செர்மன்மொழிக் கலைக் களஞ்சியம், ஒப்பிட்டு ஆயும் தன்மையை வலியுறுத்திக் கூறுகிறது.

இவ்வரையறைகளின் படி திறனாய்வு என்பது படைப்பை விளக்குவது, மதிப்பிடுவது என்ற அளவில் அனைவரும் உடன்படுகின்றனர். ஆனால் ‘‘தீர்ப்பளித்தல்‘‘ என்ற நிலையில் கருத்து வேறுபாடு எழுகிறது. முதலில் தீர்ப்பு வழங்கும் திறனாய்வை வரவேற்ற ஐ.ஏ. ரிச்சர்ட்சு, பிற்காலத்தில் பகுத்தாராயும் முறையை மட்டுமே பின்பற்றினார். ஆனால் டி. எஸ். எலியட் தீர்ப்பளிக்கும் திறனாய்விற்கு அதிக அழுத்தம் கொடுத்தார். டி. எஸ். எலியட்டின் தீர்ப்பளிக்கும் (Value judgement) திறனாய்வு முறையைத் தேவையற்றது என்றும், பல சமயங்களில் சிறு பிள்ளைத்தனமாக அது அமைந்துவிடும் என்றும் நார்த்தராப் ப்ரை கேலி செய்கிறார். தீர்ப்பளிக்கும் திறனாய்வாளர், தன்னை முதன்மைப்படுத்துகிறார். பகுத்தாய்கிற திறளாய்வாளார் படைப்பை முதன்மைப்படுத்துகிறார். இத்தகைய சூழலில், திறனாய்வைக் கீழ்க்கண்டவாறு வரையறை செய்து கொள்ளலாம்:

**‘‘ஓர் இலக்கிய ஆக்கத்தைப் பகுத்தாராய்வதும், விளக்குவதும், மதிப்பிடுவதும், தீர்ப்புக் கூறுவதும் ஆகிய அனைத்துச்செயற்பாடுகளும் இலக்கியத் திறனாய்வே ஆகும். இது பலதரப்பட்ட செயற்பாடுகளும் இலக்கியத் திறனாய்வே ஆகும். இது தவிர்க்கவே முடியாதபடியான ஒரு தளத்தில் இயங்கும் செயற்பாடாகும்’’**

### திறனாய்வும் வகைகளும்

மேலே வரையறை செய்து கொண்டபடி, இலக்கியத்தை விளக்கவோ மதிப்பிடவோ, தீர்ப்புக் கூறவோ பல முறைகள் நடை முறையில் கையாளப்படுகின்றன. எடுத்துக்காட்டாகப் பகுப்புமுறை

ஆய்வைப் பயனபடுத்தி இலக்கியத்தைத் திறனாய்வு செய்யும்போது, அததிறனாய்வு பகுப்புமுறைத் திறனாய்வு என்று அழைக்கப்படுகிறது. இவ்வாறு திறனாய்கிற முறையின் அடிப்படையில் பல திறனாய்வு வகைகள் சுட்டப்படுகின்றன.அவை

1) பகுப்புமுறைத் திறனாய்வு
2) விதிமுறைத் திறனாய்வு
3) மதிப்பீட்டு முறைத் திறனாய்வு
4) ஒப்பியல் முறைத் திறனாய்வு
5) வரலாற்றுமுறைத் திறனாய்வு
6) விளக்க முறைத் திறனாய்வு
7) பாராட்டுமுறைத் திறனாய்வு
8) மனப்பதிவுமுறைத் திறனாய்வு

போன்றவைகளைக் குறிப்பிடலாம்.

இலக்கியம் வாழ்க்கையைப் போன்று பன்முகத் தன்மை உடையது. எனவே இலக்கியமும் அறிவின் சாரமாக விளங்குவது. அத்தகைய இலக்கியத்தைத் திறனாய்வதற்கு, வளர்ந்துகிடக்கும் மனிதனின் பிறதுறை அறிவும் துணை நிற்கின்றது. இவ்வாறு பிற துறைகளின் அறிவைப் பயன்படுத்தித் திறனாய்வு செய்யும்போது அத்துறைகளின் அடிப்படையிலும் திறனாய்வு வகைகள் சுட்டப்படுகின்றன.

1) உளவியல் திறனாய்வு

2) சமூகவியல் திறனாய்வு

3) தொன்மவியல் திறனாய்வு

4) அறவியல் திறனாய்வு

5) மொழியியல் திறனாய்வு

6) குறியியல் திறனாய்வு

மற்றொரு முறையிலும் திறனாய்வு வகைகள் குறிக்கப்படுகின்றன. அந்தந்தக் காலத்து இலக்கிய இயக்கங்களுக்கு ஏற்பவும் பெயர் பெறுகின்றனர்

1) செவ்வியல் திறனாய்வு

2) புனைவியல் திறனாய்வு

3) நடப்பியல் திறனாய்வு

4) இருப்பியல் திறனாய்வு

5) அமைப்பியல் திறனாய்வு

6) புதிய செவ்வியல் திறனாய்வு

7) பெண் நிலைவாதத் திறனாய்வு

8) மார்க்சியத் திறனாய்வு

9) நிகழ்ச்சிவாதத் திறனாய்வு

10) ஏற்புநிலைத் திறனாய்வு

மேற்கண்டவாறு, திறனாய்வு வகைகள் பல துறை அடிப்படையில் அமைத் துள்ளன. ஆனால் எந்த ஒரு திறனாய்வாளனும், இவற்றுள் ஏதாவது ஒரு நிலையை மட்டும் கைக்கொண்டு வெற்றி பெற்றுவிட முடியாது. அவ்வாறு முயற்சி செய்வதும் தவறு. அவ்வகையான முயற்சி, இலக்கியமெனும் குவிமையத்திலிருந்து அவனைப் பிரித்து, வேறொரு இயலுக்கு அடிமையாக்கிவிடும் என்ற கருத்தை நார்த்தராப் ப்ரை வலியுறுத்துகிறார்.

வாழ்க்கை மாறிக் கொண்டே இருப்பது. எனவே இலக்கியமும், திறனாய்வும் பலவிதமான மாற்றங்களுக்கு உள்ளாகிக் கொண்டே தாம் இருக்கும். எனவே பலவிதமான திறனாய்வு வகைகளும் உருவாக்கி கொண்டுதாம் இருக்கும். ஆனாலும் இத்திறனாய்வு வகைகள் அனைத்தையும், அகவயத் திறனாய்வு (Intrinsic) புறவயத் திறனாய்வு (Extrinsic) என்ற இரண்டிற்குள் அடக்கி விடலாம். அல்லது எம். எச். ஆப்ராம்ஸ் போல இலக்கியத் தன்மைகளை விளக்கும் திறனாய்வு, இலக்கியம் உருவாகும் முறையை விளக்கும் திறனாய்வு என்ற இரண்டிற்குள் அடக்கிவிடலாம்.

## திறனாய்வும் தேவையும்

திறனாய்வு செய்தல் மனிதனின் இயல்பான நடவடிக்கையாக இருக்கிறது. திறனாய்வு இல்லாத இடத்தில் மனித இருப்பும் அதன் உண்மையான பொருளில் இல்லாமல் போய் விடுகிறது. மனிதனுக்கான தனி அடையாளத்தை, அவனிடம் இருக்கும் திறனாயும் தரத்தை வைத்தே கண்டு கொள்ளலாம்.மற்ற கலைகள் எல்லாம் ஊமையாகக்கிடக்கும் போது, திறனாய்வியல் ஒன்றுதான் வாய் திறந்து பேசுகிறது எனக் கூறுவர் நார்த்தாப் ப்ரை.பல்வகையான மனிதர்களுக்கு நடுவில் இயங்கும் போதுதான், ஒவ்வொருவரும் சாதாரணத் தன்மையிலிருந்து வளர்ந்து, உயர்ந்த அளவில் மனிதனாக விளங்க முடிவது போல, பன்முகப்பட்ட திறனாய்வுச் சிந்தனைகளுக்கு நடுவில்தான், இலக்கியமும் மேலான நிலையில் விளங்க முடியும்.

திறனாய்வு ஒன்றுதான், இலக்கியத்தை அது தோன்றிய காலத்திலிருந்து வெளியே எடுத்து எல்லாக் காலத்திற்கும் பொதுவானதாக வளர்த்தெடுக்கிறது. அதுபோலவே இன்றைய வாசகனை, இலக்கியம் தோன்றிய காலத்திற்கு இழுத்துச் செல்கிற பணியையும்

புரிகிறது.வேதியியல் என்பது வேதியியல் துறை சார்ந்த வல்லுநர்களின் கல்வியாக மட்டும் விளங்குகிறது. ஆனால் இலக்கியம், திறனாய்வு என்பவை வாழ்க்கையைப் பற்றியவை என்பதால் வாழ்கின்ற அனைவரோடும் நேரடித் தொடர்புள்ளவை. இத்துறையில் குழப்பத்திற்கும் சிக்கலுக்கும் நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன. திறனாய்வு ஓரளவு இச்சிக்கல்களைக் குறைக்கத் துணை செய்யலாம்.தொழில்நுட்ப வளர்ச்சியினால் உண்டான நூற்றுக்கணக்காள இலக்கிய இதழ்களும், புத்தகங்களும், திரைப்படங்களும், தொலைக் காட்சிகளும், உலக மொழிபெயர்ப்பு நூல்களும் “தேர்த்தெடுத்துப் படித்தல்” என்ற புதிய நிலையை உருவாக்கியுள்ளன. இத்தகைய சூழலில் திறனாய்வியல் துறைக்கு இருக்கும் சமூகக் கடமை ஆழமாக உணரப்படுகிறது.

மனிதன் இரண்டு வகையான உலகில் வாழ்கிறான். ஒன்று, பொருட்களாலான அவனது இயற்கை உலகம். மற்றொன்று அவனது கற்பனை, ஆசை, நம்பிக்கை ஆகியவைகளாலான புனைவு உலகம். இந்த உலகத்தை உருவாக்குவதில் மனிதனின் கவித்துவ மொழிகள் அல்லது உருவக மொழிகள் பெரிதும் துணை செய்கின்றன. இந்த மொழி, தாக்கத்திற்கு உட்படாமல் புராணக் குணம் மிக்கதாக விளங்குகிறது. எனவே கலைஞன் உருவாக்குகிற இந்த உலகத்திற்குள் முழுமையாக வாழ்வதற்குத் திறனாய்வுச் செயல்பாடுகள் பெரிதும் பயன்படும். இந்நிலையில் படைப்பைப் போலவே திறனாய்வும் இன்றியமையாத ஒன்றாக விளங்குகிறது.திறனாய்வாளரும் படைப்பாளரும் படைப்பவர் வாழ்க்கையைத் திறனாய்வு செய்கிறார். திறனாய்வாளர் அந்தப் படைப்பைத் திறனாய்வு செய்கிறார். ஆனாலும் இருவருக்குமே இலக்கியமல்ல பிரச்சனை. வாழ்க்கைதான். இருவருமே தங்கள் பணியை வாழ்க்கையில் இருந்து தொடங்கி, வாழ்க்கையிலேயே முடிக்கிறார்கள். அதனால்தான் ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தும், சிலப்பதிகாரத்தை இன்று சுவைக்க முடிகிறது. ஆய்வு செய்ய முடிகிறது,

பென்சான்சன், திறனாய்வுச் செயலைப் படைப்புச் செயலாகவே கருதுகிறார். ”திறனாய்வின் ஆய்தல் என்ற அம்சம் ஆக்கலின் தவிர்க்க முடியாத ஒரு பகுதியே..அதன் தொகுத்தல் அம்சத்தில் அது படைத்தலே ஆகும்,” என்றும் விளக்கப்படுகிறது. இவ்வாறு திறனாய்வு ஒரே நேரத்தில் அறிவியலாகவும் கலையாகவும் விளங்குகிறது.எச்.எச். அச்குயித் என்பார், ““அறிவார்ந்த உலகில் படைப்பவர் ஒருவர். அதைத் திறனாய்வு செய்ய ஒருவர் என்கிற வேலைப்பிரிவினை எதுவுமே கிடையாது” என்கிறார். பிளேட்டோ, பேக்கள், கதே முதலியோர் ஒரே நேரத்தில் சிறந்த படைப்பாளிகளாகவும் சிறந்த திறனாய்வாளர்களாகவும் விளங்கினர் என்றும் சுட்டிக்காட்டுகிறார்.எனவே படைப்பையும் திறனாய்வையும் ஒன்றாகப் பார்க்கும் நிலைமை இருக்கிறது. எனக் கொள்ளலாம். அதே நேரத்தில் இரண்டையும் வேறு வேறாகப் பார்க்கிற பார்வைதாள் உறுதியாக நிலவுகிறது.

திறனாய்வாளரும் வாழ்க்கையில் நின்றுதான் செயல்படுகிறார் என்றாலும், இவர் வாழ்க்கையை ஒரு படைப்பின் வழியாகப் பார்க்கிறார். சொற்களால் ஆன, காலவரிசைப்படுத்தப்பட்ட, சாரம் கொண்டிலங்கும் படைப்புலகம் இவருக்குக் கூடுதலாக இருக்கிறது. எனவேதான் ஆர்.ஏ.சேம்சுச்காட் இவ்வாறு கூறுகிறார். “படைப்பும் திறனாய்வும்

அறவே வேறுவேறான இயல்புடையவை. இரண்டும் வேறு வேறான தளத்தின் மேல் கட்டப்படுபவை. இரண்டும் வேறு வேறு பார்வைகள் யவை" மேலும் பொறியியலாளர் ஒருவர் கட்டிய பாலத்தை மதிப்பிட, மற்றொரு பொறியியலாளர்தான் அழைக்கப்படுகிறார். ஆனால் ஒரு கலைஞர் எழுப்பிய படைப்பை மதிப்பிட, மற்றொரு கலைஞரை அழைப்பதில்லை. மாறாக, ஒரு திறனாய்வாளரைத்தான் பயன்படுத்திக் கொள்கிறார்கள். எனவே, இலக்கிய உலகில் இரண்டும் வேறுவேறு தளத்தில் இயங்குபவை என்பது உறுதியாகிறது. படைப்பாளியே திறனாய்வாளராக இயங்கும் சூழலிலும் இந்நிலைமைதான் ஏற்படுகிறது. படைப்பாளிக்குத் தேவைப்படும் துணைப் பொருட்கள் வேறு. திறனாய்வாளனுக்குத் தேவைப்படும் துணைப் பொருட்கள் வேறு. மேலும் படைப்பாளிகளின் திறனாய்வு என்பது, "படைப்பாளி தான் படைக்கும் போது, தன் படைப்பு சிறப்பதற்காகச் சிந்திக்கின்ற சிந்தனைகளின் வெளிப்பாடுதான்" என்கிறார். டி.எஸ்.இலியட் மேலை நாடு முழுவதும் போற்றிய தன்னுடைய திறனாய்வு எழுத்துக்கள் கூட அத்தகைய ஒரு வெளிப்பாடே என்றும் கருதுகிறார். எனவே,படைப்பும் திறனாய்வும் வெவ்வேறுபட்ட வேலைப்பாடுகள் கொண்டவை. அதே நேரத்தில், திறனாய்வாளர் படைப்பாளியை விட ஒருபடித் தாழ்த்தவர், படைப்பிலக்கியத்தில் தோல்வி கண்டவர், படைப்பாளிக்கு எதிரானவர் என்கிற கருத்தோட்டங்களுக்கு உண்மையான இலக்கியத் தேடலில் இடமில்லை எனக்கொள்ள வேண்டும். ஓர் உயர்ந்த தளத்தில் இரண்டும் இணைவதையும் காண வேண்டும். திறனாய்வியல் பற்றிய சிக்கல்களும், தமிழ்த்திறனாய்வில் உள்ள கலைச் சொல்லாக்கம் பற்றிய சிக்கல்களும் பல.

## திறனாய்வுப் பணியின் கடுமை

"ஒருவர் தன்னைத் திறனாய்வாளராக நிறுவிக் கொள்ளுதல் என்பது, மதிப்புகளைக் கணித்துத் தீர்ப்புக் கூறும் நீதிபதியாகத் தன்னை உருவாக்கிக் கொள்ளுதல் ஆகும்" என்கிறார் ஐ. ஏ. ரிச்சர்டு. அவ்வாறு ஒரு பக்கம் திறனாய்வாளர் தன்னை இதயத்தாலும் அறிவாலும் தகுதிப்படுத்திக் கொள்ளக் கடுமையாக உழைக்க வேண்டியதிருக்கிறது. மறுபக்கம் நடைமுறை வாழ்வில் கடுமையான எதிர்ப்புகளையும் இடையூறுகளையும் எதிர் கொள்ள வேண்டியதிருக்கிறது.

உலகிலுள்ள பல எழுத்தாளர்களின் பொதுவான கருத்து. திறனாய்வாளர்களுக்கு எதிராகத்தான் இருக்கிறது. அதனால்தான் வல்லிக்கண்ணன் இவ்வாறு எழுதுகிறார்."...விமர்சனம் எதிர்ப்புகளையும் ஏச்சுகளையுமே அதிகம் பெற்றுத்தரக் கூடிய விவகாரம்.எதையும் தாங்கிக் கொள்ளக் கூடிய மனப்பக்குவம் உள்ளவர்களே விமர்சனத் துறையில் திறமையாகச் செயல்பட முடியும்". திறனாய்வாளர் என்பவர் குற்றமே காண்பவர் இழித்துப் பேசும் போக்குடையவர். குற்றம் காண்கிற ஓர் அறிவியல் துறையின் மற்றொரு பெயர்தான் திறனாய்வியல் என்றே பலர் கண்களுக்கு இதுபடுகிறது. "படைப்பவனை உறிஞ்சிப் பிழைக்கிற ஒட்டுண்ணிகள் தாம் திறனாய்வாளர்கள்" என்ற கருத்து படைப்பாளிகளின் நடுவே பரவலாக இருப்பதை நார்த்தராப் ப்ரை சுட்டிக்காட்டுகிறார். நெற்றிக் கண்ணால், திறனாய்வாளரைச் சாம்பலாக்கிய புராணம் தமிழில் விளங்குவதையும் இந்த இடத்தில் குறிக்க வேண்டும்.

தமிழில் வாழுங்கால எழுத்தாளர்கள் கூடத் திறனாய்வாளர்களைக் கடுமையாகச் சாடி உள்ளனர். சிற்பியின், ““அதோ! வாரும் பிள்ளாய் விமர்சகரே!” என்ற கவிதையை இங்கே எடுத்துக் காட்டுவது பொருத்தமாக அமையும்.

**”என்னை நானே**

**சிதையில் ஏற்றி**

**எருவிட்டு மூடி**

**மூணுதரம் சுற்றிவந்து**

**நெருப்பு மூட்டி**

**எரித்துப் பார்த்து**

**முடிந்தாச்சு.**

**போடாப் போ! உன்**

**நமத்துப் போன**

**தீக்குச்சிகளை**

**வெயிலில் காயப் போடு!**

**வீணையை வெட்டி**

**விறகாக்கு**

**விரலை நறுக்கிக்**

**குழம்பு வை**

**இதயத்தை வற்றல் ஆக்கு**

**ஊரைக் கூப்பிட்டு**

**விருந்து வை**

**ஒருத்தரும் வராவிட்டால்**

**பந்திக்கு நீயே முந்து”**

குமரித் துறைவன் என்பவர், படைப்பாளியை வேலைக்காரி என்றும் திறனாய்வாளனை மாமியார் என்றும் கேலி செய்வதோடு, திறனாய்வாளனால் படைப்பின் உயிர் பறி போய்விடுகிறது என்றும் கருதுகிறார். ”விமர்சனம்-விமர்சகன்” என்ற தலைப்பில் கவிதை எழுதுகிறார்.

**“வேலைக்காரியைக் குறை**

**சொல்லி**

**மாமியார் அவல் இடிக்க**

**உமி ஊதி ருசி பார்த்து**

**ருசி பார்க்க உமி ஊதி**

**எஞ்சியது**

**உரலும் உலக்கையுமே”**

இவ்வாறெல்லாம் இருவருக்குமிடையே எதிர்நிலைப்பாடுகள் தோன்றுவதற்குக் காரணம், மனிதனுக்குள் இயங்கும் “தான்” என்ற உணர்வு தான். இதுபற்றி நார்த்தராப்ப்ரை கூறுவது இந்த இடத்தில் பொருத்தமாக அமைகிறது.”வெளிப்பட்ட கவிதையானது, அந்தக் கவிஞனுக்கென்றே உரித்தான தனிப்பட்ட நினைவுகளில் இருந்தும், அவனை வெளிப்படுத்திக் கொள்ள முயலுகிற அவனது ஆசைகளில் இருந்தும், அவனுடைய தான்’ என்னும் தன் முனைப்பிற்கு ஊட்டச்சத்து அளிக்கும் அனைத்து நரம்புக்குழாய்களில் இருந்தும், சுருக்கமாக,அனைத்துக் தொப்பூழ்க் கொடிகளில் இருந்தும் விடுபடுவதற்கு அலறித்துடிக்கிறது, நல்ல திறனய்வாளன், எந்த இடத்தில் கவிஞன் கைகழுவி விடப்பட்டானோ, அந்த இடத்தில் நின்று கவிதையைத் தன்னுடையதாக ஏற்றுக்கொள்ளுகிறான்”.தாகூரும் படைப்பவன், படைப்பிலிருந்து விடுதலை பெற்ற உணர்வோடு விளங்க வேண்டும் என்பார், “தன் எழுத்து, “தன் படைப்பு“ என்று உரிமை கொண்டாட உண்மையான இலக்கிய உலகில் இடம் இல்லை என்பார். அம்பை வேகமாக அனுப்புவதற்கு முன்பு, வில்லானது அம்பிடம் முணுமுணுக்கிறது. ”உன்னை விடுதலை செய்வதில் தான், எனது விடுதலை அடங்கிக் கிடக்கிறது”. இந்த உவமை மூலம் தாகூர், இலக்கிய உலகு எத்தகைய மேன்மையான தளத்தில் இயங்க வேண்டும் என்பதைச்சுட்டிக் காட்டி விடுகிறார். ஆனால் எல்லாவற்றையும் காசு தரும் சந்தைப்பொருளாகப் பார்க்கும் இன்றைய வணிகப்பண்பாட்டில் இத்தகைய தளங்கள் அரிதாகி விட்டன. உயர்ந்த ஒரு தளத்தில் இயங்கும் போதுதான் திறனாய்வும் இலக்கியமும் தங்களை மேலும் மேலும் செழுமைப்படுத்திக் கொள்ள முடியும். உயர்ந்த வினாக்கள் இல்லாமல், உயர்ந்த விடைகளும் இல்லை.உயர்ந்த விடைகள் இல்லாமல், உயர்ந்த வினாக்களும் இல்லை. இந்த உறவை உள்வாங்கிக் கொண்டு செயல்பட்டால் இலக்கிய உலகம் உயரும் என நம்பலாம்.

## தமிழ்த் திறனாய்வும் கலைச்சொல்லாக்கமும்

தமிழில் “திறனாய்வுப் புலமை“ செழித்து வளர்வதற்குத் தமிழ் இலக்கிய திறனாய்வு மரபை வரலாற்று அடிப்படையில் தொகுத்து வருத்து அறிந்துகொள்ளுதல் எந்த அளவிற்கு இன்றியமையாமையோ அந்த அளவிற்கு இன்றைய திறனாய்வு சார்ந்த மேலை இலக்கியத்திறனாய்வுச் சொற்களுக்கு ஏற்ற கலைச்சொற்களைக் குழப்பமின்றி உருவாக்கிக் கொள்ளுதலும் இன்றியமையாததாகும். இத்தகைய கலைச் சொல்லாக்கம் பற்றித் தமிழ்த் திறனாய்வு உலகில் பல குழப்பங்கள், சிக்கல்கள் நிலவுகின்றன. ஆனால்

தொல்காப்பியத்திலேயே வேற்றுமொழிச் சொற்களை எவ்வாறு ஏற்க வேண்டும் என்பது பற்றியும், மொழி பெயர்ப்பு பற்றியும் பேசப்படுகிறது. அத்தகைய வேற்றுமொழிச் சூழல் மேலும் வளர்ந்து நன்னூலார் காலத்தில் "வடமொழியாக்கம்" என்று ஓர் இயலையே படைக்க வேண்டிய நெருக்கடிநிலை ஏற்பட்டதையும் அறியமுடிகிறது. அந்த நெறிமுறையில் நின்று கம்பன் என்ற ஒரு மானுடன் வடமொழி பெயர்களையும் சொற்களையும் தொடர்களையும் மிக அழகாகத் தமிழ்ப்படுத்தி வெற்றிகண்ட மரபையும் அறியமுடிகிறது. மேலும் வேற்றுமொழிச் சொற்களை அப்படி அப்படியே தமிழிடைக் கலந்து எழுதுகின்ற முறை, தமிழ் மரபில்செல்லாது என்கிற படிப்பினையும் ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு வேற்றுமொழியோடு நீண்ட காலத்தொடர்பும் படிப்பினையும் இருந்தும், ஆங்கிலமொழி தாள் பெற்ற அரசியல் மேலாண்மையில் கலை இலக்கியம் முதலிய பண்பாட்டுத்துறைகளைத்தாக்கியபோது, எவ்வாறு தமிழ்க் கலை இலக்கிய உலகம் எதிர்கொண்டிருக்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால் வேதனைதான் மிஞ்சும். படிப்பினைகளைப்பாடமாகஏற்றுச்செயல்படாத எந்த இனத்திற்கும், ஏன் தனிமனிதனுக்கும் கூட வேதனைதான் மிஞ்சும்.

நாட்டு விடுதலை இயக்கம் வளர்ந்த சூழலில் சுப்பிரமணிய சிவாபாரதியார், மறைமலையடிகள் முதலியோர் இத்தகைய கலைச் சொல்லாக்கம் பற்றிக் கொள்ள வேண்டிய விழிப்புணர்வை வலியுறுத்தி உள்ளனர். 1915 இல், சிவா நடத்திய "ஞானபாநு" இவ்வாறு எழுதுகிறது.

"தமிழ்ப்பண்டிதர்களே! தமிழ் மகா ஜனங்களே! ஜாக்கிரதை. ஜாக்கிரதை! உங்களுடைய பாஷையைக்காப்பாற்றுங்கள். ஒரு ஜனசமூகத்திற்கு உயிர் அதன் பாஷைதான். தமிழ்ப் பாஷையழிந்து விட்டால், தமிழர்களின் சிறப்பும் சீரும் அழிந்துவிடும். தமிழ் பாஷையில் தேவையான பதங்கள் இல்லையென்று வாய்கூசாமல் கூறுகின்ற பாரதபுத்திரர்களுக்கு அப்பதங்களை ஆராய்ந்து கண்டு பிடித்துக்கூறுங்கள். சரியான பதங்கள் இல்லையேல் தமிழ்வாணியின் கிருபை கொண்டு இன்னும் அநேக காரணப்பெயர்களையாக்கிக் கொள்ளுங்கள். உங்கள் நா தமிழே பேசுக. நீங்கள் கையிலேந்தும் இறகு தமிழே எழுதுக. உங்களுடைய ஹிருதயம் தமிழையே நாடுக"

பாரதியாரும் ஸ்லேட், பென்சில் போன்ற சொற்களை அப்படியே எழுதக்கூடாது .பலகை, குச்சி என்றே எழுதவேண்டும் என வலியுறுதுகிறார். தமிழ்த் திறனாய்வு நடைபெறும் தமிழ் உரை நடையிலும் இத்தகைய விழிப்புணர்வு வேண்டும் என்று மதிமன்னன் என்பார் செந்தமிழ்ச் செல்வியில் இவ்வாறு எழுதுகிறார்.

"முதல் முதல் நாவல் (Novel) எனும் ஆங்கிலச்சொல்லுக்கேற்ற தமிழ்ச் சொல் யாது? "நாவல்" என்றே. தமிழில் எமதுஆசிரியர் வழங்குவது அவர்களது "மூளை வறட்சியையே" சுட்டுகின்றது. இனி, "கற்பிதக் கதை" என்று சிலரும், "கற்பனா "சரிதை"" எனச் சிலரும் சொல்லா நிற்க வேறு சிலர் "நவீனம்" என்கின்றனர். "புதுக்கதை" என்றார் மறைமலையடிகள். அதுவும்

பொருந்தாப்பெயரே. புதுக்கதையிதுவெனின் பழங்கதையெது? ”புதினம்” என்று சொல்லாகாது? இது பற்றி அறிஞர் தம் கருத்தை வெளியிடுவாராக.

க.நா.சுப்பிரமணியம், சி.சு. செல்லப்பா, இரகுநாதன் முதலிய தொடக்க காலத்தமிழ்த் திறனாய்வாளர்கள் இவ்வாறு கலைச்சொல்லாக்கத்தின் இன்றியமையாமை பற்றி எல்லாம் எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை. “சுநயடளைஅ“-போன்ற சொற்களுக்குத்தமிழ்ச் சொல் தேட வேண்டியதில்லை என்றும், அதற்கு அவசியமே இல்லை என்றும் கருதுகிறார் க.நா.சு.

சி.சு. செல்லப்பா ”சோஷியாலாஜிகல்“ விமர்சகன்” என்றும், ”எமோஷனல்ரெஸ்பான்ஸ்” என்றும் பெரும்பாலும் அப்படியே ஆங்கிலச் சொல்லை எழுதிச் செல்கிறார். 'Style“ என்ற ஆங்கிலச்சொல்லைச் “சமிலை“ என்று தமிழ்ப்படுத்தியவர்களும் உண்டு. இவர்கள் ஆங்கிலச்சொல்லிற்கு மொழியாக்கம் செய்ய நினைத்தாலும். அது தமிழாகஇராது. வடமொழியாக இருக்கும். கு.ப,ரா, “Realism“ என்ற சொல்லிற்கு “பிரத்தியக‘ சித்திரம்“என மொழியாக்கம் செய்துள்ளார். சி.சு. செல்லப்பா “”அதிசயோக்தி தத்துவம்” என்று 'Romanticism' என்ற சொல்லுக்கு மொழியாக்கம் தந்துள்ளார். இவ்வாறு மொழியைப் பற்றிய சரியான அறிவியல் பார்வை இன்றி செயல்பட்டமை, இன்றைய திறனாய்வு வளர்ச்சி இன்மைக்கு ஒரு காரணமாக அமைந்துகிடக்கிறது எனலாம். இவர்களின் இத்தகைய செயல்பாட்டிற்கு காரணமாகக் கா. சிவத்தம்பி கூறும் கூற்று பொருத்தமாக அமைகிறது:”மொழியின் உள்ளடர்ந்த ஆற்றல்களையறிந்து சொல்லாக்கம் செய்யாது எடுத்தவுடனேயே சொற்கடனிலிறங்குவதானால், நாம் எமது பாரம்பரியத்தையும் நவீனத்துவத்தையும் இணைக்க முடியாதவர்களாகவே இருப்போம். பெரும்பாலும் அத்தகைய இணை நிலையைக் காணாதவர்களும் காண முடியாதவர்களும்தான் ஆங்கிலச் சொற்களை அவற்றின் உருவ அமைதி மாறாமல் தமிழிலே புகுத்தி வருகின்றனர்’’

பொதுவாகவே கருத்து நிலையில் இயங்கும் இத்தகைய துறைகளில் அந்த மூலமொழிச் சொல்லுக்கே வரையறுக்கப்பட்ட பொருள் இருப்பதில்லை. எடுத்துக் காட்டாக, “சுநயடவைல“ என்ற ஆங்கிலச்சொல்விற்கு மெய்ப்பொருளியலில் ஒரு பொருள் அறிவியலில் ஒரு பொருள். அளவையியலில் ஒரு பொருள் மதத்தில் ஒரு பொருள். சாதாரணப் பழக்கவழக்கத்தில் ஒரு பொருள் இலக்கியத்திறனாய்வில் ஒரு பொருள். இந்நிலையில் மொழியாக்கம் மூல மொழியின் முழுப்பொருளையும் உடனே தந்து விடவேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறு எனக் கருதப்படுகிறது.”...சில சொற்கள் தமிழில் பூரணமான அர்த்தத்தைக் கொடுக்குமோ என்பதுதான் சந்தேகம். வார்த்தையைச் சொல்லிச்சொல்லிப் பழக்கித்தான் மெருகையும் பொருளையும் அதற்கு ஏற்ற முடியும் என்பார் வ.ரா. எனவே குறைந்த தரத்தில் மொழியாக்கம் செய்தாலும், எல்லோரும் ஒன்றுபோல் அதே சொல்லைப் பயன்படுத்தி வர வர, மனித உணர்வுகள் சேரச் சேர, தொனிகள்கூடக் கூட முழுப்பொருளுக்குரிய சொல்லாகச் செயல்படும் எனலாம்.

மேற்கண்டவாறு ஒரு பக்கம், தாய்மொழி பற்றிய பார்வை, ஆர்வம் இன்மையால் மொழியாக்கத் தவறுகள் தொடர்கின்றன என்றால், மற்றொரு பக்கம், பிறமொழி வளம்

இன்மையாலும் தவறுகள் தொடர்கின்றன.' Plot" - என்ற சொல்லுக்குக்கிடைத்திருக்கும் மொழியாக்கம், தமிழ்த் திறனாய்வியலில் பெருகிக் கிடக்கும் குழப்பத்தை காட்டுவதற்கு "இது நல்ல ஒரு சான்றாக அமைகிறது. "சூழ்ச்சி" அல்லது "சதி" என மொழியாக்கம் செய்துள்ளார் அ. ச. ஞானசம்பந்தன் இது அவரது ஞானமின்மையையே காட்டுகிறது" எனக் கடுமையாக எழுதுகிறார் கா.சிவத்தம்பி. மு.வரதராசனார் "கரு" என்கிறார். Theme> Plot-வேறுபாடின்றி அவர் மயங்குவதைக் காண முடிகிறது என்றும், "பேராசிரியர் நாவலாசிரியராகவும் இருப்பதனால் இக் கருத்து மயக்கம் மன்னிக்க முடியாத ஒன்றாகவே உள்ளது" என்கிறார் சிவத்தம்பி மேலும் இந்த ஒரு சொல்லிற்கு மட்டும் கதைப் பின்னல், கதைக்கரு. கதைப்புலம், கதைக்கோப்பு, கதைத்திட்டம், கதை நிகழ்ச்சி, என்று பல சொற்கள் நிலவுகின்றனா..இது போலவே 'Fine Arts' - என்பதற்கு இலக்கியம், ஓவியம் முதலிய கலைகளைக்குறிக்கும் சொல்லெனக் கொண்டு "நுண்கலை" என்கிறார் மு.வ. ஆனால் சஞ்சீவி "இன்கலை" என மொழியாக்கம் செய்கிறார். மேலும் "நுண்கலை" என்ற சொல்லாக்கத்தை "Sciences or precision Arts" என்ற சொல்லிற்கு மொழியாக்கமாக, மு.வ. விடமிருந்து முற்றிலும் மாறுபட்ட பொருளில் பயன்படுத்துகிறார்.மேலும் 'Symbol" என்பதற்குக் "குறியீடு" என்றும், "ஐஅயபளைஅ என்பதற்குப் "படிமம்" என்றும் வழங்கப்படுகிறது. ஆனால் மதுரைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் தமிழண்ணல், சச்சிதானந்தம் ஆகியோர் "Symbol" என்பதற்குப் "படிமம்" என்றும், 'Imagism' என்பதற்கு உருக்கவிதை (அ) உருக்காட்சி என்றும் பயன்படுத்துகின்றனர்.இத்தகைய குழப்பங்களுக்குக் காரணம், "குறித்த கருதுகோள் பற்றி விமர்சகர்களிடையே நிலவும் சமனற்ற அறிவு மட்டங்கள் தாம்" என்கிறார் சிவத்தம்பி.எனவே மொழியாக்கம் பற்றிய விழிப்புணர்வைத் தமிழ் உலகம் உடனே பெற்றாக வேண்டும். அராபியர்கள் பாக்தாத் பெருநகரில் நூல் நிலையம், கலைமன்றம், மொழிபெயர்ப்பு நிறுவனம் ஆகிய மூன்று அரங்குகளையும் ஓரிடத்திலேயே அத்தடுத்து அமைத்து, கிரேக்கஅறிவை எல்லாம் மொழிபெயர்ப்பு மூலம் பெற்றுள்ளனர். இன்றும் உலகில் மொழிபெயர்ப்புக்கழகங்கள் பெரும்பங்கை ஆற்றி வருகின்றன. கலைச் சொல்லாக்கம் இன்றைக்கு ஓர் அறிவியல் கல்வியாக விளங்குகிறது. மொழிபெயர்ப்புப் பணியைக் "கணிப்பாள்கள்"" செய்கின்றன. யுனெஸ்கோ உறவு நாடுகளில் வெளியாகும் நூல்களில் 39 விழுக்காட்டு நூல்கள் மொழிபெயர்ப்பு நூல்களாக அமைந்துள்ளன. ஆனால் தமிழ்ச்சூழலில் இன்னும் அப்படி அப்படியே ஆங்கிலச் சொல்லை எழுதும் போக்கும். ஒரு கலைச்சொல்லுக்கு அவரவர் பல வகையான சொற்களை உருவாக்கிப் பயன் படுத்தும்போக்கும், நுட்பமான வேறுபாடு உடைய பல சொற்களுக்கு ஒரு தமிழ் சொல்லையே பயன்படுத்தும் தன்மையும், கலைச் சொல் சுருக்கமாக இல்லாமல் விரிவாக விளங்குகிற தன்மையும், ஓர் ஆசிரியரே ஒரே நூலில் ஒரு கலைச்சொல்லுக்கு வெவ்வேறான சொற்களைப் பயன்படுத்தும் இயல்பும், தனித்தமிழ்-வடமொழிப்போராட்டத்தினால் புரியாத கடும் சொற்களைப் பயன்படுத்தும் போக்கும் இன்னும் தொடர்கின்றன. மொழி வறுமை என்பது ஒரு இனத்துக்கும், ஒரு நாட்டுக்கும் விளையும் வறுமையாகும். மக்களின் அறிவுக்கும் அவர் தொடங்கும் முயற்சிக்கும் நேரும் வறுமையாகும் என்பதை அழுத்தமாக உணர்ந்து மொழியாக்க வல்லுநர்களைக் கொண்ட குழுவொன்று

அமைக்கப்பட வேண்டும். அக் குழு எந்தச் சொல்லை உருவாக்கிக் கொடுக்கிறதோ அதே சொல்லைத்தான் கல்வி நிறுவனங்கள், இதழியல் மக்கள் தொடர்பியல் துறை முதலிய அனைத்து நிறுவனங்களும் கட்டாயம் பயன்படுத்த வேண்டும் என்ற நிலையில் விதிமுறைகளை வகுத்துச் செயல்படுத்த வேண்டும். இல்லையேல் திறனாய்வுத் துறை மட்டுமல்ல, தமிழில் எந்தத் துறையும் வளர வழியில்லை எனலாம்.

## தமிழிலக்கியத்திறனாய்வின் வரலாறு

தமிழில் இலக்கிய வரலாற்று அவை பெரும்பாலும் தமிழ் இலக்கிய நூல்களைப் பட்டியல் இட்டுக்காட்டுவனவாக இருக்கின்றன. கூறப்பட்டாலும், அந்த அளவிற்கான முயற்சி கூட திறனாய்வு வரலாற்றை எழுதுவதற்கு மேற்கொள்ளப்படவில்லை, தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு சுட்டிக்காட்டும் கட்டுரைகள்தாம் காணப்படுகின்றன. கட்டுரைகளின் தமிழில் திறனாய்வுக்கலையே இல்லை என்ற கருத்தும், தமிழில் தொல் காப்பியர் காலந்தொட்டே திறனாய்வுக்கலை விளங்கி வந்துள்ளது என்ற கருத்தும் நிலவிவந்துள்ளன என்று அறிய முடிகிறது ஐரோப்பியர் வருகைக்குப் பிறகுதான் “புதிய சரக்காகத்“ தமிழில் திறனாய்வு தளம் தோன்றியுள்ளதாக .இரகுநாதன், சுப்ரமணியம், ச. ஞானசம்பந்தன், அகத்தியலிங்கம் கருதுகின்றனர். இவர்கள் இன்றைய தொழிற் சமூகத்தில் வளர்ந்துள்ள திறனாய்வுக்கலையின் அளக்கவொண்ணா வளர்ச்சி அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் தமிழில் அத்தகைய திறனாய்வு கலை இல்லை என்ற முடிவுக்கு வந்துள்ளனர் எனலாம்.

பொதுவாக எல்லாக் காலத்திற்கும் எல்லா இடத்திற்கும் பொருத்திவரும்படியான திறனாய்வு கலை இருக்க முடியாது. அந்தந்த நாட்டுப்பண்பாட்டு, அரசியல், சமூகச்சூழல்களுக்கு, ஏற்ற திறனாய்வு கலையின் செயற்பாடும் வேறுபடும். கலாபரமேசுவரன் கூறுவது இந்த இடத்தில் நினைக்கத்தக்கதாகும்.”ஒட்டு மொத்தமாகப் பார்க்கும் போது, திறனாய்வு என்பது இலக்கியத்திலே அவ்வக்காலத்தினரின் போக்கிற்கும் தேவைக்கும் இயைய அமைவது என்பதனையும், ஒரு தனிக்காலப்பிரிவின் அல்லது தனியொரு ஆசிரியரின் திறனாய்வு, இலக்கியத்தின் எல்லா இயல்புகளையும் தழுவிக் கொள்ளும் என எதிர்பார்க்க முடியாது என்பதனையும், நாம் விளங்கிக் கொள்வோமானால் பண்டைய தமிழ்த் திறனாய்வு மரபின் உள்ளார்ந்த அம்சங்களைப் புரிந்து கொள்வதிற் கஷ்டம் இருக்காது.மேலும் ஆழமான திறனாய்வு வேலைப்பாடுகள், தேடல்கள் இல்லாமல் இலக்கிய அழகியலில் இந்த அளவிற்குச் சாதனைகளைத் தமிழிலக்கியம் செய்து காட்டியிருக்க முடியாது. எனவேதான், ஏ.வி. சுப்பிரமணிய அய்யர், செந்தில்நாதன், மு. வரதராசனார், கா. செல்லப்பன், க. கைலாசபதி, கா, மீனாட்சிசுந்தரம், தெ.பொ.மீ. வ.சுப. மாணிக்கம் முதலியோர் தமிழில் திறனாய்வு பல வகைகளில் தொடர்ந்து நடந்து வந்துள்ளது

எனச்சுட்டிக்காட்டியுள்ளர்.எனவே, இவ்வியலில் தமிழில் நடந்துள்ள திறனாய்வு வேலைப்பாடுகள் கீழ்க்கண்ட தலைப்புகளில் தொகுத்து ஆராயப்படுகின்றன.

1. இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள்.
2. இலக்கியப் படைப்பாளிகளின் திறனாய்வுக் குறிப்புகள்.
3. உரையாசிரியர்களின் திறனாய்வு.
4. திருவள்ளுவமாலையும் திறனாய்வும்

## I.இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வுக் குறிப்புகள்

பழந்தமிழில்இலக்கியத் திறனாய்வு இல்லை என்ற கருத்துடைய க. நா. சு, ”தமிழ் இலக்கியமரபிலே இலக்கணம் தான் ஓரளவுக்கு இலக்கிய விமரிசனம் செய்ய வேண்டிய காரியத்தையும் செய்ய முற்பட்டு வந்திருக்கிறது. எள்கிறார். தொல்காப்பியம் இத்தகைய இலக்கண நூல்களில் முதல் நூலாக விளங்குகிறது.மேலும் இடைக்காலத்தில் தோன்றிய பொருளிலக்கண நூல்கள், அணியிலக்கண நூல்கள், யாப்பிலக்கண நூல்கள் பாட்டியல் நூல்கள் முதலியன இலக்கியக் கல்வியைச் செழுமைப்படுத்தியுள்ளன. இவைகளை “இலக்கியத்திற்கான இலக்கண நூல்கள்” என்பார் கே. செல்லப்பன்.தொல்காப்பியம் தொல்காப்பியர், “முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணி”, ”பாடலுள் பயின்றவை நாடி”, உருவாக்கிய கோட்பாடுகள் எழுத்து, சொல், பொருள் என மூன்று அதிகாரங்களில் தொகுக்கப்பட்டுள்ளன. திறனாய்வினால் கோட்பாடுகள் உருவாகுவதும், கோட்பாடுகளினால் திறனாய்வு செழுமை பெறுவதும், மனித நடவடிக்கைகளின் சாரமாக அமைந்து கிடக்கின்றன. எனவே ஏ. சி. சார்ச்சு,

> **“இலக்கியத்திறனாய்வும், இலக்கியக் கோட்பாடுகளும் ஒன்றையொன்றுப் பின்னிப்பிணைந்தவை. பல நேரங்களில் இரண்டும் ஒன்றாகவே விளங்கக்கூடியவை”**

என்கிறார். எனவேதான் சி. கனகசபாபதி இவ்வாறு கருதுகிறார்.

> **“திவேதி என்ற வடமொழி ஆய்வாளர் அலங்காரம், தொனி, நீதி, லட்சணம், குணம், தோஷம் ஆகியவைகளை வடமொழியின் திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்வது போல, தொல்காப்பியர் கூறியுள்ள மெய்ப்பாடு, உவமை, உள்ளுறை, வனப்பு, வண்ணம், மரபு ஆகியவைகளைத் தமிழ்த்திறனாய்வுக் கோட்பாடுகளாகக் கொள்ளலாம்’’**

இவைகளைத் தமிழர்தம் அழகியல் கோட்பாடுகளாக அடையாளம் காண்கிறார் தெ. பொ. மீ.. தொல்காப்பியரின் பொருளதிகாரத்தை ”மனோதத்துவ உண்மைகளின் அடிப்படையில் எழுந்த ஓர் அற்புதமான இலக்கிய சம்பிரதாயக் கலை”, என்கிறார் ஏ. வி. சுப்பிரமணிய ஐயர்.மேலும் தொல்காப்பியரின் இலக்கியச் சிந்தனைகளில் இன்றைய திறனாய்வுச் சிந்தனைகளின் கூறுபாடுகள் அமைந்து கிடப்பதைப் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.செய்யுள் உறுப்புகளாகத் தொல்காப்பியர் கூறியுள்ளவை, “உறுப்பியல் கோட்பாட்டோடு“ ஒத்து எண்ணத்தக்கவை என

தெ.பொ.மீ. கருதுகிறார் மேலும் அவர் கவிதையின் உள்ளடக்கமும் வடிவமும் பிரித்து கருது முடியாதவை, அத்வைதத் தத்துவ இணைப்பு உடையவை என்பதை ஓர் உண்மையாகத் தொல்காப்பியர் வலியுறுத்துவதாகக் கருதுகிறார். க.கைலாசபதியும் தொல்காப்பியரின் இந்த உறுப்பியல் கோட்பாட்டை இவ்வாறு விதந்தோதுகிறார்.

> **“அவயவிக் கொள்கை (முசபயளைை வுாநழசல)களில் பொருள் வடிவம் என்ற வேறுபாடு இல்லை, இரண்டும் கூறுகளாக… உறுப்புக்களாக - இசைவுபட்டே உயிருள்ள கவிதை பிறக்கிறது. தொல்காப்பியம் செய்யுளியல் முதற்குத்திரத்தை நோக்குவோர்க்கு இது புலனாகும்.”**

மேலும் இலக்கிய ஆக்கத்திற்குத் துணை நிற்கும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய அனைத்தையும் ஒட்டு மொத்தமாக இணைத்து ஆராய்ந்திருக்கும் தொல்காப்பியரின் பார்வையானது, மொழியை முதன்மைப்படுத்தி, இலக்கியத்தை ஆராய்கிற அமைப்பியல் திறனாய்வாளருள் ஒருவரான ரோலன் பர்த்தின் திறனாய்வுத் தன்மையோடு ஒத்திருக்கிறது என விளக்குகிறார் தமிழவன். இந்திய மெய்ப்பொருள் சிந்தனை மரபே இவ்வாறு எதையும் முழுமையாகப் பார்ப்பதுதான் என்ற உண்மையோடு தொல்காப்பியரின் அணுகு முறையையும் எண்ணிப் பார்த்தால், தொல்காப்பியரின் திறனாய்வு ஆழத்தைப் புரிந்து கொள்ளலாம், வடிவமா? உள்ளடக்கமா? என்று தொடர்ந்து பேசப்பட்டு வரும் ஆழமான திறனாய்வுச் சிக்கலைத் தொல்காப்பியரின் “முழுமையான பார்வை“ எவ்வளவு எளிதாகத் தீர்த்து வைத்திருக்கிறது என்பதை அறியமுடிகிறது.மேலும் தொல்காப்பியர் நாடக வழக்கு, உலக வழக்கு என்று பேசுவதும், பா, நூல், உரை, பிசி, முதுமொழி, வாய்மொழி அங்கதம் என்று இலக்கிய வகைகளை விளக்குவதும், உத்திகளைத் தொகுத்துக் கூறுவதும், மரபிற்கு அழுத்தம் தருவதும், அவருடைய இலக்கியப் புலமையைப் புலப்படுத்துகின்றன எனலாம். எனவேதாள் தெ.பொ.மீ தொல்காப்பியம் இலக்கண நூலாகவும், அதேநேரத்தில் கவிதை இயலாகவும் அமைந்து கிடக்கிறது என்கிறார்.உலகம் முழுவதும் முதலில் இலக்கியத்தில் அறக்கோட்பாடுதான் முதலிடம் பெற்றுள்ளது. பிளேட்டோ, தன் எழுத்துக்கள் மூலம் அறப்பார்வையை வலியுறுத்தினார். அரிஸ்டாட்டில் இன்பத்திற்கு முக்கியத்துவம் அளித்தாலும் அறம்சார்ந்த இன்பம் அழகியல் என்றே வலியுறுத்தினார். தொல்காப்பியரின் திறனாய்வுச் சிந்தனையும் அறநெறிப்பட்டதாகவே விளங்குகிறது. இதை இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின் என்ற தொல்காப்பியரின் நூற்பா வரிகள் எடுத்துக் காட்டுகின்றன. பொதுவாக எல்லா வகையான திறனாய்வுக் கொள்கைகளையும் நான்கு பிரிவுகளுக்குள் அடக்குவர், ஆப்ராம்சு.

1) போலச் செய்தல் கொள்கை (Mimetic Theory)

2) வெளியீட்டுக் கொள்கை(Expressive Theory)

3) பயனீட்டுக் கொள்கை(Pragmatic Theory)

4) புறநிலைக் கொள்கை (Objective Theory)

**தொல்காப்பியரின்** திறனாய்வுச் சிந்தனைகளின் சாரமாக “வெளியீட்டுக் கொள்கை“ அமைகிறது. “மெய்ப்பாட்டியல்” இக்கருத்திற்கு உரமாக விளங்குகிறது எனலாம். ஆனாலும் இலக்கியச் சிந்தனைகளில் ஒரே கொள்கை மட்டும் விளங்காது என்பர் ஆப்ராம்சு அந்த அடிப்படையில் பார்த்தால், தொல்காப்பியரின் இலக்கியச் சிந்தனையில் பயனீட்டுக் கொள்கையின் தன்மைகளும், புறநிலைக் கொள்கையின் தன்மைகளும், காணக்கிடைக்கின்றன எனலாம். இந்த அடிப்படையில் விரிவாக ஆராய்வதற்கு இடம் இருக்கிறது.மொத்தத்தில் தொல்காப்பியரின் நோக்கம் கோட்பாடுகளை விதிகளை உருவாக்குவதாக அமைந்திருக்கிறது. எனவே தொல்காப்பியரின் திறனாய்வையும், அவரைத் தொடர்ந்து வரும் இலக்கண ஆசிரியர்களின் திறனாய்வையும் “கோட்பாட்டு உருவாக்கத் திறனாய்வு“ எனப் பெயரிடலாம்.

**நன்னூல்**

தமிழ்நாட்டில் இடைக்காலத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் பண்பாட்டுத் துறைகளான மதம், கல்வி, கலை, இலக்கியம் ஆகிய அனைத்திலும் வடமொழியின் செல்வாக்கு ஓங்கி வளர்ந்தது, தமிழ்நாட்டு அறிஞர்களும் வடமொழியால் சிந்தித்தார்கள். வடமொழியால் எழுதினார்கள், இன்றைக்கு ஆங்கிலத்தில் எழுதுவது போல. எனவே தொல்காப்பியரின் திறனாயும் மரபும் தொடரப்படாமல் விடுபட்டது. எனவே மு. வரதராசனார்

> **“தமிழ் இலக்கியத் திறனாய்வு தொன்மை வாய்ந்ததாக உள்ளது. பழைய தமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தின் மூன்றாம் பகுதியான பொருளதிகாரத்தை ஆராயந்தால் அந்த உண்மை தெற்றெனப் புலப்படுகிறது... ஆனால் இப்பகுதி தொல்காப்பியர் விட்ட இடத்திலேயே நின்றுள்ளது பின்னர் வளரவில்லை’’**

என்று எழுதுகிறார் தொல்காப்பியர் காலத்து இலக்கியங்களை விளக்கமுறச் செய்வதற்கு எவ்வாறு கோட்பாடுகளை உருவாக்கினாரோ, அதே மாயை பின்பற்றி, இடைக்கால அறிஞர்கள் தங்கள் காலத்தில் தோன்றிய பக்தி இசைச்சொற்களைஇபுராண இலக்கியங்களை விளக்குவதற்குக் உருவாக்கத் தவறிவிட்டனர் என்பதைத்தான். நன்னூல் எழுத்து, சொல் பற்றிய இலக்கண நூலாகத்தான் இன்று கிடைக்கிறது என்றாலும், அவற்றிலும் இலக்கியம் பற்றிய சில திறனாய்வுக் குறிப்புகள் அமைந்து கிடப்பதைக் காணமுடிகிறது.தொல்காப்பியரைப் போலவே மரபைப் பெரிதும் வலியுறுத்தும் பவணந்தியார். உணர்வோடு நெருக்கமான தொடர்புடைய கருத்துலகில், பழமைக்கும் புதுமைக்கும் இயல்பாகவே உருவாகி விடுகிற முரண்பாட்டைப் பற்றிய புரிதலுடன், “பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையினானே” என்று அழுத்தமாகக் கூறுவது, அவரது இலக்கிய உலகம் பற்றிய நுண்மான் நுழைபுலத்தைப் புலப்படுத்துவதாக விளங்குகிறது. நெய்வது போன்றது நூலாக்கம் என்பதும்,இலக்கியத்திற்கு உயிர் போன்றது கருத்து.உடல் போன்றது வடிவம் என்பதும், படைப்பவன் உணர்வினில்

வல்லவனாகவும், அழகுற வெளியிட அறிந்தவனாகவும் அமைய வேண்டும் என்பதும் சிறந்த திறனாய்வுச் சிந்தனைகளாக இன்று அறியப்படுகின்றன.

நூலாக்கத்தில் ஏற்படும் பத்துக் குற்றங்களைப்பற்றியும், பத்து அழகுகளைப் பற்றியும், நூலாக்கத்திற்குத் தேவையான உத்திகளைப் பற்றியும் பவணந்தியார் தொகுத்துக் கூறும் போது, நூலக்கத்திலுள்ள நுட்பமான வேலைப்பாடுகளை எந்த அளவிற்கு உணர்ந்து செயல்பட்டுள்ளனர் என்பதை அறியமுடிகிறது. உரையாசிரியர்கள் உரையெழுதும் போது, இவைகளைச் சுட்டிக் காட்டுகின்றனர் என்பதும் குறிக்கத்தக்க செய்தியாகும்.நன்னூலாரும் தொல்காப்பியரைப் போலவே இலக்கியத்தைப் பயனீட்டுக் கொள்கை அடிப்படையிலேயே அணுகி உள்ளார்.

”அறம் பொருளின்பம் வீடடை தனூற் பயனே” என்கிறார் நன்னூலார். எவ்வாறெல்லாம் படைப்பிற்குப் பொருள் கொள்ள வேண்டியது எவ்வாறெல்லாம் படைப்பிற்குப் பொருள் கொள்ள வேண்டியது வரும் என இலக்கண ஆசிரியர்கள் வகுத்துக் கூறுகின்ற பொருள் கோள்முறை திறனாய்வுச் சிந்தனையின் ஆழமான வெளியீடாகும். இன்றைக்கு வாசகர்களை மையப்படுத்திப் பேசுகின்ற ஏற்புநிலைத் திறனாய்வின் குணங்களை அப்பொருள்கோள் முறைச் சிந்தனையில் காணமுடிகிறது.

**அணியிலக்கணம்**

ஒருவர் பயன்படுத்தும் மொழியை, அழகியலோடு நெருக்கமாக இணைப்பது அடிப்படையில் உவமைதான் என்பதைத் தெளிந்து, தொல்காப்பியர் “உவமை“பற்றி ஓர் இயலில் விளக்கினார். இடைக் காலத்தில் வடமொழியிலுள்ள அலங்கார இலக்கணத்தோடு ஏற்பட்ட தொடர்பினால் தனியாகவே அணியிலக்கண நூல்கள் பல தோன்றின. வடமொழியில் எழுதப்பட்ட “காவிய தரிசனம்“ என்ற அணியிலக்கண நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டது. தண்டியலங்காரம் எனப்படும் அந்நூல் இடைக்கால தமிழ்த் திறனாய்வின் ஆழத்தையும் தமிழ்த்திறனாய்வின் வடமொழிச் சார்பையும் எடுத்துக்காட்டும் ஒன்றாக அமைந்து கிடக்கிறது. தமிழ்வழியான திறனாய்வை உருவாக்க முயல்கிற அனைவரும் பயில வேண்டிய அழகான நூலாகும் அது. மொழியைப் பயன்படுத்தும் வித்தைகளை எல்லாம் ஆய்ந்து, அவைகளுக்கிடையே உள்ள நுணுக்கமான வேறுபாடுகளைக் கணக்கில் கொண்டு அவைகளுக்குத் தனித்தனிப் பெயரிட்டு வகுத்துக் காட்டியிருக்கும் ஆற்றல் வியக்கத்தக்கவையாகும். “ஓர் அறிவியல் கல்வி போலப்“ படைப்பின் மேல் செயல்பட்டுள்ளார்கள்.

இலக்கியத்தில் அணியின் இடம்பற்றி இந்த அளவிற்கு விரிவாகத் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் இதற்கு முனபும் பின்பும் ஆய்வு நடத்தப்படவில்லை எனலாம். ஆனால் மு. வரதராசனார் சுட்டிக் காட்டுவது போல, இலக்கியத்தின் ஒரு கூறுதான் “அணி“ என்ற உண்மை மறக்கப்பட்டு, எல்லாமே அணிகளுக்குள் அடக்கம் என்ற அளவிற்குப் போய் தாங்கள் வகுத்துப் பெயரிட்ட விதிகளுக்குள்ளேயே வீழ்ந்து இக்காலத்திறனாய்வாளர்களும் பல படைப்பாளிகளும் இடர்ப்படுவராயினர் ஆனாலும் இடைக்கால மன்னராட்சிச் சமூகத்திற்கு ஏற்பத்

”தன்னிகரில்லாத் தலைவனைக்” கொண்டதாகக் காவியம் விளங்க வேண்டும் என்று தண்டியலங்காரம் வகுத்தளித்திருக்கிற காவியக் கூறுபாடுகள், ஆழமான ஆய்விற்கு இடம் அளிப்பவை ஆகும்.

**யாப்பிலக்கணம்**

சொல்ல நினைக்கும் பொருளைக் குறைவறச் சொல்லி முடிப் தற்கு யாப்பிலக்கணம் துணை செய்கிறது ”எழுத்து முதலா அண்டிய அடியில் குறித்த பொருளை முடிய நாட்டல் யாப்பென மொழிய யாய்யுறி புலவர்-என்ற தொல்காப்பியரின் கூற்று கவிதையில் சொற்களைக் கட்டுவதில் மேற்கொள்ள வேண்டிய கவனத்தை வலியுறுத்துகிறது. குறிப்பிட்ட கருத்தை, அக்கருத்திற்கு இசைவான ஓசை ஒழுங்கோடு சொற்களைக் கட்டும் போதுதான் வெளியீட்டுத் திறம் முழுமை அடைகிறது என்று தமிழ் இலக்கியத் திறனாய்வாளர்கள் கருதியதால், யாப்பு பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளனர்.தொல்காப்பியர் காலத்தில் மிக இறக்கமாகத் தூய்மையான ஓசை நயத்தோடு விளங்கிய பாக்கள், இடைக்காலத்தில் சூழலுக்கு ஏற்ப எளிமைப்படுத்தப்பட்டுள்ளன. மாற்றத்திற்கு உள்ளாகி உள்ளன. தூய்மையான செப்பலோசை வெண்பா கூட இந்த எளிமைக்கு உள்ளாகி உள்ளது இவ்வாறு காலத்தின் தேவைக்குத் தகுந்தவாறு. கவிதையின் யாப்பிலக்கணம் கூட மாற்றம் அடைந்து வந்திருக்கிறது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று இந்த மாற்றம் எந்த அளவிற்கு வந்திருக்கிறது என்றால், ”யாப்பிலக்கணம் பார்வையே வேண்டாம்” என்று புதுக்கவிதையாக்கத்தில் ஈடுபடுபவர்கள் கூறுகிற அளவிற்கு வந்திருக்கிறது. ஆனால் எண்பதுகளின் இறுதியில், சொற்களைக் குறிப்பிட்ட யாப்பில் கட்டிவிட்டால் அது கவிதைதான் என்று இடைக்காலத்தில் கருதியது எந்த அளவிற்குத் தவறோ அந்த அளவிற்குச் சொற்களைக் குறிப்பிட்ட ஒழுங்கில் கட்டுவதில் அதிகக் கவனம் செலுத்தத் தேவையில்லை. என்ற புதுக்கவிதைப் பார்வையும் தவறு தான் என்ற உண்மை உணரப்பட்டிருக்கிறது: தமிழ்த் திறனாய்வுச் சூழவில் யாப்பிலக்கணம் பற்றிக் கோட்பாட்டளவில் விரிவாக ஆராய்வதற்குப் பல்கலைக்கழக அளவில் கூட்டு முயற்சி எடுக்கப்படவேண்டும். அப்பொழுதுதான் இன்றைய திரைப்படப் பாடல்கள் வரை உள்ள அனைத்துத் தமிழ்க் கவிதைகளையும் தமிழ் வழிப்பட்ட சிந்தனை மரபில் விளக்க முடியும்.

**பொருளிலக்கணம்**

பொருளிலக்கணம் தமிழுக்கே உரிய ஒன்று எனலாம். இடைக் காலத்தில் தொல்காப்பியத்தைப் பின்பற்றிச் சிற்சில மாற்றங்களுடன் அவருடைய அகத்திணைக் கோட்பாடுகளும், புறத்திணைக் கோட்பாடுகளும் தனி வளர்ச்சி அடைந்தன். சங்க இலக்கியங்களுக்குத் திணை, துறை கட்டுவதற்கு இந்நூல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இடைக்காலத்தில் எழுந்த வடமொழி, தென்மொழி போராட்டத்தோடு இந்நூல்களின் தோற்றத்தை இணைத்து எண்ணிப் பார்த்தால்தான், இத்தகைய நூல்கள் அன்றைக்கு ஏத்த அளவிற்குத் தேவைப்பட்டன என்பதைப் புரிந்து கொள்ள இயலும்.

**பாட்டியல் நூல்கள்**

இடைக்காலத்தில் தோன்றிய சிற்றிலக்கியங்கள் எனப்படும் நூற்றுக்கணக்கான நூல்களையும் ஒழுங்குபடுத்தி, ஒவ்வொன்றிற்கும் விதிமுறை வகுத்தளித்த முயற்சியை அக்காலத் திறனாய்வு முறையாகச் சுட்டலாம். வடமொழியின் செல்வாக்கு இப்பாட்டியல் நூல்களில் தெளிவாகத் தெரிகிறது. இப் பாட்டியல் நூல்கள் ‘‘பொருத்தம்” ””நச்செழுத்து”, ஆகிய கோட்பாடுகளையும் தமிழில் செயற்கையாகப் புகுந்தித் தாழ்வுற்றன என்று கருதுகிறார் அ.சிதம்பரநாதன் செட்டியார்..மொத்தத்தில் இலக்கண ஆசிரியர்களின் முயற்சியை ஏற்கனவே சுட்டிக்காட்டியது போல ‘‘கோட்பாட்டு உருவாக்கத் திறனாய்வு” எனப் பெயரிடலாம்.

## II.படைப்பாளிகளின் திறனாய்வுக் குறிப்புகள்

எந்த ஒரு படைப்பாளியும், படைப்பில் அடைய வேண்டிய உச்ச நிலையை நோக்கிய தேடலில் ஈடுபடாமல் இருக்க இயலாது. அத்தகைய அவர்களின் தேடல்கள்,பிற படைப்பாளிகளைப் பற்றிப் பேசும் போது புலனாகின்றன. இவ்வாறு ஒரு படைப்பாளி, பிற படைப்பாளியைப் பற்றிக் கூறுகிற கூற்றுக்கள் இலக்கியம் பற்றிய ஆழமான கணிப்புக்களாக அமைந்து கிடக்கின்றன. எனவே அவைகளைத் தொகுப்பதற்கு இங்கே முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. ஆனால் தமிழிலக்கியம் கடல் போன்ற பரப்பை உடையது.எனவே அனைத்தும் படைப்புக்களிலும் வரும் இத்தகைய குறிப்புக்களைத் தனியான ஓர் ஆய்வுத் திட்டத்தின் கீழ்தான் தொகுக்க இயலும்.. தமிழ்ப் புலவர்களின் இலக்கியம் பற்றிய பார்வை எந்த அளவிற்கு ஆழமானவை என்பதை அவைகள் புலப்படுத்துகின்றன எனக் கருதலாம். இந்த வகையில் சங்க இலக்கியப் புலவர்கள் சிலரைப் பற்றிய பிற புலவர்களின் வரிகள் இங்கே குறிக்கத் தக்கனவாகும்

**“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி மாங்குடி மருதன்”**

**”செறுத்த செய்யுள் செய்செந் நாவின்**
**வெறுத்த கேள்வி விளங்குபுகழ் கபிலன்’’**

**“பொய்யா நாவிற் கபிலன்”**

**‘‘வாய் மொழிக் கபிலன்’.**

**“அம்சொல் நுண் தேர்ச்சிப் புலவர்”**

இவ்வரிகள் “புலவரின் விமரிசனத் திறனையும், மனம் நெகிழ்ந்த உணர்ச்சியையும் அருமையாகக் காட்டுகின்றன.” என்கிறார் ஏ. வி. சுப்பிரமணிய அய்யர். மேலும் செம்புலப் பெயல் நீரார்”, “”ஓரேர் உழவர்,””தேய்புரிப்பழங்கயிற்றினார்” என்றெல்லாம் புலவர்களின் பெயர்களை, அவர்கள் படைத்த வரிகளாலேயே வழங்கும் வழக்கு உருவாகியிருப்பதும், குறிஞ்சிக்குக் கபிலன், பாலைக்குப்

பாலை பாடிய பெருங்கடுங்கோ, மருதத்திற்கு மருதநில நாகனார் என வழங்கும் வழக்கு உருவாகியிருப்பதும், ""மற்ற கலைகள் எல்லாம் ஊமையாகக் கிடக்கும் போது திறனாய்வு ஒன்றுதான் வாய்திறந்து பேசுகிறது" என்ற நார்த்தராய் ப்ரையின் கூற்றை நினைவுப்படுத்துகின்றன.

**திருக்குறளும் நாலடியாரும்**

"நவில்தோறும் நூல் நயம் போலும்" என்ற குறள் மூலம் "ஒரு காலைக்கொருகால் மிகும் இன்பம்" தருகிற படைப்பே மிக உயர்ந்த படைப்பாக வள்ளுவர் கருதியிருக்கிறார் எனலாம். மேலும் இலக்கியத்திற்கான இன்பக் கோட்பாட்டையும் நீதிநூல் எழுதும் வள்ளுவர் புறக் கணிக்கவில்லை என்ற செய்தியையும் தெரிந்துகொள்ள முடிகிறது.மேலும் "குணம் நாடிக் குற்றம் நாடி யவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" என்ற குறளும், "மெய்ப்பொருள் காண்பதறிவு" என்று அறிவுக்கு வள்ளுவர் கொடுக்கும் விளக்கமும் திறனாய்வாளனுக்கு நல்ல வழிகாட்டிகளாக அமைந்துள்ளன எனலாம். வள்ளுவர் நடுநிலைமையதிகாரத்தில் கூறுவனவெல்லாம்" இலக்கிய ஆராய்ச்சிக்கு இன்று பொருந்துவனவாக உள்ளன" என்பார் மு. வரதராசனார் மேலும் "நுண்ணிய நூல் பல கற்பினும், மற்றுந்தன் உண்மை அறிவே மிகும்" என்ற குறள் மூலம், வள்ளுவர் படைப்பிற்கும் வாசகனுக்கும் இருக்கும் உறவில், வாசகனின் பங்கைப் பெரிதும் மதித்தார் எனலாம். இன்றைய அமைப்பியல் திறனாய்வு கருதுவது போல,படைப்பிற்கு வாசகன்தான் பொருள் "தருகிறான் என்ற சிந்தனை எனலாம். இன்றைய அமைப்பியல் திறனாய்வு கருதுவது போல் படைப்பிற்கு வாசகன்தான் பொருள் தருகிறான் என்ற சிந்தனையோடு இக் குறள் கருத்தை இணைத்துப் பார்க்க வழி இருக்கிறது எனக் கருதலாம்.

**நாலடியார்**

**"கல்வி கரையில கற்பவர் நாள்சில**

**மெல்ல நினைக்கின் பிணிபல-தெள்ளிதின்**

**ஆராய்ந் தமைவுடைய கற்பவே**

**நீரொழியப் பாலுண் குருகின் தெரிந்து"**

என்கிறது நாலடியார். வேத மறுப்பு மதங்களான சமண பௌத்த மதங்களின் தோற்றமானது. இந்திய சிந்தனையில் எண்ணத்திற்குள் அடங்காத பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. அவற்றுள் ஒன்று கணக்கற்ற நூல்களின் வருகை! பல்வேறுபட்ட கருத்துக்களின் மோதல்! இந்நிலையில் படிப்பவனுக்குள்ள சிக்கல் இவ்வண்ணமாக விளக்குகிறது. இந்நிலை இன்றைய தொழிற் சமூகத்தில் மிக அழகாக ஆழமாக இன்றைய வாசகனாலும் உணரப்படுகிறது. எனவே நீரை ஒழித்துப் பாலைப் பருகும் அன்னமாக ஒவ்வொருவனும் வளரத் திறனாய்வுப் புலமைத்தான் துணை நிற்கும் என்ற விழிப்புணர்வை நாலடியார் ஏற்படுத்த முயல்கிறது எனக் கருதலாம். மேலும் நூல்களை "அறிவு நூல்", ""உலக நூல்" என்று பிரித்துப் பேசும் பாங்கும்,"ஓலைக்

கணக்கர் ஒலியடங்கு புன் செக்கர்” என்று மாலைப்பொழுதைக் குறிக்க வரும் செய்தியும், அன்றைய திறனாய்வுப் பணியின் செயல்பாட்டைச் சுட்ட வல்லன எனலாம்.

## இடைக்கால இலக்கியங்கள்

திருவிளையாடற் புராணத்தில் வரும் “நக்கீர சம்வாதம்“ அல்லது ”தருமிக்குப் பொற்கிழி அளித்த கதை” கற்பனையாக, நாடகத் தன்மையோடு அமைக்கப்பட்டிருந்தாலும், இலக்கியத் திறனாய்வு பற்றிய செய்திகளை உள்ளடக்கியிருப்பதாகக் கருதலாம். பல க.கைலாசபதி “திறனாய்வின் மிக முற்பட்ட செயற்பாடு இக்கதையில் வெளிப்படுகிறது என்றும், திறனாய்வு. உணர்வுநலன் (Sensibility) ஆகிய இரண்டையும் இக்கதை சித்தரிக்கிறது என்றும் கருதுகிறார். இக்கதை மூலமாகக் கீழ்க்கண்ட திறனாய்வுச் செய்திகள் புலனாகின்றன எனக் கருதலாம்

1.திறனாய்வாளன், திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட படைப்பை ஒரு பருப்பொருளாக (Object) முன்னிறுத்தி அணுக வேண்டும்.

2.தன்விருப்பம் சார்ந்த உணர்வு மேலோங்கும் படிப்படைப்பை அணுகும்போது, உண்மைலிலிருந்து வெகுவாக நாம் விலகிச் செல்ல நேரிடும்.

3.திறனாய்வாளன், தான் ஆய்ந்து கண்ட உண்மையை விட மேலானதாக எதையும் கருதிவிடக் கூடாது.

4.திறனாய்வுப்பணி, பலருடைய ”தான்” எனும் உணர்வோடு உரசக்கூடியது. எனவேஇ உயிரையே உலுக்கும் பணி என்ற விழிப்புணர்வோடு செயல்பட வேண்டும்.

கம்பன் கோதாவரி ஆற்றை சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி என்று சித்தரிக்கும் போதும் கவிதைக்குத் தெளிவு இன்றியமையாதது எனப் பேசும் போதும் கம்பனின் இலக்கிய சிந்தனையை அடையாளம் காண முடிகிறது, மேலும் தனிப்பாடலொன்று வாக்கிற்கு அருணகிரி, கனிவிற்கு வாதவூரர், தாக்கிற்கு ஞானசம்பந்தர், நோக்கிற்கு நக்கீரர், நயத்திற்குச் சுந்தரனார். சொல்லுறுதிக்கு அப்பர் என்று வகுப்பது திறனாய்வுச் சிந்தனைகளின் செல்வாக்கைப் புலப்படுத்துகின்றன இதுபோலவே நம்பியாண்டவர் நம்பி ஞானசம்பந்தரை, “முத்தமிழாகரன்”, என்றும், அப்பரைக், ”கவியோகி” என்றும், சுந்தரரை, “மதுரகவி“ என்றும் சுட்டுவது எண்ணத் தக்கதாகும்.மேலும் சேக்கிழார், ““பக்திச்சுவை நனி சொட்டச் சொட்டப் யாடிய கவிவலவ” என்று பாராட்டப் பெறுவதும், ““திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்“ என்றும், திருவாசகத்தை வான்கலந்து, உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கிறது என்றும் வள்ளலார் சுட்டுவதும்இ சுந்தரர் தேவாரத்தைத் தான் படிக்கவில்லை. மாறாக ஊன் படிக்கிறது. உளம் படிக்கிறது. உயிர் படிக்கிறது. உயிருக்கு உயிரும் தான் படிக்கிறது என்று வள்ளலார் “கவிதை அனுபவம் பற்றிப் பேசுவதும் ஆழமான வாசிப்புத் தளத்தைச் சுட்டிக் காட்டுகின்றன.

இன்னும், விருத்தமெனும் ஒண்பாவிற்குக் கம்பன், வெண்பாவிற்குப் புகழேந்தி, கோவை உலா அத்தாதிக்கு ஓட்டக்கூத்தன். கலம்பகத்திற்கு இரட்டையர்கள், வசைபாடக் காளமேகம், கற்பனைக் களஞ்சியத்திற்குச் சிவப்பிரகாச சுவாமிகள், நைடதம் புலவர்க்கு ஔடதம், என்றெல்லாம் இடைக்காலத்தில் உருவாகியுள்ள மரபுகள் மூலம் புலவர்களும் இலக்கியங்களும் சாரம்மிகு மதிப்பீடுகளுக்கு உள்ளான செய்தியை அறிய முடிகிறது. மதக் கருத்துக்கள் மட்டுமே பாடுபொருளாக விளங்கிய ஒரு காலகட்டத்தில், வடிவத்தில் சாதித்த வல்லமையின் அடிப்படையில் செய்யப்பட்டிருப்பது வியக்கதக்கதாகும். அதனால்தான் குமரருருபரர்.

**“மலரவன் செய்வெற்றுடம்பு மாய்வனபோல்**

**மாயா புகழ்கொண்டு மற்றிவர் செய்யும் உடம்பு”**

என்று புலவர்கள் வடித்துக் காட்டும் ”வடிவத்தின்”நிலையான தன்மையைத் தன் காலத்திற்கு ஏற்ப அழகாக விளக்குகிறார்.

இடைக்காலத்தில் ஓட்டக்கூத்தர், கம்பர், புகழேந்தி, வில்லிபுத்தூரார், ஔவையார் ஆகிய புலவர்களுக்கிடையே நடந்ததாகக் கூறப்படும் ”இலக்கியச் சண்டைகளைத் தொகுத்து ஆராய்ந்து அவைகளில் காணப்படும் திறனாய்வுத் தன்மைகளை அடையாளம் காண வாய்ப்பிருக்கிறது. மேலும் தவறாகப் பாடும் புலவர்களை ஓட்டக் கூத்தன், பிள்ளைப் பாண்டியன் முதலிய புலவர்கள் எவ்வாறு தண்டித்தனர் என்பதைக் கூறும் தனிப்பாடலும் இலக்கியம் பற்றிய தேடலின் அன்றைய தன்மையைப் புலப்படுத்துவதாய்க் கருதலாம். இவ்வாறு தொகுத்தாராய நிறைய வாய்ப்புகள் இருக்கின்றன.

## III..உரையாசிரியர்களின் திறனாய்வு

இடைக்காலத்தில் உரைகளில் அமைந்து கிடக்கும் திறனாய்வுக் கூறுபாடுகளை விரிவாக ஆராய்வதற்கு இருக்கிறது. ஆனாலும் இவ்வுரைகளிலுள்ள அடிப்படையான சில திறனாய்வுக் கூறுபாடுகளையும், அவற்றிற்கான காரணங்களையும் ஆராய்வதற்கு மட்டும் இங்கே முயற்சி எடுக்கப்படுகின்றது.

### உரைகளும் சமூகத் தேவைகளும்

படைப்பாளிகளாக விளங்கி, இலக்கிய வரலாற்றில் நிலையான இடம் பெற்றுள்ள படைப்பாளிகள் போலவே, பல உரையாசிரியர்கள் உரை எழுதுவதன் மூலமாக நிலையான இடத்தைப் பெற்றுள்ளனர். இளம்பூரணர், நச்சினார்க்கினியர், அடியார்க்குநல்லார், பரிமேலழகர் முதலிய உரைகாரர்களின் புலமையும் உணர்வு நலனும் உரைகளின் மூலமாக வெளிப்பட்டு நிலையான இடத்தைப் பெற்றுள்ளன. இது ஓர் இலக்கிய இயக்கத்தின் விளைவே என்று கருதப்படுகின்றது. இயக்கமாக இயங்காத எதுவும். கால வெள்ளத்தின் முன் அடையாளம் தெரியாமல் போய் விடும் என்பது வரலாற்று உண்மையாகும். மேலும்.

**“இவை எழுதப் பெற்ற முறையும். இவைகளை ஆக்கிய புலவரின் அறிவையும் போராற்றலையும், கவனித்தால்,இவ்வுரை நூல்கள் ஒரு வலுவுள்ள இலக்கிய இயக்கத்தின் விளைவாக தோன்றின என்று கொள்ளலாம். இந்த இயக்கம் சுமார் கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிச் சுமார் மூன்று நூற்றாண்டுகள் வரைத் தமிழ் இலககிய உலகில் சக்தியுடன் இயங்கியது என்று கருதலாம்.”**

என்பர் ஏ.வி.சுப்பிரமணிய அய்யர்.வையாபுரிப்பிள்ளையும் இதை ஒரு மீட்சி இயக்கம்“ என்றே விளக்குகிறார். வடமொழிச்செல்வாக்கினால் தமிழும், தமிழ் இலக்கிய மரபும் புறக்கணிக்கப்பட்ட நிலையில், அவைகளை மீண்டும் நிலை நாட்ட முற்சிப்பதே இவ்வியக்கத்தின் அடிப்படை நோக்கமாக அமைந்திருக்க வேண்டும் இந்த அடிப்படையே இவ்வுரைகளின் தன்மையை உருவாக்கும் சக்தியாக விளங்கியிருக்க வேண்டும் வி .செல்வநாயகம் கூற்று இந்த இடத்தில் சுட்டத்தக்கதாகும்:

**”முஸ்லீம்களின் தென்னகம் படையெடுப்பினை அடுத்துப் பழைய கலை இலக்கியங்களைப் பேண் வேண்டும் என்கிற முனைப்பு தலை தூக்கிய நிலையில் சென்ற காலத்தின் செவ்வியல் நிலைஇலக்கியங்களை (டயளௌை) சிறிதும் குன்றாது சான்றோர் கூறியவாறு விளக்குவதும், களிசுவை நுகர்வும் ... வரலாற்றுத் தேவையாக இருந்திருக்க வேண்டும். மேலும் வடமொழிச் செல்வாக்கினால் தமிழிலக்கிய வளர்ச்சி பாதிக்கப்படுவதைத் தடுப்பதும் உரையாசிரியர்களின் முக்கிய நோக்கமாக இருந்திருக்க வேண்டும்”**

உரைகாரர்களுக்கு மேற்கூறிய நிலையில் சமூகக் கடமை இருந்ததால் தான், அவர்கள் தங்கள் உரை வலியுறுத்தியுள்ளதாகக் கருதுகிறார்கள்- மேற்கூறிய விளக்கங்கள் மூலமாக உரையாசிரியர்கள் இத்தகைய சமூகக்கடமையைச் செய்வனே செய்து முடித்திருப்பதால் தான் தமிழ் இலக்கிய மரபில் நிலையான இடத்தைப் பெற்றுள்ளனர். என்பதையும் இன்றுவரைத் தமிழர் தம் கருத்துலகில் செல்வாக்கு செலுத்துகின்றனர் என்பதையும் குறிப்பிடலாம்.

**இடைக்கால உரைகளின் தன்மைகள்**

இவ்வுரைகள் அடிப்படையில் தன் சமூகத் தேவைக்கு ஏற்ப இலக்கியத்தை விளக்குவதாகவே அமைந்துள்ளன. எனவே தொல்காப்பியர் முதலிய இலக்கண ஆசிரியர்களின் முயற்சியைக் ”கோட்பாட்டுத் திறனாய்வு என சுட்டுவது போல, இவ்வுரைகாரர்களின் முயற்சியை “விளக்கமுறைத் திறனாய்வு“ எனச் சுட்டலாம். அதற்கு ஏற்பவே இவ்வுரைகளின் தன்மைகள் அமைந்து கிடக்கின்றன.

1.“தமிழைக் காப்பாற்றுதல்“என்ற தளத்தில் செயல்பட்டுள்ளதால், பொருத்தமான தன்மையைச் சுட்டிச் செல்கின்றன.

**“இறப்ப வருவழி, இனிவந்தன செய்தாயினும் உய்க வென்னும் முறைமையை உடம்பினது நிலையின்மையையும்,தூக்கி அவை செய்யற்க வென்பதாம்”என்பார் பரிமேலழகர்,**

2. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் மரபை வலியுறுத்துகின்றன.

**”ஒன்றன் வழியே அன்றியுந், தாந்தாம் அறிந்தவாற்றாலும் நூல் செய்யப் பெறாரோவெனின் அது மரபன்று”**

என்பார் பேராசிரியர்.

3.படைப்பில் குறை கண்டவிடத்தும் வழுவமைதி, மிகை, உரையிற் கோடல் முதலிய உத்திகளால் படைப்பிற்குக் குறைவராமல் விளக்குகின்றன. அதே நேரத்தில் நயமாகக் குறையைச் சுட்டியும் காட்டி விடுகின்றன.

**”நண்டிற்கு மூக்கு உண்டோ வெனில், அ.்.து ஆசிரியன் கூறலால் உண்டு என்பது பெற்றாம்”.**

என்பார் உரைகாரர்.

4.மாணவர்களுக்கு ஆசிரியர் விளக்குவது போன்ற நடையைக் கொண்டு விளங்கிறது.

**“குடிமையோடு பிறப்பிடை வேற்றுமை என்னை எனின், பிறப்பு என்பது குடிப்பிறத்தல் அதற்குத் தக்க பழக்கம் குடிமை எனப்படும். குடிப் பிறத்தாரது தன்மையைக் குடிமை என்றார் என்பது’’** இது பேராசிரியரீன் நடை.

5.சொற்களுக்குள் பொருள் விளக்கும் தன்மை.

**“நிறைமொழி’’ என்பது அருளிக் கூறினும், வெகுண்டு கூறினும் அவ்வப் பயன்களைப் பயத்தே விடும் மொழி’’**என எழுதுகிறார் பரிமேலழகர்

6.மேற்கோள் கூறி விளக்கும் இயல்பு.

**”ஈண்டுக் குறைத்தலென்றது முகத்தலை. அது “கடல் குறை படுத்து நீர் கல்குறை படவெறிந்து” (பரிபாடல் 20) என்பதனாலும் அறிக’’**என்பார் பரிமேலழகர்

7.இலக்கணக் குறிப்பு வழங்கும் பண்பு.

**“விசும்பு ஆகுபெயர், மற்று வினைமாற்றின்கண் வந்தது. இழிவு சிறப்பும்மை விகாரத்தாற் தொக்கது”** என விளக்குவார் பரிமேழலகர்.

8.தன் காலத்தில் செல்வாக்குடன் விளங்கிய வடமொழியுடன் ஒப்பிட்டு விளக்குதல்.

**"பெண் பாலாக்கியது வடமொழி முறைமையைப் பற்றி"**

9.பிற உரையை, மிகவும் நயம்பட மறுத்துரைக்கின்றன. திணைப்பெயர்கள், நிலத்திற்குரிய முல்லை முதலிய பூக்களால் பெயர் பெற்றன இளம்பூரணர். அக் கருத்தினை நச்சினார்க்கினியர் கீழ்க்கண்டவாறு மறுக்கிறார்.

> **"இனி இவ்வாறன்றி முல்லை முதலிய பூவாற் பெயர் பெற்றன இவ்வொழுக்கங்களெனின், அவ்வத் நிலங்கட்கு ஏனைப் பூக்களும் உரியவாகலின் அவற்றால் பெயர் கூறலும் உரிய எனக் கடவுவார்க்கு விடையின்மை உணர்க"** என்பர்

10.சரியான மூலப்பாடத்தைத் தெளிந்து தேர்வதற்கு முயல்கின்றன.இன்றைய திறனாய்வாளர்களுக்கு மூலப்பாடத்தை பலதடவை படிப்பதற்குப் பொறுமை இல்லை என்ற குற்றச்சாட்டை இந்த இடத்தில் எண்ணிப் பார்ப்பது நல்லது.

> **"கோடாளென்பது பாடமாயின் மணக்குடவர் அவ்வாறு கொள்வர் கருவியின் தொழில் வினைமுதன் மேனின்றதாகவுரை"** என்பார் பரிமேலழகர்.

இவ்வாறு உரையாசிரியர்களின் உரையின் தன்மை, விளக்க முறைத் திறனாய்வாகத் தன் காலத் தேவைக்கு ஏற்ப அமைத்து இருக்கிறது எனலாம்.

சிவஞான முனிவர் போன்ற பிற்கால உரையாசிரியர்கள் தங்கள் கருத்து வேறுபாடுகளைக் கடுமையான முறையில் வெளிப்படுத்தி உள்ளதையும் காணமுடிகிறது. நச்சினார்க்கினியரை பிடித்ததைச் சாதிப்போம் என்றும் செருக்கால் மயங்குபவர்" என்றும், "இவர் கூறியவற்றுள் குற்றங்களை விரிக்கப்புகின், விளையாட்டு மகளிர் இட்ட மணற் சோற்றில் கல் ஆராயப் புகுதலோடு ஒக்கும்" என்றும் கடுமையாக எழுதுகிறார்.மேலும் சிவஞான முனிவரிடம் "அழிப்புமுறைத் திறனாய்வின் அடையாளங்கள், தென்படுகின்றன. "கம்பராமாயண முதற் செய்யுள் சங்கோத்ச விருத்தி" என்ற நூலில் "நாடிய பொருள்" எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடலில் 12 குற்றங்கள் இருக்கின்றன என்று வலிந்து பட்டியல் போடுவதும், பிறகு அவரே அவைகள் தவறற்றவைதான் என்று பதில் கூறுவதும், திறனாய்வாளன் எவ்வாறு இருக்கக்கூடாது என்பதற்கு எடுத்துக் காட்டாக விளங்குகின்றன. "புலமை மிக்கவரைப் புலமை தெரிதல் புலமிக்கவர்க்கே புலனாம்" என்பது உண்மைதான் என்றாலும், திறனாய்வாளன் தன் புலமையைக் காட்டி வாசகனை மிரட்டுகிற போக்கு இலக்கியத்திற்குத் துணை செய்யாது.

மேலும் நாலாயிரத்திவ்விய பிரபந்தத்திற்குப் பக்திச்சுவை, அடிப்படையில் எழுதப்பட்டுள்ள உரைகளையும் விரிவாக ஆராய வாய்ப்பு இருக்கிறது. அவ்வுரைகளும் விளக்குவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன எனலாம்.

## IV.திருவள்ளுவமாலையும் திறனாய்வும்

திருவள்ளுவமாலையின் தோற்றம், காலம், அதன் ஆசிரியர்கள் பற்றிப் பல கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன. திருவள்ளுவர் திருக்குறளைப் பாண்டியன் அவையில் அரங்கேற்றச் செல்லும்போது "சங்கப்பலகையில் இருந்த புலவர்கள் வள்ளுவரின் குலம் குறித்து தகைத்தனர் எனவும் உடனே சங்கப் பலகைக் குறளை சுருங்கியதால் "புலவர்கள் அனைவரும் பொற்றாமரைக் குளத்தினுள் வீழ்ந்தனர். உடனே தவறுணர்ந்து நூல் நயம் கேட்டு வியந்து ஆளுக்கொரு வெண்பா பாடினர். அவ்வெண்பாக்களின் தொகுப்பே "திருவள்ளுவ மாலை" எனவும் ஒரு கதை நிலவுகிறது. இக் கதையைப் பற்றி இரா இராகவய்யங்கார் இவ்வாறு எழுதுகிறார்.

> **"இக்கதை ஒரு பொய்யைக் கட்டிப் பேசியதாகக் கூற இயலாது. இதனால் திருக்குறள் அரங்கேறியது பாண்டியன் அவையகத்தென்றும் ஆண்டுப் புலவரும் உடனிருந்து கேட்டனரென்றும் கேட்டார் பலர் பாயிரம் சொற்றார் என்றும் தெரியலாகும்."**

இக்கதை இடைக்காலத்துக்கே உரிய தெய்வத்தன்மையோடு கூறப்பட்டிருந்தாலும் சில உண்மைகளையும் கொண்டு விளங்குகிறது எனலாம். எல்லா நூல்களும் திறனாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இலக்கிய உலகில் இயல்பாகவே ஏற்படும் பொறாமை உணர்வினால் விரும்பத்தகாத நிகழ்வுகள் அன்றும் நிகழ்ந்துள்ளன. ஆனாலும் நூலின் இலக்கியத்திறன் எல்லாவற்றையும் வென்று நிலை பெறுகிறது. ஆகிய உண்மைகளை இக்கதை வெளிப்படுத்துகிறது.

டி.வி சதாசிவ பண்டாரத்தார். வ.உ.சிதம்பரம்பிள்ளை முதலியோர் இப்பாடல்கள் பிற்காலப் புலவர்களால் இயற்றப்பட்டவை எனக் கருதுகின்றனர். ந எம். சீனிவாச ஐயங்கார் இப்பாடல்கள் அனைத்தையும் ஒருவரே கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றியிருக்க வேண்டும் என்கின்றார். ஏ.வி.சுப்பிரமணிய அய்யர் சங்ககாலப் புலவர்களால் பாடப்பட்டு, ஒன்பதாம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டுத் திருவள்ளுவமாலை எனப் பெயரிடப்பட்டிருக்கலாம் எனக் கருதுகிறார். ஆனால் இடைக்காலத்தில் தோன்றிய மீட்பியக்கத்தின் விளைவாக "உரைகாரர்கள்" உருவானது போலத் "திருவள்ளுவமாலையும்" அந்த மீட்பியக்கத்தின் விளைவே எனக் கருதலாம். இந்த நூற்றாண்டின் தொடக்கதில் தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்தினர், திருக்குறளைப் பரப்புவதற்கு எடுத்துக் கொண்ட முயற்சியைத் திருவள்ளுவமாலையிலும் காணமுடிகிறது.திருவள்ளுவ மாலையைத் திறனாய்வு நூலென்று கூறியவர் வி.சுப்பிரமணிய அய்யராவார்."பண்டைத் தமிழ் இலக்கியத்தில் காணப்பெறும் ஒரே விமரிசன ரத்தினமாலைதான் திருவள்ளுவமாலை'' (வி.சுப்பிரமணியஐயர்)

மேலும் திருஞானசம்பந்தர் மீது நம்பியாண்டவர் நம்பி பாடிய பாடல்கள், நம்மாழ்வார் மீது கம்பர் இயற்றியதாகக் கருதப்படும். சடகோபரந்தாதி, சைவசமயக் குரவர் மீது சிவப்பிரகாச சுவாமிகள் பல்வேறு செய்த "நால்வர் நான்மணிமாலை" முதலிய நூல்கள் சமய நூல்களாகவே

அமைந்துவிட, திருவள்ளுவமாலைதான் நயங்களுடனும், இலக்கியச் சிறப்புக்களையே நோக்கிச் செய்த விமரிசனப் பண்புடனும்“ விளங்குவதாக எ.வி.சு. கருதுகிறார்.

திருவள்ளுவமாலையின் மூலம் “திருக்குறள் வரலாற்றில் ஆரிய முத்திரையைப் பதிக்கவும், திருக்குறளை ஆரிய சொத்து என உரிமை கொள்ளவுமான முயற்சிகள் நடந்திருக்கின்றன“ எனக்கருதுகிறார் தி சு. சத்தியம் இதற்குக் காரணம் ஏறத்தாழ பத்து வெண்பாக்கள் வடமொழி வேதத்தோடு திருக்குறளை ஒப்பிட்டுப்பாடுகின்றன எங்கும் வடமொழியின் செல்வாக்கு நிறைந்த சூழலில் பல வெண்பாக்கள் திருக்குறள் வேதத்தில் இருந்தே பிறந்தது எனப்பாடுகின்றன. திருக்குறள் வேதத்தை விட உயர்ந்தது. வேதத்திற்கு ஈடானது. என்ற கருத்துக்களும் சில வெண்பாக்களில் அமைந்துள்ளன. இவ்வாறு திருக்குறள் ஒப்பிட்டுத் திறனாய்விற்கு உட்பட்டிருக்கிறது என்றாலும், பெரும்பாலான வெண்பாக்கள் பாராட்டுமுறைத் திறனாய்வாகத்தான். அமைந்துள்ளன. சில வெண்பாக்கள் வியப்பு முறைத் திறனாய்வு என்று கூறும் அளவிற்குச் சென்றுள்ளன.

“திறனாய்வாளன் என்பவனும் மற்றவர்களைப் போல சமூக வரலாற்று விதிகளுக்குள் அடங்குபவனே. அவைகளிலிருந்து அவன் விலகி நின்றுவிட முடியாது“ என்பார் கிராகாம் கூப் அந்த அடிப்படையில் “திருவள்ளுவ மாலை“ எழுதிய புலவர்களை அணுகினால் அவர்களது அந்த வெண்பாக்கள் நல்ல திறனாய்வுக் கூறுகளைக் கொண்டுதான் விளங்குகின்றன எனக் கொள்ள வாய்ப்பிருக்கிறது எனலாம்.

## V.வேறுசில திறனாய்வுக் குறிப்புகள் & இலக்கிய அமைப்பு

- **கலித் தொகையில்**.

‘புதுமொழி கூட்டுண்ணும் புரிசை” என்று பாடல் அடி வருகின்றது. இதுபோல் புதிதாக வரும் இலக்கியத்தைப் பற்றிப் பேசுவதற்கும் சுவைப்பதற்கும் “ஓர் அமைப்பு“ இருந்து வந்துள்ளதைக் குறிக்கும் பலவரிகள் சங்க இலக்கியங்களில் காணக் கிடக்கின்றன.

”தீன் மாடக் கூடலார் புலநாவிற்

பிறந்த சொல்புதிது உண்ணும் பொழுது’’(கலி)

‘‘நிலந்தரு நெடியோன்’’(-மதுரைக்காஞ்சி-761)

அமைப்பு அரசனின் அவைக்களத்தோடு இணைந்து செயல்பட்டது. மாங்குடி மருதனின் பாடலொன்று வாய்ப்பளிக்கின்றது.

“ஓங்கிய சிறப்பின் உயர்ந்த வேள்வி’’

‘‘உலகமொடு நிலைஇய பலர்புகழ் புலவர்”

இடைக்காலத்திலும் திறனாய்வு செயல்பட்டிருப்பதை அறிய நானூற்று எழுபதில் “வச்சிரநந்தி“ என்பார் தலைமையில் “திராவிட என்று அமைப்பை நடத்தியுள்ளனர். சீனிவாச அய்யங்கார். இச்சங்கம் சமூகப்பணியும், இலக்கியப் பணியும் ஆற்றி வந்திருக்க வேண்டும்’’ எனக் கருதுகிறார்.

❖ **அரங்கேற்றம்**

தொல்காப்பிய அரங்கேற்றம் அதங்கோட்டாசான் முன், பாண்டியன் அவைக் களத்தில் அரங்கேறியுள்ளது. பட்டினப்பாலை அரங்கேறிய மண்டபம் சோழநாட்டில் இருந்திருக்கிறது என்பதைத் திருவெள்ளறை தெரிவிக்கிறது. இந்த அரங்குகள், இன்றைக்கு இருக்கும் ““தணிக்கைக் குழு போல் இயங்கியது” என்பர் மாணிக்கம். வி.நா. மருதாசலக் கவுண்டர் இவ்வாறு எழுதுகிறார்.

> **“முற்காலத்தில் செய்யுள் நூல்களை (அரங்கேற்றப்படும்) மதிப்பீடு செய்யும் வழக்கம் இருந்து வந்தது. மதிப்பீடு என்பது நல்லீசைப் புலவர்கள், அவைக்கு வரும் நூல்களை நுணுகி ஆராய்ந்து அவற்றின் பொருட்செவ்விகளைத் தம் அறிவென்னும் துலாக் கோயில் மதிப்பிட்டனர்..’’**

இவ்வரங்கேற்றத்தின் வேலைப்பாடுகள் எவ்வாறு அமைத்து கிடந்தன என்று திட்டவட்டமாக அறிய வாய்ப்புண்டு. மேலும்அறிவதற்கு இவ்வரங்கேற்றத்தின் நடைமுறைகள் எழுதப்பட்டுக் காப்பாற்றி வைக்கப்பட்டிருந்தால், அக்காலத் திறனாய்வு விளங்கும் என்கிறார் சுப்பிரமணியம்.

❖ **தொகுப்புக் கலை**

வரலாற்றில் தொகுப்புக் கலைக்குச் சிறந்த இடமுண்டு. “பாடல்களைத் தேர்ந்தெடுப்பதே திறனாய்வாளரின் முதல் என்பார் டி.எசு.இலியட்.கார்டனர் போகிற போக்கில் சிறு மோப்பத்தினாலேயே அடையாளம் கண்டு கொள்கிற செறிந்த திறனாய்வு மனப்பான்மை இல்லாமல் இத்தொகுப்பு பணி இவ்வளவு சிறப்பாக ஐயமே.“மேல்கணக்கு, என்று சில விதிகளைத் தழுவிப் பாகுபாடு செய்திருப்பது விமரிசனப் பண்பை எடுத்துக்காட்டுகிறது”.என்பார் ஏ.வி.சு. எட்டுத்தொகையுப் பத்துப்பாட்டும் இலக்கியக் கொள்கைகளின் அடிப்படையிலேயே தொகுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும், திரு ““சமய உணர்ச்சியும், இலக்கியக் ஆர்வமும் ஒருங்கே கலந்த இயக்கத்தின் விளைவாகவே தொகுக்கப்பட வேண்டும் எனவும் கருதுகிறார்.

இவ்வாறு தொகுக்கிற பணி இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ளது. சிவப்பிரகாசத் தனிப்பாடல் திரட்டு, பன்னூல்திரட்டு என்று பிற்காலத்திலும் தொகுப்புப்பணி தொடர்ந்துள்ளது. நூற்றாண்டிலும், பாரதியார் இன் கவித்திரட்டு, செஞ்சொற்கவிக் கோவை, கவிதைக்களஞ்சியம் தொடர்ந்துள்ளது. “தொகுப்புக் கலை“ தமிழ்த் திறனாய்வுக் கலையின் கூறாகக் விரிவாக விளக்குவதற்கு இடம் இருக்கிறது எனக் கொள்ளலாம்.

❖ புலவர் வரலாறு

இடைக்காலத்தில் புலவர்களின் வரலாற்றை எழுத எடுத்திருப்பதைச் சிறப்பாக வரலாற்றை எழுதியுள்ள டாக்டர் சான்சன் போன்றோர், புலவர்களின் வரலாற்றை இவர்கள் திறனாய்ந்து தந்துவிடவில்லை என்றாலும், அன்றைய சூழலில் அம்முயற்சி குறிப்பிட்டுப் பேசப்பட வேண்டிய ஒன்றாகும் என்கின்றனர்.அப்பர்.நம்மாழ்வாரைப் பற்றி எழுதியதாகக் கூறப்படும். சடகோபர் அந்தாதி, உமாபதி சிவாச்சாரியார் எழுதியுள்ள சேக்கிழார் புராணம், சிவப்பிரகாச சுவாமிகளின் நான்மணிமாலை முதலியன தொண்டர்கள் என்ற அடிப்படையில் புலவர்களின் வரலாற்றைக் கூறுகின்றன. தமிழ்ப்புலவர்களின் வரலாறு கூறும் நோக்கத்துடனேயே தோன்றிய படிக்காசுப் புலவரின் “தொண்டை மண்டலச் சதகம்“. “சதகம் என்ற சிற்றிலக்கியத்திற்கு ஏற்பக் கற்பனை நயத்துடன் புலவர்களின் வரலாற்றைக் கூறுகின்றது. இதைத் தொடர்ந்து தோன்றிய சோழமண்டிலச் சதகங்கள், கொங்கு மண்டிலச் சதகங்கள் முதலிய நூல்கள் புலவர்களின் வரலாற்றைச் சிற்சில நிகழ்ச்சிகளுடன் கூறுகின்றன.

பதினெட்டாம் நூற்றாண்டில் தோன்றிய ”தமிழ் நாவலர் சரிதை” 51-புலவர்களின் வாழ்வில் நடந்த சில நிகழ்ச்சிகளைக் கூறிச் செல்கிறது. ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை கூறுவது போல, ”பாட்டுக்களைப்பாட நேர்ந்த சந்தர்ப்பத்தோடு” தொகுத்திருப்பதைத் தனித்துக் கூற வேண்டும். மேலும் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் ‘‘புலவர் வரலாறு“, வீராசாமிச் செட்டியாரின் ”விநோதமஞ்சரி’, ஆ. சதாசிவம் பிள்ளையின் “பாவலர் சரித்திர தீபம்” முதலிய நூல்கள் இந்த வரிசையில் குறிப்பிடத்தக்கனவாகும். புலவர்களைப் பற்றிய இந்நூல்கள் தமிழ்த் திறனாய்வுப் பணியின் தடங்களாகக் காணக்கிடக்கின்றன. இன்றையத் திறனாய்வுப் புலமையோடு இத்தகைய நூல்களைக் காண்பதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன.

❖ அருட்பா - மருட்பா போர்

ஆறுமுக நாவலருக்கும் (1823-1874) வள்ளலாருக்கும் (1823 1879) நடந்த “அருட்பா“ தொடர்பான போராட்டத்தைச் செந்தில் நாதன், அந்தனிஜான் ஆகியோர். தமிழர் தம் திறனாய்வுக் கூறாகக் கொள்கின்றனர். இப் போராட்டம் சமயப் பற்று சார்ந்தது. என்றாலும் வள்ளலாரின் பாடல்களைப் பற்றியது என்பதால், திறனாய்வாகப் பார்ப்பதில் தவறில்லை எனலாம். ஆறுமுக நாவலர் சார்பாகக் கதிர்வேற் பிள்ளை “மருட்பா“ என்ற நூலையும், வள்ளலார் சார்பாக மறைமலையடிகள் அருட்பா ஆய்வுரை என்ற நூலையும் வெளியிட்டுள்ளனர். அடிகளும் கதிர்வேற் பிள்ளையும் நல்கியது சென்னை, திருச்சி, காஞ்சி, ஆகிய இடங்களில் கூட்டம் நடத்தி வாக்குவாதம் செய்தனர். மத அடிப்படையிலான திறனாய்வாக இவைகளை அடையாளம் கண்டு, தமிழ்த்திறனாய்வுகாலத்தின் ஒருகூறாக இத்தகைய போக்கு அமைந்து கிடக்கும் பாங்கை விளக்க நிறைய இடம் இருக்கிறது.

# இக்காலத் திறனாய்வு

ஐரோப்பியர் ஆட்சியினால் தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல், பொருளியல் மாற்றங்கள், ஆண்டாண்டு காலமாக அசைவின்றிக் கிடந்த தமிழ்ச் சிற்றூர்கள் வரைக்கும் பெரிய பாதிப்பை ஏற்படுத்தின. தொழிற்சாலைகளின் தோற்றம் சிற்றூர் மக்களை இடம் பெயர வைத்தது. தோட்டத்தொழில்களின் வளர்ச்சி புதுப்புதுஉலகைத் திறந்து விட்டது. தொடர்புக்கருவிகளின் வருகை, பலப்பல உலகச் செய்திகளை அறிமுகப்படுத்தியது. எல்லோரும் கல்விக்கற்றுக் கொள்ளலாம் என்ற ஆங்கிலக் கல்வி முறை, தமிழ்ச்சமூகக் கட்டுமானத்தை அசைத்தது. மதம் பரப்பவும், தமிழ்ச்சமூகத்தின் உளவியல் பண்பை ஆராய்ந்து அதிகார வர்க்கத்திற்குத் துணை செய்யவும் ஈடுபட்ட கிறித்துவ மதக்குருமார்களின் தியாகம் செறிந்த வாழ்க்கை நெறி சிதைந்து கிடந்த தமிழர்தம் வாழ்க்கையில் பெரும் பெரும்கனவுகள் மலர வழி செய்தது. இத்துடன் “தேசியம்“ என்கிற முதலாளித்துவக்கோட்பாடும் பெரும் வீச்சுடன் கிளம்பித் தமிழர் தம் வாழ்நெறியை நம்பிக்கைத் திசையில் வேகமாகச் செலுத்தியது. இம் மாற்றங்கள் ஒரு சமூகத்தின் சாரமாக விளங்கும் இலக்கியத்திலும் வெளிப்பட்டன. ஆங்கிலக்கல்வியும், மதக்குருமார்களின் இலக்கிய இலக்கண ஆய்வுகளும், அச்சகத் தொழில் வளர்ச்சியும், பழம்பெரும் தமிழ்நூல்களின் அச்சேற்றமும் தமிழர்தம் இரண்டாவது மறுமலர்ச்சி இயக்கத்தைத் தோற்றுவித்தன எனலாம். எந்த ஒரு மறுமலர்ச்சி இயக்கத்திற்கும்அடிப்படைக்கோட்பாடாக அமையும் ”தன் மேம்பாட்டுக் கொள்கை” காரணமாக, தமிழர்தம் பெருமையை ஆங்கிலத்திலும் தமிழிலும் பலர் எழுதத்தொடங்கினர். இவர்களின் எழுத்திற்கு ஆங்கிலக்கல்வி துணை செய்தது, இவ்வாறு தன் மேம்பாட்டுக் கொள்கை அடிப்படையில், எழுத்துக்கள் தோன்றத் தொடங்கியதால், இலக்கியத்திறனாய்விற்கு அடிப்படைத் தேவையான இலக்கியவரலாற்று நூல்கள், பழம்பெரும் நூல்களின் காலத்தைக் கணிக்கும் நூல்கள் எல்லாம் வரத்தொடங்கின. ஆங்கில இலக்கியத்தில் பெருகிக் கிடந்த திறனாய்வு நூல்களும் அறிமுகமாயின. இவ்வாறு தமிழில் இக்காலத் திறனாய்வு தோன்றி வளர்வதற்கான சூழல் அமைந்தது.

தமிழில் இக்காலத் திறனாய்வு வளர வாய்ப்பாக அமைந்த சூழல்களாக மேலும் சிலவற்றைச்சுட்டலாம். ஆங்கிலக் கல்வி காரணமாக தோன்றிய சிறுகதை, புதினம் ஆகிய புத்திலக்கியங்களைத், தமிழ்ச்சூழலில் நிலைநாட்டுவதற்காகவும் பரப்புவதற்காகவும், இப்புத்திலக்கியங்களைப் பற்றி நிறைய பேச வேண்டிய சூழல் ஏற்பட்டது. தம் மேம்பாட்டுகொள்கையின்” வேகமான வீச்சில் தன்னை இழந்த இலக்கியப்புலவர்கள் பலரின் மேலாண்மை நிலவியசூழலை எதிர்த்துப் புத்திலக்கியங்களை நிலைநாட்ட வேண்டிய நெருக்கடிதான். இக்காலத் திறனாய்வு வளர்வதற்குஉரமாக அமைந்தது. மேலும் இப்புத்திலக்கியங்கள், பத்திரிக்கையோடும், பத்திரிக்கைத் தொழிலோடும் புகழோடும் மிக நெருங்கிய உறவுடையது ஆகையால், இப்படைப்பாளிகளுக்கிடையே ஏற்பட்ட உராய்வுகளினாலும்

உறவுகளினாலும் இக்காலத்திறனாய்வுதான், வளர்வதற்கான வெளிச்சத்தைப் பெற்றுக் கொண்டது என்றும் கூற வேண்டும்.

மேலும் பல்கலைக்கழகப்பாடத்திட்டத்தில் ”தமிழ் இலக்கியங்கள்“ இடம் பெற்றதும்.தமிழ்த் திறனாய்வு வளர வாய்ப்பாயிற்று எனலாம். எல்லா நாடுகளிலுமே பாடத்திட்டத்திற்கும் திறனாய்வு வளர்ச்சிக்கும் நெருங்கிய உறவு இருந்து வந்திருப்பதைத் திறனாய்வாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர். நாட்டுப்புற இயல், இதழியல் பற்றிய நூல்கள் பல்கலைக்கழகப்பாடத் திட்டத்தில் இடம் பெற்ற பிறகுதான் அதிகமாக வெளிவந்துள்ளன என்ற உண்மையை இந்த இடத்தில் எண்ணிப் பார்க்கலாம்.

இவ்வாறு இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வளர்ச்சி பெறத்தொடங்கிய இக்காலத் தமிழ்த்திறனாய்வை விளக்குவதற்காகக் கீழ்க்கண்ட பிரிவு மேற்கொள்ளப்படுகிறது.

அ) மூலப்பாடத் திறனாய்வு

ஆ) உரைமரபுத் திறனாய்வு

இ) கல்வியாளர் திறனாய்வு

ஈ) அழகியல்வாதத் திறனாய்வு

உ) சமூக இயல் திறனாய்வு

ஊ) ஒப்பிலக்கியம்

எ) பல்கலைக்கழக ஆராய்ச்சிகள்

## அ)மூலப்பாடத் திறனாய்வு

மறுமலர்ச்சி இயக்கத்தின் முதல் பணியாக அழியும் நிலையில் இருந்த இலக்கியங்களை அச்சேற்றிப் புத்தகமாகப் பதிப்பிக்கும் பணி ஓர் இயக்கமாக நடைபெற்றது. அச்சகத்தொழில், பதிப்புநிறுவனங்கள் எனப்படும் புதிய தொழில்களும் இத்தகைய பணிகளை வளர்த்தெடுத்தன. மேலும் பழைய இலக்கியங்கள் பல்கலைக்கழகத்தில் பாடப் பகுதியாக வைக்கப்பட்டதாலும் பதிப்புப்பணி வளர்ந்தது. மாணவர்களுக்காகவே 1872-ல் சிலப்பதிகாரத்தின் முதல் எட்டும்காதைகளை மட்டும் பதிப்பித்து தி.க. சிறிவாசராகவாச்சாரியார். முதன் முதலில் வெளியிட்டார் என்ற செய்தி இந்த இடத்தில் சுட்டத்தக்கதாகும்.

இடைக்காலத்திலேயே உரையாசிரியர்கள் நடுவே ”மூலபாடம்” பற்றிய கருத்து வேறுபாடுகள் நிலவிவந்துள்ளன. இவற்றை அவர்கள் ”பாடபேதம்” என்று கூறி, மிக எளிய வழியில் தீர்வு கண்டனர். மேலும் தங்கள் காலத்திற்குத் தேவையான கருத்திற்குஏற்பமூல நூலுக்கு விளக்கம் கூற இந்தப் ”பாடபேதம்” ஓர் உத்தியாகக் கூடப் பயன்பட்டுள்ளதோ என்று கூற இடம் இருக்கிறது. மூலம் பற்றிய இந்தச் சிக்கல் இலக்கிய உலகில் இன்றும் கூட நிலவுகிறது. பாரதியின் மூலத்தில் உள்ள சிக்கலைக் கைலாசபதி எடுத்துக்காட்டுடன் விளக்கி

உள்ளார். இவ்வாறு தற்காலக் கவிஞன் மூலத்திலேயே, சிக்கல் தோன்றும் போது, இரண்டாயிரம் ஆண்டுக்கு முந்தியஇலக்கியங்களைத் தேடும்போது மூலப் பாடம் பற்றிய ஆய்வு முதன்மை பெறுகிறது. மூல பாடம் பற்றிய ஆய்வு, எவ்வளவு தான் அறிவியல் மனப்பான்மையுடன் செய்யப்பட்டாலும், இக்காலத்தின் சாயல் இல்லாமல் அசலான மூலத்தைப்பெற்றுவிட முடியுமா என்பது ஐயமே! தமிழ் போன்ற பல மதம் சார்ந்த, வழமையான, பலமொழி ஆதிக்கத்திற்குள்ளான வரலாற்றை உடைய மொழி இலக்கியத்தில் இப்பணி மேலும் கடுமையான ஒன்றாக அமைகிறது.

இத்தகையக் கடும்பணியில் ஈடுபட்டவர்களுள் உ. வே. சாமிநாத ஐயர், சி.வை. தாமோதரம் பிள்ளை, ஔவை சு. துரைசாமிப்பிள்ளை முதலியோர் குறிப்பிடத்தக்கவராவர்.

சி.வை. தாமோதரம் பிள்ளையை “மூலபாடத்திறனாய்வின் முன்னோடி” எனக் கைலாசபதி அழைக்கிறார். இவருடைய கலித்தொகை பதிப்பின் முன்னுரை, மூலபாடத்திறனாய்வில் இவருக்கிருந்த ஆர்வத்தைப் புலப்படுத்துகிறது.

> **”இலக்கணக்கொத்துடையார் நூலாசிரியர், உரையாசிரியர், போதகாசிரியரென வகுத்தமூவகை ஆசிரியரோடு யான் பரிசோதனாசிரியரென இன்னும் ஒன்றுகூட்டி,இவர் தொழில் இம்மூவர் தொழிலும் பார்க்க மிகக் கடியதென்றும் அவர் அறிவு முழுவதும் இவர்க்கு வேண்டியதென்றும் வற்புறுத்திச் சொல்கிறேன்”,**

இவ்வாறு மூலமாக திறனாய்வில் தாமோதரம்பிள்ளை ஆர்வத்துடன் ஈடுபட்டாலும், தொடர்ந்து முயற்சி மேற்கொள்ளவில்லை. உ. வே. சாமிநாத ஐயர் இத்தகையப் பணியில் தீவிரமாக ஈடுபட்டார். அவருடைய ஆசிரியப் பணி அமைத்துக் கொடுத்த சூழலும், சமூக அடுக்கில் மேல் தட்டு வாழ்க்கை நெறியும் அவரது முயற்சிகளுக்குத் துணை போயின.

தமிழ் மூலப்பாடத் திறனாய்வு இவரால் செழுமையுற்றது எனலாம். தமக்குக் கிடைத்த பல்வேறு மூலச்சுவடிகளையும் ஆராய்ந்து,பாடவேறுபாடுகளை ஒப்பிட்டு நோக்கி முடிவு எடுத்தார். 1892-இல் சிலப்பதிகாரத்தை பதிப்பதற்கு முன்பு 20 மூலப்படிகளைஆராய்த்தார். மேலும் 28 ஆண்டுகள் கழித்து இரண்டாம் பதிப்பு கொண்டு வரும்போதும் மேலும் மூன்று கையெழுத்துப் படிகளை ஆராய்ந்து திருத்தம் செய்தார். இதுபோலவே 1927இல் மூன்றாம் பதிப்பை வெளியிடும் போதும் பல திருத்தங்கள் செய்தார். இவ்வாறு ஆய்வாளனுக்கு வேண்டிய தொடர்ந்து தேடும் தன்மையும், சரியான விளக்கம் கிடைக்கும் போது பழைய கருத்தை மாற்றிக்கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தையும் அவர் பெற்றிருந்தார்.

தொல்காப்பியம், சீவகசிந்தாமணி, பத்துப்பாட்டு, குறுந்தொகை முதலிய பழம் பெரும் நூல்களையும் பதிப்பிக்கும் பணியில் ஈடுபட்டிருந்ததால். ஓரளவு அவரால் எளிதாக மூலபாடத்தை நோக்கிச் செல்ல முடிந்தது எனக் கருதலாம்.மேலும் உலகவழக்கு, செய்யுள் வழக்கு என்ற முறையிலும் மூல பாடத்தை ஆராய்ந்தார். பாட வேறுபாடுகளையும் பதிப்பித்துக்காட்டியவர்.

அடிக்குறிப்பில் சிறந்த கருத்துக்களைத் திரட்டித் தந்தார். ஒவ்வொரு நூலின் பதிப்பிலும் ஆராய்ச்சி முன்னுரை எழுதினார். நான் ஆராய்ந்தெடுத்த குறிப்புகளையும் கூட வரிசைப்படுத்திப் பதிப்பித்தார். விளங்காத பகுதிகளை, வேறு நூல் கொண்டு, பிறர் வாய்க்கேட்டும் விளக்கினார்.

> **“இவற்றிலுள்ள இசை நாடகப்பகுதிகள், எனக்குக் கிடைத்த கச்சபுட வெண்பா, தாள சமுத்திரம், சுத்தரி நந்தம், பிரகாசம் முதலிய பழைய தமிழ் நூல்களைக் கொண்டும் இசையிலும், பரதத்திலும் வல்லோரைவினாவியும் ஒருவாறு ஆராய்ச்சி செய்யப் பெற்றன,”**

என எழுதுகிறார். மேலும் அன்று மூல பாடத் திறனாய்வில் ஈடுபட்டவர்கள் தங்கள் விருப்பம் போல் மூலத்தை மாற்றி பதிப்பித்தார்கள் போலும், எனவே அத்தன்மையிலிருந்து நான் எவ்வாறு வேறுபாடுகிறேன் என்பதையும், எவ்வாறெல்லாம் ஆராய்ந்து முடிவுக்கு வந்தேன் என்பதையும் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்?

> **”பிரதிகளியில்லாதவற்றைக் கூட்டியும், உள்ளவற்றை மாற்றியும் குறைத்தும் மனம் போனவாறே இவற்றைப் பதிப்பித்திலேன். உலக வழக்கு, செய்யுள் வழக்கு என்னும் இரண்டையும் கருவியாகக் கொண்டு பலமுறை ஆராய்ச்சி செய்து பிரதிகளிலிருந்தவாறே பதிப்பித்தேன்.”**

எனவே மூலபாடத்திறனாய்வில் உ.வே.சா-வின் பங்கு நிகரற்றது என்பதில் ஐயமில்லை. “முன்னோர் ஒழுகி வந்த முறையைப் பெரும்பாலும் பின்பற்றுதலே மன ஒருமைக்குவழியாகும் என நம்பிச் செயல்பட்ட உ.வே சா. மனச்சிதறல் எதுவும் இன்றித் தன் முழுமையாகத் தன்னைக் கரைத்துக் கொள்ளும் திறம் பெற்றிருந்ததால், இப்பணியில் சாதனைகளைச் செய்ய முடிந்தது.

இம்மூலப்பாடத்திறனாய்வில் ஆறுமுக நாவலர் ஐயங்கார், பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், சௌரிப்பெருமாள்அரங்கனார். பவானந்தம் பிள்ளை, ஆர், வேங்கடாசலம் பிள்ளை வையாபுரிப் பிள்ளை முதலியோரும் ஈடுபட்டு இத்திறனாய்வை வளப்படுத்தினர். மேலும்

ந. மு. வேங்கசாமிநாட்டார், தண்டபாணிதேசிகர், மே.வீ. வேணுகோபால்பிள்ளை முதலியோர் அச்சேறிய நூல்களின் மறுபதிப்பைத் தெளிவுபெறச் செம்மைப்படுத்தி பதிப்பதில் ஈடுபட்டனர்.

## தமிழில் மூல பாடத் திறனாய்வு- ஒரு மதிப்பீடு

மேலை நாட்டில் விவிலிய நூல் ஆராய்ச்சியை ஒட்டி மூலபாடத் திறனாய்வு பெருவளர்ச்சி பெற்றது. பதினேழாம்நூற்றாண்டிலேயே மூாண் மாபில்லன் என்பார், ”சாசனவியல்” என்ற நூலை இயற்றினார். அதில் மூலபாடத்திறனாய்வின் நுட்பங்களையும், சிக்கல்களையும் முதன்முதலாகப் பெரிய அளவில் ஆராய்ந்தார் அதைத் தொடர்ந்து இம்மூலபாடத் திறனாய்வு, அறிவியல் கலை என்று கூறும் அளவிற்கு மேலை நாடுகளில் வளர்ந்தது.

ஏடுகளின் குடிவழியை (Generaligcaltren) ஆராய்வது எடுத்த ஏட்டினை அறிவியல் ஆய்வு நெறிமுறைப்படி ஒப்பிடுவது, முதலிய ஆய்வு முறை ஏடுகளின் முதன்மையான உறுதிப்படுத்திப் பதிப்பதுதான் (Archetype) உண்மையான மூலப்பாடத் திறனாய்வாகும். ஆனால் தமிழ் மூலபாடத்திறனாய்வில் ஈடுபட்டவர்கள் அனைவர்க்கும் இத்தகைய பார்வை இல்லை உலகத் தமிழ் நிறுவனம், மதுரைப் பல்கலைக்கழகம் ஆகிய நிறுவனங்கள் மூலமாக இன்றைக்கும் பல பதிப்புகள் வெளி வந்துள்ளன. இப்பதிப்புப் பணியில் ஈடுபட்டவர்கள், எந்த அளவிற்கு மூலபாடத்திறனாய்வின் கூறுகளை உள்வாங்கிச் செயல்பட்டுள்ளர்கள் என்பது ஆய்விற்குஉரியதே.

மூலபாடத்திறனாய்வின் கூறுகளை ஆங்கிலம் வழி அறிய வாய்ப்பில்லாத உ.வே. சாமிநாதஐயரின் சாதனை வியப்பிற்குரியதே என்றாலும், மூலபாடத்திறனாய்வாளன். பார்வையில் அவரின் பணியும் குறைபாடு உடையதே “பிரதிகளில் இருந்தவாறே பதிப்பித்தேன்,” என்றுதான் சாமிநாத ஐயர் கூறுகிறார். ஆனால் உ.வே. சாவிற்குக் கிடைத்த “பிரதிகளே” மாற்றத்திற்கு உள்ளான சிதைந்த வடிவங்களில்தாம் விளங்கியிருக்கும் என்று கருத வாய்ப்புண்டு. அதற்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கூறலாம்.

1. ஓலைச்சுவடியை எவ்வளவுதான் பக்குவமாய்க் காப்பாற்றினாலும் நூறு அல்லது நூற்றைம்பது ஆண்டுகாலம் காப்பாற்ற முடியும். எனவே தொடர்ந்து படி எடுக்கும்போது சிதைவதற்கு வாய்ப்புண்டு.

2. தமிழ் எழுத்து வடிவமும் மாறிக் கொண்டே வந்திருக்கிறது.

3. அரசியலில் பல மாற்றங்கள், குழப்பங்கள் தொடர்ச்சியாக நடந்துள்ளன.

4. மதப் போராட்டம் தொடர்ந்து இருந்து வத்துள்ளது. எனவே இலக்கிய நூல்களுக்குள்ளும் இடைச் செருகல் பெருக வாய்ப்பு இருந்து வந்திருக்கிறது.

5. தமிழ்மொழி-வடமொழிப்போராட்டத்தின். விளைவுகள் புறக்கணிக்கத்தக்கவையல்ல.

இந்நிலையில் ஏடுகளின் குடிவழியை ஆராய்வது இன்றியமையாததாகும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை இத்தகைய ஆய்விற்குவட்டாரமொழியியலின் வளர்ச்சி அடிப்படைத் தேவையாகும். மொழியியல் கல்வி விரிவாக வளர்ந்துள்ள இன்றைய நிலையில் கூட, மூலபாடத்திறன ாெய்வில் ஆழமாக ஈடுபடாமல், பழைய பதிப்பை அப்படியே பதித்து விலையை மட்டும் அதிகளவு நிர்ணயித்து விற்பனை செய்யும் பல்கலைக்கழகச் சூழல் தமிழ்த்திறனாய்வின் வளர்ச்சிக்கு உதவி செய்யாது. அமைப்பியல் திறனாய்வு பற்றி விரிவாகப்பேசப்படும் இன்றைய சூழலில், மூலப்பிரதியை ஆழமாக கற்க வேண்டியது ஏற்பட்டுள்ளது. மூலப்பிரதியை இன்றைய காலத்தேவைக்குஏற்ப விரிவாக்கம் செய்ய நெருக்கடி நிகழ்கிறது. இத்தகைய பெருகியுள்ளது-

மேலும் மூலபாடத் திறனாய்வு என்பது பழைய இலக்கியங்களுக்கானது என்பது சரியான பார்வை. இல்லை. பாரதி, பாரதிதாசன் புதுமைப்பித்தன் முதலியோரின் படைப்பைத் திறனாய்வு செய்ய முயற்சி எடுக்கிற ஒருவனுக்கும் மூலபாடச் சிக்கல் எழுகிறது. மாப்பாசானின் கதைகள் சில புதுமைப்பித்தன் பெயரில் தமிழ்வடிவில் நிலவுவதை பிரெஞ்சு பேராசிரியர் கிருட்டிணமூர்த்தி எடுத்துக் காட்டியுள்ளார். இதில் வேடிக்கை என்னவென்றால், புதுமைப்பித்தன் கதைகளைப் பற்றி அழகான மொழியில் திறனாய்வு செய்துள்ள பொதியவெற்பன் உட்பட, புதுமைப்பித்தனைப் பற்றி ஆய்வு செய்த பலரும், மாப்பாசான் கதைகளைப் புதுமைப்பித்தன் கதைகளாகக் கொண்டு புதுமைப்பித்தன் படைப்பாற்றலைப் பலவாறு வியந்து எழுதியுள்ளனர்- இந்த ஒரு செய்தியே, மூலபாடத்திறனாய்வின் இன்றியமையாமையை வலியுறுத்தப் போதுமானதாகும்.

மூலபாடத்திறனாய்வில் ஈடுபட்டவர்களில் பெரும்பாலோர் கல்வியாளர்களாக அமைந்துள்ளனர். எனவே சமூக வரலாற்றிற்கும் உள்ள உறவைமுதன்மைப்படுத்திக் காணாமல், இலக்கண விதிமுறைகளின் அடிப்படையில்தான் பார்த்துள்ளனர்.இந்நூற்றாண்டில் எந்த ஒரு முயற்சியும் தொடர்பு அமைப்புக்களோடு இணைந்ததாகும். எனவே மூலபாடத் திறனாய்வு பற்றிப்பல தமிழ் இதழ்கள் கட்டுரைகள் வெளியிட்டுள்ளன. அவற்றுள் செந்தமிழ்ச்செல்வி, செந்தமிழ், தெனமொழி, தமிழ்ப்பொழில் முதலியன குறிப்பிடத்தக்கனவாகும், இம்முயற்சியை ஆய்வதற்கு இடம் இருக்கிறது.

## ஆ)உரைமரபுத் திறனாய்வு

தமிழ் மறுமலர்ச்சி இயக்கத்திற்குப் பல்லாற்றானும் கருத்துக் கருவியாக விளங்கிய பழைய இலக்கியங்களுக்கு உரைகள் விளக்கங்கள்- தேவைப்பட்டன, இவ்வியக்கத்தினால் தொகை பெருகியது: தமிழ்ப்பாடப்பகுதியாக விளங்கியது. தமிழ்க்கல்லூரிகள் தோன்றின. இதனால் தமிழில் என்ன இருக்கிறது. என்ற கருத்து மாறியது தமிழ் பெருமையாக உணரப்பட்டது. இச்சூழலை ஆர்.கே.சண்முகச்செட்டியாரின் கூற்றுத் தெளிவாகப் புலப்படுத்துகிறது.சுற்றிலும் பார்த்தேன் வறண்ட முட்செடிகள் என்று கருதியிருந்த செடிகளில் மலர்ந்த பூக்கள் நிறைந்திருந்தன, எங்கும் நறுமணம் வீசிற்று இதுதான் ”தமிழின் மறுமலர்ச்சி எங்கும் கமழும் தமிழ் மணம்” என்று உணர்ந்தேன்.இத்தகைய சூழலில் பழைய இலக்கியங்களுக்கு எளிமையாக உரை எழுதுவதன் மூலமும், மலிவுப்பதிப்புகள் வெளியீடுவதன் மூலமும் அவ்விலக்கியங்களை மக்களிடம் எடுத்துச் சென்றனர் மறுமலர்ச்சி இயக்கத்தினர். எனவே மரபு சார்ந்த இக்கால உரைகாரர்களின் பங்களிப்புப் பெருங்கவனத்திற்கு உரியதாகும்.

இவ்வுரைகளின்தன்மைகள்

1) இடைக்கால உரைகள் போன்றே இலக்கணக் குறிப்பு, நயவுரை, சொல்விளக்கம் முதலியன கொண்டு விளங்குகின்றன.

2)இடைக்கால உரை போன்றே, பழம்பெரும் நூல்களின் பெருமையைப் பாராட்டுவதையே நோக்கமாகக் கொண்டு விளங்குகின்றன.

3)இடைக்கால உரைகாரர்கள் வடமொழியோடு ஒப்பிட்டு விளக்கினார்கள் என்றால், இக்கால உரைகாரர்கள், வடமொழியோடும் ஆங்கில இலக்கியத்தோடும் ஒப்பிட்டு விளக்கினர்.

ஆர்.கே. சண்முகச்செட்டியாரும், கலா நிலையம், கே. இராசகோபாலாசாரியாகும். தாங்கள் கற்ற ஆங்கில மரபிற்கு ஏற்ப, அழகியல் சுவை அடிப்படையில் உரை எழுதினர். இலக்கியச் சுவை நிரம்பி நிற்கும் பகுதி என்ற நோக்கில், கானல்வரிக்கு மட்டும் உரை கண்டுள்ளார். இராசகோபாலாசாரியார். இதே அடிப்படையில் இரசிகமணிடி.கே.சி.யும் கம்பஇராமாயணத்திற்கும் முத்தொள்ளாயிரத்திற்கும் உரை கண்டதோடு மட்டுமல்லாமல், ஆங்காங்கே ஆங்கிலக்கவிஞர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோரின் கூற்றையும் மேற்கோளாகக்காட்டிச் செல்கிறார்.

4)எளிமைப்படுத்தி மக்களிடம் எடுத்துச் செல்லுதல் என்பது உள்ளோட்டமாக இயக்கம் கொண்டிருந்ததால், பழைய உரையை அடியார்க்கு நல்லார் எளிமையாக விளக்கினார் கோ.வடிவேல்செட்டியர் பரிமேலழகர் உரைக்கு விளக்கம் எழுதினார்.

5)இக்காலத்து உரைகாரர்கள் தெ.பொ. மீ முதலியோர் உரை எழுதும்போது தம் உணர்வை. தமது சிலப்பதிகார உரையில் வெளிப்படுத்துகின்றனர்.

6)மறுமலர்ச்சியின் செல்வாக்கு இக்கால உரைகளிலும் காணக்கிடக்கின்றன. இடைக்கால உரைகாரர்களின் கருத்துக்களை, சைவசமய எழுச்சிக்கு ஏற்ப மாற்றிக்காட்டினர். உரை தமிழ் மறுமலர்ச்சியோடு சைவசமய மறுமலர்ச்சியும் தோன்றி சிறக்க பெரும் காரணமாக விளங்கினது.

அ)“கோட்டன்“ என்பதற்கு அருகன் கோயில் எனப் பொருள் கொள்வர் அடியார்க்குநல்லார். ஆனால் சிலப்பதிகார உரையாளரான ந.மு.வே.நாட்டார், அக்கருத்தை மறுத்து இளங்கோ அடிகள் சைவசமயத்தைச் சார்ந்தவர் என விளக்குகிறார்.

ஆ)பொ. வே. சோமசுந்தரனார் அடிகளாரை வள்ளலாரின் சமரச சன்மார்க்க நெறிவோடு இணைக்கிறார்.

இவ்வாறு இக்கால உரையாளர்கள், பழைய உரை மரபைப் பின்பற்றினாலும், தங்கள் காலத்தின் தேவையை நிறைவேற்றி திறனறிவாளர்கள் என்ற அளவிலும், திறனாய்வாளர்களின் குணமான மூல இலக்கியத்தைப் பலவிதமான பார்வைக்கு ஆட்படுத்தி மக்கள் நடுவே சேரவைத்தல் என்ற பணியைச் செய்துள்ளனர் என்ற அளவிலும், தற்காலத் திறனாய்வு வரலாற்றில் குறிக்கத்தக்கவர்களாக விளங்குகின்றனர்.குறுந்தொகைக்கும் சீவகசிந்தாமணிக்கும் உரைகண்டஉவே.சா, குறளுக்கு உரைகண்ட சண்முகனார்இ வ.உ.சிதம்பரம்பிள்ளைஇ புலவர் குழந்தை, புறநானூறுக்கும் பதிற்றுப்பத்துக்கும் உரை எழுதிய ஔவை துரைசாமி

கம்பராமாயணம் முழுமைக்கும் உரைகண்ட வை மு. கோ, பெரிய புராணத்திற்கு உரை எழுதிய காஞ்சிபுரம் சபாபதி முதலியார் ஆகியோர் இக்கால உரைகாரர்களில் குறிப்பிடத்தக்கவராவர். இக்கால உரைகாரர்கள் அனைவரையும் இத்தகைய நோக்கில் விரிவான ஆய்விற்கு உட்படுத்தும் போது பல உண்மைகளும், திறனாய்வுக் கோட்பாடுகளும் வெளிப்பட வாய்ப்பிருக்கிறது என்பதை இந்த இடத்தில் சுட்டிக்கூறலாம். இந்த உரைமரபு மறைமலையடிகள் மு.வ அ.ச.ஞ. முதலிய இக்காலக் கல்வியாளர்கள் நடுவிலும் செல்வாக்குச் செலுத்தி உள்ளதை, அவர்களின் திறனாய்வுப் பணியை மதிப்பிட முயலும்போது தெரிய வருகிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும் க.கலாபரமேஸ்வரன்

> **“நவீனத்தமிழ்த்திறனாய்வு தோன்றிய பின்பும் டி.கே.சி. வ.வே.சு.ஐயர், மறைமலையடிகள் முதலானோரின் திறனாய்வு முறையிலும் உரையாசிரியர்களின் திறனாய்வு முறைத்தடங்களைக் காணக் கூடியதாக இருக்கிறது”**

என்கிறார்.

## இ)கல்வியாளர் திறனாய்வு

ஒரு நூலைப்பற்றித் திறனாய்வு செய்வதில் கல்வியாளர்களின் அறிவுத்தளம், இரசனை ஆற்றல், நடை முதலியன கேள்விக்குரியதாகவும், சில நேரங்களில் கேலிக்குரியதாகவும் கூட இருந்தாலும் (உலகம் முழுவதும்). திறனாய்வுத் துறையில் கல்வியாளர்களின் பங்கு புறக்கணிக்க முடியாததாகும். ஒரு நூலைப்பற்றி விரிவான கலந்துரையாடலுக்குக் காரணமாக இருப்பவர்கள் கல்வியாளர்களே. கல்வியாளர்கள் ஒரு சமூகத்தின் வாயாக விளங்குகிறார்கள். அவர்கள் பணிபுரியும் இடம், வளரும் இளந்தலைமுறையின் மூளையாகவும் இதயமாகவும் இருக்கிறது. எனவே அவர்களின் திறனாய்வு வேலைப்பாடு குறித்துத் தேடுவதற்கு நிறைய வாய்ப்பிருக்கிறது. இத்தகைய பிரிவினைகள் 20ஆம் நூற்றாண்டில்தான் சாத்தியம் என்பதையும் இந்த இடத்தில் காட்ட வேண்டும்.தமிழில் இத்தகைய கல்விநெறித்திறனாய்வாளராக அறியத்தக்கவர்களுள் முதல்வராக நிற்பவர் திருமணம் செல்வக்கேசவராயமுதலியார் (1864-1921) ஆவர். கல்விநெறித்திறனாய்வாளரான இவர்தான் நவீனத்திறனாய்வின் முன்னோடி எனச் சாலை இளந்திரையன் கைலாசபதி, ஆகியோரால் கருதப்படுகிறார். 1897லேயே சித்தாந்ததீபிகை என்ற இதழில் மேலைநாட்டுத் திறனாய்வாளர்களின் கூற்றைப் பயன்படுத்திக் கம்பன் பற்றிக் கட்டுரைத் தொடர் எழுதியுள்ளார்.

பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றிய இவர், திறனாய்வுக் கட்டுரை எழுத முனைவதற்குக் காரணம் உரை நடைத்தமிழ்ப் பல்கிப் பெருக வேண்டும் என்ற அவருடைய புத்தார்வமே ஆகும். மேலும் படைப்பைச் சுவைத்து விளக்கும் உரைகாரர்கள் மேல், அவருக்கு ஓர் ஈடுபாடு இயல்பாகவே இருந்திருக்கிறது. அதனால்தான் தன் மூன்று பிள்ளைகளுக்கும் பரிமேலழகர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்று உரையாசிரியர்களின் பெயரை இட்டுள்ளார். அன்றியும் பாடத்திட்டத்தில் இலக்கியம் இடம் பெற்றதால் தொழில்

அடிப்படையிலும் இத்தகைய புதிய முயற்சியில் அவர் ஈடுபட வேண்டிய சூழல் ஏற்பட்டது எனலாம்.

கம்பரை மட்டுமல்ல, முதுமொழிக்காஞ்சி, பழமொழி, அறநெறிச் சாரம், அரிச்சந்திர புராணம், குசேலோபாக்கியானம் முதலிய நூல்களை ஆராய்ந்தும் பதிப்பித்தார். கண்ணகி வரலாற்றையும். கலிங்கத்துப்பரணியையும் உரைநடையில் அறிமுகப்படுத்தினார். ஆனாலும் இவரது திறனாய்வு முயற்சியில் தலை சிறந்து நிற்பவை வசனம், ”செய்யுள்” என்ற இரண்டு கட்டுரைகளே ஆகும். கம்பநாடர், திருவள்ளுவர் என்ற இரண்டையும் அடுத்துதான் குறிப்பிடவேண்டும்.““வசனம்“ என்ற கட்டுரையில் “வசனம்“ என்றசொல்லை விரிவாக ஆராய்ந்து கட்டுரையைத் தொடங்குகிறார். தொல்காப்பியர் தொடங்கி, தன் காலத்துச் செய்தி இதழ்களின் (வர்த்தமான பத்திரிகை என்பார்) உரைநடை வரை, வரலாற்று அடிப்படையில் விளக்கிச் செல்வதோடு ஒவ்வொன்றையும் “மதிப்பிட்டும் உரைக்கிறார். மேலும் ”வசனநடை” என்று உட்பிரிவாகத் தலைப்பிட்டு, நடையைப் பற்றித் திறனாய்வாளனுக்கு வேண்டிய தெளிந்த வரலாற்று உணர்வோடும், தான் எழுதும் பொருளைப் பற்றித் தேக்கிய அறிவுப் பெருக்கத்தோடும், மதிப்பிடக்கூடிய நெஞ்சத்துணிவோடும் எழுதுகிறார். அதே நேரத்தில் எந்த ஒரு மனிதனும் தான் வாழுங்காலத்து அறிவு நிலையோடும் சமூக நிலையோடும் பிரிக்கப்பட்டு ஓர் எல்லைக்குள் உட்படுத்தப்படுகிறான் என்ற மேலான தெளிவோடும் எழுதுகிறார். “தமிழில், வசனநடையின் அம்சங்களை ஆராயப்புகுவது, புது முயற்சியாதலால், சில கூறுகளை மயங்கியுரைப்பது கூடும். சில கூறுகள் புலனாகாது விடுபட்டிருப்பது கூடும். சில கூறுகள் குறைக்கூறலாக இருப்பதுங்கூடும். ஆராய்ச்சி சிறத்தலாகும்போது இவையெல்லாம் திருத்தம் எய்தும்”.இவ்வாறு “தன்னை வியவாத் தன்மை“ என்ற திறவாய்வாளனுக்கு வேண்டிய அடிப்படைக் குணங்களுன் ஒன்றை அவர் பற்றிப்பிடித்திருப்பது அவரது அறிவுப்புலத்தைக்காட்டுகிறது. ஏனெனில் திறனாய்வாளர் பலர் தவறி விழுகிற இடம் இதுதான். இன்றைய கல்வியாளர் பலர், தங்களுடைய ”போதாமையை” மறைத்துக் கொள்ள முயலும் எத்தனையோ உத்திகளுள் ஒன்றாக இவ்வாறு எழுதுவதையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் திருமணத்தாரின் கட்டுரையைப் படிப்பவர்கள் அவரது நேர்மை திறத்தைஅறிவர்.

உரைநடை வளர்ச்சியினாலேயே எளிதாக அறிவு எய்தி, ஐரோப்பியர் நம்மை விட நாகரிக நிலை ஒரு படி மேலாக எய்தி விட்டார்கள் என்று கருதும் திருமணந்தார், ”தமிழிலும் உரைநடை வளர்ந்தால்தான் மக்களிடையே அறிவு வளர்ச்சிப் பரவலாகும். வேலையாட்கள்.கூலியாட்கள் போன்ற ஏழைகளின் கண்கள் திறக்கப்படும்” என்று எழுதுகிறார். ஓர் இலக்கிய மாற்றத்தைச் சமூகத் தேவையோடு இணைத்துப் பார்க்கும் அவருடைய திறனாய்வுப் பார்வையிலிருந்து இன்றைய கல்விநெறித்திறனாய்வாளர்கள் பலர் கற்றுக்கொள்ள வேண்டும். இதுபோலவே முதல் புதின எழுத்தாளராகக் கருதப்படும் வேதநாயகம்பிள்ளையின் உரைநடை இலக்கியத்தையும் மிகவும் ஞானச்செழிப்புடன் மதிப்பிடுகிறார். கல்வியாளர்கள் போல், புத்திலக்கியத்தை அவர் புறக்கணிக்கவில்லை.

**”விநோதரச மஞ்சரி போல் திராபாகமாய் இன்னும் படிக்கலாம். பின்னும் படிக்கலாம் என்று படிப்பவர் விழையுமாறு வசனம் எழுதியிருப்பவர் வேதநாயகம் பிள்ளை... இவருடைய வசனத்தில் சில பாகங்கள் வேறொரு பாஷையில் மொழி பெயர்க்க இயலாத திறம் வாய்ந்தன.கேட்கத்கேட்கத் தெவிட்டாத செளியமுதமும் ஆவன ”**

இதுபோலவே மகாராட்டிரமொழியிலிருந்து 1825-இல் தாண்டவராய முதலியார் தமிழில்மொழிபெயர்த்து வெளியிட்ட பஞ்சதந்திரக்கதையைப் பற்றிக்குறிப்பிடும்போது, உரை நடை வளர்ச்சிக்கு மொழி பெயர்ப்புப் பணி எந்த அளவிற்கு இன்றியமையாதது என்பதை உணர்த்து எழுதுகிறார். மேலும் மொழித்திறத்தை முட்டறுப்பதற்குச் சிறந்த வழியாக மொழி பெயர்ப்புப் பணியைச் சுட்டிக்காட்டுகிறார். இவையெல்லாம் அவர் ஒரு சிறந்த திறனாய்வாளர் என்பதைச் சொல்லி விடுகின்றன..

திருமணத்தாரின் ”செய்யுள்” என்ற கட்டுரை இன்றுவரை ஆழமான நுட்பமான ஒரு திறனாய்வுக் கட்டுரையாக விளங்குகின்றது. இக்கட்டுரையில் ““செல்வக்கேசவராயமுதலியார் ஆங்கில இலக்கியத் திறனாய்வைப் பின்பற்றமுயலுவதாகக் கருதுகிறார்.ஆனாலும் ”தமிழ்த் திறனாய்வு மற்ற மொழியிலுள்ள திறனாய்வும் இக்கருத்துக்களை உள்வாங்கித் தனக்கேஉரித்தான ஒரு முறையில் வளர வேண்டும் என்று பின்னர் கூறிய கருத்துக்கு ஓர் எடுத்துக்காட்டாக இந்தக்கட்டுரை அமைந்திருக்கிறது எனலாம். வடமொழி, ஆங்கிலம் தெலுங்கு முதலிய பிறமொழிக் கருத்துக்களோடு தற்சிந்தனை மரபையும் இணைத்துத் தருகிறார்.என்பது புரியாத புதிர் வாய்ந்தது தெய்வ அதனால் கருவிலேஉருவானது போன்ற இந்நிய வரம் சிந்தனையை இவர் வலியுறுத்திக் கூறினாலும், தொடர்ந்து பயிற்சி பெறுவது? கவித்துவத்தைவளப்படுத்தும் என எழுதுகிறார் இவ்வாறு படைப்புத்தொழிவில் உள்ள அகப்புறப்பிரச்சனையை, இன்று அமைப்பியல் கோட்பாட்டு அடிப்படையில் தமிழ்வன் போல அவர் விளக்கவில்லை என்றாலும், இலக்கியஅழகியவில் உள்ள அடிப்படைப் பிரச்சனை பற்றி அவர் உரக்கச்சிததிததுள்ளார்�ளு அகத்திற்கும்புறத்திற்கும் உள்ள இடத்தைக் கண்டு தெளிந்துள்ளார் என்பது அன்றைய சூழவில் வைத்து எண்ணும் போதுவியப்பளிக்கக் கூடிய ஒன்றாகும்.

ஒரு கவிஞனது படைப்பைப் பின்னால் வந்த டி.கே.சி. போலத் தனித்தனிப் பாடல்களாகக் கண்டு சுவைத்துச் சொக்கி விடலாகாது: மாறாக, அவனது படைப்பு முழுவதையும் உள்வாங்கி அவற்றின் சாரத்தை எடுப்பதன் மூலம் தன் வாழ்க்கையின் சாரத்தைக் கண்டெடுத்துக்கொள்வதாய் இருக்கவேண்டும் என்பதாக உள்ளதமாகத் திருமணத்தார். விளக்கும்போது. வாழ்க்கைக்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவை அவர் எவ்வளவு நுட்பமான ஒரு தனத்தில் புரிந்திருக்கிறார் என்பது புலனாகிறது.

ஒரு படைப்புப் பற்றிய திறனாய்வு மூன்று கோணத்தில் இருந்து அமைய வாய்ப்பிருக்கிறது.

1.படைப்பவன் பார்வையில்

2.படைப்பு என்ற அளவில் (தொழில் நுட்பப் பார்வை)

3.வாசகளின் ஏற்பு நிலை என்றஅளவில் (இதில் சமூகமும் உட்படும்)

இங்கே திருமணத்தார் வாசகனின் ஏற்புநிலை என்ற கோணத்தில் இருந்து இலக்கியத்தை அணுகியுள்ளார். அவர் எழுதுகிறார்.விராதன் செய்யும் துதியை முதன்முதல் எனக்கு இன்னதென்று தெரியாத ஒருவிதம் உண்டாயிற்று... இவ்வணம் ஜனித்தலான ஆனந்தத்துக்குயாதோ என்று சந்தர்ப்பங்களில் கால் சிந்தித்தேன்,...

திறனாய்வாளர், படைப்பைப் எழுதும்போது, பழைய கருத்துகளைத் வேண்டும். தன் சிந்தனைகளைத் வேண்டும். மொத்தமாக வைத்துத் சிந்திக்க வேண்டும், மூன்றையும் இணைப்பதில் கிடைப்பது தெளிவாகவும் ஆற்றலோடும் தெரிய வேண்டும்- திருமணத்தார் இவ்வகையில் நல்ல திறனாய்வாளரே.

‘‘கவிதை தரும் இன்பம் என்பது என்ன? திருமணத்தார். விளக்குகிறார். உனக்கு பிறந்தான்.இத்திறத்த வாக்கியங்களால் விளையும் இன்பத்தினும் பேரின்பம் செய்யுளில் இந்த தருவது எது? குணமும் அலங்காரமும் -அ.ஃ.தாவது அணியும், சொல்லணி பொருளணி என்கிற அலங்காரமுமாம். நுடையை நோக்கியது, இது நெறியெனவும், பாவிகமெனவும்படும். அ.ஃ.தாவது கலியமைப்பு வகை”, என்பதாம். அமைப்பியல்கோட்பாடுகள் இன்று, தண்டிலங்காரத்தைப் புது வெளிச்சத்தில் பலன்படுத்தியிருக்கும் திருமணத்தாரின் ஆற்றல் இன்று நினைக்கத்தக்கதாகும். இத்தகைய குணஅணிஇல்லாதபோது, தட்டிப்பார்க்கும்நயமும், தனித்துப் உவமை நயமும், ”இளமை நீங்கிய உடல்பின்பூட்டப்படும்ஆபரணமாய்ப் பயனற்றுப்போகும்” என்று சுட்டும்போது “கவித்துவம்“ பற்றிய அவரது தெளிவான, பார்வை புலனாகிறது. ஒட்டு மொத்தமாக வைத்தே காண என்ற வடமொழியிலுள்ள ”பாவமி” ரசம் என்பவைகளோடு முறையே மெய்ப்பாட்டையும், சுவையையும் இணைக்கிறார்.சுவைகளுக்கு மெய்ப்பாடுகளே அடிப்படை. ஆகவே பாவனாசக்தியால் கலை விளைவிப்பதே கவி வக்ஷ்ணமாகும்”.என்கிறார். யாவனரசம்திதான் ”கற்பனா சக்தி” என்பது. என்ன? உளவியல் உரைகாரர் போல இல்லாததா? ”இவைது கூறுதல் தொல்லாசிரியர் வழக்காறு என்ற நச்சினார்க் கூற்றைபடுத்துகிறார். பிறகு திருமணத்தார் எழுதுகிறார். கற்பனை என்பது ஒரு பொருளில் கவியானவன் தனது சாதுரியத்தால் முள்ளில்லாதஅவையைப் பிறப்பித்தல் பொய்யும் புனைந்துரையும் கவிகற்பனையன்று. கட்டுக்கட்டாய் மனம் போன போக்கில் உரைப்பதும் கவி கற்பனை அன்று” இவ்வாறு கற்பனை பற்றி மிக நுட்பமாக விளக்கும் திருமணத்தார். படைப்புத் தொழிலில் இருக்கும் படிநிலைகளைப் பற்றியும் தமிழில்முதன் முதலில் பேசுகிறார் :

**”குழந்தை கருப்பையிலிருந்து வெளிவரும்காலத்தில்தான் வெளிவரும். கவிதையும் அப்படியே. கவிஞனின் வேலை எல்லாம் அதை ஏட்டில்ஏற்றுக் கொள்ளும் வேலைதான்... அதுவாக உதிப்பதற்கு முன்னே அவசரப்பட்டாலும் அது சீர்கெட்டு அழிவதாகும். அதுவாக உதிக்கின்ற சமயத்தில் அதனை ஏட்டில் ஏந்திக்கொள்ளாமல் காலதாமதம்**

**பண்ணினாலும், அதன் அருமையும் பெருமையும் குலைந்து போகும். உதிக்கின்ற சமயமறிந்து பெற்றதனால்தான் கம்பராமாயணம் அழகும் ஆயுளும் பெறுவதாயிற்று ”**

இவ்வாறு படைப்புத் தொழிலின் சிக்கலை இன்றைய அமைப்பியல்வாதி போல வெளியிடுகிறார்: மேலும்,

> **“கவியானவன், கருத்திற் கொண்ட பொருளில்துவக்குண்டு, அதன் வயத்தனாய், அதுவே நோக்கமாய், அப்பொருளின் நிறத்தில் தனக்குக்கட்புலனான உண்மைகளும் விசேஷ அம்சங்களும் கற்பனையால் கற்பிதமான உருவத்துடன் கவிதையைக் கருவுயிர்ப்பதன்றித் தான் யாதொடு நோக்கத்துடன் கவனஞ்செய்வதில்லை”**

என்று கட்டற்ற ஆனந்தப்பெருக்கின் தன்வெளிப்பாடாக இலக்கியப் படைப்பைக் காணும் திருமணத்தார், தனிப் பாடல்களுக்குத்தானே இந்தக் கொள்கை பொருந்தும். தொடர் நிலைச்செய்யுளுக்கு இது பொருந்துமா என்ற ஐயத்திற்கும் விடை அளிக்கிறார். அவ்வானத்தமேயீட்டின் கொதிப்பானது தனிவுறத்தான் செய்யுள் நீட்டிக்க இயலாதுதான் என்கிறார். இந்நிலையில், ““மானுடப்பிரகிர்தியை மேம்படுத்தத்தக்களவென்று தான் பிரத்தியஅனுபவத்தில் கண்ட நற்குணநல்லொழுக்கங்களைச் சுரோதாக்களிடத்திலே காப்பியம் எழுவிக்க வேண்டும் என்ற நோக்கம் உண்டாதலை”- என்கிறார்..

தற்கால திறனாய்வாளர்களைப் போலவே, அறம் பொருள் இன்பம் வீடு அடைதல் நூற்பயன் என்று தன்னை திறனாய்வாளராக வெளிப்படுத்துகிறார். இது கல்வியாளர்களின் பொதுக்குணமாகும். மேத்யூஅர்னால்டும் இத்தகைய திறனாய்வாளர்தான் என்பதும் இந்த இடத்தில் குறிக்கத்தக்கதோர்காரியமாகும்.தமிழில் விரிவாக விளக்கும் திருமணத்தார், இந்தப்படைப்புகள் எவ்வாறு சமூகத்தில் நிலைபெற்று விடுகின்றன என்ற வினாவிற்குக் கொடுக்கிற விடை, மக்களைப்போலத் தங்கள் விருப்பத்திற்கு ஏற்பச், செய்தித்தொடர்புக் கருவிகளால் ஒன்றுபோலபிசைந்து வைத்துக் கொள்ளுகின்ற முடியாத ஆற்றல் பெருகிக்குழவில் ஆழமாக எண்ணத்தக்கதாகும். திருமணத்தார் எழுதுகிறார்.‘‘அபிப்பிராயமே அது நீடூழி வாழ்வதற்கும்நிமிஷ நேரத்தில் நிலைகுலைவதற்கும் காரணமாகும்... பொதுஜனங்கள் பொறாமை துர்க்குணம் தங்கள் அபிப்பிராயத்தை உரைத்தவான நிமித்தம் இல்லாமையால் அவர்களுடைய தீர்மானம் எவ்விடத்தும் எக்காலத்தும் அக்கிரமம் ஆவதில்லை” மேலும் எழுதுகிறார்.பின்னரே கவிகளின் செய்யுட்களைக் கல்விமான்கள் பாராயணம் செய்வர்?? கண்டுபிடிக்கத்தக்க உண்மையை மிகவும் எளிமையாக வெளியிடுகிறார்-ஒரு கல்வியாளராக இருந்து இலக்கியத்தின் இருக்கும் நெருங்கிய பிணைப்பை சிந்தனை ஆற்றல் கண்டிருக்கும் அளவிற்கு கல்வி யாளர்களும் காணும்போதுதான் தமிழ்த்திறனாய்வுத் துறையில் வெளிச்சம் புறப்பட வாய்ப்பிருக்கிறது எனலாம். அதனால்தான் சாலை இளந்திரையன் இவ்வாறு எழுதுகிறார் ‘‘சாதாரணமாகத் திறனாய்வுத் துறையில் காணக்கிடைக்காதவை”.

”திருமணத்தார் எழுத்தில் குறிப்பிட்டுக் கூற வேண்டிய மற்றொன்று, அவர் இடை இடையே பொருத்தமாகக் கையாளும் பழமொழிகளாகும். அவருடைய இந்த நடை. அவரது எழுத்தில் தாய் மண்ணின் மணம் உயிர்ப்பிணைப்பாய்ப் பிணைத்து கிடப்பதைக்காட்டுகின்றது, கவிக்குக் காரிகை அல்ல முக்கியம் என்பதை,”தலைச்சள் பிள்ளை பெற்றவளுக்குத் தாலாட்டும்அகமுடையான் செத்தவளுக்கு அழுகையும் தானே வரும்”என்ற பழமொழியால் விளக்குகிறார். இது போலவே தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது”. வெகுஜனவாக்யம்கர்த்தவ்யம்”. “திருடன் இராஜவிழிவிழிப்பானா?” முதலிய பழமொழிகளைப் பயன்படுத்துவதன் மூலம் தமிழ் வாழ்வின்அனுபவச்சாரத்தை இழந்து விடாமல் ஆங்கிலப் பள்ளியைத் தனக்குப்பணியாளாகப் பயன்படுத்தி இருக்கிறார் என்பதை அறிய முடிகிறது.

திருமணத்தாரின் திறனாய்வுப் பணியை இவ்வளவு விரிவாகக்காட்டுவதன் நோக்கம் இரண்டு. ஒன்று, இந்த அளவிற்கு அவரது வேலைப்பாடு சிறப்பாகவும் நுட்பமாகவும் அமைந்து கிடக்கிறது: இரண்டு, சி.சு. செல்லப்பா. ரகுநாதன் முதலியோர் 1918-இல் “கவிதை“ என்ற கட்டுரையை எழுதிய வ.வே.சு. ஐயரை ”இக்காலத்திறனாய்வின் தந்தை” என்று பேசுவதில் பொருந்தமில்லை என்பதைச் சுட்டவும்தான், “அறிவியல் உலகிலேயே இதை இவர் முதலில் கண்டுபிடித்தார்“ என்று கூற இயலாது என்பர். எல்லாமே முன்னோர் முயற்சியின் தொடர் விளைவுதான் என்கிறது இன்றைய அறிவியல் பார்வை. எனவே கருத்துலகிலும் இவர் முதலானவர். இவர் இதற்குத் தந்தை என்று பேசுவதெல்லாம் அகநிலைப் பார்வையின் விளைவுதானே ஒழிய, உண்மை அல்ல என்றும் கூற வேண்டும்.

திருமணம் செல்வக்கேசவராயருக்குப் பிறகு இவ்விடத்தில் குறிப்பிட்டுப் பேசப்பட வேண்டிய திறனாய்வாளர், தனித்தமிழ் இயக்கத்தின் தந்தையெனக் கருதப்படும் மறைமலையடிகள் (1876-1950) ஆவார். இவரும் கல்வியாளர்தான் என்றாலும், இவர் இயக்கம் சார்ந்தவர். பிராமணர் பிராமணரல்லாதார். சைவம் சைவம் அல்லாதார் என்கிற பார்வையை அழுத்தமாகஉடையவர். எனவே அடிகளின் இலக்கிய அணுகுமுறையும் இந்தக் கோணத்திலேயே அமைந்திருக்கின்றது.

முல்லைப்பாட்டு ஆராய்ச்சி உரை (1903), பட்டினப்பாலை ஆராய்ச்சி உரை (1906).சாகுந்தல நாடக ஆராய்ச்சி (1934) முற்கால பிற்காலத்தமிழ்ப்புலவோர் (1936) - ஆகிய நூற்களின் வாயிலாக அடிகளின் திறனாய்வுப்புலத்தை அறிய வாய்ப்புக்கிடைக்கிறது.

முல்லைப்பாட்டிற்கும் பட்டினப்பாலைக்கும் எழுதியுள்ள ஆராய்ச்சி உரைகள் பாடப்பகுதி சார்ந்தவை.நச்சினார்க்கினியர் உரை புரியவில்லையே என்ற மாணவர்களுக்காக எழுதப்பட்டு, அவர்கள் செலவிலேயே வெளியிடப்பட்ட நூல்கள் ஆகும். எனவே அவற்றில் பழைய உரைகாரர்களின் தன்மை இயல்பாகவே காட்சி அளிக்கிறது. கூடவே ஆங்கில மொழி நூலறிவும் இடை இடையே புலனாகிறது. வில்லியம்மிண்டோ (William Minto) என்பாரின் திறனாய்வுக் கருத்துக்களைப் பின்பற்றி தன் “ஆய்வுரை“ செய்வதாக அடிகளே முன்னுரையில் அறிவிக்கிறார். அடிகளின் சாகுந்தல நாடகம் பற்றிய ஆராய்ச்சி, அவரது நூற்புலமைக்கும், நாடகம் பற்றிய நுட்ப

மான அறிவிற்கும் எடுத்துக்காட்டாய் நிற்கின்றது. சேக்சுபியரையும் காளிதாசனையும் ஒப்பிட்டுப் பேசிய பிராமண அறிஞர் ஒருவரின் பேச்சில் ஆர்வமுற்று, சேக்சுபியரைப் பற்றிய திறனாய்வு நூல்களை எல்லாம் கற்று, அத்திறனாய்வுக் கருத்துக்களின் அடிப்படையில் காளிதாசனையும் இளங்கோவையும் விளக்க முயன்றுள்ளார்.

அடிகளிடம் ஆழமாகப்பதிந்திருந்த ”தம் மேம்பாட்டுக் கொள்கை““ காரணமாக, அடிகளின் இலக்கிய விளக்கம் அடிப்படையில் உரைகாரர்களின் குணத்தைப் பெற்றிருக்கிறது. எனவேதான் இ.மறைமலை அடிகளின் திறனாய்வு,”பழைய உரையாசிரியர்களின் போக்கிற்கும் புதிய திறனாய்வுப்போக்கிற்கும் இடைப்பட்ட நிலையில் விளங்குகிறது”என்கிறார்.கல்வி நெறியாளர்கள் பெரும்பாலோர் பழந்தமிழ்இலக்கியங்களைத் தங்களின் பேசு பொருளாகக் கொண்டனர். அடிகள், மு.வ.முதலிய “இக் கால இலக்கிய” ஆக்கங்களில்ஈடுபட்டவர்கள் கூட,தங்களின் தொழில் காரணமாகப்பழந்தமிழ் இலக்கியம் பற்றி அதிகம்சிந்தித்தனர். அதனால் இவர்களைக் க. நா. சு., கைலாசபதி முதலியோர் “பண்டிதர்கள்“ என்றும், இவர்கள் திறனாய்வைப்“பண்டிதத் திறனாய்வு” என்றும் குறிக்கின்றனர். கைலாசபதி,இவர்களின் திறனாய்வு, ”நவீன திறனாய்வு முலாம்பூசப்பெற்ற புதிய விருத்தியுரையே”. என்கிறார்.இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்களுக்கு முதன்மை இடம் அளித்து வந்த இக்கல்வியாளர்களிடையே இரண்டு பெரும் பிரிவுகள் உருவாயின, சங்க இலக்கியச்சார்பானவர்கள். கம்பராமாயணச்சார்பானவர்கள் என்ற இரு பெரும் பிரிவு இன்றுவரை விளங்குவதற்கு மறைமலையடிகளின் எழுத்துக்கள்இதைக் காரணமாக காண வேண்டும்.

இந்திய விடுதலை இயக்கம் வலுப்பெற்றபோது, தமிழ்நாட்டில் பிராமண இயக்கமும் வலுப்பெற்றது, சித்தர்கள், வள்ளலார், சுந்தரம் முதலியோரால் வளர்த்தெடுக்கப்பட்டபிராமண எதிர்ப்பு இயக்கம் அதன் உச்சகட்டவடிவமாக 1916-இல் “நீதிக்கட்சி“ பேரில் அரசியல் வடிவம் இந்தப்பிராமண எதிர்ப்பு உருவாகிவிட்டது என்றும், தென்னிந்திய என்பது, அன்றிலிருந்தே ஆகியோர்க்கு இடையே ஏற்படும் முரண்பாடாகவும் தேவையாகவும் இயக்கம் கொண்டிருக்கிறது என்றும் கருதுவர்.பர்ட்டன்ஸ்டெயின் (Burton Stein) இந்த இந்நூற்றாண்டில் வளர்ந்த இந்திய விடுதலை இயக்கத்திலும் தொடர்ந்தது, பார்ப்பனவழக்கறிஞர்களின் நிறுவனமாக இந்திய காங்கிரசு இயங்குகிறது என அதை வெறுத்து, அக்கட்சியில் இருந்து வெளியேறிய தியாகராசசெட்டியா டி.எம். நாயர், சி. முதலியார் முதலியோர் நீதிக்கட்சியைத் தொடங்கினர். 1925-இல் காரணத்தால் காங்கிரசு கட்சியில் பெரியாரால், பார்ப்பனர் அல்லாதார் இயக்கம் மேலும் வேகமாக வளர்ந்தது.

கல்வியினாலும், தொழிற் சமூக வளர்ச்சியினாலும் தோன்றிய படித்த, வகுப்பினர் இவ்வியக்கம் வளர்வதற்கு வாய்ப்பாக அமைந்தனர். மேலும் அமைப்பிலும், அரசியல் வாழ்விலும், கல்வி, சமயம் முதலிய பண்பாட்டுத் துறைகளிலும் பார்ப்பனர்கள் நிலையில் இருந்ததும், வடமொழிக்கு அளித்த முதன்மையும், இவ்வியக்கம் வளர வாய்ப்பாயிற்று எனலாம். பார்ப்பனர்க்கு எதிரான இவ்வியக்கம் அடிப்படையில் திராவிடர் இயக்கமாகவும், அடிப்படையில் சைவசமய அடிப்படையில் எழுச்சிக்கான இயக்கமாகவும், மொழி அடிப்படையில் தனித்தமிழ் இயக்கமாகவும்,

அடிப்படையில் தன்மான இயக்கமாகவும் பன்முகப்பட்டு விரிந்தது வளர்ந்தது. இவ்வாறு தோன்றிய இத்திராவிட இலக்கியத்தின் பழத்தமிழ் இலக்கியங்கள் வெளிப்பட்டன. சங்க இலக்கியங்களே திறனாய்வு செய்வதிலும் தூய தமிழினத்திற்கான இலக்கியம் என்றும், இடைக்காலத்தில் கம்பராமாயணம் முதலிய இலக்கியங்கள் வடமொழி.ஆதிக்கத்தின் விளைவு என்றும் கருதப்பட்டன. இராமாயணக்கதை, ஆரியர்க்கும் திராவிடர்க்கும் நடந்த போராட்டத்தை விளக்கும் கதையாகக்கருதப்பட்டது. இராமன் ஆரியனாகவும், இராவணன் திராவிடனாகவும் விளக்கம் பெற்றனர். இராவணனின் வீழ்ச்சி, சூழ்ச்சிக்குப்பலியான தமிழர்களின் வீழ்ச்சியாகவும் விளக்கம் பெற்றது. இந்தப் பார்வையில் பல நூல்கள் வெளிவந்தன. பூரணலிங்கம் பிள்ளை "இராவணப்பெரியார்" என்ற நூலை எழுதினார். இந்நூலில் தாடகை. ஆரியரிசிகளுக்குஎதிராகப் போராடிய திராவிட மகள். அனுமன் திராவிட வீரன். சகோதரத் துரோகி வீடணன். தமிழர் போர் முறைப்படிதான் இராவணன் சீதையைத் தூக்கினான். சீதையும்கூடத்திராவிடப்பெண்தான் முதலிய கருத்துக்கள் வலியுறுத்தப்பட்டன. இத்தகைய போக்கில் புலவர் குழந்தையின் ”இராவண காவியம்“பா. வே. மாணிக்கநாயக்கரின் ”கம்பன்புளுகும் வால்மீகி வாய்மையும்“. சி. என். அண்ணாதுரையின் ”கம்பரசம்’ முதலிய நூல்கள் வெளிவந்தன-இந்நூல்களுக்கு மறுப்பு நூல்களாக, கு.பாலசுந்தரமுதலியாரின் ”கம்பரச ஆராய்ச்சி"" ரா, பி. சேதுப்பிள்ளையின் “”அரக்கர் தமிழரா?" முதலிய நூல்களும் வெளிவந்தன. ரா, பி. சேதுப்பிள்ளை அரக்கர்களை ஆரியர்கள் என்றும், இராமனைத்திராவிடன் என்றும் கருதினார். இத்தகைய பார்வை, சிலப்பதிகாரம் உள்ளிட்ட பழந்தமிழ் இலக்கியங்கள் மேலும்சிலரால் பாய்ந்தது: வெ.சு.சுப்பிரமணியஆச்சாரியாரின் ”சிலப்பதிகாரமும்ஆரியக்கற்பனையும்? (1951) என்ற நூலில், “நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்று ஐயர் ஒருவர் புகழ, அவரைப் பின்பற்றிய போலித்தமிழரும் புகழ்வாராவினர், ஆரியப்பண்பாட்டினைப் பரப்பும் நூலை அவர்கள் புகழாது வேறுயார்தான்புகழுவது?"என்று எழுதினார். மேலும் இவர் பொற்கொல்லர் வகுப்பைச்சார்ந்தவர் என்பதால், பொற்கொல்லனைத் திருடனாகக் காட்டிஉள்ள சிலப்பதிகாரத்தை வெறுக்கிறார் என்றும், சர். ஆர். கே. சண்முகஞ்செட்டியா வணிகவகுப்பைச்சார்த்தவர் என்பதால் சிலப்பதிகார ஆராய்ச்சியில் ஈடுபட்டு. அதைப் பாராட்டுகிறார் என்றும் அன்றைக்குப் பலர் கருதியதாக, பெரியார்அந்நூலுக்குத் தான் எழுதிய முன்னுரையில் குறிக்கிறார்.மேலே கண்ட போக்கிற்கு ஏற்ப, தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கிய (1916) மறைமலையடிகளும் தம்முடைய சைவசமயம்பற்றாலும், தனித்தமிழ்ப்பற்றாலும் திராவிட இன உணர்வினாலும் சங்க இலக்கியத்தை உயர்வாகவும், கம்பராமாயணத்தைத் தாழ்வாகவும்மதிப்பிட்டு உள்ளார். கம்பனின்கவிதையில் இயல்பான தன்மை இல்லை என்றும், சங்க இலக்கியக்கவிதைகள்தாம் உண்மையான கவிதைகள் என்றும் மதிப்பிடுகிறார். இவருக்கு நேர் எதிரான நிலைப்பாட்டுடன் மிகத்தீவிரமாகச் செயல்பட்டவர் இரசிகமணி டி.கே.சிதம்பரநாதமுதலியார் ஆவார். மறைமலையடிகள் தன் கருத்தை விளக்க எடுத்துக் காட்டும் அதே பாடல்களை இவரும் எடுத்துக் கொண்டு, கம்பராமாயணத்தின் பெருமையை விளக்கினார். சங்க இலக்கியங்களில் பாவம் இல்லை. உணர்ச்சி என்றும், கம்பராமாயணத்தைத் தள்ளிவிட்டு, இல்லை சங்க இலக்கியத்தைச் சுவைப்பது ஆட்டிடத்துப்பால்மடி இருக்க. அதை விட்டு வீட்டுக் கழுத்தில் தொங்கும் அதரைச்சுவைத்துக் கொண்டிருப்பதைப்போன்றது என்றும் எழுதினார் டி. கே.

சி-யின் இலக்கியப் பார்வையைப் பின்னால் விரிவாகச் காணலாம். இந்த இடத்தில் இச்செய்திகளை எல்லாம் இவ்வளவு விரிவாகக் காண்பதற்குக் காரணம், தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் இத்தகைய போக்கு இன்றுவரை தொடர்வதற்கான காரணத்தையும், அதற்கான வேர் எத்தகையதுஎன்பதையும் விளங்கிக் கொள்வதற்காகத்தான்.

அ)சங்க இலக்கியங்கள் X கம்பராமாயணம்

ஆ)தேவாரம் X நாலாயிரத் திவ்விய

இ)பாரதிதாசன் X பாரதியார்

ஈ)மு.வ / அகிலன் / செகசிற்பியன் / X புதுமைப்பித்தன் / கு.பா.ரா / மௌளி/ லா.ச.ரா/சுந்தரராமசாமி/ பிரமிள்

இத்தகைய எதிர்நிலைவாசகர்கள், திறனாய்வாளர்கள் ஆகியோர் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் செயல்பட்டுக்கொண்டிருப்பதை இன்றும் காணமுடிகிறது. கட்சி கட்டிக் கொள்ளும் குழு மனப்பான்மை, பண்பாட்டுத்தளத்தில் தீவிரமான இயக்கம் மேற்கொள்ளும்போது, உண்மையிலேயே தரமான இலக்கியங்கள் தலை காட்ட முடியாமல், வளர முடியாமல் போய்விடக்கூடும் அவலம் நேர்கிறது. மேலும் அசோகமித்திரன் சுட்டிக்காட்டியுள்ளது போல, “தமிழில் தமிழ் மொழியினர்அனைவராலும் சிறந்த எழுத்தாளர் என்று ஏற்றுக்கொள்ளப்படுபவர் ஒருவர் கூடக் கிடையாது… தமிழ் மொழியினர்க்குச் சிறந்த எழுத்தாளர் யார் என்று இனம் கண்டு பிடிக்கும் ஆற்றல் கிடையாது. அதாவது உண்மையான பார்வை கிடையாது” என்று கூறும் நிலை ஏற்படுகிறது. வேர எந்த இந்திய மொழியினரிடமும் அவர்களுடைய சிறந்த எழுத்தாளர் யார் என்ற கேள்விக்கு ஏழெட்டுபெயர்களாவது, அந்த மொழியினர் பலர் தரும் பட்டியல்களில் பொதுவாக இருக்கும்-ஆனால் தமிழ் மொழியினர் தரும் பட்டியல்களில் மட்டும் பொதுவான ஒருவரைக் காணவே முடியாது என்று சாகித்யஅக்கெடெமி சார்ந்த அதிகாரி ஒருவர் கூறியுள்ள கருத்தும் தமிழர்தம் இலக்கியவிழிப்புணர்வின் தாம் இருக்கும் நிலையை எடுத்துக்காட்டுவதாக இருக்கிறது. சரியான விமர்சனம் இல்லாத தனிமனிதனும் சரி, ஒரு சமூகமும் சரி. தானாகவே அழிந்து போவர். தமிழிலக்கியம் காப்பாற்றப்படவேண்டுமென்றால் சரியான திறனாய்வுகள் வேண்டும்.

திறனாய்வு இல்லாத இடத்தில், இலக்கியமும் தன் இருப்பை இழந்து விடுகிறது-இதுவரலாறு.திருமணம் செய்வக்கேசவராயர் முதலியாரையும், மறைமலையடிகளையும், இன்றுவரை நிலவுகின்ற கல்விநெறித்திறனாய்வாளர்களின் இரண்டுபட்டபோக்கை அடையாளம் காட்டுபவர்களாக எடுத்துக் கொள்ளலாம். திருமணம் செல்வக்கேசவராயர் போல, சங்க இலக்கியம், கம்பராமாயணம் என்ற வேறுபாடு பார்க்காமல் ரா. பி. சேதுப்பிள்ளை, அ. ச. ஞானசம்பந்தன், எஸ். இராமகிருட்டிணன், சுப்புரெட்டியார் முதலியோர் இலக்கியம் என்ற அளவில்

பழங்கிலக்கிய நூல்களை அணுகினர், மறைமலையடிகள் போல தங்கள் காலத்துஅரசியல் இயக்கம் அளித்த கருத்துக்களின் தாக்கத்திற்கு ஏற்ப சோமசுந்தரபாரதியார், முத்துசிவன், மு. வரதராசனார், அ.சிதம்பரநாதன்செட்டியார், சாலை இளந்திரையன், தமிழண்ணல்,மரா.போ. குருசாமி, ந.சஞ்சீவி, வ.சுப.மாணிக்கம், சோ.ந.கத்தசாமி, க. ப. அறவாணன் முதலியோர் பழம்பெரும் நூல்களை விளக்கினர்.

தமிழ்க்கல்வியாளர் நடுவில், தெ.பொ.மீ வழி வருபவர்கள், மு.வ, வழி வருபவர்கள் என்ற பாகுபாடு நிலவுவதைக் காணலாம். மொழியியல், சமூகவியல் முதலிய மானுட அறிவியல் அடிப்படையில் இலக்கியத்தை விளக்க முயல்பவர்கள்.தெ.பொ.மீ வழி வருபவர்கள் என்றும், திராவிட இயக்கச் சிந்தனை அடிப்படையில் எழுதுபவர்கள்.மு. வ. வழி வருபவர்கள் என்றும் சுட்டுகிற மரபு இன்னும் தொடர்கிறது. 80களுக்கும் பிறகு கைலாசபதி வழி வருபவர்கள் என்ற மரபும் உருவாகி உள்ளது. அதை விரிவாகப் பின்னால் காணலாம்.இக்கால இலக்கியம் பற்றிய திறனாய்வில் பெரிதும் ஈடுபாடு கொண்ட மா. இராமலிங்கம், தா.வே. வீராசாமி, முத்துசண்முகம்பிள்ளை தண்டபாணி, க.வெங்கட்ராமன், மோகன், சொக்கநாதன், சண்முக சுந்தரம், இ. முறைமலை முதலியோரையும் மேலே வகுத்துள்ள மூன்று பிரிவுகளுக்குள் அடக்க இடம் இருக்கிறது.

கல்விநெறியாளர்கள் வெளியிடுகின்ற திறனாய்வு நூல்கள் தான் நிறைய வெளிவருகின்றன. வாணிபநோக்கிலும், தாங்கள் சார்ந்த தொழில் அடிப்படையிலும் வேகமாகப் புத்தகங்களை எழுதிக்குவிக்கின்றனர். அதுவும் 80-களுக்குப் பிறகு, பிஎச்.டி முதலிய பட்டப் படிப்புப் பெருகிய பிறகு, தங்கள் பெயரில் குறைந்தது இரண்டு மூன்று புத்தகங்களாவது வெளிவந்திருந்தால் தான்கல்வியுலகில் மதிப்பு என்ற மாயை உருவான பிறகு, க.நா.சு கூறியது போல "பற்றி நூல்கள்" நிறைய வெளிவருகின்றன. எனவே இக்கல்வியாளர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாக எடுத்துக் கொண்டு அவர்களது திறனாய்வு நூல்களை விரிவாக விளக்குவதற்கு இடம் இருக்கிறது. கல்வியாளர்கள் பலர், பல தளங்களில் இயங்கி வருகின்றனர். அவர்கள் அனைவரையும் ஆய்வுக்கு உட்படுத்திக் கல்வியாளர்களின் திறனாய்வுப்போக்கைமதிப்பிட்டு அறிந்து கொள்ள முயறுதல் தமிழ் இலக்கியத்திறனாய்விற்குப் பலம் தரும். கைலாசபதி போல எல்லாம் ஒரே அச்சில்வார்த்தவார்ப்புகள் என்று எளிதாகத்தள்ளி விட நினைப்பது இலக்கிய வளர்ச்சிக்கு நல்ல தல்ல. கலை இலக்கியத்தளத்தில் கல்வியாளர்களின் பங்களிப்பு அந்த அளவிற்கு எளிதானதல்ல. புறக்கணிக்கத்தக்கதல்ல.

## கல்விநெறியாளர்களும் திறனாய்வும்

கல்விநெறியாளர்கள் தொழில் அடிப்படையில் மாணவர்கள் நடுவில் இயங்குவதால், அவர்களுடைய திறனாய்வுக் கட்டுரைகள் விளக்கமுறைத்திறனாய்வாக, ஒழுக்கம் சார்ந்தவையாக-பழைய உரைகளின் குணத்தைப் பெற்று விளங்குகின்றன. அதுபோலவே பாடத்திட்டத்திற்கு ஏற்ப இயங்க வேண்டிய நெருக்கடி ஏற்படுவதால் வெளியே இருப்பவர்கள் போக, சுதந்திரமாக

எழுதமுடியாத நிலையில், எல்லாக்கட்டுரைகளின் போக்கும் ஒரே தன்மையுடையவைகளாக அமைத்து விடுகின்றன.

உலகம் முழுவதுமே கல்வியாளர்களின் உளவியல் கூறாக இயங்கும் ”தான் கற்றவன். நான் அறித்தவன்” என்ற தன்முனைப்புக் காரணமாகக் கல்வியாளர்கள், நாங்கள் கற்ற நூல்களில் இருந்து மேற்கோள்களைக் கொட்டி எழுதுவதில்ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர். எனவேதான் இவர்களின் திறனாய்வைப் “பாண்டிதியத்திறனாய்வு” என அழைக்கலாம் என்கிறார் கைலாசபதி. ஆனால் அதே நேரத்தில் தாங்கள் வாழ்ந்து பெற்ற அனுபவங்களைத் தங்கள் திறனாய்வு எழுத்தில் காட்டிக் கொள்வதே இல்லை. தங்களின் பதவி உயர்வு, மாதச்சம்பளவாழ்க்கை, அரசாங்கம் அளிக்கும் பணத்தில் கருத்தரங்கு நடத்தும் வசதிகள், புத்தகம் வெளியிடவும் விற்கவும் அமைந்துள்ள பல எளிய பல வழிகள்.... முதலியவை எல்லாம் அவர்களைக் கட்டுப்படுத்துகின்றன. எனவே தான் கல்வியாளர்களில் பெரும்பாலோர் பிரச்சினைகள் முளைக்க வாய்ப்புள்ள தற்காலஇலக்கியங்களை விடப் பழம்பெரும் இலக்கியங்களைப் பற்றிப் பேசவே இன்றும் விரும்புகின்றனர். தற்கால இலக்கியங்களைப் பற்றி எழுத முனைந்த சில கல்வியாளர்களும் பிரச்சினை ஏற்படாமல், யார் வாயிலும் நிற்காமல் எப்படி எழுதுவது என்ற திறமையைத் தெரிந்து வைத்துள்ளனர். மேலும் சிலர், பிரபலமாகியுள்ள தற்காலஎழுத்தாளர்களைப் பற்றி எழுதுவதன் மூலம், தாங்கள் பிரபலமாகிக்கொள்வது, வாணிகரீதியாக வெற்றி பெற்றுக்கொள்வது என்ற நோக்கில் ஈடுபடுகின்றனர். வேறு சிலர் அரசியலில் செல்வாக்குள்ள எழுத்தாளர்களைப் பற்றி எழுதி, அரசியல் செல்வாக்குப் பெற்றுப் பதவிஉயர்வு பெறத்திறனாய்வின் பெயரைப் பயன்படுத்துகின்றனர்.

கல்வியாளர்களின் இத்தகைய நடுத்தர வர்க்கக் குணம், இலக்கியத்திறனாய்வை இரத்தமும்சதையோடும் கூடிய உயிரோட்டமுள்ள சமகால வாழ்க்கை பற்றிய விமர்சனத்திலிருந்து, மதிப்பீடுகளிலிருந்து அறுத்து விடுகிறது. சுந்தரராமசாமி குறிப்பிடுவது போல, இலக்கியத்தில் என்னென்ன?” என்று எண்ணத்தெரிகிற அளவிற்கு “எதற்காக” என்ற வினாவை எழுப்பப் பயந்து. அந்த வினாவையே கல்வி நிலையங்கள் கொன்று விடுகின்றன. இறுதியில் கல்வியாளர்கள் எழுத்தில்மிஞ்சுவது வெறும் விவரங்களே. அதனால் சுந்தரராமசாமி போன்ற படைப்பாளிகளால், கல்வியாளர்களின் எழுத்துக்கள் “அனுபவத் தரித்திரம்“ மிக்கவை என்றும் ”விமர்சனமொண்ணைத்தனமும் ஆங்கிலமோகமும் மலட்டுத்தனமும்” நிறைந்தவை என்றும் குற்றஞ்சாட்டுவதற்கு வாய்ப்பாக அமைகின்றன..

கல்வியாளர்களின் மற்றொரு குணமாக அமைவது கோட்பாட்டு நூல்களை உருவாக்குவது ஆகும். இலக்கியத் திறனாய்வு ஒரு பாடமாக, பி.ஓ.எல் (ஆனர்சு) பட்டப் படிப்பிற்காக 1941-இல் கொண்டு வரப்பட்டது. சென்னை, பச்சையப்பன்கல்லூரியில் மட்டும் இப்பாடம் நடத்தப்பட்டது. பாடத்திட்டத்திற்கு ஏற்ப, தாங்கள் தயாரித்த குறிப்புக்களைப் புத்தகமாகக் கல்வியாளர்கள் வெளியிட்டனர். மு.வரதராசனாரின் ‘இலக்கியத்திறன்’,‘இலக்கிய மரபு’ அ. ச. ஞானசம்பந்தனின் ‘இலக்கியக்கலை’ ஆகிய நூல்கள் இலக்கியத்தில் உணர்ச்சி, வடிவம், கற்பனை, உணர்த்துதல்

ஆகிய கூறுபாடுகளையும் ,காவியம் , நாடகம் , புதினம், முதலிய இலக்கிய வகைமைகளையும் ஆங்கில நூலாசிரியர்களை தொடர்ந்து சஞ்சீவி “இலக்கியஇசங்கள். த.ஏ.ஞானமூர்த்தியின் ‘இலக்கியத்திறனாய்வு’, திசுப்புரெட்டியாரின் ‘கவிதைஅனுபம்’ மா. இராமலிங்கத்தின் ‘நாவல் இலக்கியம்’ வை. சச்சிதானத்தத்தின் ‘ஒப்பிலக்கிய அறிமுகம்’. க.ப.அறவாணனின் ‘கவிதையின் உடல் உள்ளம்’ டாக்டர் தமிழண்ணலின் ‘இலக்கிய அறிமுகம்’திருமதி முருக சச்சிதிதானத்தின் ‘மேலைஇலக்கியத் திறனாய்வு’ ஜே, நீதிவாணனின் ‘நடையியல்’ முதலிய நூல்கள் தோன்றின, மேலும் இக்காலத்தில் பெரிதும் பேசப்படும் நாட்டுப்புறவியல் பற்றி, சக்திவேல், தே, லூர்து ஆகியோர் எழுதியுள்ள நாட்டார்வழக்காற்றியில் பற்றியுள்ள கோட்பாட்டு நூல்கள் ஆகியன அனைத்தும் கல்வியாளர்களால் கொண்டுவரப்பட்டவையே ஆகும்.

கல்வியாளர்களின் இத்தகைய ஆரம்பகால நூல்கள் சிலவற்றில் குறைகள் காணக்கிடக்கின்றன. தங்களுக்கென ஒரு கண்ணோட்டமின்றி, ஆங்கில மேற்கோள்களை ஒரு கலவையாகப் பயன்படுத்தியுள்ளனர். இலக்கியம் பற்றிய கண்ணோட்டத்தில் இவர்களுக்கு டி.எஸ். எலியட்டின் மேற்கோளும் ஒன்றுதான். ஹட்சனின் மேற்கோளும் ஒன்றுதான், தங்கள் வசதிக்கு ஏற்ப, எந்தவிதமான தர வேறுபாடுமின்றி ஆங்கிலத் திறனாய்வாளர்களின் கருத்துக்களைப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர்

‘இலக்கியக் கலை’ எழுதிய அ.ச.ஞா அவர்களே, இன்று அந்நூலை எரித்துவிடலாம் என்று கூறும் அளவிற்கு பல குற்றங்களுடன் இத்தகைய நூல்கள் வெளிவந்துள்ளள. மு.வ.உட்பட திறனாய்வுக்கான கலைச்சொல்லாக்கத்தில் புரிந்துள்ள தவறுகளைச் சிவத்தம்பிசுட்டிக் காட்டியுள்ளார். மேலும், இந்திய நாட்டு ஆய்வாளர்களிடம் கோட்பாடுகளைப் பற்றிய புரிதல் குறைபாடு உடையதே என்ற கருத்து பரவலாக நிலவுவதை மருதநாயகம் சுட்டிக் காட்டியுள்ளார். மேலும் தமிழ்த் திறனாய்வு உலகில் கோட்பாட்டு வறுமை நிலவுவதால்தான், கல்வியாளர் கட்டுரைகள் எல்லாமே ஒன்று போல தோற்றம் அளிக்கிறன என்றும், புதிய இலக்கியம் (சிறுகதை புதினம் முதலியன) வளர்ச்சி பெற்ற அளவிற்கு, அது தொடர்பான கோட்பாடுகள் தமிழ்ச்சூழலில் பரிச்சயமாக்கப்படவில்லை என்றும் கருதுவதற்கு இடம் இருக்கிறது.இவ்வளவு குறைபாடுகள் இருந்தாலும், கல்வியாளர்களின் இத்தகைய நூல்கள்தாம், தமிழில்திறனாய்வுத்துறை ஒரு தனித்துறையாக விளங்குமளவிற்குத் துணைபுரிந்துள்ளன என்பது உண்மை. மேலும் முத்துசண்முகம் கூறுவது போல, இலக்கணக்குறிலும் சிலேடை நயத்திலும் இலக்கியச் சுமை கொண்டிருந்த தமிழ்ச்சூழலை இயக்கக்கோட்பாட்டு நூல்கள் அதிமாக்கியுள்ளன.

மேலும் ஆங்கில இலக்கியம் கற்றும் தமிழில் எழுத வந்த, வருகின்ற கல்வியாளர்களின் திறனாய்வும் பார்வையும் தனியாக ஆராயஇடம் இருக்கிறது. அ. சீனிவாசராகவன், ரா.ஸ்ரீ, தேசிகன் எண். இராயக்குட்டிணன், கா செல்லப்பன்,பாலா,சச்சிதானந்தம், தருமன் ,தோதாத்ரி. மருதநாயகம், பிரம்மராஜன்,வி.ஆர்.எம்.செட்டியார்,மார்க்கபந்துசர்மா,முதலியோரின் திறனாய்வும் பணிகள்

குறிக்கத்தக்கவையாகும். இவர்கள் ஓரளவுகோட்பாட்டு அடிப்படையில் இலக்கியங்களை அணுகியுள்ளனர்.மேலும் கல்வியாளர்களின் இலக்கியத் திறனாய்வு பற்றிய மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழ்த்திறனாய்வு வளர்ச்சிக்குப் பெரிதும் துணை நின்றுள்ளன. இதில் குளோறியாசுந்தரமதி மொழிபெயர்த்த “இலக்கியக்கொள்கைகள்” என்ற நூல் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அன்றியும், க.நா.சு. சுந்தரராமசாமி ஆகியோர் மதிக்கின்ற சிறுபத்திரிக்கைச்குழலில் இயங்குகின்ற கல்வியாளர்கள் பலர். சிறப்பாக இயங்கி வந்துள்ளனர். இன்றும் இயங்கி வருகின்றனர்.கைலாசபதி. நுஃ.ங்மான், தமிழவன், ஞானி, அ. மார்க்ஸ், கேசவன், ராஜ்கௌதமன், ந.சிவசுப்பிரமணியன், எம்.டி.முத்துக்குமாரசாமி முதலியோர் இத்தகையவர்களாவர். எனவே அனைவரையும் பண்டிதர்கள் போல எனக்கொண்டுவேறுபாடு இல்லாமல், தீண்டத்தகாதவர்களாகப் பார்க்கின்ற பார்வையை இனியும் தொடரத் தேவையில்லை.கல்வியாளர்கள் கல்வியாளர் அல்லாதார் என்ற பிரிவினை, இன்றும் தமிழ் இலக்கியத்திறனாய்வின் வளர்ச்சியைத்தடுக்கும் சக்தியாகச் செயல்பட்டுக்கொண்டிருப்பதை நீக்கும் வழிமுறைகளைக் கண்டாக வேண்டும். கல்வியாளர்களின் செயல்பாட்டை இன்றைய சமூக அமைப்பின் விளைவாகக் கண்டு கொள்ளும்போது, அவர்களையும் உண்மையின் பக்கம் நிற்பவர்கள் பயன்படுத்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

கல்வியாளர்களும் பத்திரிக்கைகளும் கல்வியாளர்கள், தங்கள் காலத்தின் விளைச்சலான, தமிழ்ச்சமூகத்தின் இறுக்கத்தை உடைத்து உலுக்கிய பத்திரிக்கைகளைப் பயன்படுத்தவும் தவறவில்லை, சென்னைப் பல்கலைக்கழகத்தினரின் ’தமிழாய்வு’மதுரைப்பல்கலைக் கழகத்தினரின் ‘வையை,’ அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தினரின் ‘மொழியியல்,’ ‘நாட்டுப்புற இயல்,’ உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தினரின் ‘தமிழியல்’, தஞ்சைத்தமிழ்ப்பல்கலைக் கழகத்தினரின் ‘தமிழ்க்கலை’ முதலிய இதழ்களில் கல்வியாளர்களின் திறனாய்வுகள் வெளிப்படுகின்றன. மேலும் ‘ஞானபோதினி,’ ‘தமிழபிமானி,’ ‘செந்தமிழ்மலர்’, ‘செந்தமிழ்ச்செல்வம்,’ ‘தமிழர் போதினி’, ‘செந்தமிழ்ப்பாது.’ ‘தமிழரசு’, ‘செந்தமிழ்’, ‘தமிழ்ப்பொழில்’, ‘செந்தமிழ்ச்செல்வி’, ‘அறிவுக்கடல்’, ‘சித்தாத்ததீபிகை’, ‘தமிழ்நாடு’, ‘குறள்நெறி’, ‘தென்மொழி’, ‘முப்பால்ஒளி’, ‘முல்லைச்சாரம்’ ‘பொன்னி’,‘செங்கோல்’,’முதல்மொழி’,’அறிவு’,’கைகாட்டி’முதலிய இதழ்களில் மரபார்ந்த கல்வியாளர்களும், எழுத்து, தாமரை, படிகள், இயக்கியவெளிவட்டம், ஆராய்ச்சி, பரிமாணம், நிகழ், இனி, காலச் சுவடு, மனஓசை முதலிய இதழ்களில் இலக்கியம் பற்றி எழுதுகின்ற கல்வியாளர்களும் தங்கள் திறனாய்வு எழுத்துக்களை அச்சேற்றினர். எனவே பத்திரிக்கைகளில் கல்வியாளர்கள் எழுதி உள்ள இலக்கியம் பற்றிய எழுத்துக்களைத் தனியே ஆராய்ந்து அவற்றின் ‘குணங்களை’ வெளிப்படுத்துவதற்குவாய்ப்பு இருக்கிறது.

மேலும் கல்வியாளர்கள் அரசு சார்ந்த நிறுவனங்களில் செயல்படுவனதால், அவர்களுக்கு அரசு செலவிலேயே விலை உயர்ந்த புத்தகங்களோடு தொடர்புகொள்ளவும் தூரத்தில்

இருக்கின்ற துறைபோனவல்லுநர்களோடு கலந்துரையாடவும் வாய்ப்பு இருப்பதால் விவரங்களை எளிதாகத் தந்துவிட முடிகிறது. “கருத்தரங்குகள், பலபட்டறைகள், புத்தொளிப் பயிற்சிகள் நடத்தித் திறனாய்வியல் பற்றிய விசாரணைகளில் தொடர்ந்து ஈடுபட முடிகிறது. எனவே கல்வி யாளர்களும், வெளியே இலக்கியம், கலை, திறனாய்வு என்று தன்னார்வத்தோடு இயங்குகின்றவர்களும் இணைந்தால் தமிழிலக்கியத்திறனாய்வை ஒருபடி மேலே அழைத்துச் செல்லலாம்.

## ஈ)அழகியல் வாதத் திறனாய்வு

இத்தலைப்புத், தமிழ்ச்சூழலில் பலவாறு சுட்டப்படும். ஆனால் அடிப்படையில் ஒன்றுபடும். திறனாய்வுத் தன்மைகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. இரசனைமுறைத் திறனாய்வு. வடிவ இயல் திறனாய்வு, மனப்பதிவுமுறைத் திறனாய்வு, வெளியீட்டுமுறைத் திறனாய்வு. உள்வட்டத் திறனாய்வு, பகுப்புமுறைத் திறனாய்வு எனக்குறிக்கப்படும் அனைத்தையும் (இவைகளிடையே அழுத்தம் தந்து பேசுவதில் தர வேறுபாடு இருந்தாலும், இவைகள் அனைத்தும் இறுதியில் கலையழகிற்கு முதன்மை கொடுத்துப்பேசுவதால்இத்தலைப்பின் கீழ் காண்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.) இக்காலத்தமிழ்த் திறனாய்வு இத்தகைய திறனாய்வுப்பார்வைகளால் பெரிதும் வளர்ந்தது. இத்தகைய திறனாய்வுகளில்ஈடுபட்டோர் பலர் சிறுகதை, புதினம் , புதுக்கவிதை ஆகிய இக்கால இலக்கியத்தை ஆக்குபவர்களாகவும் இயங்கிப், படைப்பு அனுபவத்தில் உயிர்கலந்து அழகியல் சுவையைத் தேடி அலைந்தவர்கள் என்பதால், இலக்கியத்திறனாய்வில் தீவிர ஈடுபாட்டுடன் செயல்பட்டனர். கல்வியாளர் களுக்குக் காணக்கிடைக்காத சுதந்திரம், இவர்களுக்குக் கண்முன்காணக்கிடந்தது. மேலும் மதப்பிரசங்கிகளுக்குக் கேட்பவர்களை ஏற்கனவே மத நிறுவனங்கள் ஆயத்தப்படுத்தி வைத்திருப்பது போல, கல்வியாளர்களுக்கும் வாசகர்கள் ஆயத்தமாக அமைந்து கிடக்கிறார்கள். ஆனால் வெளியே இயங்கும், மேற்கண்ட திறனாய்வாளர்களுக்கு வாசகனையும் தேடி உருவாக்க வேண்டிய கடும்பணி இருப்பதால், இவர்களின் எழுத்தில் போராட்டக் குணமும் தீவிரமும் அருமையும்ஆழமும் இயல்பாகவே அமைந்திட வாய்ப்பு ஏற்படுகிறது.வீச்சு நிறைந்த இத்திறனாய்வுகளின் தன்மைகளைக் காண்பதற்குக் குறிப்பிட்ட சிலரின் திறனாய்வு எழுத்துக்களை மட்டும், அவைகளின் காலம், சிறப்பு, விரிவான செல்வாக்குக் கருதி விரிவாகக் காணலாம். வ.வே.சு.ஐயர்,டி.கே.சிதம்பரநாதமுதலியார்,க.நா.சு, சி.சு.செல்லப்பா, வெங்கட்சாமிநாதன், தருமுசிவராம் பிரேமிள் ஆகியோரின் திறனாய்வு எழுத்துக்கள், கலை இலக்கியத்தின் அழகியல் கூறுகளைக் கொண்டுள்ளன. வலியுறுத்திப்பேசுவதில் தீவிரம்

வரகனேரிவேங்கடசுப்பிரமணியஅய்யர் (1881-1925)தானே ஒரு படைப்பாளியாகவும், பன்மொழிவல்லுநராகவும், பத்திரிக்கைஆசிரியராகவும், எல்லாவற்றிற்கும் மேலாகத் தன் காலத்திய சமூகத்தின் அரசியல் இயக்கம் அவருடைய திறனாய்வுச் சார்ந்தவராகவும் இயங்கியதால், கட்டுரைகளில் ஆழமும்நுட்பமும் அழகாய் வந்து இணைந்து விளங்கின்றன.

1921-இல் ஒன்பது மாதச் சிறைத் தண்டனை பெற்று “பெல்லாரிச் சிறையில்” இருந்தபோது கம்பராமாயணம் பற்றிய திறனாய்வுக்கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதினார்.1924-இல் பரத்துவாச ஆசிரமம்“ சார்பாக வந்த “பாலபாரதி“ என்ற திங்களிதழில் “கம்பராமாயணரசனை“ என்ற தலைப்பில் நான்கு தொடர் கட்டுரைகளை எழுதினார். இத்துடன் 1918-இல் எழுதிய “கவிதை“ என்ற கட்டுரையும், தன் திருக்குறள் மொழி பெயர்ப்பு நூலுக்கும் பாரதியின் கண்ணன் பாட்டு நூலுக்கும், தன்னுடைய எமர்சனின் “தன்னம்பிக்கை“ என்ற மொழிபெயர்ப்பு நூலுக்கும், முன்னுரைகளும், மலைபடுகடாம் பற்றிய கட்டுரையும் வ.வே.சு. எழுதிய அய்யரின் திறனாய்வுப் புலமையைப் புலப்படுத்துவனவாக உள்ளன.

ஒரு திட்டவட்டமான முறையில், சுவை, பேருணர்ச்சி ஆகிய இரண்டு தன்மைகளை அளவுகோலாகக் கொண்டு ரசிகப்பார்வையிலே பார்த்தார்” என்று இவரது திறனாய்வின் போக்கை வரையறுக்கிறார் சி.சு.செல்லப்பா. வ.வே.சு. ஐயர் தன்னுடைய ஆங்கில நூலில், இராமன், இலட்சுமணன், இந்திரசித், சீதை, வீடணன், கும்பகர்ணன் என்று பாத்திர அடிப்படையில் விளக்கினாலும், “ஒப்பிலக்கிய ஆய்விற்கு முன்னோடி“ என்று கூறக் கூடிய அளவிற்குக் கம்பராமாயணத்தை வால்மீகி, ஹோமர், வெர்ஜில், தாந்தே, வியாசர்மில்டன் முதலிய கவிஞர்களின் காவியங்களோடு விளக்கினாலும், அடிப்படையில் இலக்கியம் “ரசனை“ மிக்கதாக விளங்கவேண்டும் என்ற கருத்தையே வலியுறுத்தினார்.

**“...இரசனைச் சுகம் கம்பராமாயணத்தில் அதிகம் காணப்படுகிறது என்பதே ...”**

இரசனை என்றால் என்ன என்றும் தன் கருத்தை வரையறுத்தார்.

> **“கதையின் ஓட்டத்தையும், சம்பாஷனைகளின் அமைப்பையும் ரஸிகன் இருதயத்திற்குத் திருப்தி அளிக்கும்படிப் பொருத்தமாகச் சேர்த்து வைத்து எழுதுவதே ரசனையாகும்.”**

இவ்வாறு இலக்கியத்தில் “சுவைதான்“ இன்றியமையாதது என்ற கருத்தைப் பின்னால் டி.கே.சி. போன்றோர் பரவலாக்கினர். என்றாலும் இவர் டி.கே.சி. போலத் தனித்தனிப்பாடல்களில், சொற்களில் சொக்கி, இலக்கிய நயத்தை மிட்டாய்ப் பொருளாக்கி விடவில்லை - காவியத்தின் முழுக்கட்டுமானத்தைப் பற்றியும் எண்ணிப்பார்க்கிறார். கட்டுமானம் (யுசஉாவைநஉவழளைஉள) பற்றிய ”அசின்தோத்தவின், ஓராஸியன், புவாலோ, வீதா,பெயின் முதலியோரின் சிந்தனைகளை எல்லாம் எடுத்தாண்டு கம்பனின் கட்டுமானச் சிறப்பை வியந்து போற்றுகிறார்’’

> **”ஓர் பெருங்காப்பியம் அநேக அவயங்கள் சேர்ந்ததாயிருப்பினும், ஒரு ஜீவப்பிராணியைப் போல ஓர் தனிப்பிண்டமாயிருத்தல் வேண்டும்... “ஏகம்“ என்கிற உணர்ச்சி அக்காவியத்தில் தோன்ற வேண்டும்”**

இவ்வாறு முழுமையையும் சாரத்தையும் வலியுறுத்தும். வ.வே.சு. ஐயர், கம்பராமாயணத்தின் சாரம் என்ன?-ஏக உணர்ச்சி யாது?- என்ற வினாவிற்கு அளிக்கிற விடை, அவருடைய

திறனாய்வுச்சிந்தனையின் தனித்தன்மையையும், இலக்கியத்தைத் தன்காலத்திற்கு ஏற்ப சமூகமயப்படுத்துகிறான். திறனாய்வாளன் என்ற கருத்தையும் மெய்ப்பிப்பதாக அமைந்துள்ளது. அந்த ஏக உணர்ச்சித் ”இராவணவதம்தான்”- என்கிறார். திருமாலின் கதையாகத் தெரியவில்லை. சீதையின் துயரமாகத் தெரியவில்லை. தன் காலத் தேவைக்கு ஏற்ப சுதந்திரப் போராட்ட உணர்விற்கு ஏற்ப- இராவண வதமாகத் தெரிகிறது. பாஞ்சாலியின் சபதம் பாரதத்தாயின் சபதமாகப் பாரதிக்குப் புலனாகவில்லையா? இராமயணத்தின் பெருமை எல்லாம் யுத்த காண்டத்தில்தான் காணப்படுகிறது” என்று போர்க்காட்சிகளைக் கொண்டாடுகிறார். மேலும் “இராவணவதம்“ என்று வால்மீகி மறுபெயர் கொடுத்திருப்பதைச் சுட்டிக்காட்டுகிறார். கம்பனும் இந்த ஒருமை நோக்கில் தான் ‘‘இன்னல் செய் இராவணன் இழைத்த தீமைபோல் துன்னருங் கொடு மனக்கூனி தோன்றினாள். அயோத்தியா காண்டத்திலேயே இராவணவதத்தின் ”வித்தை” விதைக்கிறான் என்கிறார்.பாலகாண்டத்திற்கு ”அவயவசம்பந்தமே” இல்லை என்று எழுதி விட்டு மேலும் எழுதுகிறார்.

> **‘‘அயோத்தியா காண்டத்தினின்று கதையானது மத்தகஜத்தின் நடையொடு கங்காப்பிரவாகத்தின் மனத்தோடு ராவண வதம் வரை செல்லுகிறது. உபாக்கியானங்களுக்காகவேனும், மந்திராலோசனைக்காகவேனும் கதை நிற்கிறதே என்றால், அது இயற்கையையொட்டியே அவ்வாறு நிற்கிறது. வனராஜனான கஜேந்திரனும் அங்கங்கே ஆகாரத்துக்காக நிற்கிறான். அங்கேயே இளைப்பாறுகிறான். கங்காநதியும் சம தடத்தில் வேகம் குறைகிறது. யமுனை நதிகளின் நீரை ஏற்றுக்கொள்ளுகையில் வேகத்தைத் திரும்பப் பெற்றுக்கண்டோர் வியக்க செல்லுகிறது. கிளைநதிகளையும் கால்வாய்களையும் நிரப்பிக் கொண்டு சற்று ஆலசியமாக நடக்கிறது. ஆனால், ஆலசியமெல்லாம். அடுத்த கட்டத்தில் இரண்டு பங்கு வேகமாகச்செல்லுவதற்காகத்தான். கடைசியில் சமுத்திரராஜனோடு கலப்பதற்கு முன் கங்காதேவியின் அழகையும் காம்பீர்யத்தையும் வாயில் வர்ணித்துச் சொல்ல ஒண்ணுமோ? தேவர்களும் கண்டானத்திக்கத் தகும் காட்சியன்றோ கங்காதேவியின் சமுத்திர சங்கமம்”**

இவ்வாறு கம்பனைப் போலவே நதியின் நடையில் காவியத்தின் பொலிவையும் வேகத்தையும் காணும் அவருடைய திறனாய்வு, டி.எஸ். எலியட் எதிர்பார்க்கும் “படைப்பு நிலைத் திறனாய்வு“ என்று கூறும் அளவிற்கு வளர்கிறது.வ.வே.சு.ஐயரின் இலக்கியம் பற்றிய பார்வையில் குறிப்பிடத்தக்க ஒன்றாக விளங்குவது, நடப்பியல் பற்றிய அவரது தீர்க்கமான முடிவாகும்- “கவிதை“ பற்றிய தன் கட்டுரையில்,“யதார்த்தம் என்ற பெயரில் உள்ளதை உள்ளபடியே வர்ணிப்பது இயற்கைக்காட்சிகளை போட்டோ பிடிப்பது போல் சித்தரிப்பது எல்லாம் போதா” எனக் குறிப்பிடுகிறார்-“இதயத்தில் பேருணர்ச்சி“ எழுப்ப இவைகள் போதா என்பது அவரது முடிவாக இருக்கிறது. படைப்பாளியாகவும் இத்தகைய ஒரு தளத்தில் தான் அவர் செயல்பட்டுள்ளார்.

கம்பராமாயணத்தைப் பற்றி எழுதும்போது, முன்னுரையிலேயே கம்பனை உலகமகாக் கவிகளிலேயே சிறந்தவர் என்பதை நிலை நாட்டத்தான் எழுதுகிறேன் என்பதைத் தெரிவித்து விடுகிறார். ஆழமாகவும் மிகவும் கவனமாகவும் பலஆண்டுகள் படித்து நிதானமாக வளர்த்தெடுத்த கருத்து இது வெறுமனே தாய்மொழிப்பற்றினால் சொல்லப்படும் வார்த்தைகள் அல்ல என்றும் எழுதுகிறார்.''இவ்வாறு கல்வியாளர்கள் போல மதிப்பிட்டுத் தீர்ப்பளிக்கின்ற நீதிபதிக்குரிய குணத்தை அவரது திறனாய்வு எழுத்து முழுவதிலும் காண முடிகிறது. காவியத்தை, அரிஸ்டாட்டில் கூறுவது போல முடிவுக்கு அருகாமையிலுள்ள ஒரு நிகழ்ச்சியில் இருந்து தொடங்குவதுகூடச் சிறப்பானது அல்ல என்று முடிவாகக் கூறுகிறார். தொடக்கத்திலேயே உச்சநிலைக்காட்சியைக்காட்டி வாசகனை உணர்ச்சிக்கொம்பில் உட்கார வைத்துவிட்டு, மற்ற காட்சிகளை அதே வேகத்தில் காட்ட முடியாமல் தவிக்கிற நிலைக்குக் கவிஞன் ஆளாக வேண்டியது வரும். அதனால் வாசகனின் ஆர்வம் சென்று தேய்ந்து இறுகின்ற நிலைக்குத்தள்ளப்படும். எனவே இந்திய மரபுப்படி வாழ்க்கையின் பிறப்பிலிருந்தே இயல்பாகக் காட்சிகளைக்காட்டிச் சென்றால், வாசகனை நிலையாகக் ''கைக்குள்'' போட்டுக் கொள்ள முடியும் என விளக்குகிறார்--. இவ்வாறு எல்லாவற்றிலும் தீர்ப்பளிக்கிற திறனாய்வாளராகத் தோற்றம் அளிக்கிறார்.

க.நா.சு., இவர் ஆங்கில இலக்கியத்திறனாய்வைப் பின்பற்றி எழுதினார் எனக் கருதுகிறார். மாத்யூஅர்னால்டைப் பின்பற்றினார் என்றும், இவ்வாறு மேலைநாட்டு வழியிலே தமிழில் இலக்கியத் திறனாய்வு செய்வது தவறு என்றும், தமிழ் மரபை ஒட்டி அமைய வேண்டும். என்றும் குறிப்பிடுகிறார். ஆனால் இன்று எண்ணிப் பார்க்கும் போது, க.நா.சு-வை விட வ.வே.சு. ஐயர் இந்திய திறனாய்வு மரபில் முயற்சி செய்து பார்த்துள்ளார் என்றே கணிக்கத் தோன்றுகிறது. வ.வே.சு. ஐயர் வலியுறுத்தும் சுவை, தொல்காப்பியர், பரதமுனிவர்ஆகியோரால் வலியுறுத்தப்பட்ட ஒன்றுதான். அதுபோலவே "பேருணர்ச்சி" பேரானந்தம் எல்லாம் இந்திய மரபிற்குள்உட்பட்டதுதாம். எனவே திருமணம் செல்வக்கேசவராயர் பற்றியும், வ, வே.சு. ஐயர் பற்றியும் க.நா.சு. கூறியுள்ள ''குற்றச்சாட்டு'' பொருத்தமாகப்படவில்லை. மறு ஆய்விற்குஉரியவை எனலாம்.

இவ்வாறு வ.வே.சு. ஐவரின் திறனாய்வு 1)தீர்ப்பளிக்கும் தன்மை 2)ஒப்பிட்டு ஆராயும் போக்கு. 3) இரசனையை முதன்மைப்படுத்தும் குணம் 4)படைப்பு நிலைக்குத் திறனாய்வை வளர்த்தெடுக்கும் ஆற்றல் ஆகியன பெற்றுத் தற்காலத் திறனாய்வின் தந்தை என்று அவரைச் சிலர் காட்டும் அளவிற்குத் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் சிறப்பான இடம் பெற்று விளங்குகிறது. வல்லிக்கண்ணன் அச்சிறப்பை இவ்வாறு குறிக்கிறார்.

> **"..அழகியல் அடிப்படையில் ரசனாபூர்வமான விமர்சனத்தை அவர் வளர்த்தார். அவரது கட்டுரைகள் படித்து ரசிப்பதற்கேற்ற சுவாரஸ்யமான எழுத்துக்களாக அமைந்தன.''**

படைப்பிலக்கியம் போலத் திறனாய்வையும் படித்துச் சுவைப்பதற்குரிய ஒன்றாக ஆக்க முடியும். இன்று வரைத் தமிழில் எந்த ஆளவிற்கு அது சாத்தியமாகி இருக்கிறது என்பது விவாதத்திற்குரியதாகும்.

கி.இராஜநாராயணனின் கரிசல் நடையில் மாந்தருள் ஒரு அன்னப்பறவை" எனச்சுட்டப்படும், தென்காசி களங்காட்டுச் சிதம்பரநாதமுதலியார் (மு.கே.சி.) தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றின் "போக்கை" ஆக்குகின்ற ஒரு "சக்தியாக" இயங்கியுள்ளார். பெரும்நிலக்கிழார் குடும்பத்தில் பிறந்து வளர்ந்த டி.கே.சி.எட்டாண்டு மலேரியாக் காய்ச்சலில் கிடந்ததன் காரணமாகக் கம்பராமாயணத்தைப்படிக்கத் தொடங்கி. வக்கீல் தொழிலுக்கு முழுக்குப் போட்டுவிட்டு "ரசனையையே" ஒரு தொழில் போல நடத்தி வாழ்த்துள்ளார். இலக்கியத்தில் மட்டுமல்ல, உண்ணல் உறங்கல் முதலிய வாழ்க்கை தொடர்பான அனைத்து நடவடிக்கைகளிலும் "ரசனை" "ரசனை" என்று இரசித்து வாழ்ந்து இரசிகமணியாய்ப் பெயர் பெற்றுள்ளார். பாலசரஸ்வதியின் நடனம். எம்.எஸ்.சங்கீதம், கம்பன் காவியம் என்ற முத்தமிழின் சுவையில் மூழ்கி, கலை இலக்கியம் பற்றிய சொல்லாடல்கள் தமிழர் வாய்களில் வெள்ளம் போல் பெருக்கெடுக்கக் காரணமாக இருந்துள்ளார்.

டி.கே.சி. இலக்கியத்தை "உருவம், உணர்ச்சி, "ரசனை", பாவம்,தாளம்,தொனி, ஓசை" முதலியவற்றின் அடிப்படையில்,சுருக்கமாக உருவவிவாத அடிப்படையில் -அணுகியுள்ளார். தனக்குப் பிடித்த இலக்கியப் பாடல்களை, அணையடைச் சேனையில் வைத்துப் பிள்ளையை எடுப்பது போல வெகு அருமையாய் மிகுந்த ஆர்வத்தோடு கையில் எடுத்துக் கொண்டாடி உள்ளார்.

இவ்வாறு எந்தக்கலையிலும் உணர்ச்சி ஒன்றுதான் முக்கியம் எனக் கூறும் கருத்து புதியதல்ல. தமிழில்களவியல் உரைக்கதையும் குமரகுருபரர் பிள்ளைத்தமிழை அரங்கேற்றிய கதையும், "கண்ணீர்த்துளி வர உள்ளுருக்குதல்" என்ற பாரதியின் கூற்றும், எல்லாவற்றிற்கும் மேலாக மெய்ப்பாட்டியல் சிந்தனைகளும், இலக்கியத்தில் உணர்ச்சியை வலியுறுத்தும் கருத்துத் தமிழ்மரபு அடிப்படையில் வருவதுதான் என்பதைக் காட்டும். ஆனால் டி.கே.சி.க்கு இருந்த பொருளியல் அரசியல், சமூகச்செல்வாக்குகள் இக்கருத்திற்குப் புதிய பரிமாணத்தை வழங்கின. அவருடைய மேட்டுக்குடித்தனத்தில் ""தமிழில் என்ன இருக்கிறது" என்று ஆங்கில மோகத்தில் மூளையைப் புதைத்துக் கிடந்தவர்களுக்கு, அவருடைய இரசனைமுறைத் திறனாய்வு கண்களைத் திறந்துவிடப் பயன்பட்டது.

டி.கே.சி.யின் இத்தகைய இரசனைமுறைத் திறனாய்வு கம்பராமாயணம், திருவாசகம், ஆண்டாள் பாசுரம், முத்தொள்ளாயிரம் கலிங்கத்துப்பரணி, அண்ணாமலை ரெட்டியாரின் காவடிச் சிந்து, சில தனிப் பாடல்கள், சில நாட்டுப்புறப்பாடல்கள், பாரதி, கவிமணி ஆகியோரின் பாடல்கள் முதலியவற்றை ஒட்டியே பெரும்பாலும் திகழ்ந்துள்ளது. இவ்விலக்கியங்கள் பற்றிய அவரது இரசனைமுறைத்திறனாய்வு ஒருமேட்டுக்குடி மனநிலையின் அளவிலானது, சுவைத்தல் "நல்லபடியாய்ப் பொழுது போக்கல், பலரோடு தொடர் கொள்ளுதல், தன்னைச் சுற்றி

எப்பொழுதும்“நாலுபேர்“ கொண்டதால் “உள்ளம் குதூகளித்தல்“ முதலிய பண்புகள் அவரது எழுத்தின் புவனாகின்றன. அருவருக்கத்தக்க, மூச்சைமுட்டித் திணற அடிகின்ற, நீசத்தனம் நிறைந்த வாழ்க்கை பற்றிய அனுபவம் அழுத்தமாக வாய்க்காத, தரிசனம் எதுவும் கிடைக்கப் பெறாத, பிறப்பு இறப்பு. விபத்து, இருத்தல் பற்றிய ஆழமான தத்துவத்தேடல் எதுவும் அமையப் பெறாத எழுத்துக்களாகத்தான் அவருடைய திறனாய்வு எழுத்துக்கள் அமைந்துள்ளன. எனவே இலக்கியம் பற்றிய ஒரு மேலோட்டமான இரசனைப்போக்குத் தமிழிலக்கியச் சூழலில் இன்று வரை நிலவுவதற்கு, அவரது படிக்கப்படிக்க அலுக்காத, கிண்டல் நிறைந்த நடையோடு கூடிய எழுத்துக்கள் துணைபோயுள்ளன எனக் கூறலாம்.

டி.கே.சி.யின் திறனாய்வினுள் பூமிவேகத்தில் சுழல்கின்ற மற்றொரு போக்கு எதிர்நிலைத் திறனாய்வாகும். டி.கே.சி. தனக்குதவி குழுவிற்கு எதிர்நிலையாக மறைமலையடிகள் வழிப்பட்ட கல்வியாளர்களைப் பண்டிதர்களைக் கண்டார். டி.கே.சி.யின் “இலக்கிய முடிவுகள்“ மறைமலையடிகளை எதிர்நிலையாக வைத்து எடுக்கட்பட்டவை எனக் கருத இடமிருக்கிறது. 1905இல் இவர் சென்னைக் கிறித்துவக் கல்லூரியில் பயின்றபோது, அங்கே அடிகள் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றி உள்ளார் என்ற செய்தியும், அடிகள் கம்பன் பாடலை விடச் சங்க இலக்கியம் உயர்ந்தது, இயல்பானது என்பதை விளக்க எடுத்துக்காட்டாகக் கொண்ட பாடல்களையே இருவரும் எடுத்துக்கொண்டு மறுத்துரைக்கும் தன்மையும், அடிகள் போற்றும் சங்க இலக்கியத்தைப், “புரியாத மொழி, வழக்கில்லாத மொழி, செத்தமொழி, பாவமில்லாத மொழி” என உரைப்பதோடு,

> **”பத்துப்பாட்டு எட்டுத்தொகையையும் வைத்துக்கொண்டு எத்தனை வருஷமாக மாரடித்துக் கொண்டிருக்கிறார்கள் ஏன்? பண்டிதமனப் பாங்கிலுள்ள அகம்பாவந்தான்! எனக்குத் தெரியும், உனக்குத் தெரியாது என்ற அகம்பாவமே காரணம்... இந்தச் சோக நாடகத்தைப் பார்த்தால் ர்யஅடநவ யனெ டுநயச சோக நாடகங்கள் ஆகுமா?”**

என்று கடுமையாகக் கிண்டல் செய்யும் தன்மையும், ஒரு குழுவாக இவர் இயங்கி உள்ளார் என்பதைப் புலப்படுத்துகின்றன. எழுதுகிறார் அவரே

> **”ஒரு வகையில் ஒப்புக் கொள்ள வேண்டியதுதான். நம்முடைய கோஷடியைத் தவிர மற்ற கோஷ்டிகளுக்கு யசவளைவஉை ளநசழைரளநௌள இருப்பதாகச் சொல்ல இடமில்லை.”**

டி.கே.சி.யீன் இத்தகைய இரசனைமுறையை அ.சீனிவாசராகவன் அ.முத்துசிவன், கோதண்டபாணிப் பிள்ளை, வி. ஆர். எம் செட்டியார். ஆர்.கே. சண்முகச்செட்டியார். தெ.பொ.மீ., ம.பொ.சி. முதலிய பலரும் பின்பற்றியுள்ளனர். மார்க்கபந்துசர்மா, டி.கே.சி.யைப் போல் அல்லாமல், மேலைநாட்டாரின் (அரிஸ்டாட்டில் உட்பட) கவிதைக்கோட்பாடுகள் பலவற்றின் அடிப்படையில் இலக்கியத்தை விளக்கி (சிலப்பதிகார ரசனை முதலிய நூல்கள்) இரசனைமுறைத்திறனாய்வை ஆழப்படுத்தினார் என இந்த இடத்தில் கட்டாயம் சுட்ட வேண்டும்.

டி.கே.சியின் இலக்கியத்துக்குள்ளான இயக்கம், பதிப்புக்கலை வரை நீட்சி பெற்றது. 1943-ல் முத்தொள்ளாயிரத்தை அவருக்கே உரிய சுவைமுறை அடிப்படையில் எழுதிய உரையுடன் பதிப்பித்தார் 1953-இல் கம்பர் தரு ராமாயணம் என்று முதற் பகுதியை வெளிவிட்டார். கம்பன் பாடல்கள் வ. வே. சு. அய்யர் பதிப்பின்படி 10569 உ. வே. சா. பதிப்பின்படி 10418, அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பின்படி 10533, கம்பன் கழகப்பதிப்பின்படி 10368. ஆனால் டிகே.சி-யின் பதிப்பின்படி 1514 தாம் மேலும் 204-பாக்களுக்கு மேல் பாடலின் சொற்களைத் திருத்தியும் வெளியிட்டுள்ளார்... “செருகு கவிகளால் கம்பரது கவிதாசக்தியின் அற்புதமான வேகமும், அழகும் கெட்டுவிட வழி ஏற்படும்: மேலும் கம்பன் எதிரிகளுக்கு எதிர்ப்பதற்கு வலுவான காரணம் கிடைத்துவிடும்.இவை தாம் டி.கே.சி. மற்ற பாடல்களை நீக்கியதற்குக் காரணமாகக் காட்டுபவை எந்தவிதமான ஆய்வு நெறி முறையும் இன்றித்தனது அகவயப்பட்ட சுவை அடிப்படையில் கவிதைகளைத் தேர்ந்தெடுத்துள்ளார்.

“டி.கே.சி. பாட பேத பிரதிகளை வைத்துக்கொண்டு ஆய்வு செய்து சொற்களைத் திருத்தினார் என்றும் கொள்ள முடியவில்லை என எழுதுகிறார். சிவகாமி. ஆங்கிலத்தில், இவ்வாறு 1818-ல் தாமஸ்பௌவர் (வுாழஅயள டீழறனடநச.1754-1825) என்பார். ஒரு குடும்பத்தில் உரக்க உச்சரிக்க முடியாத சொற்களையும் பகுதிகளையும் வெட்டிவிட்டு சேக்ஸ்பியரின் படைப்புக்களைப் பத்துத் தொகுதியாகக் ““குடும்பத்திற்கான சேக்ஸ்பியர்” என்ற தலைப்பில் வெளியிட்டார். டி.கே.சி. விடமும் சில சொற்களை மாற்றும் போது அத்தகைய தூய்மைவாதம் தென்படுகிறது. ஆங்கிலத்தில் இவ்வாறு ஆய்வு நெறி இன்றி வெட்டித் தொகுக்கின்ற செயலுக்கு “பௌலரிசம்“ என்று கூறும் வழக்கே ஏற்பட்டுள்ளது. தமிழிலும் “டிகே.சி.இயம்“ என இத்தகைய போக்கை வழங்கலாம்.

தன் கம்பராமாயணப் பதிப்பில் டி. கே. சி. எழுதியுள்ள உரைப்பகுதிகளைத் தமிழ் இலக்கியத்தின் சிகரங்களில் ஒன்று என்றும். கம்பன் பாடல்களுக்குச் சமமானவை என்றும் புகழ்கிறார்க.நா.சு. டி.கே.சி-யின் இத்தகைய செல்வாக்கு மிக்கப் போக்கினால் குழுமனப்பான்மை பெருகியது.

உதிரிப்பாடல்களாகத்- தனித்தனியாகக் கவிதைகளை சுவைப்பதே உன்னதம் என்ற கருத்து பரவியது. இத்தகைய கருத்து மையத்தில் டி.கே.சி. இயங்கியதால் அவருக்குச் சிலப்பதிகாரத்தில் கானல்வரி, வேட்டுவவரி முதலியன தவிர மற்றவை கவிதைகளாகத் தெரியவில்லை. மேலும் அந்தக் கானல்வரி, வேட்டுவவரி, முதலியனவும் இளங்கோ அடிகள் எழுதியவை அல்ல. நாட்டுப்புறப்பாடல்கள் என்றும் அவரால் சொல்ல முடிந்தது.

கல்வியாளர்களைப் போலவே டி.கே.சி.-யும் தன் காலத்தில் தோன்றிய புத்திலக்கியங்களைப் (சிறுகதை, புதினம்) புறக்கணித்தார் டி.கே.சி.பழம்பெரும் இலக்கியங்களில் ஈடுபட்டிருந்த அளவிற்குத் தன் காலத்திய புதுமைப்பித்தன் முதலியோர் கதைகளில் ஈடுபாடு காட்டியிருப்பாரேயானால், அவரது திறனாய்வுப் புலமை விரிவடைந்திருக்கும். தமிழிலக்கியத்

திறனாய்வும் ஆழம் பெற்றிருக்கும். ஆனால் அவரைச்சுற்றியிருந்த குழுவும், அவரது வாழ்நெறியும் அத்தகைய திசையில் ஈடுபாடு கொள்ளவிடா என்பதும் உண்மை.

டி.கே.சி.யின் இரசனைமுறைத்திறனாய்வினால் ஏற்பட்ட விளைவுகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. இலக்கியத்தைப் பற்றி நயம் பாராட்டிக்கொண்டிருப்பதே திறனாய்வு என்ற நிலை ஏற்பட்டது தான். இலக்கியக்கோட்பாடுகளைப் பற்றிய பேச்சுக்கே தமிழ்ச்சூழலில் இடம் இல்லாமல் செய்துவிட்டது. அனுபவவாதத்தில் இலக்கியம் சிக்கித்திறனாய்வுப் புலமை என ஒன்று ஏற்படவிடாமல் தடுத்து விட்டது.

முழுநேர இலக்கியவாதியாக இயங்கக்கூடிய அளவிற்கு வசதியும் தான் நம்பியதில் உண்மையான ஈடுபாடு கொண்டியங்கும் நேர்மையும் அவருக்கு வாய்க்கப் பெற்றிருந்தமையால், இனவாத அரசியல் அடிப்படையில் கம்பராமாயணத்தை எரிக்கும் அளவிற்குப் போன சூழலிலும், அதன் புகழை அவரால் நிலைநாட்ட முடிந்தது. இதனால் தொடர்ந்து கம்பராமாயணம் பற்றிப் பல நூல்கள் தோன்ற வழி ஏற்பட்டது.

ஏறத்தாழ அரை நூற்றாண்டு காலம் முழுநேர இலக்கியவாதியாக- படிப்பாளியாக- படைப்பாளியாக- திறனாய்வாளராக-மொழி பெயர்ப்பாளராக-பத்திரிக்கை ஆசிரியராகத் தொடர்பு அறாமல் பணியாற்றியவர் க.நா.சு.

“விமர்சனத்தில்’ எனக்கு நம்பிக்கை கிடையாது“ என்றும், இலக்கிய விமர்சனம் “கல்வித்துறையாக“ முன்னேறுவதற்காக இலக்கியத்தைத் தியாகம் செய்துவிடக் கூடாது என்றும் கூறிக் கொண்டே திறனாய்வு வேலையில் ஈடுபட்டு வந்துள்ளார். இவ்வாறு இலக்கியத்தில் முழு ஈடுபாடும், திறனாய்வில் அரைகுறை மனநிலையோடும் இயங்கி வந்ததால், அவருடைய இலக்கியம் பற்றிய கருத்துக்கள் எல்லாம் “வாசகன்“ என்ற கோணத்தில் இருந்து பிறந்த வைகளாகவே இருக்கின்றன. ”திறனாய்வாளன்” என்ற கோணத்தில் இருந்து பார்க்கக் கூடிய தளத்திற்கு அவர் செல்லவே இல்லை. அப்படிச்செல்லவும் அவர் விரும்பவில்லை. இத்தகைய அணுகுமுறைமினால் தான் ‘‘பட்டியல் இடுபவர்,” என்று அவரை மிக எளிதாகக் கேலி செய்துவிட்டு நகர்ந்துவிடவும் வாய்ப்பளித்துள்ளார். ஆனாலும் தமிழ்த் திறனாய்வு வரலாற்றில், திறனாய்வியலின் இன்றியமையாமையைத் தொடர்ந்து வலியுறுத்தி வந்தவர் என்பதாலும், உலகம் தழுமிய பரந்த இலக்கிய அறிவு வாய்க்கப் பெற்றதன் காரணமாகப் போகிற போக்கில் படீர் என்று கரு சுமக்கும் வார்த்தைகளை மிதைத்து விட்டுச்சென்றிருக்கிறார் என்பதாலும் அவருடைய எழுந்துக்கம் ஆழம் பெறுகின்றன. அவருடைய மனத்திற்கு ஏற்பவத்து அமையும், இரசனைமிக்க ஆழமான தொடரமைப்பு ஒன்றை எடுத்துக் காட்டலாம்.

> **”மனிதர்களேயல்லாதவர்கள் எப்படி இப்படி ஆச்சரியப்படத் தக்க விதத்தில் மனிதர்களே போல இருக்கிறார்கள் என்று திருவள்ளுவர் கேட்கும் போது நமக்குப் பரிச்சயமான மனிதர்களேயல்லாத மனிதர்களை எண்ணி நாமும் ஆச்சரியப்படத் தொடங்கிவிடுகிறோம்”**

விமரிசனக் கலை, இலக்கிய விசாரம், படித்திருக்கிறீர்களா? இலக்கியத்துக்கு ஓர் இயக்கம், கலை நுட்பங்கள், இலக்கிய வளர்ச்சி,நாவல்கலை, இந்திய இலக்கியம் முதலிய விமர்சனக் கட்டுரைகள் நிறைந்த நூல்களை க.நா.சு. எழுதியிருக்கிறார் என்றாலும், அனைத்துக் கட்டுரைகளின் அடிப்படையாக அமைவது ஒரே கருத்து தான். அதாவது "இலக்கியம் இலக்கியமாக இருக்க வேண்டும். எந்த விதமான சித்தாந்தத்திற்காகவும் இலக்கியத்தை தானம் செய்துவிடக் கூடாது" என்ற ஒரே கருத்துதான். வேறு எதில் வேண்டுமானாலும் சமரஸம் (Compromise) பேசலாம். இலக்கியத்தின் தரத்தில் சமரஸம் பேசி முடிவு கட்டக் கூடாது"என்று எழுதினார் க.நா.சு. வ.வே.சு ஐயரின் திறனாய்விற்கு தேசியப்பற்றும், மறைமலையடிகளின் திறனாய்விற்குத் தமிழினப்பற்றும், டி.கே.சி.யின் திறனாய்விற்குக் கம்பராமாயணப்பற்றும், கைலாசபதியின் திறனாய்விற்கு மார்க்சியப்பற்றும் அடிப்படையாக அமைந்து இயக்குவது போல, சு.நா.சு.வின் திறனாய்விற்கு "இலக்கியப்பற்று" அடிப்படையாக அமைந்துள்ளது.

போர்க்களத்தில் போரிடும் வீரன், எதிரியின் வாள்வீச்சுக் கலை நுட்பத்தில் ஈடுபட்டு, அவன் கையில் இருந்து வாள் வீழ்ந்த பிறகும் சத்திரியனுக்குரிய கடமையைச் செய்யாமல், அவன் கையில் மீண்டும் வாளைக்கொடுத்துப், போரிடும் கலையிலேயே மூழ்கிவிடுவது போன்ற ஒரு நிலையில் க.நா.சு.வின் இலக்கிய வாழ்க்கை அமைந்துள்ளது. இது ஒரு தளம்.

அதே நேரத்தில், நடைமுறையில், சுயவிருப்பு வெறுப்புக்களினால் அலக்கழிக்கப்படும் சாதாரண ஒரு தளத்திலும் அவருடைய இயக்கம் அமைந்துள்ளதையும் காணமுடிகிறது. பண்டிதர்களையும், பேராசிரியர்களையும் எதிர்த்து அவர் இயங்கிஉள்ள முறை, சாதாரண தளத்தில் அமைந்துள்ளது. தமிழ் இலக்கிய இலக்கணம் அனைத்தையும் கரைத்துக் குடித்தவர்கள் என்ற கர்வம் கல்வியாளர்களிடம் கூடவே குடியிருந்து கெடுப்பது போல, க.நா.சு. போன்ற அழகியல் திறனாய்வாளர்களிடமும் இலக்கியம் முழுவதையும் படித்துக் கரை கண்டவர்கள் என்ற கர்வம் உலக குடியிருந்து பல கெடுதல் புரிந்திருக்கிறது. அதுதான் கல்வியாளர்களை "அறிவிலிகள்" என்றும் அவர்களின் திறனாய்வைக் "குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடுகிறகதை" என்றும் எழுத வைக்கிறது. இத்தகைய வெறுப்புணர்வோடு அணுகாமல், பண்டிதர்களின் நடைமுறையைச் சமூகப், பொருளாதார, அரசியல் பின்னணியில் அணுகியிருந்தால் க.நா.சு. மிகச் சிறந்த எதிர்நிலைத்திறனாய்வை உருவாக்கியிருக்க முடியும் தமிழில் எதிர்நிலைத் திறனாய்வு வெறுமனே தனிமனிதத்தாக்குதல்களாகவும், வம்பளப்புகளாகவும், குழாயடிச்சண்டைகளாகவும் தரம் இழந்து போனதற்குக் க.நா.சு.வின்பங்களிப்பும் உண்டு எனலாம். கா.நா.சு.விடம் இருந்த இந்தச் சமூகப் பார்வையின் பற்றாக்குறையைப் பூர்ணச்சந்திரன் "க.நா.சுவின் விமர்சன ஆளுமை" என்ற கட்டுரையிலும் (நிகழ். மே 1989) சுந்தரராமசாமி தன் "சுவடு" கட்டுரையிலும், சுட்டிக்காட்டியுள்ளனர்: பத்திரிக்கை எழுத்தைப் பற்றிய அவருடைய எதிர்ப்பும், இத்தகைய ஒரு சாதாரணதளத்தில்தான் இயங்கி உள்ளது என்பதையும் இந்த இடத்தில் சுட்ட வேண்டும் அதனால்தான்

”க.நா.சுவின் விமர்சனங்கள் எழுத்துலகில் எதிர்ப்புகளை உண்டாக்கினவே தவிர, உரிய நியாயமான பலன்களை விளைவிக்கவில்லை” என்று வல்லிக்கண்ணனும். க.நா.சு. ”ஒரு இலக்கிய சிபாரிசுக்காரர் தான்” என்று சுந்தரராமசாமியும், கூற வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.“அபிப்ராயம் கூறுவதையே விமர்சனமாகச் செய்தவர் க.நா.சு“ என்ற அளவில் பேர் பெற்ற க.நா.சு. கைலாசபதியால் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானவர். கைலாசபதியின் க.நா.சு பற்றிய திறனாய்வு, கட்சி அமைப்பு சார்ந்த முற்போக்கு இலக்கிய எழுத்தாளர்களின் வீச்சு பரவி இருந்த காலகட்டத்தில் வெளிவந்தது. கைலாசபதியின் திறனாய்வு-”அலட்டல் பேர்வழி”, “பஜனை“, விவரமறியாத கற்றுக்குட்டிகள்: “பாசிஸப் போக்கு“, சர்வாதிகாரி, ”அசட்டு மமதை,“ “மடத்துணிவு, “-இத்தகைய சொற்களால் நிறைந்து, தனி மனிதத்தாக்கலாக வெளிப்படுகிறது. க.நா.சு. பிராமணச்சார்பு உடையவர் என்பதும் அத்தகைய ஒரு தாக்குதலே.

க.நா.சுவின் இலக்கியம் பற்றிய பார்வைகளைச், “சோசலிசத்துக்கும்,””ஜனநாயகத்திற்கும்” ”மனிதாபிமானத்திற்கும்” எதிரான போர்முறையின் ஓர் அம்சமாகக் காண்கிறார் கைலாசபதி. ஆனால் தன் மனத்திற்குள் பழக்கப்பட்டுப்போன ஓர் அரசியல் நெறிசார்ந்த ஒருவரின் குற்றச்சாட்டாகத்தான் இதைக் கொள்ள வேண்டியதிருக்கிறது.

**தனிமனிதன் X சமூகம்**

**சிறுபான்மைப் பண்பாடு X பெருவாரி மக்கள் பண்பாடு**

**அழகியல் X பயன்பாடு**

**மரபு X புதுமை**

**அகஉலகம் X புறஉலகம்**

--சாதாரணதளத்தில் எதிர்நிலையாகக் கொள்ளப்படும் மேற்கண்ட பிரச்சினைகள் வரலாற்றுக்காலம் தொட்டு இயக்கம் கொண்டிருப்பவை. கைலாசபதி போல, ஒரு முடிவுக்கு இடம் கொடுக்கக்கூடிய எளிமைக் குணம் கொண்டவை அல்ல. எனவே இவ்வெதிர் நிலைகளின் ஒரு பக்கமாகக் க.நா.சு-வைச் சேர்த்து, அதை ஒரு பெருங்குறையாக மதிப்பிட்டுத் தீர்ப்புக் கூறுவது எந்த அளவிற்கு நியாயமானது என்பது ஐயத்திற்குரியதே. க.நா.சு, கலையில், கலைத்தன்மையை வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தினார் என்பதனாலேயே அவர் “மனிதாபிமானம்“ அற்றவர் என்றாகிவிடாது.க.நா.சு.வின் திறனாய்வைப் பற்றிச் சிந்திக்கும்போது ஒன்றைக் கட்டாயம் சுட்டிக் கூறவேண்டும், தன் மொழி நடை பற்றிய சரியான பார்வை இன்மை அவரிடம் காணப்படுகிறது. “தமிழுக்குப் புதிய உயிர்” தோன்றும்படிச் செய்பவன் தமிழபிமானி” என்ற பாரதி கூற்றுக்கு ஏற்ப, உலக இலக்கியம் பலவற்றைத் தமிழில் மொழிபெயர்த்தும், சங்க இலக்கியம், குறள், சிலப்பதிகாரம், முதலிய தமிழ் இலக்கியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தும், தமிழ் வளர்வதற்குத் துணை நின்ற க.நா.சு, தன்னுடைய திறனாய்வு எழுத்தில்,

ஆங்கிலச்சொற்களுக்குத் தமிழ்ச் சொற்களை உருவாக்க முயற்சி எடுக்காமல் அச்சொற்களை ஆங்கில எழுத்துக்களாலேயே அப்படி அப்படியே எழுதிச்செல்வதன் மூலம், தமிழில் "திறனாய்வுப் புலமை" இதுவரை உருவாகாமல் போனதற்கான பல காரணங்களுள் ஒரு காரணமாக அவரும் அமைந்து விடுகிறார். நவீனத்திறனாய்வுப் புலமை உருவாகக் கலைச் சொல்லாக்கம் அடிப்படை என்பதைத் தமிழவன் உட்பட பலர் இன்று சுட்டிக்காட்டி உள்ளனர். அழகியல் திறனாய்வாளர் பலரும் (வெங்கட்சாமிநாதன், சி.சுசெல்லப்பா) இத்தவறைத் தொடர்ந்து செய்துள்ளனர் என்பதும் கவனிக்கத்தக்கது ஆகும்.

க. நா சு-வின் எழுத்துக்களை-அவர் பற்றிய திறனாய்வுகளை எல்லாம் படித்துவிட்டு மௌனமாக எண்ணிப் பார்க்கும்போது. ஒரு சாதியசமூகத்தில், உயர்குலப் பின்னணி அவருக்கு அமைந்ததால் தான் அரசியல், நிறுவனம், அமைப்பு ஆகிய எதையும் சாராமல், இளமைக்காலத்திலேயே தனக்குள் உருவான "ஒரு கருத்தைச்" சுற்றியே தன் மீதி வாழ்க்கையைக் கட்டிக்கொள்ளக் கூடிய பலம் அவருக்குக் கிடைத்தது. இந்திய அளவிலும் தன்னை நிலை நாட்ட முடிந்தது எனச்சொல்லத் தோன்றுகிறது.

பழந்தமிழ் நூல்களைத் தேடிப்பதிப்பதும், உரை எழுதி விளக்குவதும், அவைகளின் பெருமைகளை ஆங்கில நூற்களின் மேற்கோளோடு பாராட்டுவதுமாகிய வேலைப்பாடுகள் நிறைந்த சூழலில், சிறுகதை, புதினம், வசனகவிதை, புதுக்கவிதை முதலிய புதிய படைப்பிலக்கியங்களில் ஈடுபடுவதும், அவற்றை முன்னெடுத்துச் செல்வதும் கடினமான பணிகளாக இருந்தன. செய்யுள் மரபிலேயே படைப்பிலக்கியத்தைப் பார்த்து வந்த தமிழ் மரபில்-பண்டிதர்களின் மேலாண்மை நிறைந்த சூழலில்-உரைநடையில் படைக்கப்படுவதும் இலக்கியமாக விளங்க முடியும் என்று நிலைநாட்டுவது புதிய படைப்பாளிகளின் பெரும்பாடாக அமைந்தது. புதிய படைப்புக்களைப் பற்றி நிறைய பேசவும் எழுதவும் நிர்ப்பந்திக்கப்பட்டனர். இவைகள்தாம் இக்காலத் திறனாய்வு வளர்ச்சிக்கு உரமாக அமைந்தன. அத்தகைய உரத்தை உருவாக்க மிகவும் ஆர்வத்துடன் ஈடுபட்டவர் சி.சு.செல்லப்பா. படைப்பாளியாகவும் பத்திரிக்கை ஆசிரியராகவும், திறனாய்வாளராகவும் ஓடி ஓடி உற்சாகந்துடன் உழைத்தவர் சி.சு.செல்லப்பா. அவருடைய "தமிழில் இலக்கிய விமர்சனம்,""தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது"-ஆகிய இரண்டு நூல்களும், அவருடைய பரந்த புலமையை வெளிப்படுத்துவதைவிட, அவருடைய ஆர்வத்தை அழகாக வெளிப்படுத்துகின்றன.

திறனாய்விற்கு அதிக இடம் கொடுத்து அவர் நடத்திய ""எழுத்து" பத்திரிக்கைதான், தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் அவருக்கு நிலையான இடத்தைப் பிடித்துக் கொடுத்துள்ளது எனக் கூற வேண்டும்.

க.நா.சு-தந்த ஊக்கத்தினால் திறனாய்வுத் துறையில் நுழைந்த செல்லப்பா, க.நா.சு.வின் திறனாய்வுப் போக்கையே விமர்சிக்கும் அளவிற்கு வளர்ந்தார். க.நா.சு. பின்பற்றிய அணுகுமுறையை மனப்பதிவு அணுகுமுறை என்றும், அது அந்த அளவிற்கு இலக்கியத்திறனாய்விற்குப் பயன்படாது என்றும் விமர்சித்துத், தான் பகுப்பு முறைத்திறனாய்வைப்

பின்பற்றுவதாகக் கூறினார். ஆனால் முறையியலில் இவ்வாறு அவர் வேறுபட்டாலும், இலக்கியம் பற்றிய அடிப்படைப் பார்வையில் க.நா.சு.வின் பார்வையையே பின்பற்றிச்சென்றார். இலக்கியத்தில் அழகுதான், உருவம்தான் இன்றியமையாதது என்ற கருத்தை ஒட்டியே தனது இலக்கியத்திறனாய்வை அமைத்துக்கொண்டார். சி. கனகசபாபதி இவ்வாறு விளக்குகிறார்:

> **"இன்றைய திறனாய்வுத் துறையில் டி.கே.சி-யும், க.நா.சு-வும் உருவவியலான அணுகுமுறை (குழசஅயடளைவஉை யீசழயஉா)உடையவர்கள்சி.சு.செல்லப்பாவும் இதே அணுகுமுறையைச்சேர்ந்தவர்தான். இவர்களிடம் ரசனையும், அழகியலும் திறனாய்வுக்கு அடிப்படைகளாக இருக்கின்றன. அபிப்பிராயமாகச் சொல்லாமல், ஆதாரம் காட்டிச் சொல்வது செல்லப்பாவிடம் தனித்தன்மை"**

சி.சு. செல்லப்பா தன்னுடைய திறனாய்வுப்பணியாகத் தமிழில் முதன் முதலில் திறனாய்வு வரலாற்றை எழுத முனைந்துள்ளார். அதில் கருத்து வேறுபாடு கொள்வதற்கும், தவறுகள் பல காண்பதற்கும் நிறைய இடம் இருக்கிறது என்றாலும், அன்றைய சூழலில் அவர் எடுத்துக் கொண்ட முயற்சி, இன்று பாராட்டத்தக்கதாக இருக்கிறது. தன்னுடைய பலவீனம் அவருக்குப் புலனாகியும் இருக்கிறது. அதனால் தான் "புதுவித முயற்சி, அதோடு என் ஆரம்ப முயற்சி" என்றெல்லாம் முன்னுரையில் குறிக்கிறார். தொல்காப்பியத்தைப் படிக்காமலேயே, உரையாசிரியர்களின் உரையைப் படிக்காமலேயே, அவைகளைப் பற்றி முடிவாகச் சிலவற்றைச் சொல்லிச் செல்வது அவருடைய பத்திரிக்கைத் தொழிலின் விளைவுதான் எனவும் அடையாளம் காண முடிகிறது-இப்படிப் பல.

"கு.ப.ரா கதைகள்," புதுமைப்பித்தன் கதைக்கரு இரண்டு கட்டுரைகளும், செல்லப்பாவின் ஆழமான வாழ்க்கை பற்றிய தேடல் தாகத்தைப் புலப்படுத்துவனவாக இருக்கின்றன. மேம்பாலக்குறுக்குச்சாலைகள் போல குறுக்கும் நெடுக்குமாக, இடுக்கும் முடுக்குமாக ஓடுகிற வாழ்வின் பல்வேறுபட்ட கூறுகளைப்பற்றிய விழிப்புணர்வோடு அவர் அப்படைப்பாளிகளின் படைப்பை விளக்கிச்செல்லும் பாங்கு அன்றைய சூழலில் தமிழுக்குப் புதிது, பாராட்டத்தக்கது. புதுமைப்பித்தன் கதைகளைப் பற்றி இப்படி எழுதுகிறார்.

"உலகில் வாழவந்த மனிதன் எந்தக் விட்டான் என்ற குமுறல் வரிகள்தா 95.∴.154 புடு யு. ஒவ்வொரு கதைக்குப் பின்னும் வியாபித்து நிற்கிறது. இதை அடிப்படையாகக் கொண்டு அவலம் கொட்டும் மனித வாழ்க்கையை, குளிர்ந்து போன ஆத்மாவின் வாழ்க்கையை பல கோணங்களிலிருந்து பார்த்து விஷயங்களைத் தேர்ந்தெடுத்து ஒரு வடிவத்திற்குள் அடங்கிய விஷய சாரமாக ஆக்கி, சிறுகதை உருவங்களாக வார்ப்பானவைகள் அவரது கதைகள்.

இதுபோலவே "கோவேறு கழுதை" "விஜிடபிள் பிரியாணி" "யாப்பு தெரியாதவர்களின் உளறல்" என்றெல்லாம் "புதுக்கவிதை" கடும் எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தபோது.

புதுக்கவிதைக்குச் சார்பாக அவர் எழுதியுள்ள கட்டுரைகள், அவருடைய கலை இலக்கியம் பற்றிய ஆழமான புரிதலையும், விவாதத் திறமையையும், நாகரீகமாகக்கருத்து வேறுபாடு கொள்ளும் பண்பையும் ஆரோக்கியமான மனநிலையையும் புலப்படுத்துவனவாக இருக்கின்றன. ஓர் இடத்தில் எழுதுகிறார்.

‘‘புதுக்கவிதை சத்தான, தாக்கான முயற்சி, அதன் எதிர் காலம், பழங்கவிதையின்இயல்பும் சிறப்பும் அறிந்து மரபை மீறி மரபு அமைக்கும் வழியாக, கவிதை உள்ளம் படைத்த வர்கள் கையாளும் வழி வகைகளைப் பொறுத்து இருக்கிறது”.

சரியாக, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய செல்லப்பாவின் கருத்து, இன்றைய புதுக்கவிதையின்நிலையைப்பற்றிஎண்ணிப்பார்ப்பவர் யாருக்கும் ஆச்சரியம் தருவதாக அமையும் என்பதில் ஐயமில்லை.சி.சு. செல்லப்பாவின் திறனாய்வு நடையில் பல இலக்கணப்பிழைகள் இருந்தாலும், ஆங்கிலச்சொற்களுக்குத் தமிழ்ச்சொற்களை உருவாக்கிப் படைக்கும் பொறுமை இல்லாவிட்டாலும் அவர் நடைக்கு அழகு ஊட்டுவது, திருமணம் செல்வக்கேசவராயர் போல அங்கங்கே அழகான பழமொழிகளைக் கையாளும் திறமாகும்.

‘‘வடையைத்தின்பதுக்குப் பதில் துளையை எண்ணுகிறவர்கள்”

‘‘வென்னீர்ப்பானையைப் பார்த்து கெட்டில் சிரித்ததாம் நீ கருப்பு என்று”

‘‘யுத்தத்திலும் காதலிலும் எதுவும் நியாயமானதுதான்’’

சி. சு. செல்லப்பாவின் திறனாய்வு எழுத்துக்கள் எல்லாமே அதைப்பற்றி மட்டுமே அமைந்தன. இதனால் புத்திலக்கியங்களைப் புறக்கணித்துவிட்டு ‘‘காணி நிலத்தையே திரும்பத்திரும்ப உழுது கொண்டிருக்கிறார்கள்” என்ற எண்ணம் ஏற்பட வழி ஏற்பட்டது. மேலும் தமிழிலக்கியம் முழுவதையும் ஒன்றாக-முழுமையாகப் பார்த்துத் திறனாய்வைச் செழுமைப்படுத்தும் போக்கு பண்டிதர்களிடம் இல்லாமல் போனது போலவே, இப்புத்திலக்கியத் திறனாய்வாளரிடமும் இல்லாமல் போயிற்று. இத்தகைய தன்மைகள் திறனாய்வியலை எந்த அளவிற்குப் பாதிக்கும் என்பதைக் கிராகாம்கூப் (Graham Hough) எடுத்துக்காட்டுகிறார். தமிழ்ச்சூழலில் அக்கூற்று ஆழமாக அறியப்பட வேண்டிய ஒன்றாகும்.

”ஒரு நல்ல திறனாய்வாளன், பழைய இலக்கியங்கள் வாழுங்கால அனுபவத்தின் ஒரு பகுதியே என்பதை முதலில் தீவிரமாக உணர வேண்டும். இரண்டாவதாகத், தொடர்ந்து வரும் வரலாற்று வளர்ச்சியின் ஒரு பகுதிதான் வாழுங்கால இலக்கியங்கள் என்பதையும் நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

தொடர்ந்து எழுதுகிறார் மிக உன்னதமாக “பழைய இலக்கியங்கள் பற்றிய விழிப்புணர்வு இன்றி, தன் வாழுங்காலத்து இலக்கியங்களைப் பற்றி எழுதுகிற ஒருவர், வெறுமனே ஒரு

பத்திரிக்கையாசிரியராகத் தான் விளங்க முடியும். வாழுங்கால இலக்கியம் பற்றிய விழிப்புணர்வின்றி, பழங்கால இலக்கியங்களைப் பற்றி எழுதுகிற ஒருவர், வெறுமனே ஒரு கல்விநெறித்திறனாய்வாளராகத் தான் விளங்க முடியும். ஒருவகையில் இருவருக்குமே திறனாய்வு என்பது வாழ்க்கைக்கானத் தொழிலாகப் போய்விடும் தமிழ் இலக்கியச் சூழலில் இத்தகைய புரிதல்கள் நிகழும் போதுதான், திறனாய்வும் இலக்கியம் போல, வாழ்க்கையைப் பற்றியதுதான் என்ற தளத்திற்கு உயரும்.

க.நா.சு,சி.சு.செல்லப்பா ஆகியோரின் உருவவியல் அடிப்படையிலான கருத்துக்களையே மேலும் தீவிரமாகக் கலைத்தத்துவம் என்ற அளவில் ஆவேசத்துடன் எழுதியவர் வெங்கட்சாமிநாதன். செல்லப்பாவின் “எழுத்து“ இதழ் மூலம் பலர் வெளிவந்தனர். அவர்களுள் கருப்பையுடன் வெளிவந்தவர்களாக வெங்கட்சாமிநாதனையும் தருமூசிவராமையும் இந்த இடத்தில் சுட்டிக் கூறலாம்.

க.நா.சு.விற்கு இலக்கியப் பற்று இருந்தது என்றால் சாமிநாதனுக்கு ““இலக்கியப் பக்தியே” உள்ளே நுழைந்து, அருள் வந்தவனை ஆட்டிப்படைப்பது போல ஆட்டிப்படைத்தது. இலக்கியம் புனிதனமானது. ஞானமார்க்கமுடையது. உன்னதமானது. பூரணத்துவம் உடையது. தரிசனம் நிறைந்தது-இப்படிப் பலவாறு வண்ணநிலவன் கூறுவது போல, உணர்வுச் சிலிர்ப்பு நிலைக்கு ஆளாகி, இலக்கியத்துக்குக் காவிச்சாயம் ஏற்றி, கற்புநெறி கட்டுகிறார்.

1960-இல் தொடங்கி, இழிந்து கிடக்கும் தமிழ்க் கலை இலக்கியக் கலாச்சாரத்தின் மேல் போர் தொடுப்பவர் போல வெறியுடன் பல கட்டுரைகள் எழுதியுள்ளார், சாமிநாதன். பாலையும் வாழையும், ”ஓர் எதிர்ப்புக் குரல்“, “என் பார்வையில்“, “அன்றைய வறட்சியிலிருந்து இன்றைய முயற்சிவரை“ முதலிய புத்தகங்களாக அக்கட்டுரை வெளிவந்துள்ளன. “இது பாலை நிலம், கற்றாழைதான்முளைக்கும், “மரமண்டைகள், தமிழ்சாதிஉருப்படாது, இந்த எருமை மாடுகளுக்கு எதற்கு நீச்சல் குளம்,? “தெரியாததுகள்“ “புரட்டல், உனக்குப் பெயர் அசோகமித்திரனா?“ கழைக்கூத்தாடிகள் இப்படிக் கடுமையாகச்சாடும் ஓர் எல்லைக்கும், ”மௌனி என்ற உன்னத நிகழ்ச்சி விவரிக்க முடியாத ஒன்று,” என்றும். ““உ.வே.சாமிநாதய்யரைப் பற்றி நினைக்கும்போது, எத்தகைய ஒரு உன்னத நிகழ்ச்சி இந்தச் சமுதாயத்தில் நடமாடிவிட்டு மறைந்து விட்டது என்பது, பிரமிப்பையும் மலைப்பையும் தருகிறது” என்றும் வியந்து மற்றொரு எல்லைக்குத் தாவிவிடுவதும்,வெங்கட்சாமிநாதனின் கொதிநிலையில் இருக்கும் மனநிலையைத் தான் புலப்படுத்துகின்றன.

டில்லி சார்ந்த வாழ்வினால் வந்து அமைந்த பரந்த அறிவையும் அனுபவத்தையும் குழு வாதத்திற்குப் பலியிடாமல், சிறு பத்திரிக்கை வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தும் சாதாரண உத்திமுறைக்குப் பயன்படுத்தாமல், தன்னைப் பற்றியும் தன் கருத்துக்களைப் பற்றியுமான அதீத மதிப்பீடுகளால் தன்னைத் துன்புறுத்திக்கொள்ளாமல், எதிர்க் கருத்துக்களின் நிலைப்பாடுகளைத் தனிமனித அடிப்படையில் அணுகாமல் சமூகத்தின் இயங்கியல் அடிப்படையில் புரிந்து கொண்டு இயங்கியிருந்தால், வெங்கட்சாமிநாதனின் எழுத்துக்கள் தமிழில் பல திறனாய்வுக் கோட்பாடுகளை

உருவாக்கித் தந்திருக்கும். கருத்து, விவாதம், அலசல் புரிதல், விவரம் அறிதல், முதலியன ஓர் உயர்ந்த தளத்திலும், அவற்றை மொழிப்படுத்தும் விதம் மிகச் சாதாரணமாகத் தெருச்சண்டை நிலையிலும் வெளிப்படுத்தப்படுவதால் அவரது கலை இலக்கியம் பற்றிய அக்கறை அனைத்தும் சிதறிவிடுகின்றன. தான் சாடுகின்ற சீரழிவுக் கலாச்சாரத்தின் கூறுகள் தனக்குள் நுழைந்தும், முண்டிக் கொண்டு கிடப்பதை அவர் கண்டு பிடித்திருந்தால், தமிழ்த் திறனாய்வு செழுமை பெற்றிருக்கும் **ஞானத்தினால் அழைப்பு விடுவதற்குப் பதிலாக, அந்த ஞானத்தைத் தன்முனைப்பின் சிகரத்தில் நின்று சத்தம் போடப் பயன்படுத்தியிருக்கிறார்**. ஓவியம், சிற்பம், நாடகம், கூத்து, திரைப்படம், இசை, இலக்கியம் ஆகிய அனைத்துத் துறைகளிலும் குறிப்பிடத்தக்க அளவு பரிச்சயம் உடைய சாமிநாதனின்எழுத்துக்கள், வல்லிக் கண்ணன் கூறுவது போல பெரும்பாலும் “அக்கப்போர்களாகத்““ தமிழ்த்திறனாய்வுவரலாற்றில் இடம் பெற்றுள்ளன. ஆனாலும் எம்.ஜி.ஆர்-ஐ உருவாக்கிய தமிழ்ப்பண்பாட்டின் மறுபக்கவிளைவுகளுள் ஒன்றுதான் சாமிநாதனும் என அடையாளம் காண, அவர் எழுத்துக்களை இன்னும் விரிவாக ஆராய்வதற்கு இடம் இருக்கிறது என்பதை இந்த இடத்தில் சுட்டிச்செல்லலாம்.

வெங்கட்சாமிநாதனின் திறனாய்வு இயக்கத்தின் அடிப்படையாக அமைந்தவை, ஒன்று படைப்பிற்கும் படைப்பாளிக்குமுள்ள உறவு பற்றியதாகும். இரண்டு படைப்பிற்கும் திறனாய்வாளனுக்குமுள்ள உறவு பற்றியதாகும். படைப்பாளியின் வாழ்க்கையும் எழுத்தும் முரண்படலாகாது“ என்பதைப் பல கோணங்களில் விளக்கினார். படைப்பை அணுகிற திறனாய்வாளனும் ஆத்மீகபூர்வமாக இயங்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்-தமிழ் எழுத்துச் சூழலில் ஒன்றிரண்டுபேர்தான் அவ்வாறு தேருவார்கள் என்ற அவருடைய தீர்வான முடிவினால் ஏற்பட்ட கோபம்தான் அவர் கட்டுரைகளில் “கடுமையான சொற்கள்“ குளிவதற்குக் காரணமாயிற்றோ என்று கருதவும் இடம் இருக்கிறது.

வெங்கட்சாமிநாதனின் குறிப்பிடத்தக்க ஆற்றலாக, க.நா.சு. கூறி வந்த சிறுபான்மையினர்ஓ பெரும்பான்மையினர் என்ற கருத்தாக்கத்தை உள்வட்டம் ஓ வெளிவட்டம் என்ற பெயரில் விரிவாக வளர்த்தெடுத்ததைச் சுட்டலாம்-மேலும் கலைஞனையும், வெறும் தொழில் வல்லுநனையும் இனம் பிரித்துக் காண வேண்டும் என்று வலியுறுத்தினார். கதை பின்னும் தொழில் திறமையினாலேயே ஒருவன் கலைஞனாகி விட முடியாது. கலைஞனாவது என்பது சத்தியத்தாகம், முரண்படாவாழ்வு, தரிசனம் முதலியவற்றால் முழுமை அடைவதாகும் என விளக்கினார்-மொத்தத்தில் தமிழ்க் கலை இலக்கிய உலகில் பல வினாக்களின் மூலம் சலசலப்பை ஏற்படுத்தித் தீவிரத்தன்மை நோக்கித் தமிழ்ச்சூழலை ஓரளவிற்கு நகர்த்தியவர் என்ற பெருமை அவருக்கு உண்டு.

ஆன்மீக கேந்திரம்தான் எனது தார்மீகத்தின் என அறிவிக்கும் தருமுசிவராம் “மௌனி“ வட்டாரத்தில் அறியப்படாதவர். ஆனால் 30 பத்திரிக்கைச் சூழலின் ஆன்மீக மையமாகத் திகழ்பவர். கிறுக்கன், குரங்கு, சண்டைக் கட்டுரை (அ) வசவுக் கட்டுரை எழுதுபவன், “வெறியன்“ என்று பலவாறு எழுத்துலகில் குற்றஞ்சாட்டப்பட்டாலும் தமிழிலக்கிய உலகில் பலரிடமும் காணக்

கிடைக்காத ஆழமும் நுட்பமும், தனித்துவமும், சிந்தனை வேகமும் நிறைந்த தன் எழுத்து மூலம் நிமிர்ந்து நிற்பவராகப் பலருக்குக் காட்சி அளித்துக் கொண்டிருக்கிறார் என்பது உண்மை! அவரிடம் குடிகொண்டிருக்கும் மனிதநேயம் சார்ந்த அழகியல், தார்மீக உணர்வுகள், கட்சி கட்டிக் கொண்டு செயல்படுவர்களுடன் சமரசம் செய்து கொள்ள மறுத்துத் "தனியாக" இயக்கம் மேற்கொள்கின்றன. இதனால் பல இழப்புகளை அவர் எதிர்கொண்டிருக்கிறார் என்றாலும், "எழுத்தில்" சாதனைகளைக் காட்டியுள்ளார். சமூக வாழ்வில் குழுவாகக் கூடி இயங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதுத் தவிர்க்க முடியாது ஆனால் "குழு" தங்கள் குழுவைச் சார்ந்த தனிமனிதர்களின் முன்னேற்றத்திற்காகவே சுயநலத்துடன் செயல்படுவதைக் காணநேரும்போது சிவராமு வெடிக்கிறார். தனிமனிதவாதத்தை மிகத்தீவிரமாக முன்னிறுத்துகிறார். தான் கற்ற புத்த மத, இந்துமதச் சிந்தனைகளும் மேலைநாட்டுத் தத்துவச்சிந்தனைகளும், தன் வாழுங்கால ஞானிகளிடம் கற்ற போதமும் அவருடைய திறனாய்வு எழுத்தைக் "கலை வடிவம்" என்று கூறும் அளவிற்கு வளர்த்தெடுக்கின்றன. அதனால்தான் சி.சு. செல்லப்பா இவ்வாறு கூறினார்.

"அவரது கட்டுரைகள் உரைநடையின் அதிகபட்ச சாத்தியத்தை உணர்த்தின" உண்மையிலேயே சிவராமுவின் கட்டுரைகளை நிதானமாக வாசிப்பவன் சி.சு.செல்லப்பா அடைந்த உணர்வைக் கட்டாயம் அடைந்தே தீர்வான்-"கவிதையென்றால் என்ன" என்று கேட்டுக் கொண்டு சிவராமு இவ்வாறு எழுதுகிறார்''.

> ”சிருஷ்டி முழுவதிலும் ஊறி, அதை இயக்கும் சக்திக்கு மறு பெயர்தான் கவிதை. கவிஞனுடைய வேலை, இந்தச்சக்திக்குத் தன்னை ஊற்றுக்கண்ணாகத் திறந்து கொள்வது தான். இயற்கை என்ற ஒளியை விசிறும் மின்சாரம்தான் கவிதை. அந்த மின்சாரத்தை இயற்கையாகவே கவிஞன் உணர்கிறான். அவனை அவனது பாஷைமூலம் உணருகிறோம். ஆகவே, பாஷைத் தகட்டைச் செப்புக் கம்பியாக நீட்டி, தன் ஆத்மாவினுள் கரைந்த கவிதையைப் பாய்ச்சுகிறான். நம்மூடேயும், அக்கவிதை பாய்ந்து மனதில் ஒளியாகப் பூக்கிறது".

இவ்வாறு ஓர் உயர்ந்த தளத்தில் இயங்கும் அளவிற்கு வளர்ந்துள்ள ""ஜீவராமு கௌந்த் அரூப்பிருமிள்," கொல்வதைவிடக், கொல்லப்படுவதையே தேர்ந்துகொள்வேன்" எனக்கூறும் பிருமிள், எதிர்நிலைதிறனாய்வாளராகத் தான் மிகுதியாக இயங்கியுள்ளார், அதுதான் சரியான நெறிமுறை என்றும் கருதுகிறார்.

> "விமர்சனத்தின் பாதையில் பதியும் சுவடுகள் எதிர்ப்புச் சுவடுகளாக இருக்கும் பட்சத்தில்தான் சிந்தனாவாதியும் படைப்பாளியும் விழிப்புடன் நடமாடுவார்கள் சமூகமும் தனது மூளை போன்று இயங்கும் பகுத்தறிவியக்கத்தைப் பேணி நடந்து கொள்ளும்".

ஆனால் எதிர்நிலைத்திறனாய்வாளராக அவர் "இயங்கும் முறை" அவரது ஆன்மீகப்பலத்தின் மேல் ஐயம் கொள்ள வைக்கிறது. மேலும் அவரை ஒதுக்கி வைக்கும் முயற்சிகளுக்கு வலுக் கிடைக்கிறது. அவர் நம்புவது போலத், தரக்குறைவானவர்களை, "ஜாதிய-வர்க்க அடிப்படையில்"

தரமானவர்களாக - மேதாவிகளாகக் - காட்டும் போக்கு இங்கே செல்வாக்குடன் இயங்குகிறது என்பது உண்மைதான் என்றாலும், அதை எதிர்த்து அவர் எடுக்கும் போர்முறைகள், தனி மனிதத்தாக்குதல்களாகத் தாழ்ந்து கிடக்கின்றன. மனிதாபிமானம் அற்றதாகத் மாசுற்றுக் கிடக்கின்றன "அந்த அளவிற்கு நான் அறையப்படுகிறேன். அமுக்கப்படுகிறேன் அதனால்தான் நானும் அப்படி இயங்க வேண்டியதிருக்கிறது" என்று அவர் கூறலாம். ஆனால் அது உண்மையான பதிலாக முடியாது. தன்னுடைய இலக்கியச் சிந்தாந்தமாக மனத்தூய்மையே- மனச்சாட்சியே- எல்லாவற்றிற்கும் அடிப்படை எனக் காணும் பிரமிள், எதிர்நிலைத்திறனாய்வில் தான் வெளிப்படுத்தும் "மனம்" கழுத்தறுக்கப்பட்ட மனச்சாட்சியின் குரலாக ஒலிப்பதை ஏன் காணத்தவறுகிறார்? "தான்" என்கிற ஆணவம், ஒருபக்கம் ஓயாமல் ஒழியாமல் உழைத்து உழைத்து அறிவை எல்லாம் திரட்டப் பயன்படுகிறது. மற்றொரு பக்கம், ஒரு விரல் வீக்கம் போல வீக்கமுற்று "சமநிலையைப்" பாதித்துப் பாதகம் செய்துவிடுகிறது. இத்தகைய இந்தத் "தான்" என்ற மோகத்திற்கு மூக்கணாங்கயிறு போட்டிருப்பாரானால், டி-அரூப்சிவராமின் எழுத்துக்கள் தமிழில் திறனாய்வு இலக்கியத்தை மிக உன்னதமாக உருவாக்கியிருக்கும்!

சம்பாதிப்பதற்காக எழுதாமல், மேலும் மேலும் எழுதுவதற்காகவே 1959 - "எழுத்து" வில் தொடங்கி இன்றுள்ள "நிகழ்"-இதழ் வரைத் தொடர்ந்து எழுதிக்கொண்டிருக்கும் பிரமிள் "இலக்கியத்தில் அழகு" என்பதை வலியுறுத்தினாலும் சடுபிரஞ்கையோடு செயல்படுவராக விளங்குகிறார். க.நா.சு. வெங்கட்சாமிநாதன் ஆகியோரிடம் காண முடியாத ஒருவிதமானத் தீவிரப்பட்ட சமூக அக்கறை இவரிடம் காணப்படுகிறது. மௌனி, சுந்தரராமசாமி, லா.ச.ராஆகியோரிடம் நவீன "சநாதனம்" வெளிப்படுவதாகக் கூறும் பிரமிளிடமும் சநாதனக் கருத்துக்கள் தாம் வெளிப்படுகின்றன என அ. மார்க்ஸ் கணிக்கிறார். ஆனால் ஜே.ஜே. சில குறிப்புகள் என்ற நாவலின் மறைமுக நோக்கம் சநாதனவாதம்தான் என பிரமிள் கணிப்பது, (அவ்வாறு கூறுவதற்கு அதில் இடம் இருக்கலாம்தான், ஆனால் அதுதான் என்று கூறுவது) சுய வெறுப்பினால் நிகழ்வது ஆகும் - அதுபோலவே மார்க்ஸ் கணிப்பும் அமைகிறது. ஆனால் மார்க்சுக்குச் சுய வெறுப்பு காரணமாக இருக்க வழியில்லை. மாறாகக்கொள்கை வேறுபாடாக இருக்கலாம் - பிரமிளிடம் சநாதனத்தையும் தாண்டிய ஒரு தீவிர நிலைப்பாடு இயங்குவதைப் பார்க்க முடிகிறது. அதனால்தான் அவர் திறனாய்வு படைப்பு நிலையை அடைகிறது. அழகான சொற்களும் ஆழமான கருத்துச்செறிவுகளும், காட்சி வழங்கும் சொற்பிரயோகங்களும் அவர் எழுத்து முழுக்கப்பரவிக்கிடக்கின்றன. அதனால்தான் ஞானி இவ்வாறு எழுதுகிறார்.

"சிவராமிடம் வெளிப்படும் சில முனைப்புகளிலுள்ள உண்மையை மார்க்சீயவாதிகள் கவனிக்க வேண்டும்...பசிக்கொடுமைத்தீர்வும் ஆன்மீக மேம்பாடும் தனித்தனியே சாதிக்கக்கூடியவையும் அல்ல. ஆகவே ஆன்மீகப்பிரச்சனைகளில் மார்க்சீயவாதிகள் அக்கறை கொள்ளாமல் இருந்துவிடக் கூடாது. சிவராம் மேற்கொண்டிருப்பது ஒரு ஆன்மீகத் தேடல்"எனவே பிரமிளின் இலக்கியத் திறனாய்வு தத்துவத் தேடலோடு நெருங்கிய தொடர்பு உடையதாத விளங்குகிறது. அதுவே அவர் திறனாய்வின் அடிக்கருத்து என்றே கூறி விடலாம். மேலும் கல்வி யாளர்கள் போல, இலக்கணம், விதி ஆகியவற்றின் அடிப்படையில் இலக்கியத்தைப் பிணமாக்கி

ஆராயாமலும், அரசியல் சார்பாளர்கள் போலத் தங்கள் கட்சிக்கொள்கைக்கு ஏற்ப இலக்கியத்தை வெட்டி ஒட்டி தைத்துக்காட்டாமலும், நிரந்தரமாக மர்மம் நிறைந்த வாழ்க்கை பற்றிய தேடலின் ஒரு பகுதியாக இலக்கியத்தையும் திறனாய்வையும் கண்டு செயல்பட்டிருக்கும் பிரமிளின் எழுத்துக்கள் (வசவுக்கட்டுரைகளைத் தவிர்த்து விட்டால்) அதீத உத்வேகத்தன்மையை வெளிப்படுத்தும் கலை இலக்கியக் குணத்தைப் பெற்று விளங்குகின்றன. கலை, இலக்கியங்களே அதீத உத்வேக உணர்வின் விளைச்சல்தாம் என நம்பும் பிரமிள், தனது எழுத்திலும் அதை வெளிப்படுத்தி உள்ளார். அவரது புதிய கவிதை, புதுப்பாதை-புதுக்கவிஞன் கவிதைக்கோட்பாடும் பாரதிகலையும், படைப்பாளி இயக்கம்-ஆகிய கட்டுரைகள், பிரமிள் திறனாய்வுப் புலமைக்குச் சான்று பகர்கின்றன. மேலும், அவருடைய ”விமரிசனஊழல்கள்”. மஞ்சள் கருத்தும் விமர்சன உலகும்”-ஆகிய வசவு எழுத்துக்களும் கூட, இலக்கிய உலகத்திற்குள் நடக்கும் இலக்கியத்திற்கு அப்பாற்பட்ட பல செய்திகளைப் ”புனிதவாதிகள்போலப் பொத்திப் பொத்தி மறைக்காமல் வெளிக் கொணர்வதன் மூலம் “ஒரு சமூகக்கடமையை“ நிறைவேற்றி யுள்ளன எனக்கருதவும் வாய்ப்பளிக்கின்றன. இலக்கிய உலகிற்குள்ளும் இயங்கும் அருவருக்கத்தக்க அரசியல் அறிந்து கொள்ளப்பட வேண்டியவைகள்தாமே!

தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றைப் பாரதியாரை விட்டு விட்டு எழுதிவிட முடியாது, திறனாய்வுப் பணியில் அவர் தனி முயற்சியுடன் இயங்கவில்லை என்றாலும், வாழ்வின் பல துறைகளிலும் தன்னை இழந்த ஈடுபாடு கொண்ட ஒரு படைப்பாளி என்பதாலும், பத்திரிக்கை ஆசிரியராக விளங்கியவர் என்பதாலும், அங்கங்கே கலை இலக்கியம் பற்றி அவர் கூறி இருக்கும் கருத்துக்கள் தமிழ்த் திறனாய்வு வரலாற்றிற்குத் திறம் சேர்ப்பவைகளாக விளங்குகின்றன.

”தெளிவுறவே அறிந்திடுதல், தெளிவுதர மொழிந்திடுதல், சிந்திப்பார்க்கே, களிவளர உள்ளத்தில் ஆனந்தக் கனவு பல காட்டல், கண்ணீர்த்துளி வரஉள்ளுருக்குதல்” என பாரதி பாடுவதன் மூலம், கவிதையில் ““உணர்ச்சிக்கோட்பாடுதான்“ - கற்பனாவாதக்காலத்துக் கோட்பாடுதான்-பாரதியின் இலக்கியம் பற்றிய அடிக்கருத்தாக விளங்குவதை அறியலாம், ”பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தை பாலித்திட வேண்டும்” என்கும் போது கலை இலக்கியத்தின் சமூகப் பயனை வலியுறுத்துகிறார்-”சக்தியின் அருளால்தான்” கவிதை ஊற்றெடுக்கிறது என்று இந்திய மரபைப் பின்பற்றுகிறார். எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு-ஆகியவற்றுடன் “காவியத்துக்குள்ள நயங்கள்“ குறைவு படாமலும் இலக்கியத்தை நடத்துதல் வேண்டும் என்று பாரதி கூறும்போது, இலக்கியத்தை மக்களாட்சி முறைக்கு ஏற்ப வளைக்கும் சிந்தனையின் உரத்தை அறிய முடிகிறது.

கம்பன், வள்ளுவர், இளங்கோ முதலியோரைப் பற்றி மதிப்பிட்டு உரைக்கும் பாரதி, தன் காலத்தில் தோன்றிய புத்திலக்கியப் படைப்பாளிகளைப் பற்றி மதிப்பிட்டு உரைக்கவும் தவறவில்லை. இராஜமய்யரை “புதிதாகத் தமிழ்க்கதை எழுதுவதில் உண்மையான திறமை காட்டியிருக்கிறார்” என மதிப்பிடுகிறார்.

பெண் பெருமை பேச வந்த பாரதி, ஔவையாரின் புலமையைப் பாராட்டியுரைக்கும் போதும், பகவத்கீதைக்கு உரை எழுதி, அளவை முறையில் தெளிவான முன்னுரை எழுதும் போதும், சப்பானியக் கவிதை பற்றிப் பேசும் போதும், பாரதியின் திறனாய்வுப் புலமை வெளிப்படுகிறது. பாட்டினைப் போல் ஆச்சரியம் பாரின்மிசைஇல்லையடா" என்ற பாரதி, அடிப்படையில் கவிதையாக்கம் பற்றிக் கற்பனைவாதச் சிந்தனைகளைக் கொண்டிருந்தார் எனக்கருத இடமிருக்கிறது.

பாரதியாரைப் போலவே படைப்பாளிகளான, கு.ப.ரா, புதுமைப்பித்தன் ஆகியோரும் குறிப்பிடத்தக்க அளவு மதிப்பீட்டுத் திறனாய்வுகளைச் செய்துள்ளனர். "கு.ப.ரா.வை ஒரு லட்சிய விமர்சகனாகப் பார்க்கிறார் சி.சு.செல்லப்பா. கற்பனாவாதம். செவ்வியல்வாதம் நடப்பியல் முதலிய மேலைநாட்டுப் பார்வைகளைச் சுட்டிக்காட்டியவர் கு.ப.ரா.தான் எனக் கணிக்கிறார், சி.சு. செல்லப்பா. புதுமைப்பித்தனும் தனது திடகாத்திரமான படைப்பிலயக்கத்தின் ஒரு பகுதியாக திறனாய்வுக் கட்டுரைகள் சிலவற்றை ""அபிப்பிராயம்"" என்ற அளவில் எழுதியுள்ளார். "புதுமைப்பித்தனின் கட்டுரைகள்" என்ற தொகுப்பு புதுமைப்பித்தனின் ஆழமான இலக்கியம் பற்றிய பார்வைக்குச் சாட்சியாக நிற்கின்றது. இது போலவே பி. எஸ். இராமையா, கே.சீனிவாசன். வ. இராமசாமி, சங்கு சுப்பிரமணியன், தி.ஜ.ர. ந.சிதம்பரசுப்பிரமணியன், பெ. கோ. சுந்தரராஜன்(சிட்டி) ஞானக் கூத்தன், மணி, ஜெயகாந்தன், சுந்தரராமசாமி ஆகியோரின் இலக்கியம் பற்றிய கருத்துக்களையும் திறனாய்வு என்ற அடிப்படையில் ஆராய்வதற்கு நிறைய இடம் இருக்கிறது. பெ. கோ.சுந்தராஜனும்,சோ.சிவபாதசுந்தரமும் சேர்ந்து எழுதியுள்ள "தமிழ்நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்" என்ற நூலும், "தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்" என்ற நூலும், இக்கால இலக்கியம் பற்றி எழுதப் புகும் யாருக்கும், பல வரலாற்றுப் புள்ளி விவரங்களை வழங்கக்கூடிய நூல்களாக விளங்குகின்றன. சுந்தரராமசாமியின் "சுந்தர ராமசாமி கட்டுரைகள்" என்ற தொகுப்பு நூலும் தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் சுட்டிக்கூறத்தக்க நூலாகும். இலக்கியத்தில் சுரணையுணர்வு, தன்னைப் பற்றியும் தன் சூழலைப் பற்றியும் கொள்கின்ற சுரணையினால் உருவாக்கம் பெற வேண்டும் என்ற கருத்து ஆழமாக முன் வைக்கப்படுகிறது. ரசனை, உள்ளொளி. தரிசனம், மனோதத்துவம், பொறி என்ற குரல்களே சுந்தரராமசாமியிடமும் ஒலிக்கின்றன என்பதால், சுந்தரராமசாமியின் கட்டுரைகளைப் "பாட்டியம்மாள் விமர்சனங்களாகச்" சாருநிவேதிதா கருதுகிறார். ஆனால் சுந்தரராமசாமியின் உயிரோட்டமுள்ள நடை, அனுபவ விரிப்பு, கவனமான சொற்பின்னல் பாட்டியம்மையின் இருப்பை நியாயப்படுத்திவிடுகின்றன,

மொத்தத்தில், இலக்கியத்தில் வடிவத்தை வலியுறுத்தி இலக்கிய அழகை உருவாக்க முயன்ற இத்திறனாய்வாளர்களால், இலக்கியம், கவிதை, கலை ஆகியன எல்லோரும் நினைப்பது போல எளிமைக் குணம் கொண்டவை அல்ல. வாழ்க்கை போல ஆழமான மர்மமான, தேடத்தேடச் சிக்கல் குணம் மிக்கவை என்ற எண்ணம் மேலோங்கி. இலக்கியத்தின் அருமை உணரப்பட்டது.

படைப்பிலும் வாசிப்பு நிலையிலும் “பல தளங்கள்“ இருப்பதை உணர்த்த முடிந்துள்ளது.திருக்குறள் கம்பராமாயணம் ஆகியவற்றில் சங்க இலக்கியம், திருக்குறள் கம்பராமாயணம் ஆகியவற்றில் உள்ள அனைத்துப் பாடல்களும் “கவித்துவம்“ நிறைத்தவை அல்ல. அவைகளில் வெறுமனே இலக்கண விதி முறைகளை மட்டும் கொண்டு பல செய்யுட்கள் விளங்குகின்றன என்று இத்திறனாய்வாளர்கள் துணிந்து கூறினர்.

இத்திறனாய்வாளர்களிடம் கலை, இலக்கியம் ஆகியன அவைகள் எவ்வளவு உயர்ந்தவைகளாக இருந்தாலும், வாழ்க்கையின் ஒரு கூறுதான் என்ற உண்மை தலைகீழாகப் புரட்டப்பட்டு. இறைவனுக்காகத்தான் இந்த அற்பவாழ்கை என்று மதவாதிகள் கூறுவது போல,வாழ்க்கையே இலக்கிய ஆக்கத்திற்காகத்தான் என்ற நிலைப்பாடு தொனிப்பதைக் காண முடிகிறது. ”எதையும் செய்யுங்கள், ஆனால் அதை இலக்கியமாகச் செய்யுங்கள்” என்றொரு பத்திரிக்கை (கசடதபற) பிரகடனம் பண்ணியது. இத்தகைய இலக்கிய மோகவெறியில் பல இளைஞர்கள் ஒற்றைப் பரிமாணம் பெற்று, வாழ்க்கை பற்றிய மரபார்ந்த மதிப்பீடுகளைத் தராதரம் பார்க்காமல் மிதிப்பது தான் உன்னத இலக்கியம் உருவாக்குவதற்கான சரியான நெறிமுறை எனப் பிறழ உணர்ந்து, தங்கள் அழகான உள்ளத்தையும் வாழ்க்கையையும் சேதப்படுத்திக் கொள்கின்றனர்.

இத்தகைய அழகியல்வாதத் திறனாய்வு நோக்கிச்செயல்பட்ட மணிக்கொடி, ராமபாணம், சூறாவளி, இலக்கிய வட்டம், எழுத்து, கிராம ஊழியன், அ∴, கசடதபற,ஞானரதம், கணையாழி, தீபம், அன்னம்விடுதூது, லயம், திசை நான்கு, முதலிய இதழ்களின் திறனாய்வுப்பணியைத் தனியே விரிவாக ஆராய்வதற்கு நிறைய இடம் இருக்கிறது.

## உ) சமூக இயல் திறனாய்வு

சமூகவியல் திறனாய்வு என்ற இந்த சொல்லாட்சிப் பலவிதமான போக்குகளை மொத்தமாகக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்படுகிறது. சமூகத் திறனாய்வு. சமூகவியல் திறனாய்வு, மார்க்சீயத் திறனாய்வு என மூன்று வகைப்போக்கை இனம் பிரித்துக்காண்பது நல்லது.

சமூகத் திறனாய்வு என்பது (Social Criticism) ஒரு சமூகத்தின் பண்பாடு, கருத்து, பழக்க வழக்கம், முதலியவைகளின் வரலாற்றுப் பின்னணியில் ஏதாவதொரு முறையில் இலக்கியத்தை விளக்குவது எனக் கொள்ளலாம், சாமி-சிதம்பரனார். வையாபுரிப்பிள்ளை, பொ. திருகூடசுந்தரம், ஏ.வி.சுப்பிரமணிய அய்யர், தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் முதலியோரின் எழுத்துக்களை இவ்வரிசையில் சேர்க்கலாம் - “சிலப்பதிகாரம் காட்டும் சமுதாயம்“, “சங்க இலக்கியம் காட்டும் தமிழிலக்கியம் காட்டும் திருமண முறைகள், ““ “புறநானூறு காட்டும் தமிழர்தம்போர்முறைகள்”- முதலிய தலைப்புகளில் செய்யப்படும், கல்வியாளர்களின் செயற்பாட்டை இத்திறனாய்வுப் பிரிவில் அடக்கலாம்.

சமூகவியல் திறனாய்வு என்பது (Sociological Critism) சமூகவியல் என்கிற புதிய சமூக விஞ்ஞானத்துறையின் ஆய்வியல் நெறிமுறைகளைப்பின்பற்றியும், அஃதாவது, அட்டவணை, புள்ளி விவரம், பரிசோதனை, வரைபடம், முதலிய அறிவியல் உத்திமுறைகளைப் பின்பற்றியும் சமூகவியல்துறை ஆய்ந்தறிந்த சமூக உண்மைகளைப் பயன்படுத்தியும் இலக்கியத்தை விளக்குவது எனக் கொள்ளலாம். தமிழ்நாட்டுச் சூழலில் பல்கலைக்கழக மட்டத்திலேயே சமூகவியல்துறை போதிய கவனத்துடன் வளர்க்கப்படவில்லை. கல்வி கற்கிற அனைவர்க்கும் கட்டாயப்பாடமாக நடத்தப்பட வேண்டிய இத்துறை, தமிழ்நாட்டில் புறக்கணிக்கப்பட்டுக் கிடக்கிறது என்றே கூறலாம். எனவே சமூகவியல்துறையைப் பயன்படுத்தி இலக்கியத்தை விளக்குகிற முயற்சியும் பெரிதும் மேற்கொள்ளப்படவில்லை என்றே கருத வேண்டியதிருக்கிறது. பிறதுறை அறிவைத் தமிழிலக்கியத் துறையில் இருப்பவர் பெறுவதற்கான சூழலும், பிறதுறையில் இருப்பவர் தமிழினம், தமிழிலக்கியம், தமிழ்நாடு, தமிழ்க்கருத்துலகம் பற்றிய அறிவைப் பெறுவதற்கான சூழலும் இன்னும் இங்கு உருவாக்கப்படவில்லை என்ற அவலநிலைதான் நீடிக்கிறது. தாய்மொழி வழிக்கல்வி மட்டுமே இச்சூழலை உருவாக்கிக் கொடுக்க முடியும். அச்சூழல் உருவாகாத வரை இத்தகைய திறனாய்வுகள் நொண்டி அடித்துக் கொண்டு கிடக்க வேண்டியதுதான். ஆனாலும் “ஜெயகாந்தன் நாவலில் பெண்கள்” ஜானகிராமனின் நாவல்களில் ஆண்-பெண் உறவு, ““தமிழ் நாவல்கள்-ஒரு சமூகவியல் பார்வை”-இப்படிச் சில முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதையும் சுட்டிக்கூறத்தான் வேண்டும்.

மார்க்சிய திறனாய்வு என்பது, “மார்க்சியம்“ என்ற பொதுவுடைமைத் தத்துவ அடிப்படையிலும், மார்க்சிய அழகியல் நெறிமுறைகளின் அடிப்படையிலும் கலை, இலக்கியங்களின், தோற்றம், வளர்ச்சி, பயன்பாடு முதலியன பற்றியும், கலையுள்ளம் பற்றியும் இலக்கிய அழகியல் பற்றியும் விளக்குவது ஆகும். இவ்வகையான திறனாய்வு, தமிழிலக்கியச் சூழலில் பெரும் சக்தியாக உருக்கொண்டுள்ளது என்பதால், இத்திறனாய்வைப் பற்றி விரிவாகக் காண்பதற்கு இடம் இருக்கிறது. இம்மூன்று வகையான பிரிவிலும் இலக்கியத்திற்கும் தனி மனிதனுக்குமுள்ள உறவைவிட, இலக்கியத்திற்கும் சமூகத்திற்குமுள்ள உறவுதான் அடிப்படை அணுகுமுறையாக இருப்பதால், இவைகளை உறவுதான் அடிப்படை அணுகுமுறையாக இருப்பதால், இவைகளை மொத்தமாகக் குறிப்பிடச் சமூகவியல் திறனாய்வு என்ற சொல்லாக்கம் பயன்படுகிறது. மேலும் இச்சமூகவியல் திறனாய்வின் கீழ், வரலாற்றுமுறைத் திறனாய்வு (Historical Critism), சுயவரலாற்றுமுறைத் திறனாய்வு (Autobiographical Criticism), ஆகியனவும் அடக்க மாகின்றன என்பதையும் குறித்துக் கொள்ளல் வேண்டும்.

இந்தியாவில் 1925-இல் இந்தியப்பொதுவுடைமைக் கட்சி தோன்றியது. ஆனால் இதற்கு முன்பே சென்னை, கல்கத்தா, பம்பாய் முதலிய நகரங்களில் தொழிற்சாலைகள் தோன்றி, தொழிலாளர்கள் என்ற புதிய வர்க்கமும் வளர்ச்சியுற்றிருந்தது. தமிழகத்தில் கலை, இலக்கியத் துறையிலும் உருசியப்புரட்சியின் செல்வாக்கைப் பாரதியார் மிக உற்சாகத்துடன் வெளிப்படுத்தி யிருந்தார். சுதேசமித்ரன் பத்திரிக்கை,“ நீலகண்ட பிரம்மச்சாரி, திரு.வி.க., எம்.சிங்காரவேலு,

பெரியார்,ஜீவானந்தம், பாரதிதாசன் முதலியோரும் பொதுவுடைமைக் கருத்துக்கள் தமிழர்தம் கருத்து உலகில் மையமாக இயக்கம் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டனர்-அ. நடராசனின் ”லெனின். ருஷ்யாவின் விடுதலை வீரன் (1933)-என்ற நூலும், வெ. சாமிநாதசர்மாவின் ”காந்தியும்லெனினும்“ (1937) என்ற நூலும் மார்க்சியசிந்தனைகள் வளரத் துணை புரிந்தன. விடுதலைக்குப் பிறகு, இந்திய-சோவியத் நட்புறவுகள் நிறுவப்பட்ட பிறகு, சோவியத்து எழுத்தாளர்களின் நூல்களும்,இதழ்களும் தமிழ் மொழிபெயர்ப்புடன் மிகக் குறைந்த விலையில் கிடைத்தன. கார்க்கி, டால்சுடாய், செக்காவ், மிகயில்ஷோலகோவ், இலியாஇரென்பர்க், தாஸ்தோவெஸ்கி ஆகியோரின் உலகப் புகழ்பெற்ற படைப்புகள் தமிழ்நிலத்தின் காற்றில் பரவின. பல இளம் எழுத்தாளர்கள் கவரப்பட்டனர். சோசலிசரசியாவின் புரட்சியும் வரலாறும், கருத்தியலும் இங்குள்ள பலருக்குப் பரிச்சயமாயின. இத்தகைய சூழலில், இந்தியப் பொதுவுடைமைக் கட்சியும் வேகமாக வளர்ந்தது. எனவே மார்க்சிய அழகியல் தமிழ் இலக்கியத்திலும் திறனாய்விலும் பெரும் செல்வாக்குடன் விளங்கத் தொடங்கியது.

மார்க்சியத்திறனாய்வில் பெரிதும் ஈடுபாட்டுடன் செயல்பட்டவர்களாக ப. ஜீவானந்தம், சிதம்பர ரகுநாதன், ஆர். கே. கண்ணன், சமரன்இஸ்மத்பாஷா, சரஸ்வதி விஜயபாஸ்கரன், மாஜினி, தி.க.சிவசங்கரன், எஸ். இராமகிருஷ்ணன், சி. கனகசபாபதி, நா. வானமாமலை, வெ.கிருஷ்ணமூர்த்தி, க. கைலாசபதி, கா.சிவத்தம்பி, கோ. கேசவன், தி.சு.நடராசன், தோதாத்ரி, ஆ.சிவசுப்பிரமணியன். எம்.ஏ.நு.ஃமான், தமிழவன், எஸ்.வி. ராஜதுரை அ. மார்க்ஸ், நாகார்ச்சுனன், எம். டி. முத்துக் ஞானி, குமாரசாமி, ராஜ்கௌதமன், சாருநிவேதிதா, அக்கினிபுத்திரன், கே. முத்தையா முதலியோரைக் குறிக்கலாம்: இவர்களுக்குள் பல தளவேறுபாடுகள், அவர்களுக்கிடையிலான மார்க்சியம் பற்றிய புரிதலிலுள்ள வேறுபாடுகளின் காரணமாக விளங்குகின்றன என்பதையும் மறந்துவிடக்கூடாது.

பெரியாரிடமிருந்து பிரிந்து முழுநேரப் பொதுவுடைமைவாதியாக வளர்ந்த ப. ஜீவானந்தம், ”இலக்கியத்தில் சோஷலிஸ்டுஎதார்த்தவாதம்,” ”சங்க இலக்கியத்தில் சமுதாயக் காட்சிகள்” முதலிய தன் நூல்கள் மூலமும் 1958-இல் தான் தொடங்கிய ”தாமரை” இதழ் மூலமும் வர்க்க அடிப்படையில் பழந்தமிழ் இலக்கியங்களுக்கு விளக்கம் அளித்தார். சோவியத்துப்புரட்சியின் விளைவாக உருவான சோசலிசயதார்த்தவாதம்“ என்ற இலக்கியக்கோட்பாட்டைத் தானறிந்த அளவில் அறிமுகப்படுத்தினார். அவருடைய எழுத்துக்கள் மூலம்,உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே,“

”கரும்பு போல் கொல்லப் பயன்படும் கீழ்“ முதலிய இலக்கியவரிகள், வர்க்கப் பார்வை அடிப்படையில் புது விளக்கம் பெற்றன. இவ்வாறு தமிழிலக்கியச்சூழலில் வளர்ந்த மார்க்சியப் பார்வை காரணமாகச் சிலப்பதிகாரம், குடிமக்கள் காப்பியமாகப் புதுவிளக்கம் அடைந்தது. இராமன், சகோதரத்துவம்“ நிறைந்தவனாகக் காணப்பட்டான். பள்ளுப்பாடலும் குறவஞ்சியும், நந்தனார்சரிதமும் ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகப் பதிவாயின. தி.மு.க.வின் கருத்துலகை ஒட்டி உருவாக்கப்பட்ட சங்க காலம், ஒரு பொற்காலம் என்று கருத்து உடைக்கப்பட்டு, சங்க காலம்

ஒருபக்கம் ஏழ்மையும் வறுமையும், மறுபக்கம் வளப்பமும் செழிப்பும் கொண்ட வர்க்க சமுதாயமாகக்காட்டப்பட்டது. சிலப்பதிகாரம் வணிக சமூகத்திற்கும் நிலவுடைமைச் சமூகத்திற்குமிடையே உருவான முரண்பாட்டின் விளைவாகப் பிறந்தது எனப்புது விளக்கம் பெற்றது. இப்படிப் பல புதிய பார்வைகளை மார்க்சியப் பார்வை தமிழுக்கு வழங்கியது. மேலும் வடிவ இயல் திறனாய்வாளர்கள் இலக்கியத்தை இரசனைப் பொருளாக - சாய்வு நாற்காலிப் பண்டமாக விளக்கிக் கொண்டிருந்த போது, இம்மார்க்சியத் திறனாய்வாளர்கள், பலர் இலக்கியத்தைக் கற்றுக்கொள்வதற்குரிய ஒரு பொருளாகத் தீமையை அழிப்பதற்கான ஈடிணையற்ற ஒரு போர்க்களக்கருவியாக, மனிதனை அவன் சமூகத்தை ஓர் உயர்ந்த தளத்தில் அவைகளுக்கே உரிய சிக்கலான - புதிரான - தன்மையோடு புரிந்து கொள்வதற்கான ஒரு நெறிமுறையாகக் கண்டு விளக்கினர்.

ஜீவாவிற்கு அடுத்துக் குறிப்பிடத்தகுந்தவர் சிதம்பர ரகுநாதன் ஆவார். தினமணி, சக்தி, சாந்தி ஆகியவற்றின் பத்திரிக்கை ஆசிரியராகக், கவிஞராக, மொழி பெயர்ப்பாளராக, நாவலாசிரியராகச், சமூகப்பார்வை உடைய ஆராய்ச்சி அறிஞராகத், திறனாய்வாளராகப் பல்வேறு தளங்களில் இயங்கித், தனது நாற்பது ஆண்டுகளுக்கும் மேற்பட்ட இலக்கிய வாழ்வு மூலம், இன்று அவர். புாரதி பற்றிய ஆய்வாளர்களுள் தலையாய ஆய்வாளராக உயர்ந்து நிற்கிறார். ‘பாரதியும்ஷெல்லியும்’, ‘கங்கையும்காவிரியும்’ ‘பாரதி-காலமும் கருத்தும’, பாரதி-சில பார்வைகள்,“ பாஞ்சாலிசபதம்-உறை பொருளும் மறை பொருளும்-என்று பாரதி பற்றியே பலவாறு சிந்தித்து ஆராய்ச்சி நூல்கள் எழுதியுள்ளார். ”இளங்கோ அடிகள் யார்?” ”சமுதாய இலக்கியம்” ஆகிய நூல்களும் அவருடைய சமூகப்பார்வை மிக்க வரலாற்றுப்பார்வையையும் ஆராய்ச்சிப்புலமையையும் புலப்படுத்தும் நூலாகும். இத்தகைய எழுத்துக்கள் இலக்கிய ஆராய்ச்சி என்ற தளத்திற்குப் போய்விடுகின்றன. எனவே இலக்கியத் திறனாய்வு என்ற அளவில் குறிக்கத்தக்கதாக அவருடைய இலக்கிய விமர்சனம் (1948) என்ற கட்டுரைத் தொகுப்புதான் காணப்படுகிறது.

“இலக்கிய விமர்சனம்“ என்ற நூலிலும் கலை-இலக்கியம் பற்றிய வியப்பு உணர்வோடும். அக்காலத்தில் செல்வாக்கு செலுத்திய “இரசனைஉணர்வோடும்“ உற்சாகமாக அங்கங்கே அழகு அழகான சொற்கூட்டுகளையும் கருத்துப் பொறிகளையும் விதைத்துச் செல்கிறார் என்பதைத் தவிர, மார்க்சிய அழகியல் அறிவோடு கூடிய திட்ட வட்டமான பார்வையோடு எழுதிச்செல்கிறாரா என்பது ஐயமே! எனவேதான் ஒன்றுக்கொன்று முரணான பல பார்வைகளை-அவைகளுக்கிடையே உள்ள ஆழமான எதிர்நிலைகளைப் பற்றிய நுட்பமான புரிதலின்றி எழுதிச் செல்கிறார். இலக்கியம் யதார்த்தமானது என்பார். அதே கையால் சுடச்சுட கனவுக்குழந்தை என ஆவி பறக்க எழுதுவார்-நூலைவிமர்சிப்பதை விட்டு விட்டு, நூலாசிரியனைப் பற்றி எழுதுகிறார்கள் என்பார், அதே நேரத்தில் எழுத்தாளனுக்கு வேண்டியது நேர்மை, ஒழுக்கம் முதலிய பண்புகள் என்பார். ஜியார்ஜ் லூக்காக்ஸ், கிறிஸ்டோபர், காடுவெல், ஜியார்ஜ் தாம்ஸன்,

தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு லூனாசார்ஸ்கி, ரேமாண்ட்வில்லியம்ஸ், வால்டர்பென்ஜமின், லூசியன்கொல்ட்மான் முதலிய மார்க்சிய இலக்கியத்திறனாய்வாளர்கள் வளர்த்தெடுத்துள்ள மார்க்சிய அழகியல் பற்றிய அறிவை அடைவதிலுள்ள ஆர்வமின்மைதான் இன்றுவரை அவருடைய பாரதி பற்றிய எழுத்துக்கள் கூடத்திறனாய்வாக இல்லாமல், வரலாற்றுப் பொருள்முதல்வாதத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டிலங்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக விளங்குவதற்குக் காரணமாகும்.

வரலாற்றுச் செய்திகளைத் திரட்டிச் சமூகப் பார்வையுடன் இலக்கியத்தை விளக்குவதற்கு எடுத்துக் கொண்ட ஆர்வத்தை, இலக்கிய அழகியல், இலக்கியத்திறனாய்வியல் பற்றிய தேடலிலும் அவர் காட்டியிருப்பாரேயானால், புதுக்கவிதையாளர்கள் வசன கவிதை நபர்கள் என்றும் புதுக்கவிதையைத் தந்தி பாஷை என்றும் கேலி செய்து கேலிக்குள்ளாகும் நிலை ஏற்பட்டிருக்காது. பிச்சமூர்த்தியையும் கு.ப.ரா-வையும் தூற்றி எழுத வேண்டிய சூழல் ஏற்பட்டிருக்காது. தமிழவன் குறிப்பது போல,"சாமார்த்தியமாய் விமர்சன ஈடுபாட்டைத் தொழில் முறையான எழுத்துக்கு அடகு வைத்து ஜீவனோபாயம் செய்யப் போய் விட்டார். நமக்கு நஷ்டம் ஒரு விமர்சன சாம்ராஜ்யம் என்று கூறும் நிலையும் ஏற்பட்டிருக்காது. ஆனாலும். தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில், இலக்கியத்தைச் சார்பற்ற "ஒரு தனிப் பொருளாகக்" கொண்டாடிக் கொண்டிருந்த சூழலில், இலக்கியத்திற்கும் சமூக இருப்பிற்கும் உள்ள பிணைப்பைத் தன்னுடைய அழுத்தமான நடையினாலும் கடுமையான உழைப்பினாலும் தெளிவுப்படுத்திக்காட்டியவர் என்ற அளவில் அவருடைய பங்களிப்பு குறிக்கத்தக்கது என்பதில் ஐயமில்லை.படிக்கப்படிக்க விரிந்து கொண்டே போகும் மார்க்சியக் கருத்தாக்கங்களுக்கான கட்டுமானப்பணியைத் தமிழிலக்கியச்சூழலில் "மழை வருது!" என்று மிகவும் சுறுசுறுப்புடன் நிகழ்த்திக்காட்டியவர் நா. வானமாமலை ஆவார். அவர் நடத்திய ""ஆராய்ச்சி" இதழ். அறிவைச் சேகரிக்கத்துடிப்பவர்களுக்கு நல்லதொரு தூண்டுகோல் சக்தியாக விளங்கியது.

தத்துவம், பண்பாடு, வரலாறு, மானுடவியல், நாட்டுப்புறவியல், கலை, இலக்கியம், மார்க்சியம், பிராய்டிசம் - எனத் தான் சேகரித்த அனைத்து அறிவையும், சிதறாமல் கலை இலக்கிய ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தி, மு.வ. மாணவர் பரம்பரை. தெ.பொ.மீ மாணவர் பரம்பரை என்பது போல, வானமாமலை மாணவர் பரம்பரையை உருவாக்கிய சாதனையாளர் நா.வா, ஆவார்.

"மார்க்சியமே உலகை உன்னதமாய் உருவாக்கும்" என்ற நம்பிக்கை ஒளி சந்தேகத்திற்கு இடமில்லாமல் சான்றுகளுடன் பிரகாசமாக வீசிக் கொண்டிருந்த காலக்கட்டத்தில், மிகுந்த உற்சாகத்துடன் எழுதியுள்ள நா.வா.வின் எழுத்துக்களை. மார்க்சியத்தின் எதிர்காலம் பற்றிப் பலவிதமான ஐயவெளிப்பாடுகள் தீவிரவேகம் பெற்றிருக்கும் இன்றைய சூழலில்-மார்க்சியமே தேசியவாதத்திற்குள் சுருங்கிப் போன இன்றைய சூழலில்-படிக்குப்போது, வானமாமலையின் அன்றைய முயற்சியின் அருமை பெருமை சரியாக உணரப்படாமல் போக வாய்ப்பு இருக்கிறது என்ற விழிப்புணர்வுடன் இயங்க வேண்டியதிருக்கிறது. ஆனாலும் சிதம்பர ரகுநாதனை விடப்

புதுக்கவிதைகளை ஏற்கத் தொடங்குதல், அவரைவிட மார்க்சிய அழகியல் பற்றித் தனியாகச் சிந்தித்தல் பல்துறை அறிவைப் பயன்படுத்துதல் என்ற அளவில் இவர் தனித்து விளங்குகிறார் என்றாலும், அவரைப் போலவே நா.வா.வும் ஆராய்ச்சியாளராகத்தான் அதிகம் வெளிப்படுகிறார். தமிழ் நாட்டுப்புற ஆராய்ச்சியைத் தமிழர்தம் தத்துவம், பண்பாடு ஆகியன பற்றிய ஆராய்ச்சியைப் பொருள்முதல்வாத அடிப்படையில் எவ்வாறு நடத்திச் செல்வது என்ற முறையியலை அறிமுகப்படுத்தியவர் என்ற அளவில் பாராட்டுக்குரியவராக விளங்குகிறார்.

திறனாய்வாளர் என்ற அளவில் “புதுக்கவிதை முற்போக்கும்பிற்போக்கும்““, “மார்க்சிய அழகியல் ஆகிய இரண்டு நூல்களும் குறிப்பிட்டுக் கூறும்படியாக விளங்குகின்றன. ”இலக்கியத்தில் உள்ளடக்கமும் உருவமும்” என்ற நூலையும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.அவருடைய திறனாய்வு எழுத்துக்கள் அனைத்திற்கும் அடிப்படையாக அமைவது “உள்ளடக்கப் பார்வையே“ ஆகும்! உள்ளடக்கத்தில் அவர் நம்புகிற, நிறுவனம் சார்ந்த முற்போக்குச் சிந்தனைகள் இருந்தால், முதுகில்தட்டிக் கொடுப்பார், இல்லையென்றால், ”முதலாளித்துவக் கலைக்கயவாளிகள்,” ”மனச்சாட்சியை வெளிக்காசுக்கு விற்று விட்ட இலக்கிய ஜூடாஸ்கள்” என்று அட்டையில் எழுதிக் கழுத்தில் தொங்கவிட்டுவிடுவார்.

“மக்கட்படையின் அணியில் ஒரு கவிஞன் எங்கிருக்கிறான் என்பதைப் பார்த்தே அவனது கவிதையுள்ளடக்கம் முற்போக்கா, பிற்போக்கா என்று தீர்மானிக்க வேண்டும்”

இயந்திரத்தனமான சூத்திரப் பார்வை என்பது இதுதான்- படைப்புத்தொழிலுள்ள எண்ணிமாறாத சிக்கலான பிரச்சனைகளைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல், கணக்கு போல -என்ற மனிதச்செயல்பாட்டின் சாரத்தைச் சுருக்க முனைவதிலுள்ள ஆபத்தைப்பற்றி எல்லாம் இவருக்கு அக்கறை இல்லை. டால்சுடாயை, லெனின் எந்த வகையில் ஏற்றார்? என ஒரு வினாவைப் போட்டுப்பார்க்கக் கூடப் பொறுமையின்றிக் “கட்சிக்கு ஊழியம், செய்யும் அவசரம் இப்படி எழுத வைக்கிறது எனலாம்.

”நான் அவசர விமரிசனங்கள் எழுதுகிறவனல்ல. ஆழ்ந்த இலக்கிய ஆய்வின் முடிவுகளையே நான் வெளியிட விரும்புகிறேன்”. அவருடைய தத்துவ ஆராய்ச்சிக்கு இக்கூற்றுப் பொருந்தலாம். ஆனால்இலக்கியவிமர்சனத்தில்அவசரப்பட்டிருக்கிறார்,நா.வா.எனவேதான்”புதுக்குரல்கள்” வெளிவந்த போது“புதுக்கவிதையை”தனிமனிதப்பேய்ப்படைப்புக்கள்”‘‘மனநோயாளிகளின் வெளியீடு“ ”சாக்குருவி வேதாந்திகள்”இணைவிழைச்சு வக்கிரங்கள்,”நிராசைப்புலம்பல்கள்“ “சொறிந்து சுகம் காணுகிற சொறிசிரங்கு நோயாளிகள்“ ‘‘பலவீனமனிதர்களது கூக்குரல்கள்” என்றெல்லாம் ”வார்த்தைகளால் விமர்சனம்“ செய்யும் நா. வா. மீராவின் “கனவுகள் ூ கற்பனைகள் ஸ்ரீ காகிதங்கள்“- என்ற “காதல் நூலைப்பற்றிப் பேசும் போது மட்டும் குரல் மாறிப் பேசுகிறார். தான் சார்ந்த கலை இலக்கியப் பெருமன்றத்தைச் சார்ந்தவர் என்பதால், கங்கை நீரைத்தெளித்து ஆசி வழங்கி விடுகிறார். இவ்வாறு கல்வி நெறியாளர்களிடம் இருக்கும் விதிகளின் அடிப்படையில் அணுகும் நேர்கோட்டுப்பார்வையும், ““க.நா.சு.குழுவினரிடம்” இருந்த அப்பட்டமான குழு பார்வையும்,

விஞ்ஞானநெறிமுறையைத் தன் விமர்சனத்தில் பயன்படுத்தியவர் எனப்போற்றப்படும் நா.வானமாமலையிடமும் குடி கொண்டிருப்பதைக் காண முடிகிறது.

“முற்போக்குக்கவிஞர்களின் எழுத்தில் கவித்துவம்” இல்லையே, ‘‘பிரச்சாரநெடி” தானே மூக்கைத் துளைக்கிறது“ என்று நீண்ட காலமாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நா. வா.வின் முன்னாலும் வைத்தனர்.“அகவயவாதிகளைவிட, இவர்கள் ஆரோக்கியமானவர்கள்: ஏனெனில் இவர்கள் சமுதாய விமர்சகர்கள்“ இது நா.வா.வின் பதில்! மேலும் ”இதனைப் பிரச்சாரம் என்பவர்களைப் பார்த்து. மக்களது இன்ப வாழ்க்கைக்குப் பிரச்சாரம் செய்வது பெருமைபடத்தக்கதோர் செயல் என்று மனத்துள் நினைத்து, ஞானப் புன்னகை புரிவோம்”என்றும் எழுதுகிறார்! இவ்வாறு கவிதையை “இயந்திர துப்பாக்கியாகக் காணத்துடிப்பவரின் ஏளனப்புன்னகைகளால் பாதிக்கப் பட்டது தமிழிலக்கியவிமர்சன உலகம்தான். கருத்துக்கேற்ற வடிவம் வந்து கூடுவதற்கு முன்பே அவசரப்பட்டு அவைகளை வெளிப்படுத்தும்போது, அவை பிணமாகத்தான் வெளியே வருகின்றன - நாற்றத்தைத்தான் விளைவிக்கின்றன. மிகப்பெரிய உயர்ந்த கருத்துக்கள் பல, இப்படி வீணாகியிருக்கின்றன வடிவம் வாய்த்ததால் மிகச் சிறிய கருத்துக்கள் பல, வாழ்ந்து கொண்டிருக்கின்றன.இந்த அழகியல் வரலாற்றை, வரலாற்று உணர்வு கொண்ட நா.வா. காணாமல் போனது அவலத்திற்குரியதே.

மார்க்சியம் தன் கலை, இலக்கியம் பற்றிய தேடலைத் தன் இயங்கியல் பொருள் முதல்வாத நோக்கிற்கு ஏற்ப அகத்திலிருந்து (ஞரடிதநஉவ) தொடங்காமல், புறத்திலிருந்து (ஞரடிதநஉவ) தொடங்குகிறது. கருத்திலிருந்து தொடங்காமல், செயல்பாட்டிலிருந்து தொடங்குகிறது. மனத்திலிருந்து தொடங்காமல் பொருளிலிருந்து தொடங்குகிறது.மார்க்சியத்தின் அறிவுத்தோற்றவியல் கோட்பாட்டின்படி, பொருள் தான் புறவிய உண்மை அது சுதந்திரமாக இயங்குகிறது. ”கலையின் தொடக்கப்பள்ளி, புறவியமானதோர் பொருள் அல்லது நிகழ்ச்சிதான். ஆனால் மனிதன் ”தான்” இல்லாமல் கலை வளர்ச்சி பெற முடியாது. எழுவாயின் செயல் இல்லாமல் மனிதன் இயற்கையை மாற்றுவதும், இயற்கையில் மாற்றப்படுவதுமான இயக்கவியல் மாற்றங்கள் நிகழ மாட்டா. கலைப்படைப்பு நிகழ்ச்சியில் இம்மாற்றங்கள் அழகியல் விதிகளுக்கேற்ப நடக்கின்றன” என்றெல்லாம் “கலைப்படைப்பின் ஆக்கம்“ பற்றி எழுதியுள்ள நா. வா. “சிந்தனையும் பொருளும்” ”உடனிருப்புக்” கொண்டுள்ளன. அது ஒரு செயல்முறை (Process) .ஒரு சித்திரம் போல இயக்கமின்றி, ஒரு எண், அல்லது குறியீடு போல சிந்தனைக்கும் பொருளுக்குமிடையே உள்ள தொடர் இல்லை. இது தொடர்ச்சியாக இயக்கவியல் முறையில் நிகழ்கிறது என்றும் எழுதுகிறது.

நா.வா.,”புறவயமான உலகை, மனித உணர்வு (உள்ளம்) பிரதிபலிப்பது மட்டுமல்லாமல், அதனைப் படைக்கவும் (உள்ளத்தில்) செய்கிறது” என்ற லெனின் மேற்கோளை எடுத்துக்காட்டி,

“உலகைப் பிரதிபலிப்பது மட்டும் கலையின் நோக்கமன்று, மனிதன் இயற்கையை அனுபவிப்பதன் மூலமும், உள்ளத் தொடர்பு மூலமும் மாற்றுகிற செயல்முறையில் அகவயமான

உள்ளம், புறவயமான இயற்கையின் மீதுதொழில்படுகிறது”, என்றும் எழுதிப் படைப்பு பற்றிய தத்துவத்தளத்தில் மிக நுட்பமாகப் புரிந்து கொண்டுள்ள நா.வானமலை திறனாய்விற்குள் இறங்கி வேலை செய்யும் போது மட்டும் ஏன் மேற்கண்டவாறு சாதாரணமாகி விடுகிறார் என்று வியக்க வேண்டியிருக்கிறது. இந்த முரண்பாட்டின் காரணமாக, இவருடைய திறனாய்வும் முழுமையான வாழ்க்கையை நோக்கியில்லாமல், கட்சியை நோக்கியதாக அமைந்து விடுகிறது. எனவே தான் இயக்கவியல் முறையில் இயங்க வேண்டும் எனக் கூறும் நா.வா. ”மாற்ற முடியாத சுட்டுத் தந்த தோசையைப் போல் முடிவு பெற்றவைகளாகத் தன் திறனாய்வு மதிப்பீடுகளை மளமளவென்று வீசி விடுகிறார்.”

ஆனாலும் தமிழ்ச்சூழலில், பிற்போக்குத்தத்துவங்கள் என அவரால் கருதப்படும் சர்ரியலிசம் எக்ஸிஸ்டென்ஷியலிசம், ஃப்ராய்டிசம், தனிமனிதவாதம், முதலியவைகளைப் பற்றியெல்லாம் பேசுவதற்கு அறிமுகப்படுத்தியவர், மனிதநேயம், யதார்த்தவாதம், விமர்சன யதார்த்தவாதம், சோசலிசயதார்த்தவாதம், நவீனத்துவம், பிரதிபலிப்புக்கொள்கை முதலியவைகளை எல்லாம் ஆர்வத்துடன் பயன்படுத்தியவர் என்ற நிலையில் நா.வா.வின் திறனாய்வு இயக்கம் செல்வாக்கு நிறைந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது. வடிவஇயல் திறனாய்வாளர்களுக்கு எதிராக அவர் நடத்திய அழகியல்வாதப்போரை, மார்க்சியம் கற்றவர் ஆதலால் இன்னும் மேலான உயர்ந்த தளத்தில் நடத்தியிருக்கலாம். ஆனால் அவரது கட்சி சார்ந்த எழுத்தியக்கம், உன்னதமாய் வளரவேண்டிய ஒரு திறனாய்வாளரைத் தனக்கு வசதியாகப் பயன்படுத்திக் கொண்டது என வரலாற்று அடிப்படையில் அவரைப் புரிந்து கொள்ள முயல வேண்டும்.

இலக்கியத் திறனாய்வாளர் என்பதைவிட ஒரு கம்யூனிஸ்டு என்று தன்னைச் சொல்வதையே நா.வா. விரும்புவார்.உண்மையும் அது தான். ஆனால் நிறுவனம் சார்ந்த கம்யூனிஸ்டு என்று சேர்த்துக் கொள்ள வேண்டும்.வாரப்பத்திரிக்கையின் ஆசிரியர். பல்கலைக்கழகப் பேராசிரியர்.இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தோடு இணைந்தவர். மார்க்சிய அறிஞர் ஜார்ஜ் தாம்சனிடம் டாக்டர் பட்டத்திற்காகப் பயின்றவர், என்ற அளவில் பின்புலம் பெற்ற கைலாசபதி, கல்வியாளர்கள் மட்டத்தில் மார்க்சியத்திறனாய்வு வலுப்பெறுவதற்குக் காரணமாக இருந்தவராவார். தமக்கு அமைந்த நெறிமுறையான தமிழ்க் கல்வியினாலும், ஆங்கிலப் புலமையினாலும், கைலாசபதியின் எழுத்தில், ஒரு பொருளை எடுத்து விளக்கும்போது அதன் பல்வேறுபட்ட கோணங்களையும் முழுமையாக முன்னிறுத்தி விவாதிக்கிற பாங்கின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. இருந்தாலும் தன் திறனாய்வில் மார்க்சியத்தின் அரசியல் பார்வைகளைத்தான் முன்னிறுத்துகிறாரேயொழிய. மார்க்சிய அழகியல் என ஒன்றைத் தனியாக அடையாளம் கண்டு, அதன் வழி இலக்கியத்தைத் திறனாய்வு செய்கிறாரா என்பது ஐயமே!

மு.வ.வின் ”சங்க இலக்கியத்தில் இயற்கைக் காட்சிகள்“வ.சுப. மாணிக்கத்தின் “தமிழ்க்காதல்“ ஆகிய சங்க இலக்கியம் பற்றிய ஆய்வு நூல்கள் தி.மு.க. அரசியல் கருத்தின் வெளிப்பாடாக வந்து செல்வாக்கு பெற்றன என்றால். கைலாசபதியின் பழம் பெரும் இலக்கியங்கள் பற்றிய ஆய்வுகளும் (தமிழ் வீரயுகப்பாடல்கள், பண்டைத் தமிழர்

வாழ்வும்வழிபாடும்) முதலியன இடதுசாரி அரசியல் கருத்தின் வெளிப்பாடாகத்தான் அமைந்தன. அது போலவே கைலாசபதியின் சிறுகதை, புதினம், புதுக்கவிதை பற்றிய இக்கால இலக்கியங்கள் பற்றிய எழுத்துக்களும், இலக்கிய திறனாய்வு என்ற எல்லையைத் தாண்டி அரசியல் கருத்துக்களை முனைப்பாக முன் வைப்பதில் கவனம் செலுத்துவதைக் காணலாம். இவைகளை இலக்கிய ஆராய்ச்சிகள் என்ற அளவில் தரம் மிக்கவை எனலாம்.ஆனால் திறனாய்வு என்ற அளவில், உள்ளடக்கத்தை மட்டும் பார்க்கிற ஒரு பார்வையாக விளங்குகின்றன. கைலாசபதியிடமுள்ள இந்தக் குறையை மற்றொரு மார்க்சியதிறனாய்வாளரான தி. சு. நடராசன் சுட்டிக்காட்டுகிறார்.

“இலக்கியத்தைக் கண்டறிய வரலாற்று நெறி அவசியமானது என்பது, அந்த இலக்கியத்தை அதன் இருக்கை நிலையில் விளக்க வேண்டுவதாகிய நெறி அவசியமற்றது என்பதாகாது. அதற்குள்ளேயே மூழ்கி முடிந்துவிடுவதுதான் ஆபத்து. நாவல் அழகியல் ரீதியாக, எப்படி தனது கருப்பொருளை வெளிப்படுத்துகிறது என்பதைத் தெரிந்து கொள்வது, கலைவடிவமான எந்தப்பொருளுக்கும் உரிய ஒரு தேவை. அந்தத் தேவைகளை நிறைவேற்றுவது விமரிசகன் வேலைகளில் முக்கியமானதொரு வேலையாகும்.

மார்க்சியத்திறனாய்வாளர் பலரும் அழகியல் ரீதியான வடிவம் பற்றித் தங்கள் எழுத்தில் பேசுவதில்லை என்பதால் இப்பெரிய மேற்கோள் அதன் இன்றியமையாமை கருதி எடுத்தாளப்படுகிறது.

தனது இலக்கியம் பற்றிய சொல்லாடலுக்கு இலக்கியஒப்பீட்டு முறையைப் பயன்படுத்தியவர். (ஒப்பியல் இலக்கியம், இருமகாகவிகள், தமிழ் வீரயுகப்பாடல்கள்) தமிழ்ப் புதினம், சிறுகதை, பற்றியெல்லாம் உத்தி, நயம், அழகு என்று காணி நிலத்திற்குள்ளேயே உழுது கொண்டிருக்காமல், அவைகளை விரிவான சமூக வரலாற்றுப்பின்புலத்தில் விளக்கியதன் மூலம், வெறுமனே “கதைதானே” என்று அலட்சியமாகப் பார்த்துக் கொண்டிருந்த கல்வியாளர்கள் நடுவில் இப்புத்திலக்கியங்களுக்குச் சிறப்பான அங்கீகாரத்தை ஏற்படுத்தித் தந்தவர் பாரதியின் இடதுசாரிச் சிந்தனைகளைத் தன் உரத்த சிந்தனைகளால் வெளிக் கொணர்ந்தவர், மேலைநாட்டு பல இலக்கியக்கொள்கைகளை அறிமுகப்படுத்தியவர். (இலக்கியமும்திறனாய்வும் - என்ற நூலில்) தமிழின் இக்காலத்திறனாய்வுப் போக்கை முதன் முதலில், இரசனைமுறைத் திறனாய்வு, பண்டிதத் திறனாய்வு (அ)பாண்டித்தியத் திறனாய்வு, புத்திலக்கியத் திறனாய்வு. சமூகவியல் திறனாய்வு என நுட்பமாக வகுத்து விளக்கிக் காட்டி கைலாசபதியவர்கள் ஆகிய பெருமைகளுக்கெல்லாம் உரியவர் ஆனாலும் ”உருவம், உள்ளடக்கம் என்ற வீண் வாதத்தில் அமிழ்ந்து போகாமல், வரலாற்றுப் பார்வை, சமூக நோக்கு, அழகியல் அக்கறை ஆகிய மூன்றையும் ஒன்றுக்கொன்று அனுசரணையானவையாகவும், ஒன்றையொன்று பின்னிச்சார்ந்தனவாகவும் கொண்டு இலக்கியப் படைப்புகளை ஆராய்வதே” தனது நோக்கமாகக் குறிப்பிடும் கைலாசபதி, தன் சமூக அக்கறையை, சமூகம் பற்றிய கல்வியை வெளிப்படுத்திய அளவிற்கு, அழகியல் பற்றிய அக்கறையைக், கல்வியைத் தன் திறனாய்வு எழுத்தில் வெளிபடுத்தியிருப்பதாகச் சொல்ல

முடியவில்லை. ஒருவேளை, சமூகத்திற்குப் பயனுடையதெல்லாம் அழகு, அழகு என்பது வேறென்ன? என்று அழகு பற்றிய பிரச்சனைக்கு முடிவு கட்டிவிட்டாரோ என்னமோ?

தன் கண்முன்னாலேயே கலங்கலும் நுரையும், சுழியும், அலையும் பிணமும் உயிரும் கொண்டியங்கும் வாழ்க்கை வெள்ளத்தில் விழுந்து காலையும் கையையும் உதறித்துடிக்கும் அனுபவம் வாய்க்க வழியில்லாத, நடுத்தரவர்க்கப் புத்தகக்கல்வியாளர்களின் தன்மைகளே இடதுசாரிக்குணத்தோடு கைலாசபதியின் எழுத்திலும் காணக்கிடக்கின்றன. அவர் எழுத்து, திறனாய்வை ஒரு கல்வியாக வளர்க்கப் பயன்படுகிறது. ஆனால், வாழ்க்கைக்குள் மனிதனை இழுத்துச் செல்லவில்லை.

“கைலாசபதியைப் பின்பற்றி எழுதுபவர்“ எனப்பலரால் மதிப்பிடப்படும் கோ.கேசவன், தனது இடதுசாரி சார்ந்த ஆராய்ச்சி எழுத்துக்களினாலேயே தமிழ்க் கல்வியாளர் வட்டாரத்தில் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்பட்டவர். மேலும் இடதுசாரி வட்டாரத்திலும் ““குறுங்குழுவாதம்” பெருகிய ஒரு காலகட்டத்தில், சாதாரண ஓர் இலக்கியத்தொழிலாளியாய் அவர் அறிமுகமானார். எனவே இடதுசாரிப் பிரிவுகளிலிருந்தும் பலவிதமான தாக்குதல்களுக்கு உள்ளானார். ஆனாலும் தொடர்ந்து மார்க்சியஅணுகுமுறையில் ஆர்வத்துடன் உழைத்து வருகிறார். கைலாசபதியைப் பின்பற்றி, வரலாற்றுப் பொருள்முதல்வாதத்திற்குக் கூடுதலாகவே அழுத்தம் கொடுத்து அவரால் எழுதப்பட்ட ”பள்ளு இலக்கியம் - ஒரு சமூகவியல் பார்வை” என்ற நூல் மூலம் பலருடைய கவனத்தையும் பெற்றார். கைலாசபதி போலவே பல கட்டுரைகளும் நூல்களும் ஆய்வியல் முறைப்படி எழுதி வெளியிட்டு வருகிறார். (மண்ணும் மனித உறவுகளும், இலக்கியமும் இயக்கங்களும் முதலியன).

இலக்கிய விமர்சனம் - ஒரு மார்க்சியப் பார்வை“-என்ற நூல் மூலம் கலை இலக்கியம் பற்றிய தேடலில் மார்க்சியக் கோட்பாடுகளை விளக்கும்முகத்தான், தன் காலத் தேவையை நிறைவேற்றினார் கேசவன் எனக் கூற வேண்டும். அந்நூலில், மார்க்சிய அறிதல் கொள்கை - மார்க்ஸ், எங்கெல்ஸ், இலெனின், மாவோ, ஆகியோரின் கலை இலக்கிய ஈடுபாடு - கலை இலக்கியம்ளூ தேவையும்பணிகளும்கலையின் தோற்றம்-கலைகளின் தன்மை-கலையும் வர்க்கமும் மேல்தளமும் அடித்தளமும்-கலையின் நிரந்தரத்தன்மை- கலைஞனும்சமூகமும் - கலைஞனும் சுதந்திரமும்- உருவமும் உள்ளடக்கமும் - மார்க்சியமும் அழகியலும்-கலைப்படைப்பின் உருவாக்கமுறை முதலிய கலை இலக்கியம் தொடர்பான-அடிப்படைப் பிரச்சனைகளை எடுத்துரைக்க முயன்றதன் மூலம், கலை இலக்கியம் பற்றிய ஆழமான புரிதலை நோக்கித் தமிழ் வாசகனை இந்நூல் விடாப்பிடியாக இழுத்துச் சென்றிருக்கிறது.

மார்க்சிய அழகியலை விளக்க முயன்ற கேசவன், தன் காலத்தில் பெருகிய ““குறுங்குழுவினுள்” ஒன்றைச் சார்ந்து, ““வறட்டுச் சூத்திர ஆசார மார்க்சியநெறிமுறையைச் சார்ந்து, எழுதியுள்ளார். இச்சார்புநிலைப்பாட்டினால், எல்லாவற்றையும் புறநிலையாகப் பார்க்க வேண்டும் என்ற மார்க்சியப்பார்வைக்கே எதிரான நிலையில் அகநிலைப் பார்வையுடன் எழுதியுள்ளார். இதனால் அதிகார வர்க்க மனப்பான்மை அவர் எழுத்தில் புலனாகிறது. மேலும்

சோவியத்தில் வெளியான மார்க்சிய புத்தகங்களையே பெரிதும் தன் எழுத்திற்கு அடிப்படையாகக் கொண்டு எழுதியுள்ளார். என்றெல்லாம் கடுமையான பல விமர்சனங்கள், இடதுசாரி வட்டாரத்தில் இருந்தே அந்நூலைப் பற்றி எழுந்தன. எம்.ஏ.நு.ஃ.மானும் "பரிமாணம்" இதழும் இத்தகைய விமர்சனங்களை முன் வைத்தன. இந்நூலின் வருகைமூலம், தமிழ் மார்க்சிய கலை இலக்கிய வட்டாரத்தில், தான் சார்ந்த நிறுவனத்திற்கு முதன்மை கொடுப்பதா? எல்லாவற்றையும் விழுங்கித் தின்னும் சுதந்திர இயக்கம் கொண்டியங்கும் உயிரோட்டமுள்ள வாழ்விற்கு முதன்மை கொடுப்பதா? என்ற கூர்மையான பிரச்சனை பெரிய வடிவம் எடுத்தது. நிறுவனம் சார்ந்த பார்வை நிறுவனம் சாராப் பார்வை-என்ற இரண்டு போக்குகள் இன்று தீவிரம் பெற்று விளங்குவதை இந்நூல் பற்றி எழுதப்பட்ட விமர்சனங்கள் வெளிப்படுத்துகின்றன. கேசவன், கைலாசபதி போலவே, நிறுவனம் சார்ந்து, கலை, இலக்கியங்களின் அரசியல் பயன்பாடு என்ற ஒன்றிற்கு அதிக அழுத்தம் தந்து பேசுகிறார், தன் நூல் பற்றி வந்த பல்வேறு விமர்சனங்களுக்கான தன் பதில்களை "மார்க்சீய திறனாய்வுச் சிக்கல்கள்" என்ற தலைப்பில் நூலாக வெளியிட்டார். அப்பதில்களிலும் கேசவனின் அரசியல் பார்வைதான் தூக்கலாகத் தெரிகிறது. இத்தகைய பார்வை, அவருக்குள் ஒரு பழக்கமாகவே இயங்குவதால்தான் என்னமோ, மார்க்சிய அழகியல் கோட்பாடுகளைப் பற்றியெல்லாம் விரிவாகச் சிந்திந்திருந்தும், மார்க்சிய விமர்சகராகக் கேசவன் மலரவில்லை. கைலாசபதி போல மார்க்சிய ஆய்வாளராகத்தான் விளங்குகிறார்: தொழில் அடிப்படையில் கல்வியாளராக வாழ்வதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

கேசவனின் முயற்சியின் மேல் எத்துணையோ விமர்சனங்கள் இருக்கலாம், ஆனாலும் மார்க்சியத் திறனாய்வு என்பது, வர்க்கப் பார்வை, வரலாற்றுப்பொருள்முதல் பார்வை என்ற அளவில் நடந்து கொண்டிருந்த தமிழ்ச்சூழலை மாற்றி, மார்க்சியஅழகியலை நோக்கி மார்க்சியதிறனாய்வாளர்களையும், அதன் எதிர்ப்பாளர்களையும் வேகமாகச் செலுத்தியவர் என்பதில் ஐயமில்லை. "படைப்பிலக்கியத்தில் அவலம்"-என்ற ஞானியின் கட்டுரையைப்பற்றி, கேசவனும், அ. மார்க்சும் மனஓசையில் "அவலம்" (வசயபநனல) பற்றிய மார்க்சிய அழகியல் கோட்பாட்டு அடிப்படையில் விவாதங்களை உயர்ந்த தளத்தில் நடத்த முடிந்திருக்கிறது என்றால், கேசவன் எடுத்துக் கொண்ட மார்க்சிய அழகியல் பற்றிய அக்கறைதான் காரணம், இத்தகைய விமர்சனங்கள் தாம் மார்க்சியத்திறனாய்வைச் செழுமைப்படுத்தும்.

"இலக்கியம் என்பது வெறும் கருத்துக் கோவையன்று. அது அழகுணர்ச்சியுடன் சம்பந்தப்பட்டது. கருத்தாழமற்ற கலையழகுள்ள ஓர் ஆக்கம் இலக்கியமாகக் கருதப்படலாம். ஆனால் கலையழகற்ற கருத்தாழமுள்ள ஆக்கம் இலக்கியமாகாது." என்று மார்க்சியஇலக்கிய வட்டாரத்தில் இருந்தே, கலை இலக்கியத்தில் அழகியல்வாதத்திற்கு அழுத்தம் தந்து பேசியவர்களுள், நின்று செல்வாக்கு செலுத்தும் எழுத்தாற்றல் பெற்றுள்ள கார்த்திகேசுசிவத்தம்பி ஒருவர் ஆவார்.

இவர்க்கு முன்பிருந்த மார்க்சியத்திறனாய்வாளர்கள் பலரும், மார்க்சியத்தின் அடிப்படைக் கோட்பாடுகளுள் ஒன்றாகக் கொள்ளப்படும் அடித்தளம் - மேல்தளம் என்ற கோட்பாட்டில், கலை

இலக்கியங்கள், மேல்தளத்தைச்சார்ந்தவை எனவும், அடித்தளமான சமூகப் பொருளாதார உற்பத்தி உறவுகளைச் சார்ந்து வாழ்பவை என்றும் கருதினர். இன்னும் சிலர், தொடக்கத்தில் கலை இலக்கியங்கள் பொருளாதார உறவையே சார்ந்து நின்றன என்றாலும், சமூக வரலாற்றின் வளர்ச்சிப் போக்கில், ஒன்றையொன்று பாதித்து இயங்கக் கூடிய இயங்கியல் உறவு கொண்டு விளங்குகின்றன என்றும் விளக்கினர். கார்த்திகேசுசிவத்தம்பி, நு.ஃ.மான், தமிழவன், ஞானி முதலியோர், கலை இலக்கியங்கள், தங்களுக்கான தனியே இயங்குகின்ற உள்ளார்ந்த கலை விதிகளைக் கொண்டு விளங்குகின்றன என்று கலை இலக்கியங்களுக்குத் தனிப் பெரும் இடத்தை வழங்கினர். இந்த வகையில் கா.சிவத்தம்பியின் மார்க்சியத் திறனாய்வு தனித்தன்மையுடன் விளங்குகிறது. இவரும் மார்க்சியச் சார்பாளர்தான். கல்வியாளர்தான் என்றாலும், மேற்கண்ட பார்வைமாற்றம் காரணமாகக் கலை இலக்கியப் பிரச்சனைகளைக் குழுவாதத்திற்கு-அரசியல் சார்பிற்கு அப்பால் நின்றும் இவரால் விவாதிக்க முடிந்திருக்கிறது. காழ்ப்புணர்வற்ற திறந்த மனோபாவத்துடன்“ கருத்து வேறுபாடுகளை விவாதத்தின் அடிப்படையில் புரிந்து கொள்ள முயலும் பக்குவம் வெளிப்படுகிறது.எல்லாவற்றிற்கும் மார்க்சியத்தில் தீர்ப்பு இருக்கிறது என்ற நிறுவனப் பார்வை இல்லாமல், மிகவும் கவனமாக இலக்கிய உலகத்திற்குள் நடமாடத் தெரிந்திருப்பதால், இவருடைய தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும், “நாவலும் வாழ்க் கையும்“, இலக்கியமும் கருத்து நிலையும், முதலிய திறனாய்வு நூல்களில் “திறனாய்வுப் புலமை“ என ஒன்று வெளிப்படுவதைக் காண முடிகிறது. தி.சு.நடராசன், கைலாசபதியை ஆய்வுநெறித் திறனாய்வாளர் (Seholar-Critric) எனச்சுட்டுகிறார். ஆனால் அத்தகைய திறனாய்வாளராகச் சிவத்தம்பியைத்தான் சுட்ட வேண்டும். கல்வி அறிவும் இலக்கியப் புலமையும் ஒன்றிணைந்து இயங்குகின்றன இவர் எழுத்தில்,தமிழ் இலக்கியத்திறனாய்வில் கையாளப்படும் கலைச்சொல்லாக்கத்திலுள்ள பொறுப்பின்மையை அவர் சுட்டிக்காட்டும் போதும்

தமிழ் இலக்கியத்திறனாய்வாளர் பலரும் தமிழிலக்கியம் அனைத்தையும் ஒரு தொடர் நிகழ்வுகளாக-முழுமையாகக் காணத்தவறுவதை எடுத்துக்காட்டும் போதும். ஆண்மை, இலக்கிய மையப்படுத்திய பெண்மைக்கோட்பாட்டையே, தமிழ் நாவல் ஆசிரியைகளும் தமது கோட்பாடாகக் கொண்டு நாவல் படைத்துள்ளனர், என்று தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள் படைப்பின் சாரத்தை மதிப்பிட்டுக் கூறும் போதும். சிவத்தம்பியின் திறனாய்வுப் புலமை புலனாகிறது. திறனாய்வைத் தற்காலச் சமூகத் தேவையுடனும், தற்காலச் சமூக அமைப்பின் குணத்துடனும் இணைத்து விளக்குவதில் அவர் காட்டியுள்ள தனிக்கவனம் அவர் எழுத்திற்குத் திறனாய்வுப் புலமையைச் சேர்க்கின்றது.

கா.சிவத்தம்பி குறிப்பிட்டுக் காட்டிய ”சுதந்திரமான கலை இலக்கியம்,” என்ற பார்வையை மேலும் அழுத்தமாகவும், வெளிப்படையாகவும், வேகமாகவும் பேசுவதில் ஞானி முன் நிற்கிறார்.ஞானி எழுதுகிறார்.மார்க்சியத்தை வெறும் பொருளாதாரவாதமாகக் குறுக்கி நாசப்படுத்துகிறார்கள். இத்தகையவர்களின் பார்வையில் ஆன்மா என்பது உடலின் நீட்சியாகவோ விரும்பத்தகாத குடல்வால் போலவோ தான்தென்படுகிறது.

இவ்வாறு ஆன்மீகத்தையும் பொருள்முதல்வாதத்தையும் இணைப்பவராக இயங்குகிறார் ஞானி. எனவேதான் கலை இலக்கியப் பிரச்சனைகள் என்பவை அவருக்கு உருவம் உள்ளடக்கம் என்பதையும் தாண்டி, ”மனிதனின் ஆன்மீகம் பற்றிய பிரச்சனைகளாகவும், மனிதனைப்படைப்பது பற்றிய பிரச்சனைகளாகவும் இருக்கின்றன”.

ஞானியின் இத்தகைய பார்வையின் அழுத்தம், அவருக்குத் ”தத்துவவெல்டர்,“ “திரிபுவாதி’, தனிமனிதவாதி, என்றெல்லாம் பல பெயர்களை வாங்கித் தந்திருக்கிறது என்றாலும், தமிழிலக்கியத் திறனாய்விற்குக் குறிப்பாக மார்க்சியத் திறனாய்விற்கு வளம் சேர்த்திருக்கிறது. ஞானியினுடைய மார்க்சிய அணுகுமுறை, புத்தகக் கல்வியினால் மட்டும் உருவானது அல்ல. “அவலம் மிக்க,“ “சகிக்க முடியாத“ சமூக வாழ்விலும் தனிப்பட்ட வாழ்விலும் பெற்ற அனுபவத்தினால் கனிந்தது. எனவேதான் இவரிடம் மார்க்சியம் இந்தியம் சார்ந்ததாகத், தமிழகம் சார்ந்ததாக விளக்கம் பெறுகிறது. அதனால் பிற மார்க்சிய ஆய்வாளர்களின் எழுத்து போல, இவருடைய எழுத்து, மார்க்சிய அறிஞர்களின் “மேற்கோள்களின் குவியலாக ஆகாமல் அனுபவத்தெறிப்புகளாகத் தத்துவத்தேடல்களாக அமைந்துள்ளது.

இவ்வாறு மார்க்சியத்தைக் ”கட்சிக்கான ஒரு சித்தாந்தமாக அணுகாமல், வாழ்க்கைக்கான ஒரு தத்துவமாகக் (அதுவும் வினாக்களை எழுப்பிக் கொண்டே இருக்கும் ஒரு தத்துவமாக) கண்டு, “நெடும்பயணத்தின்“ ஒரு கூறாகத் தன்னை அடையாளம் கண்டு, தேடல் வேகத்தை உள்ளுக்குள் குறைவுபடாமல் காப்பாற்றி வைத்திருப்பதனால்தான் அவரால் பெருஞ்சித்திரனாரின் எழுத்தைப் பற்றியும், பிருமிளின் படைப்பைப் பற்றியும், இன்குலாப்பின் கவிதைகளைப் பற்றியும் ஒரே நேரத்தில் முழு அக்கறையுடன் சொல்லாடல் புரிய முடிகிறது.“எப்போதும் சூத்திரங்கள் எனக்குப் போதுமானவை அல்ல. சூத்திரங்களினூடேயும் அப்பாலும் உண்மைகளைத் தேடிச் செல்வது என் இயல்பு எனபார் ஞானி.

கால்நூற்றாண்டிற்கும் மேலாகத் தொடர்ந்து தமிழிலக்கியப் பண்பாட்டுச் சூழலில், மிகவும் நம்பிக்கையுடன் இயங்கி வரும் ஞானியின் எழுத்தின் முனைப்பாக நிற்கும் தத்துவச் சிந்தனைகள் தாம். அவரைப் “புராணங்கள் பற்றிய புதுப்பார்வைக்கு இட்டுச் சென்றது எனலாம். மார்க்சிய வட்டாரத்தில், புராணம் பற்றித் திராவிட இயக்கம் கூட்டி வைத்திருந்த மாயையை உடைப்பதற்கு முதல் கல்லை எறிந்தவர் ஞானியாக விளங்குகிறார். இவ்வாறே மதத்தைப்பற்றியும், அதற்கும் இலக்கியத்திற்கும் இருக்கும் உறவு பற்றியும் துணிந்து தன் கருத்துக்களை முன்வைத்துள்ளார். இந்த வகையில் இவருடைய திறனாய்வு தழுவிக்கொள்கின்றன. படைப்பாகக்கக் கூறுகளை மக்கள் தொடர்புக் கருவிகளின் எரிச்சலூட்டும் வளர்ச்சியினால் கலை இலக்கியங்கள் அனைத்தும் “தண்ணீர்“ மாதிரி ஆகியிருக்கின்றன, அவைகளின் அருமை உணரமுடியாதபடிப் பழக்கப்பட்டுப் போன ஒன்றாக எளிமைப்படுத்தப்பட்டுக் கிடக்கின்றன. ஆனால் தண்ணீர் இல்லாதபோது உணரப்படும் அதன் அருமை போல, கலை இலக்கியங்களின் அருமை பெருமைகளையும் ஆற்றல்களையும் ஞானியின் எழுத்துக்கள் பன்முகத்தன்மையோடு இதயத்தை நோக்கிச் செலுத்துகின்றன.

ஒரு கூடை அறிவும், சுயமாகப் புரிந்து கொள்ளும் ஒரு கைப்பிடி அளவுக்கு நிகராகாது என்ற கவனத்தோடு நாம் மார்க்சியத்தை ஏற்க வேண்டும் என்கிறார் ஞானி! ஞானியின் இலக்கியத் திறனாய்வு எழுத்துக்களையும், ஞானி வலியுறுத்தும் அந்தச்சுயமான அனுபவ அறிவோடு கற்கும் போதுதான் அவருடைய எழுத்திலுள்ள சத்தியத்தை, நேர்மையை, உள்வாங்கிக் கொள்ள முடியும். இந்நிலையில் இவரை அக்கினிப்புத்திரன் கூறுவதுபோல கலைஞனை ஆற்றுப்படுத்தும் ”மார்க்சியப்பாணனாக“” கருதுவதில் கருத்து வேறுபாடு எழலாம். ஆனால் நல்ல மார்க்சியத்திறனாய்வாளர் என்பதில் கருத்து வேறுபாடு கொள்ள இடமில்லை. மார்க்சியத் திறனாய்வு, ஞானியின் எழுத்தில் தான் வாழ்க்கை பற்றிய திறனாய்வாக முழுப்பண்புடன் விளக்கம் பெறுகிறது எனத்துணிந்து கூறலாம். எடுத்துக்காட்டாக ஒன்றைச், சுட்டலாம் கலை இலக்கியங்கள் ஞானிக்கு எதை வெளிப்படுத்துகின்றன?

ஞானி எழுதுகிறார்.“...நிறைவு செய்து கொள்ள இயலாத நிலையில்தான் பித்தம் ஏறிய நிலையில், உக்கிரத்தோடு இவன் கேள்வி கேட்கிறான் எப்படி, ஏன் இது நேர்ந்தது? எனக்கு இதைச் செய்தவர் யார்? ஏன் செய்ய வேண்டும்? எனக்கு விடுதலை சாத்தியமா? இந்த உலகத்தைப் படைத்து ஆட்டுவிப்பதுபிசாசா? தெய்வமா? இத்தகைய கூர்மையான கேள்விகள்தாம், இவனை வரலாற்றாய்வுக்குள்ளும் அறிவியல் முதலிய ஆய்வுகளுக்குள்ளும் இடைவிடாது துரத்துகின்றன. இந்தத்துரத்தலின் வேகத்தையும் வேதனையையும் இடையிடையே பெறும் வெற்றிகளையும் வெற்றிகளை இழந்துவிட்டு மீண்டும் துரத்தப்படுதலையுமே இவனது கலை இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன”

இவை பாரதியின் ‘‘கண்ணன் பாட்டு.” பற்றிய திறனாய்வு எழுத்துக்கள் - தமிழிலக்கியத் திறனாய்வு நடையில், இத்தகைய அழுத்தமான வாழ்க்கையுணர்வு வெளிப்பாடுகளை ஞானிக்கு முந்திய எழுத்துக்களில் காண்பது அரிது.

இவ்வாறு ஞானியின் திறனாய்வு, வாழ்க்கை பற்றிய தத்துவத்தேடலின் அடிப்படையில் அமைந்திருக்கிறது. இத்தத்துவப்பார்வை “அந்நியமாதல்“ பற்றிய மார்க்சின் சிந்தனையை அடிப்படையாகக் கொண்டது என அ. மார்க்ஸ் சுட்டிக் காட்டுகிறார்.சாராம்சவாதம், மனிதாபிமானம் ஆகியவற்றைத் தாண்ட இயலாதவராக இயங்குவதால், இவரிடம் கறாரான விஞ்ஞானப் பார்வை குறைந்து காணப்படுவதாகவும், மரபுகளுக்கும், கருத்து முதல்வாதச் சிந்தனைகளுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுக்கிற தவறைச்செய்வதாகவும் அ. மார்க்ஸ் குறிப்பிடுக்கிறார். ஆனால் ஞானியின் பார்வையில் கருத்துமுதல்வாதம், பொருள்முதல்வாதம் என்ற பிரிவினையே உடைகிறது. இரண்டையும் இணைத்துப் பார்ப்பதுதான் உண்மையான மார்க்சியம் என்ற தளத்தில் அணுகுகிறார்.

”ஒரு பட்டுப் புழு எந்தக்காரணத்திற்காக பட்டு நூலை நூற்கிறதோ அதே காரணத்திற்காகத்தான் மில்டன் இழந்த சொர்க்கத்தைப் படைத்தார். அதாவது, அவரது இயல்பே அத்தகையபடைப்புச்செயல்தான். என்ற மரபார்ந்த அப்ரெஸ்யான் கூற்றை மார்க்சிய ஞானி

எடுத்தாளுகிறார் அடிப்படையில் ஞானியை மார்க்சியத்திற்கு எதிராகவே பலர் சித்தரித்துள்ளனர். எனவே இது மீண்டும் நிறுவனம் / நிறுவனம் சாரா நிலை என்ற வரலாற்றுப்பிரச்சனையோடு தொடர்புடையதாகிவிடுகிறது. அந்தப்பிரச்சனைக்குப் போகாமல், ஞானியின் இலக்கியத்திறனாய்வில் சமகால வாழ்க்கையின் அவலங்கள், பிரச்சனைகள், கேள்விகள் முதலியன "நெருடலற்ற கவிதை போன்ற எழுத்து முறையில்" உயிர்ப்புடன் விளங்குகின்றன என்பது மட்டும் உண்மை! அதற்குக் காரணம் அவர் எழுத்திற்கு அடிப்படையாக அமைந்துள்ள தத்துவத்தேடல்தான்! அது தான் அவரது இலக்கியத் திறனாய்வின் தனிப் போக்காக விளங்கு கிறது.

”பல்லாண்டுகள் வரலாறு படைத்த கவிதை பழுத்துச்சருகாகிப் புழுதியில்விழுவதா? என்று ரொம்ப வேகமாகக் கேள்வி கேட்கும் ஓர் இளம் விமர்சன நெஞ்சத்தின் முயற்சியே இந்நூல்!” என்று 1971-இல் ”இருபதில் கவிதை” என்ற தன் நூல் முன்னுரையில் தமிழவன் கேட்கும் கேள்விகளுக்கும், இன்று ”படைப்பும், படைப்பாளியும்,““ என்ற நூல் வெளிவரும் சூழலில் அவரிடமுள்ள கேள்விகளுக்கும் தான்தரத்திலும் அளவிலும் நுட்பத்திலும் எவ்வளவு மாற்றங்கள்? கேள்விகள் மாற்றம் பெற்றிருக்கின்றன.ஆனால் அந்த ஓர் இளம் விமர்சன நெஞ்சம் மட்டும் தொடர்ந்து கல்வியாளர் என்றும், பத்திரிக்கை ஆசிரியர் என்றும், இலக்கிய அமைப்பு என்றும், படைப்பாளி என்றும் பல தளங்களில் அடிப்படையில் சேதாரம் ஏதுமின்றி உழைத்துக் கொண்டுதான் இருக்கிறது.

நா.வானமாமலையின் தொடர்பு ஏற்பட்டு மார்க்சிய சிந்தனை உலகிற்குள் எட்டு வைத்த தமிழவன், தொடர்ந்து இன்றுவரைப் படிக்க படிக்க, மாறி மாறிக் "குளவி"போலவளர்ச்சியுற்றுப் பறக்க முண்டுகிறவராகவே இயங்கி உள்ளார். புதுக்கவிதை-நாலு கட்டுரைகள் (1977) என்ற நூலிலேயே நா-வா-விடமும் "தாமரை"யிடமும் தெரிந்து கொண்ட மார்க்சியத்தை மீறி வளரும் துணிச்சலைத் தனக்குள் இருப்பதைக் காட்டி விடுகிறார். இத்தகைய மாற்றங்களுக்கு அவர் உள்ளானபோது, பழைய பார்வைகளை "நிராகரித்த" போது,

வெ.சாமிநாதன் போன்ற மார்க்சிய எதிரணியினராலும், மார்க்சிய சார்பாளராலும் கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானார். ஆனாலும் இலக்கியத்தின் பன்முகஆற்றலை "மோப்பம்" பிடித்துவிட்ட தமிழவன், அதன் அழகியல் தன்மைகளைப் புரிதலில் கடுமையான தேடல் குணத்துடன் பயணம் செய்தார். அவருடைய கிறித்துவப் பின்னணி, அறிவியல் படிப்பு, ஆங்கிலமொழி அறிவு ஆகியன துணை செய்தன. இத்தகைய பயணத்தின் போதுதான், எஸ். வி. இராஜதுரையின் "எக்ஸிஸ்டென்ஸியலிசம்", "அந்நியமாதல்" ஆகிய கனமான நூல்களின் வருகைகையும், அவற்றை ஆர்வத்தோடு ஏற்ற சிறு பத்திரிகைச் சூழலையும் கவனித்து உந்துதல் பெற்று ”ஸ்ட்ரக்சுரலிசம்" என்ற நூலைத் தமிழில் அறிமுகப்படுத்தினார். இவ்வாறு விரிவாக, அமைப்பியல் திறனாய்வை எளிமைப்படுத்தி விடாமல், அதற்கே உரிய கனத்துடன் அறிமுகப்படுத்தியதோடு மட்டுமில்லாமல், அத்திறனாய்வுக் கோட்பாடுகளை எவ்வாறு தமிழிலக்கியத் திறனாய்வில் பயன்படுத்துவது என்றும் செய்து காட்டுகிறார். "ஜே. ஜே. சில

குறிப்புகள்: புதுவகை நாவலும் புது வகை விமர்சனமும்" "திருப்பாவை--ஓர்அமைப்பியல் விமர்சனம்" ஆகிய கட்டுரைகள் இந்த வகையில் குறிப்பிடத்தக்கவைகளாகும். தமிழவனின் அமைப்பியல் திறனாய்வின் அறிமுக முயற்சியின் விளைவை ஞானியின் கூற்றால் அறியலாம்.

“தமிழ்மொழிக்களத்திற்குள் வந்துள்ள ஸ்ட்ரக்சுலிரசத்தை ஒதுக்கிவிட்டு இனி நாம் இலக்கிய விமர்சனம் செய்ய முடியாது.

இவ்வாறு சிறுபத்திரிக்கைசூழலிலும், கல்வியாளர்களின் கல்வி நிலையங்களிலும் அமைப்பியல் திறனாய்வின்கூறுகள் பற்றிய சொல்லாடல்கள் பெருகுவதற்குத் தமிழவனின் முயற்சிதான் காரணம் எனலாம். தமிழகத்தில் ““நாட்டுப்புற இயல் கல்வி" பல்கலைக்கழகமட்டத்தில் பெருகியதும் அமைப்பியல் திறனாய்வு “மவுசு“ பெருகுவதற்குக் காரணமாகும்

இதுவரை இலக்கியத் திறனாய்வு என்பது நயம் பாராட்டுவது, உத்தி நலம் காண்பது என்று ஒரு சாராரும், இலக்கியத்தை வரலாற்றுப்பின்னணியில் விளக்குவது என்று ஒரு சாராரும் திறனாய்வின் வேலை வாசகனுக்கு எளிமையாக விளக்குவது என்றே எண்ணி இயங்கி வந்துள்ளனர். தமிழவன் திறனாய்வு எழுத்தில்தான் இந்த மாயை உடைபடுகிறது. அதாவது வாழ்க்கை போல சிக்கலோடு சிக்கலாகச் சிக்கிக் கிடக்கும்-பன்முகத் தன்மை கொண்டிலங்கும்-படைப்பின் சிக்கலான குணம் எந்த விதத்திலும் குறைந்து விடாமல், தன் திறனாய்விலும் பன்முகத்தன்மையைத்தேடித் திறனாய்வையும் சிக்கல் நிறைந்ததாக நடத்திக்காட்டுவதன் மூலம் படைப்பைப் படைப்புத் தளத்தில் அணுகுவதற்கான வழி முறையைக் காட்டுகிறார் தமிழவன். இச்சாதனையை அமைப்பியல் கோட்பாடுகளின் மூலம் செய்து காட்டுகிறார். அதனால்தான் விமர்சனமும் இலக்கியம் போலவே “ஒரு நிகழ்வு“ என விளக்குகிறார். இலக்கியம் முதல் நிகழ்வாகவும், விமர்சனம் அதை அண்டிப் பிழைக்கும் இரண்டாம் தரமான நிகழ்வு என்ற புதுத் திறனாய்வுக்கருத்தையும் உடைத்தெறிந்து, இலக்கியம் எப்படி முதல் நிகழ்வோ, அதுபோலவே விமர்சனமும் முதல் நிகழ்வுதான் என விளக்குகிறார். இலக்கியமும் இலக்கியவிமர்சனமும் - இரண்டுமே "அசல்கள்" என்கிறார். அமைப்பியல் திறனாய்வின் இந்த நுட்ப மானபுரிதலைத் தமிழவன் புரிந்து தமிழில் தருவது பெரிய சாதனையாகத் தோன்றுகிறது. தமிழிலக்கியத்திறனாய்வை மற்றொரு தளத்திற்கு இழுத்துச்செல்பவை முயற்சிகள். தமிழவனின் திறனாய்வு.

தமிழவன், கருத்து முதல் வாதம் பொருள் வாதமென்று பிரித்துப் பார்ப்பதுதவறென்றகருத்தில் சிறிது காலம் இருந்து, அமைப்பியல் திறனாய்வைப் புரிந்து கொண்ட பிறகு, பொருள் முதல் வாதம் ஒரு பொதுப்பார்வையாய்ஏற்கப்பட வேண்டிய நிர்ப்பந்தத்தைக் கண்ட தாகக் கூறுகிறார். இந்தப்பொதுப்பார்வையால் அமையும் புதுப்பொருள் முதல் வாதம், பழைய பொருள் முதல் வாதத்திலிருந்துவேறுபட்டது என்கிறார். தன்னுடைய விமர்சனப் பார்வை இந்தப் புது பொருள் முதல் வாதத்தைச்சார்ந்தது என்கிறார். “புது பொருள் முதல்வாதம்“ என்று எதைக்குறிக்கிறார் என்பதைக் கறாராக விளக்க வில்லை. நாட்டுப்புற மக்கள் இப்புதுபொருள் முதல் வாத

அடிப்படையில் அறிவு பெறுவதாகக் கூறுகிறார். அவ்வளவுதான். அல்தூசர் முதலிய மார்க்சியம் சார்பான அமைப்பியல் வாதிகளின்முறையை இவ்வாறு சுட்டுகிறாரோ? என்னமோ? எதுவாக இருந்தாலும் தமிழவனின் இன்றைய இலக்கியதிறனாய்வின் அடிப்படையாக அமைப்பியல் திறனாய்வே விளங்குகிறது. அமைப்பியல் திறனாய்வு அடிப்படையில் "இலக்கிய அமைப்பு" ஒன்றைக் கூட்டப் போகிற அளவுக்கு அதில் ஈடுபாட்டுடன் உழைக்கிறார். ஆனால் நெஞ்சில் வாழ்க்கையைப் பற்றிய வினாக்களை எழுப்பத் தெரிந்து. விடைகளைத் தேடி அலையும் எந்த ஆத்மாவிற்கும் கிடைக்கும் விடைகள் அப்போதைக்கு அந்த வினாக்களின் உக்கிரமான வேகத்தை அமுக்கி வைக்கப்பயன்படுபவைகளாகத்தான் போய்விடுகின்றன. மீண்டும் "காலம்" வாய்க்கும்போது, வினா பூதமாய் எழுகிறது. மீண்டும் புதிய விடைகளை நோக்கிப் பயணம் மேற் கொள்ள வேண்டியதிருக்கிறது! தமிழவன் இந்தப் புதிய பயணத்தை எப்பொழுது தொடங்கப் போகிறார்?

தமிழவனுக்கு அது புற உலகில் தனிப்பட்ட முறையில் நட்டமாக அமையலாம். ஆனால் தமிழிலக்கியத் திறனாய்விற்கு வளமாக அமையும் என்பது மட்டும் உறுதி. உணர்வை, உண்மைகளை மழுங்க அடிக்கும் தொடர்புக் கருவிகளின் ஒரு கூறாக இன்றைய கலை இலக்கியங்கள் அனைத்தும் இழந்துபோனசூழலில், மானுடத்தின் எதிர்காலத்தை அமைக்க நம்பிக்கைக்குரிய எதுவுமற்ற ஒரு சூழலில், பழைய மதங்கள், சாதிகள் பழைய பிரக்ஞைகளையே மீண்டும் வார்த்தெடுக்க போராட்டக்களங்களை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஈனச்சூழலில், பூமியின் வாழ்வே வினாக்குறியாயிருக்கும் இன்றைய சூழலில், கலை, இலக்கியம், திறனாய்வு முதலிய பண்பாட்டுத்துறைகளில் பணியாற்றுபவர்களின் சுமை கூடியிருக்கிறது. தமிழவனின் திறனாய்வு இயக்கம் இச்சுமைகளையும் எதிர்கொள்ளத்தயங்காது என நம்பலாம்.

இன்னும் மார்க்சியத்திறனாய்வில், கி.ராஜ்நாராயணன் எழுத்தை அடிப்படையாகக் கொண்டு "படைப்பாளி-வாழ்க்கை இலக்கியம்" என்ற நூலை எழுதிய அ. மார்க்சு குறிப்பிடத்தக்கவராவார். ஆனால் புரட்சிப்பண்பாட்டு இயக்கத்தின் மூலம் வேகமாக இயங்கி வந்த மார்க்சின் பார்வையில் சமீபகாலமாக மாற்றம் ஏற்பட்டிருப்பது போல் தெரிகிறது. எனவே இவர் திறனாய்வின் அடிப்படையாக ஒன்றை இப்பொழுது வரையறுக்க முடியாது போல் தோன்றுகிறது. ஆனால் அமைப்பியலைப்பயன்படுத்தித் திருச்சி பாரதிதாசனார்பல்கலைக்கழகத்தமிழ்ப்பாடத் திட்டத்தை அவர் திறனாய்வு செய்திருந்த முறை மார்க்சின் பார்வையில் எவ்வளவு மாற்றங்கள் நிகழ்ந்தாலும் நிறுவனம் / சர்வாதிகாரம் / சுதந்திரம் / உரிமை முதலியவைகளில் பார்வை மாற்றம் ஏற்பட்டாலும் இலக்கியத்திறனாய்வில் சமூகப் பார்வையுடன் விளங்குவார் என்ற நம்பிக்கையைத் தருகிறது.

இராஜ் கௌதமன் "இலக்கு" அமைப்பு மூலமாகவும், இலக்கியவெளிவட்டம்மூலமாகவும் படிகள் மூலமாகவும் மார்க்சியத்திறனாய்வாளராகத் தெரியவந்தவராவார். தமிழ்ச் சமூக அமைப்பு முழு வதையும் ஒட்டுமொத்தமாகப் பார்ப்பதற்கு உள்ள வாய்ப்பும் அறிவியல் கல்வியும், ஆங்கில அறிவும் அவரை நல்ல-கூர்மையான திறனாய்வாளராக உருவாக்கியிருக்கின்றன. தமிழவன் போல

தொடர்ந்து இயங்க முடியாமல்-சூழலை வெல்ல முடியாமல் இராஜ் கௌதமன் காலம் கழிப்பது தமிழிலக்கியத் திறனாய்விற்குப் பேரிழப்புதான்.

இன்னும் மார்க்சியத்திறனாய்விற்கு வளம் சேர்ப்பவைகளாக இலக்கியக்கோட்பாடுகள் பற்றிய சோவியத் புத்தகங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு நூல்கள் ஆற்றிய பங்கு அதிகமாகும்! குறிப்பாக, பொன்னீலன் மொழிபெயர்த்துள்ள "ஆவ்னர்ஸிஸ்" என்பாரின் "மார்க்ஸீய அழகியலின் அடிப்படைகள், ரா. கிருஷ்ணையா மொழிபெயர்ப்பில் வந்துள்ள "பிளெஹானவ்வின்" ""கலையும்சமுதாய வாழ்க்கையும் " முதலிய நூல்களும், மலையாளத்திலிருந்து சுகுமாரன் மொழி பெயர்த்துள்ள "மார்க்ஸிய அழகியல்: ஒரு முன்னுரை" என்ற நூலும், ஆங்கிலத்தில் இருந்து அ. மார்க்ஸ் மொழி பெயர்த்துள்ள "மார்க்சீயஇலக்கியக் கொள்கை"" என்ற நூலும் மார்க்சிய அழகியலைப் புரிந்து கொள்ள பெருந்துணை புரிந்துள்ளன எனலாம்.

மேலும் மார்க்சியத்திறனாய்வைத் தமிழிலக்கியச் சூழலில் வளர்த்தெடுத்த சாந்தி, சரஸ்வதி, தாமரை, செம்மலர், உதயம் மனஓசை, பிரக்ஞை, இலக்கியவெளிவட்டம், படிகள், இனி, பரிமாணம், புதிய தலைமுறை, நிகழ், விழிகள் முதலிய இதழ்களின் பங்களிப்பை விரிவாக விளக்குவதற்கும் இடம் இருக்கிறது. மேலும் சமீப காலத்தில் மார்க்சியத்திறானய்வில் தனக்கான முத்திரையுடன் எழுதி வரும், ("திறனாய்வுக் கட்டுரைகள்," மார்க்சியமும்இலக்கியத்திறனாய்வும்") இலங்கை எழுத்தாளரான எம்.ஏ.நு.ஃமானின்" திறனாய்வுப் பணி தனியாக அடையாளம் கண்டு விளக்கத் தக்கவை களாகும். கொச்சையான உள்ளடக்கவாதமாக மார்க்சியத்திறனாய்வைக் குறுக்கிய குற்றத்தைச்சுட்டிக் காட்டும் இவர், வறட்டு மார்க்சியவாதமும், எதிர்மார்க்சியவாதமும் வாழ்க்கையையும் இலக்கியத்தையும் புரிந்து கொண்டு இலக்கியத்திறனாய்வை வளப்படுத்துவதற்குத் துணை போகாமாட்டாஎனக் கருதுகிறார்- இலக்கியமென்பது, வாழ்க்கையைப் "புரிந்து கொள்வதற்கு உதவும் ஒரு முக்கியமான கலைச்சாதனம்"-என்று அவர் கூறும்போது மார்க்சியத்திறனாய்வில் ஞானி, தமிழவன் ஆகியோரின் நிலைப்பாட்டில் இயங்குகிறார் எனக் கூற முடிகிறது. எம்.ஏ.நு.ஃமானின் தெளிவான திறனாய்வு நடை ஒரு சிறப்புக்கூறாகும்.

மார்க்சியமும் தமிழிலக்கியத் திறனாய்வும்" என்று ஒரு தனித்துறையே இயங்கவேண்டிய அளவிற்குத்தமிழில் மார்க்சியத் திறனாய்வு இயங்குகிறது. தமிழில் ஏறத்தாழ கால் நூற்றாண்டு வரலாறு கொண்ட இத்திறனாய்வு, இரசனைமுறைத்திறனாய்வில் எச்சு ஊறிக்கிடந்தத் தமிழிலக்கியத் திறனாய்வின் மேல், சமூகத்தை இயக்கும் புறநிலை விதிகளால் இலக்கியத்தையும் விளக்கலாம் என்ற புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியது. இலக்கியத்திற்குள்ளும் கலைஞனுக்குள்ளும் இருக்கும் சமூகக்கூறுகளைத் தேடிப்பிடித்துக்காட்டியது. சி.சு. செல்லப்பா குறிப்பிடுவது போல இத்திறனாய்வாளர்கள் தாம் சுறுசுறுப்புடன் இயங்கினார்கள். இயங்குகிறார்கள் புதிய புதியசிந்தனைகளுக்குத் தளம் அமைத்துக் கொடுக்கிறார்கள் ஆனாலும் இம்மார்க்சியத் திறனாய்விலும் கட்சி சார்ந்த பார்வை பெருகி, கலை இலக்கியத்திற்குச் சில தீமைகளும் நிகழ்ந்துள்ளன என்பதையும் சுட்டிக்கூறத்தான் வேண்டும். வெறும் அரசியல் முழக்கங்கள் பெரிய

கவிதைகளாகக் கொண்டாடப்பட்ட சோகம் நிகழ்ந்துள்ளது. இன்று ஓரளவு இத்தகைய நிலைமைகள் மாறிக் கொண்டு வருகின்றன எனக் கூற வேண்டும்!

### ஊ) ஒப்பிலக்கியம் : (Comparative literature)

தமிழிலக்கியத் திறனாய்வுப் போக்கில், கல்வியாளர்கள் மட்டத்தில் இன்று பரவலாக்கப்பட்டிருக்கும் ஒப்பிலக்கியமுறையையும் ஒரு போக்காகச்சுட்டிக்காட்டத்தான் வேண்டும்.ஒப்பிலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியத்திறனாய்விற்கு ஏதேனும் இரண்டு நூலை ஒப்பிட்டுப் பேசுவதற்கு எடுத்துக் கொண்டு விளக்குவது ஆகும். இத்தகைய ஒப்பிட்டுமுறையைத் தொல்காப்பியர் தொடங்கி, வ.வே.சு. ஐயர் வரைத் தமிழிலக்கிய வரலாற்றில் பலர் பயன்படுத்தியுள்ளனர். ஆனால் இவை ஒப்பிலக்கியம் ஆகா. ஒப்பிட்டு விளக்குவதெல்லாம் ஒப்பிலக்கியங்கள் ஆகா.ஒப்பிலக்கியம் என்பது, தனக்கே உரிய சில குறிப்பிட்ட விதிமுறை களுடன் இயங்கக்கூடியத் தனித்துறையாகும். இதற்கென்று உள்ள விதிமுறைகளின் அடிப்படையில் ஆராயும் போதுதான் அது ஒப்பிலக்கியம் ஆகும்.

1) ஒரு இலக்கியத்துடன் காலம், வகைமை, உள்ளடக்கம் ஆகியவற்றுள் ஏதேனும் ஒரு வழியில் தொடர்புடைய வேறு மொழியிலுள்ளஇலக்கியத்தைக் குறிப்பிட்ட ஒப்பிலக்கியக்கோட்பாட்டின் வழி ஆராய்வது ஒப்பிலக்கியம். தாக்கக் கோட்பாடு, வகைமைக் கோட்பாடு, அடிக்கருத்துக் கோட்பாடு முதலிய கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராயப்பட வேண்டும்.

2) இலக்கியத்தைப் பிற நுண்கலைகளுடன்ஓவியமும் என்பது போல ஒப்பிட்டு ஒப்பிலக்கியம் ஆகும்.

இலக்கியத்தைப் பிற துறைகளுடன் (இலக்கியமும் சமூக இயலும், இலக்கியமும் உளவியலும் என்பன போல) ஒப்பிட்டு ஆராய்வதும் ஒப்பிலக்கியம் ஆகும்-

ஒப்பிலக்கியக்கோட்பாடுகளை ”ஒப்பிலக்கியம் ஓர் அறிமுகம். என்ற நூலில் வை.சச்சிதானந்தம் விரிவாக விளக்கித்தந்துள்ளார். பலமொழிபேசப்படும் இந்தியச் சூழலில் ஒப்பிலக்கிய ஆய்விற்கு “வேட்டைக்காடாக, இந்தியா விளங்குகிறது என்பர். “ஒப்பிலக்கியம்“ இலக்கியம் பற்றிய விளக்கத்தை, விஞ்ஞான ஆராய்ச்சி“ என்ற அளவில் விஞ்ஞானபூர்வமாக நடத்த வேண்டும் என எதிர்பார்க்கிறது. எனவே ஒப்பிலக்கிய ‘அணுகுமுறை’ , ‘திறனாய்வு’என்ற எல்லையைத் தாண்டி ஆராய்ச்சி என்ற அளவிற்குப் போய் விடுகிறது. இத்தகைய ஆராய்ச்சிக்கு வை. சச்சிதானந்தம், ப.மருதநாயகம், க.செல்லப்பன்பாலா, எஸ். இராம கிருஷ்ணன் முதலிய ஆங்கிலப் பேராசிரியர்கள் தங்கள் பங்களிப்புக்களைச் சிறப்பாகச் செய்துள்ளனர். தமிழண்ணல், கதிர்.மகாதேவன், கி. இராசா, பிச்சை முதலியத் தமிழ்ப்பேராசிரியர்களும் ஒப்பிலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

தமிழ் இலக்கியச்சொல்லாடலில் இவ்வாய்வு முறை ஒரு போக்காக விளங்குகிறது என்பதைக் சுட்டிக் காட்ட வேண்டும் என்ற நோக்கில் இங்கே சுருக்கமாக விளக்கப்பட்டுள்ளது.

## எ)பல்கலைக்கழக ஆராய்ச்சிகள்

பல்கலைக்கழகங்களின் பெருக்கத்தினாலும், உயர்கல்விப்படிப்பின் வளர்ச்சியினாலும், பல்கலைக்கழக நிதிக்குழு அளிக்கும் பண உதவியினாலும் ஆராய்ச்சித் துறைகள் வேகமாக வளர்ந்துள்ளன. இவ்வாரய்ச்சிமையங்களில் செய்யப்படும் தமிழ் நூல்களில் 60% நூல்கள் இலக்கியம் பற்றியதாக இருக்கின்றன என்ற செய்தி இங்கே குறிப்பிடப்படவேண்டிய ஒன்றாகும்.பட்டங்களுக்காக எழுதப்படும் ஆய்வேடுகள், நூல் வடிவில் அச்சாகி வெளிவரும்போக்கும் பெருகியுள்ளது. மேலும் இலக்கிய ஆய்வுப்போக்கின் விளைவாக, கம்பன் ஆய்வடங்கல், சிலப்பதிகாரஆய்வடங்கல், அகிலன்ஆய்வடங்கல், மு.வ.ஆய்வடங்கல், பாரதியார்ஆய்வடங்கல், திருக்குறள் ஆய்வடங்கல் முதலிய ஆய்வடங்கல் நூல்கள் வெளிவந்துள்ளன. தமிழிலக்கிய திறனாய்விற்கு இவ்வாய்வேடுகளும், ஆய்வடங்கல்களும் பல விவரக்குறிப்புக்களை வழங்கும் வங்கிகளாகப் பயன்படத்தொடங்கியுள்ளன.

“இவ்வாய்வேடுகள் ஒரே பாணியுடையனவாகவும், ஒரே அமைப்பு உடையனவாகவும், காப்பியமாந்தர்களைப் பற்றி ஒரேமாதிரியானஆய்வுகளாகவும்விளங்குகின்றன“ என்று தமிழண்ணல் சுட்டிக் காட்டினாலும் ஆய்வியல் மனப்பான்மை பெருகியுள்ள இச்சூழலில் கல்வியாளர்களின் இலக்கியச் சொல்லாடல்களின் தன்மைகள் மாற்றம் அடைந்துள்ளன என்பது உண்மை. தொடக்க காலத்தில் இருந்ததுபோல், ஒரே கருத்தை ஒவ்வொருவரும் தாங்களே புதிதாகக் கண்டதுபோல் திரும்பத் திரும்ப எழுதுகிற தன்மை இலக்கியத் திறனாய்வு உலகில் குறைந்துள்ளது. ஆய்வியல் பற்றிய முறையியல் அறிமுகமான பிறகு, ஓர் இலக்கியத்தைப்பற்றித் திறனாய்வு செய்கிற யாரும், அவ்விலக்கியம்பற்றித் தமக்கு முன்பு கூறப்பட்டிருக்கும் கருத்துக்களைத் தொகுத்துக்கூறி,பிறகுதான் தங்கள் திறனாய்வுச் சிந்தனைகளைத் தொடர்கின்றனர். இலக்கிய ஆராய்ச்சிகள், எவ்வாறு இலக்கியத் திறனாய்விற்குத் துணை போக முடியும் என்பதற்கு இது ஒரு நல்ல எடுத்துக் காட்டாகும்-எனவே தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில், இலக்கிய ஆய்வுப்போக்கும் ஒரு போக்காக விளங்குகிறது என்பதைச் சுட்டிக் கூறத்தான் வேண்டும்.

## மக்கள் தொடர்புக் கருவிகள்

தினசரிப்பத்திரிக்கைகளில், மேலும் மக்கள் தொடர்புக் கருவிகளான செய்தி இதழ்கள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய அனைத்திலும் புத்தக மதிப்புரை வழங்கப்படுகிறது. ஆனால் அம்மதிப்புரைகளில் திறனாய்வுச்சாரமில்லை! அறிமுகப்படுத்துவதில்கூட ஆழமில்லை. இவைகளில் தினமணி நாளிதழ், இலக்கியத் திறனாய்விற்குச் சிறப்பளிக்க வேண்டும் என்றே தமிழ்மணியைக் கொண்டு வருகிறது. அதில் வரும் கட்டுரைகளும், க.நா.சு,குறைபட்டுக் கொள்ளும் பத்திரிக்கைக்குணத்தோடுதான் விளங்குகின்றன. ஆனாலும் தமிழவன், சேவற்பொற்கொடியோன், அசோகமித்திரன் ஆகியோர் எழுதிய ஆழமான கட்டுரைகளையும் வெளியிடுவதைப் பார்த்தால், தினமணி ஆசிரியர் மகாதேவன் தமிழிலக்கியத் திறனாய்வு வளர்ச்சியில் சிறப்புக் கவனம் செலுத்துவதைக் கவனிக்க முடிகிறது.

பெரும்பாலும் மதிப்புரைக்கெனத் தேர்ந்தெடுக்கப்படும் நூல்கள் பல பத்திரிக்கைகளில் உறவு, நட்பு, கட்சி, சாதி, அறிமுகம். சித்தாந்த உறவு ஆகியவற்றின் அடிப்படையில்தான்அமைகின்றன. 1979-இல் தமிழ் நாடன் சுட்டிக்காட்டிய அதே நிலை இன்றும் நீடிக்கிறது என்றுதான் கூறவேண்டும். தமிழ் இலக்கியத்திறனாய்வு,உயிர்ப்புடனும் தேடல் குணத்துடனும் இன்றும் சிறு பத்திரிக்கை வட்டாரத்தில்த ான்விளங்குகின்றது. “தமிழ்மணி“ போல பலஇதழ்கள் வரவேண்டும். அப்பொழுதுதான் பெரும் பத்திரிக்கைச்சூழலிலும் திறனாய்வை வளர்த்தெடுக்க முடியும். மேலும் மேலை நாட்டில் நடப்பது போல பதிப்பகத்தார்களும் திறனாய்வுப் பத்திரிக் கைகளை நடத்த வேண்டும் என்பார் சிலர் தமிழிலக்கிய உலகில் பதிப்பாளர்களின் போக்கு வணிகமயமாகி இருக்கும் சூழலில், இந்தக்கருத்துப்படிபதிப்பாளர்கள் பத்திரிக்கை நடத்தினாலும் இலக்கியத்திறனாய்விற்குப் பெரும் பயனொன்றும் கிடைத்து விடாது என்றே கூறலாம்.

## தொடர் ஆய்விற்கான சில குறிப்புகள்

இன்னும் புதுக்கவிதைத்திறனாய்வாளர்கள், புனைகதைத் திறனாய்வாளர்கள், நாடகத்திறனாய்வாளர்கள் என்று இலக்கிய வகைமை அடிப்படையிலும், தமிழிலக்கியத் திறனாய்வுப்போக்கைவிளக்குவதற்கு வாய்ப்பிருக்கிறது. எடுத்துக்காட்டாகப் புதுக்கவிதை திறனாய்வில் குறிப்பிடத்தக்கவர்களாக வல்லிக்கண்ணனும், பாலாவும் இன்று சிறந்து விளங்குகின்றனர். “புதுக்கவிதை தோற்றமும் வளர்ச்சியும் என்ற நூல் மூலம் புதுக்கவிதையின் வரலாற்றைப் புள்ளி விவரங்களோடு வல்லிக்கண்ணன் எடுத்துக்கூறுகிறார். வல்லிக்கண்ணனின் அமைதியான உழைப்பு இந்நூலில் புலப்படுகிறது. பாலாவின் “சர்ரியலிசம்“, “புதுக்கவிதை -ஒரு புதுப் பார்வை“ என்ற இரண்டு நூல்களும், தமிழ்ச்சமூகத்தில் புதுக்கவிதைகளுக்கு அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்தன. பாலா, சர்ரியலிசத்தை வெளியிட்ட போது, அதை மிகவும் எளிமைப்படுத்தி விட்டார் எனச் சிறுபத்திரிக்கை வட்டாரத்தில் விமர்சனம் வைக்கப்பட்டது. ஆனால் அந் நூலைத் தொடர்ந்து இதுவரை மற்றொரு நூல் வரவில்லை என்பதையும்கணக்கில் எடுக்க வேண்டும். மேலும் பாலாவின் அந்த இரண்டு நூல்கள்தாம், புதுக்கவிதை ஆய்வாளர் பலருக்கு வழிகாட்டிகளாக விளங்குகின்றன. புதுக் கவிதை வாசிப்பிற்குத் தூண்டுகோலாக அமைகின்றன. பாலாவின் தெளிவான தமிழ்நடை கவிஞராகவும் அவர் விளங்குவதால், ஆற்றலோடு கருத்துக்களைச் சுமந்து வந்து தருகின்றது. இதுபோலவே பாரதி பற்றிய திறனாய்வுகள், பாரதிதாசனைப் பற்றிய திறனாய்வுகள், ஜெயகாந்தனைப் பற்றிய திறனாய்வுகள் சங்க இலக்கியத் திறனாய்வுகள். கம்பராமாயணத் திறனாய்வுகள்- என்று தமிழிலக்கியத் திறனாய்வுப் போக்கைப் பகுத்தாராய இடம் இருக்கின்றது. இவ்வாறு பல கோணங்களில் தமிழிலக்கியத் திறனாய்வுப்போக்கை ஆராயும் போதுதான், தமிழுக்கான திறனாய்வு நெறிமுறைகளைக் கோட்பாட்டளவில் உருவாக்கிக்கொள்ள முடியும்-மேலும்தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாறு அத்தகைய வளர்ச்சி இங்கு உருவாவதற்கு அனைத்துக்கல்வியையும் தமிழ் வழியாக அறிந்துகொள்ள வாய்ப்புக்கள் உருவாக வேண்டும் தமிழ்த் தேசிய இனத்தின் ஒட்டுமொத்தமான வளர்ச்சிக்கான அடிப்படை இதைச்சார்ந்துதான் இருக்கிறது.

## ஏ.பின்நவீனத்துவத் திறனாய்வு

எண்பதுகளில் சோவியத்தில் பொதுவுடமையரசின் வீழ்ச்சியினாலும் தொண்ணூறுகளில் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார முறையினாலும் அம்பேத்கரின் நூற்றாண்டு விழாக்கொண்டாட்டங்களாலும் தமிழிலக்கியச் சூழலில் பெரும் மாற்றங்கள் நிகழ்ந்தன. அவற்றுள் குறிப்பிடத்தக்கவைகளாக மூன்று கூறுகளை முதன்மைப்படுத்தலாம்.

1. பின் நவீனத்துவத் திறனாய்வு
2. பெண்ணியத் திறனாய்வு
3. தலித்தியத் திறனாய்வு

இவற்றுள் பெண்ணியத் திறனாய்வும் தலித்தியத் திறனாய்வும் தமிழ்ச்சூழலில் செழித்து வளருவதற்குப் பின்நவீனத்துவம் வழங்கிய சிந்தனைகள் பெரிதும் துணைநின்றன. எல்லாச் சமூக மதிப்பீடுகளையும் சந்தேகமுற்று ஒவ்வொன்றுக்குள்ளும் இருக்கும்.ஒழுங்கினங்களைக் கட்டுடைத்துக் காண்பதன் மூலம் சமூகத்தின் உயர்மட்ட வளர்ச்சியின் விளைவாகஉருள நான்தோன்றித்தனமான ஒரு போக்கிற்கு நியாயம் கற்பிப்பதற் வடிவமைக்கப்பட்டவைதான் பின் நவீனத்துவச்சிந்தனைகள் என்று. ஒரு விமர்சனம் கடுமையாக முன்வைக்கப்பட்டாலும், தன்னைச்சுத்தி நடக்கும் சமூக நிகழ்வுகளுக்குள்ளும் அந்நிகழ்வுகள் குறித்த கருத்தாக்கங்களுக்குள்ளும் பொறித்து கிடக்கும் புனைவுகளைப் புரிந்துகொள்ள, அவை பெரிதும் பயன்படுகின்ற கருவிகளாக அமைத்தன. எனவே இந்தியச் சூழலிலும் அறிவாளிகள் மட்டத்தில் அச்சிந்தனைகள் மிக ஆர்வத்தோடு உள்வாங்கப்பட்டன.

பின்நவீனத்துவச் சித்தனைகள் மையத்திற்கும் ஒழுங்கிற்கும் முழுமைத்தன்மைக்கும் நேர்கோட்டுப்பார்வைக்கும் எதிரானவை. என்பதனால் அதன் தன்மைக்கேற்ப ”இதுதான் பின்நவீனத்துவ என்று வரையறுக்க முடியாதபடி அதனுள் பல்வேறுபட்ட கூறுகள் செயல்படுகின்றன, அதனால்தான் பின்நவீனத்துவத்தின் மிக முக்கியமாக திறனாய்வாளர்களுள் ஒருவரான இயாப்ஹசன் (டாயடி ர்யளளயடெ) “இக்கோட்பாடு இன்னும் ஒரு விவாதத்துக்குரிய பொருளாகவே விளங்கி வருகிறது” என்கிறார்.பின் நவீனத்துவம் பலரையும் மிரட்சியடைய வைப்பதற்குக் காரணம் அதைப் புரிந்துகொள்வதில் இருக்கும் சிக்கல்தான். அச்சிக்கல்களுள் தலைமையான ஒன்று அது பயன்படுத்தும் புதிய கலைச்சொற்கள். அதாவது, இது பயன்படுத்தும் கலைச்சொற்கள் ஏற்கெனவே பழக்கத்திலிருக்கும் சொற்கள்தான். ஆனால் அதே சொற்களை இது வேறொரு தளத்தில் வேறொரு பொருளைக் குறிப்பதற்குப் பயன்படுத்துகிறது. எனவே, பின்நவீனத்துவத்தைப் புரிந்துகொள்ள ஒரு வாசகன் முதலில் செய்ய வேண்டிய வேலை, இச்சொற்களைப் பற்றி நமக்குள் ஏற்கெனவே இருக்கும் புரிதலைக் களைந்துவிட்டு, அந்தப் பழைய சொல்லையே புதிய பொருளில் புரிந்து கொண்டு அர்த்தத்தைக் காண முயல வேண்டும்.

## பின்நவீனத்துவம் என்ற சொல்லாட்சி

இச்சொல் 1980களில் இருந்தே மேலை நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது என்றாலும் சார்லஸ் ஒல்சன் என்பார் தன்னுடைய கடிதங்களிலும் எழுத்துக்களிலும் பயன்படுத்திய பிறகுதான் அங்கீகாரம் பெற்றது. அவர் இச்சொல்லை வடிவவாதத்தை வலியுறுத்திய நவீனத்துவத்திற்கு எதிராகப் பயன்படுத்தினார். ஆனால் அவர் இச்சொல்லை விளக்கவோ, வரையறைப்படுத்தலோ இல்லை.

உண்மையில் இர்வின் கோவ், ஹரி லெவின் ஆகியோர்தான் பின்நவீனத்துவக் கருத்தை முன்மொழிந்தவர்களாவர். இவர்கள்தான் நவீனத்துவம் வீழ்ச்சியடைந்துவிட்டது. என அறிவித்தனர். பின்நவீனத்துவம், நவீனத்துவம் தலையில் வைத்துக் கொண்டாடிய அறிவுஜீவிகளுக்குத்தான் எதிரானது என்பதை முன்நிறுத்தியது. நவீனத்துவமானது, மனிதனது சமூகத்தை வரையறுத்துக்கொள்ள முடியும். சமூக உறவுகளைப் புரிந்துகொள்ள முடியும் என நம்பியது. ஆனால் இர்வின் கோவின் பின்நவீனத்துவச் சிந்தனையின்படி, அதிகார அமைப்பிற்குள் ஏற்பட்ட உடைவு. மரபார்ந்த கொண்டாட்டங்களில் ஏற்பட்ட சலிப்பு, எதிலும் நம்பிக்கையற்ற தன்மை ஆகியன எல்லாம் சேர்ந்து ஒரு கலங்கிய நிலையில் புரிந்துகொள்ள முடியாத புதிராகத்தான் சமூகம் அமைந்துள்ளது என்பதாகும். எனவேதான், பின்நவீனத்துவக் கதைசொல்லி, கதாபாத்திரங்களற்ற உருவமற்ற, ஒரு உலகைப் படைக்கத்தான் முயற்சி செய்கிறார்.

இர்வின் உருவாக்கிய மற்றொரு பின்நவீனத்துவக் கோட்பாடு, ‘‘கருத்துக்களின் நிச்சயமற்ற தன்மை”,என்பதாகும்.இக்கோட்பாடு இன்று வரை வலுவான ஒன்றாக விளங்கிக் கொண்டிருக்கிறது. பின் நவீனத்துவவாதிகளில் குறிப்பிடத்தக்க மற்ற இரண்டு பேர் வெஸ்லி பீட்லா, சூசன் சொண்டாக் ஆகியோராவர். இவர்களின் கருத்துப்படிப் பின்நவீனத்துவ இலக்கியவாதிகளின் முக்கிய பங்கு வெகுஜன இலக்கிய வடிவங்களுக்கும் உயர் இலக்கிய வடிவங்களுக்கும் இடையில் கிடக்கும் இடைவெளியைக் கடந்து விடுவதாகும். இரண்டாந்தர இலக்கியங்களாகக் கருதப்படும் பாலியல் கதைகள், விஞ்ஞானக் கதைகள், மர்மக் கதைகள் முதலிய வெகுஜன இலக்கியங்களிலிருந்து ஒரு வகையான எதிர்க்கலையினை உருவாக்குவனவே, சிறந்த பின்நவீனத்துவப் படைப்பாகும்.

சூசன் சொண்டாக்கின் கருத்துப்படி, கலையில் முக்கியமானது அர்த்தத்திற்கு அப்பாற்பட்ட ஒருவகையான உணர்வைத் தூண்டும் ஆற்றல்தான். ஒரு வகையான கேலி விளையாட்டுதான் எழுத்து குழந்தை போல நேரடியாக அனுபவிக்க வேண்டியது தான் கலை இலக்கியம். இந்த அனுபவமும் புத்தி ஜீவித்தனமானது அல்ல. இக்கோட்பாட்டின் ஆதார ஸ்ருதிகளில் இது ஒன்று.

ஜெரால்டு கிராப் - இவர் ஒரு இன்றியமையாத பின்நவீனத்துவச் சிந்தனையாளர் ஆவார். இவர் கலை அழகியலை ஒரு வகையான சக்தியாகக் கருதுகிறார். இந்தச் சக்தி புறவவமானது. ஆனால் விளங்கிக்கொள்ள முடியாதது. கட்டுப்படுத்த முடியாதது. இங்கே தலையானது, கலைக்கெதிராகவே பயன்படுத்தப்படுகிறது. முடிந்த முடிவாகத் தெளிவான கருத்துக்கள்

எதனையும் இது முன்வைப்பதில்லை. இவ்வாறு எதிலும் நிச்சயமற்ற தன்மையையே இவர் மீண்டும் வலியுறுத்துகிறார்.

பின் நவீனத்துவத்தின் மற்றொரு சிந்தனையாளர் முன் பிரான்சிஸ் இயோடார்டு ஆவார். இவருடைய முக்கியமான கருத்து இதுதான்: மகா எடுத்துரைப்புகள் (புசயனெ யேசசயவளைந) எதுவுமே உண்மைகளை மறைத்துவிடுபவைகளாகும். சான்றாக, மார்க்சிசம், கிறித்துவம் போன்ற பொதுமைப்படுத்தப்பட்ட மகா எடுத்துரைப்புகள் வரலாற்றுப்போக்கில் தமக்குத் தாமே எதிரியாகிப் போவதற்குக் காரணம் இதுதான், எனவே, இலக்கியம் என்பது சிறுசிறு எடுத்துரைப்புகளாக இருக்க வேண்டும் என்கிறார் இவர்.

பின்நவீனத்துவச் சிந்தனைகளில் பயன்படுத்தப்படும் ஆறு எடுத்துரைப்பு உத்திகளை டேவிட் லாட்ஜ் பின்வருமாறு எடுத்துரைக்கிறார்.

1.முரண்படுதல் (Contradiction)

2.வரிசைப்படுத்துதல் (Permutation)

3.தொடர்ச்சியின்மை (Discontinuity)

4.மிகை (Excess)

5.துழாவும் தன்மை (Randomness)

6.குறைச்சுற்று (Sbort Circuit)

(பூரணச்சந்திரன் மொழிபெயர்ப்பு)

பின் நவீனத்துவத்தை மிக எளிமைப்படுத்திப் புரிந்துகொள்ள நவீனத்துவத்திற்கும். அதற்குமுள்ள வேறுபாட்டினைக் கீழ்க்கண்டவாறு பட்டியலிட்டுக் கொள்வது பயன்படும்.

| எண் | நவீனத்துவம் | பின் நவீனத்துவம் |
|---|---|---|
| 1 | வடிவம் | வடிவமின்மை,எதிர்வடிவம்,திறந்த வடிவம் |
| 2 | நோக்கம்.'.குறிக்கோள் | விளையாட்டு,கேளிக்கை |
| 3 | வடிவமைத்தல் (டிசைன்) | தற்செயல் நிகழ்வு |
| 4 | கலைப் பொருண்மை | கலைச்செயல்முறை |
| 5 | தொலைவுபடுத்திக் கொள்ளல் | பங்கேற்றல் |

| | | |
|---|---|---|
| 6 | ஒருங்கமைத்தல்.ஃபடைப்பு | தகர்ப்படைப்பு.ஃஎதிர்நிலை |
| 7 | இருப்பு | இன்மை |
| 8 | நிச்சயமற்ற தன்மை | நிச்சயமற்ற தன்மை |

இத்தகைய பின்நவீனத்துவச் சிந்தனைகள் தமிழ்ச்சூழலில் பரவுவதற்கு உலகமயமாதலும் சந்தைப்பொருளாதாரச் குழலும் சாதகமாக அமைந்தன எனக் கருதலாம். மனோன்மணியம் பல்கலைக் கழகத்தில் நடந்த பின் நவீனத்துவக் கருத்தரங்கக் கட்டுரைகள் கல்வியாளர்கள் நடுவில் இச்சிந்தனை பரவுவதற்குத் துணை போயின. ஆனாலும் இன்று வரை மிகக் குறுகிய அளவில் சிறு பத்திரிகை வட்டாரத்திலேயே இச்சிந்தனைகள் பெரிதும் பேசப்பட்டு வருகின்றன. கதை சொல்லியில் ரமேஷ், பிரேம் எழுதிய கட்டுரைகள், சாரு நிவேதிதா, எம்.ஜி. சுரேஷ், பூரணச்சத்திரன், அ.மார்க்ஸ், பா.வெங்கடேசன் மற்றும் இலங்கை எழுத்தாளர்கள் சிலரும் இச்சிந்தனைகளைத் தமிழ்ச்சூழலில் கொண்டு வருவதற்குப் பெரிதும் துணை நின்றனர். அஸ்வகோஷ், இந்திரா பார்த்தசாரதி எனச் சிலர் இச்சிந்தனைக்கு எதிராகக் கருத்துக்களை முன்வைத்திருந்தாலும்,உருவாகியுள்ள புதிய தமிழ்ச்சூழலில் இச்சிந்தனைகள் பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளன. காலச்சுவடு, கதைசொல்லி, தலித் , கவிதாசரண் , பன்முகம் , அட்சரம் முதலிய சிற்றிதழ்கள் இப்பின்நவீனத்துவம் குறித்த சிந்தனைகளைத் தமிழில் முன்னெடுத்துச் சென்றுள்ளன. இதன் ஒட்டுமொத்த விளைவாக அதிகாரத்திற்கு" எதிராக எண்ணங்களைக் கட்டமைக்கிற முயற்சி எளிதாகி இருக்கிறது. இதன் விளைவாகத்தான் இன்று தமிழ்க்கலை இலக்கியச் சூழலில் பெண்ணியமும் தலித்தியமும் பரவலான சொல்லாடல்களுக்குரிய பொருளாக விளங்குகின்றன.

## ஐ.பெண்ணியத் திறனாய்வு

வரலாறு முழுக்க அடையாளம் தெரியாமல் மறைக்கப்பட்ட மனித இனத்தின் சம பாலராகிய பெண்களின் உரிமைக்குரலை முன்னெடுத்துச்செல்லும் இயக்கங்கள் மேலைநாடுகளில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் பரவலாகத் தோற்றம் பெற்றன. 1830-இல் ஐரோப்பாவில் பெண்கள் வாக்குரிமை பெற்றனர். 1848-இல் நியூயார்க்கில் நடந்த செனகாபால்ஸ் மாநாடு பெண்ணியம் இயக்கத்தில் ஒரு மைல்கல்லாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து மேரி வுல்ஸ்டோன் கிராஃப்ட், சைமன் டி பௌவார், வெர்ஜினியா வுல்ஃப், கேட்மில்லட், ழூலியா கிறிஸ்தவா, ஹெலன் சிக்ஸி முதலிய பல பெண்ணிய அறிவுஜீவிகள் இந்த ஆண்மையச் சமூகத்தில் உருவாகிப் பெண்களின் உரிமை குறித்த சொல்லாடலை வளர்த்தெடுப்பதற்குப் பெரிதும் பாடுபட்டுள்ளனர். இதன் விளைவாக இன்று மகளிரியம் (ௐழஅயெ"ள ளவரனல) என்ற புதிய கல்வித்துறையே உலகம் முழுவதும் உருவாகிவிட்டது. பெண்களின் சிக்கல்களை மானிடவியல், உளவியல், சமூகவியல், மருத்துவ இயல், வரலாற்றியல் முதலிய பல துறைகளின் அடிப்படையில் ஆராய்கிற போக்குப்

பெருகியுள்ளது. கலை இலக்கியத் துறைகளிலும் பெண்ணின் சிக்கல்களை ஆராய்கிற பெண்ணியத் திறனாய்வு விளங்கி வருகிறது. கேட்மில்லட் பெண்ணியத் திறனாய்வின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு வரிசைப்படுத்துகிறார்.

1.எல்லாக் கலை இலக்கியங்களிலும் ஒன்று போலவே பெண்களைப் (தமிழில் தாயாக மட்டுமே) படைத்துக் காட்டுவதில் உள்ள ஆணாதிக்க அரசியலைக் கட்டுடைத்து வெளிக்கொணர்வது

2.நிலவுகின்ற மொழி, மரபு, இலக்கியக்கொள்கைகள், எடுத்துரைப்புமுறைகள் முதலியவற்றிலுள்ள ஆண் நலச்சொல்லாடல்களைக் கண்டெடுத்து மறுபார்வைக்கு உட்படுத்துவது.

3.பழைய இலக்கியங்கள் அனைத்தையும் இன்றைய பெண்ணுரிமை நோக்கில் அணுகி ஆராய்வது.

இவ்வாறு பெண்ணியத் திறனாய்வின் நோக்கத்தினை ஆண் பெண் இருபாலருக்கும் பொதுவாக கேட் மில்லட் கூறுவதிலிருந்து வேறுபட்டுப் பெண் எழுத்தாளர்களின் எழுத்துக்களைப் பெண்கள் மட்டுமே திறனாய்ந்து மதிப்பிட வேண்டும் என்ற ஒரு புதிய முறையை ”எலைன் ஷோவால்டர்” அறிமுகப்படுத்துகிறார். இம்முறையை அவர் கைனோ கிரிட்டிசிசம் (புலழெ ஊசவைஉளைஅ) என்றழைக்கிறார். இதைத்தமிழில் பெண்நிலை நோக்குத் திறனாய்வு என மொழிபெயர்க்கின்றார் செல்வி திருச்சந்திரன். இத்திறனாய்வினை எலைன் ஷோவால்டர் கீழ்க்கண்டவாறு விளக்க முயலுகிறார்.

1.பெண் எழுத்தாளர்களையும் எழுத்துக்களையும் பகுத்தாராய,பெண்களால் அமையும் ஒரு வேலைத்திட்டத்தை வடிவமைப்பது.

2.ஆண்கள் உருவாக்கியுள்ள இலக்கியக் கொள்கைகளைத் தனதாக்கிக்கொள்ள முயல்வதை விடப் பெண்கள் தங்களுக்கேயுரிய அனுபவங்களின் அடிப்படையில் புதிய புதிய இலக்கியக்கொள்கைகளை உருவாக்க முயலுதல்.

3.பெண் எழுத்துக்களைப் பெண்கள் மட்டுமே திறனாய்வு செய்தல். பெண் எழுத்துக்கள் குறித்த ஆண்களின் மதிப்பீட்டை அறவே ஒதுக்கித் தள்ளுதல்.

இவ்வாறு இயங்கும் போதுதான் எந்த ஒன்றிற்கும் பெயர் சூட்டுவதற்கான அதிகார அரசியலைப் பெண் கைப்பற்ற முடியும். அதன் மூலம் பெண் விடுதலை சாத்தியமாகும் என்று நம்புகின்றனர். “ஏடன் தோட்டத்திலுள்ள ஒவ்வொரு பொருளுக்கும் பெயரிடும் அதிகாரத்தைக் கடவுள் ஆணாகிய ஆதாமிற்குத்தான் வழங்குகிறார் என்ற கதையில் உள்ள அரசியல் எளிதாக எடுத்துக்கொள்ளத் தக்கது அல்ல இந்தப் பெயரிடும் அதிகாரத்தைக் கைப்பற்றாதவரை பெண் அதிகாரமற்றவளாய் உறைந்து கிடக்க வேண்டியதுதான் என்கிறார். மேரி டாலி இந்த அதிகாரத்தைப் பெறுவதற்குப் பெண் செயல்பட வேண்டிய முதல் தளம் மொழிதான். ஆண்களாலான இந்த மொழி உலகத்திலிருந்து வெளியேறிப் பெண்கள் தங்களுக்கான மொழியை உருவாக்கிக்கொள்வதுதான்

சிறந்த வழி. இந்தப் பெண் மொழி எப்படி இருக்கும் என்பதைப் பிரெஞ்சு பெண்ணியலாளரான ஹெவன் சிக்ஸி கீழ்க்கண்டவாறு கூறுகிறார்.

> ”பெண் மொழி அராஜகம் மிக்கது. ஆண் எழுத்துக்களில் உள்ள ஒழுங்கு முறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போடுவது, படைப்பவர் - வாசகர் என்கிற எழுவாய்களைத் தகர்த்தெறிவது எல்லாவிதமான அடக்குமுறைகளிலிருந்தும் தாண்டிக் குதித்து எழுதுவது”

இத்தகைய பெண் மொழியை அடைவதற்குப் பெண் என்ன செய்ய வேண்டும் என்பதையும் ஹெலன் சிக்ஸி கீழ்க்கண்டவாறு விளக்கி விடுகிறார்.

> ”அவளுக்கேயுரிய பொருட்களையும் உறுப்புக்களையும் ஆழமாகப் புதையுண்டு அடையாளம் இழக்காமல் கிடக்கும் அவளது உடம்பு சார்ந்த மிகப்பெரிய ஆட்சிப் பரப்பினையும் மீண்டும் ஆதி வலுவோடு திரும்பப்பெற்று எந்தவிதமாகவும் தன்னைத் தானே தணிக்கை செய்துகொள்வதைத் தவிர்த்து, அப்படியேபொங்கி வழிய வேண்டும்”

என்கிறார்.

பெண்நிலை நோக்குத் திறனாய்வு ”இலக்கிய வகைமைகள்” குறித்தும் ஆழமாகச் சிந்திக்கிறது. ஆண்களின் “மகாஎடுத்துரைப்பு” வடிவமாக விளங்கும் வீரதீரக்தைகள், காவியங்கள், காதல் உணர்வுப் பாடல்கள், துன்பவியல் (வுசயபநனல) நாடகங்கள் முதலியவை எல்லாம் ஆண்களுக்கேற்ப வடிவமைக்கப்பட்டவைகளாகும். எனவே, கதை புனையவரும் பெண் எழுத்தாளர் இதே வடிவங்களை மேற்கொள்ளும்போது ஆண் எழுத்தைப் போலவே பெண் எழுத்தும் அமைந்து விடுகிற விபத்து நேர்ந்து விடுகிறது. எனவே, பெண்நிலை. நோக்குத் திறனாய்வு, கதை புனையும் பெண் எழுத்தாளர்கள் தங்கள் எடுத்துரைப்பு வடிவத்திலும் புதுமை செய்தாக வேண்டுமென வலியுறுத்துகிறது.

தமிழில் இத்தகைய பெண்நிலை நோக்குத் திறனாய்வினை இரண்டாயிரத்திற்குப் பிறகுதான் பெண்களே எழுதுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதற்கு முன்பு பாரதியார் போன்ற ஆண்களே முயற்சி செய்துள்ளனர். பாரதியார், அவ்வையாரின் எழுத்துகளைக் குறித்து மிக உன்னதமாக மதிப்பிட்டுக் கீழ்க்கண்டவாறு விளக்குகிறார்.

> “யோகாநுபூதி” ஸம்பந்தமாகப் பிறர் எழுதுமிடத்தே (ஆண்கள் நூ, ஆர்)மிகவும் கடினமும் அஸாதாரணமுமாகிய சொற்களையும் வாக்கியங்களையும் வழங்குதல் இன்றியமையாததென்ற கருத்துடன் வேலை செய்திருக்கிறார்கள். ஔவையின் நூலோ (ஔவை குறள் நூ ஆர்) மிகத் தெளிந்த, மிக எளிய தமிழ் நடையில் எல்லா ஜனங்களுக்கும் பொருள் விளங்கும்படியாக எழுதப்பட்டிருக்கிறது. “சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல்” என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில்

ஔவை ஒப்பற்றவள் இத்துடன் மிகவும் அருமையான நுட்பமான விஷயங்களை யாவருக்கும் அர்த்தமாகும்படி மிகவும் எளிய நடையில் சொல்வதாகிய அற்புதத் தொழிலை உயர்ந்த கவியரசர்களே தெய்வீகத் தொழில் என்றும், சாத்தியப்படாத தொழில் என்றும் கருதுகிறார்கள் இந்த அற்புதத் தொழிலிலும் ஔவை நிகரற்ற திறமை வாய்ந்தவர். (பாரதியார் கட்டுரைகள், பூம்புகார் பிரசுரம், ப.162)

மேலும் பாரதியாரின் மற்றொரு முக்கியமான கவனிப்பும் இந்த இடத்தில் குறிப்பிடத்தக்கதாகும். பெண்களுக்கு மட்டும் உரிய சிறப்பான பாட்டுக்களும் சந்தங்களும் இருக்கின்றன என்கிறார். "கல்யாணப்பாட்டு, நலங்கு, ஊஞ்சல், கும்மி, தாலாட்டு என்று மட்டுமல்லாமல் பண்ணையில் வேலை செய்யும் பெண்கள். நெல்குத்துவோர், கண்ணாம்பு இடிப்போர், குறிகாரி, தொம்பச்சி முதலிய வகுப்பினர்தமக்கென்று "தனியான பாட்டுகளை" வைத்துக் கொண்டிருக்கிறார்கள்" (மே.நூ.ப.285) என்று எழுதுகிறார்.

தமிழ்ப் பெண்நிலை நோக்குத் திறனாய்வில் குறிப்பிடத்தக்க ஒரு பார்வையாக நாட்டுப்புறப்பெண்கள் பாடும். ஒப்பாரிப் பாடல்களிலும் தாலாட்டுப்பாடல்களிலும் பெண்களின் எதிர்ப்புக் குரல்கள் பதிவாகியுள்ளன என்பதை சரஸ்வதி வேணுகோபால் எடுத்துக்காட்டியுள்ளதைச் சுட்டலாம்.

தமிழில் பெண்நிலைநோக்குத் திறனாய்வு முழுமையாகச் செயல்பட்டிருக்கும் ஒரு நூல் என்றால் செல்வி திருச்சந்திரன் எழுதியுள்ள "தமிழ் வரலாற்றுப் படிமங்கள் சிலவற்றில் ஒரு பெண்நிலை நோக்கு" (1997) என்ற நூலினைச் சுட்டலாம். இதில் காரைக்காலம்மையார், ஆண்டாள், ஔவையார், பட்டினத்தார். எழுத்துக்கள் குறித்து அவர் விளக்கியுள்ள பாங்கு பெண்நிலை நோக்குத் திறனாய்வின் தேவையை வலியுறுத்துகின்றது. கல்யாணம், கணவன், வீடு, குடும்பம் என்னும் வட்டத்தை விட்டு நீங்கிய ஒரு தேடலாக அம்மையாரின் பாடல்கள் அமைந்துள்ளதை விளக்குகிறார். ஔவையாரைப் போல அம்மையாரையும் முதுமைப்படுத்திப் பார்ப்பதும் எலும்புக்கூடாய் ஆக்குவதும் ஆணாதிக்கச் சமூகத்தின் புனைவு வெளிப்பாடே என்பதை நிறுவுகிறார். இது போலவே, ஆண்டாளிடம் காணும் மீறல்களையும் மிக நுட்பமாக விளக்கிவிட்டுக் கீழ்க்கண்டவாறு ஒரு முடிவுக்கு வருகிறார்.

"ஆண் - பெண் எனப் பிரிக்கப்பட்டுக் கட்டியெழுப்பப்பட்டிருந்த எல்லாக் கலாச்சாரக் கட்டுமானங்களையும் ஆண்டாள் தகர்த்தெறிகிறார்" (ப.56)

மேலும், ஆண்டாளுக்கு உடல், வடிவம், அது சம்பந்தப்பட்ட மனக்கோலம், ஆத்ம விசாரம் முதலிய எல்லாமே பாலியல் பொருட்களாகவும், மனித வாழ்க்கையின் கோலங்களாகவே தெரிகின்றன.

பட்டினத்தாரை அணுகும்போது உளவியல் பெண்ணியத்தைப் விளக்குகிறார். பெண்ணைப் பெண்ணாகப் பயன்படுத்தி அற்புதமாக பார்க்கும்போது அவள் உறுப்புக்களைப் புண்களாகக்

காண்பதும் தாயாகப் பார்க்கும்போது அதே உறுப்புக்களைப் பாசமூட்டும் சுரப்பிகளாகப் பார்ப்பதிலும் உள்ள முரண்களை எடுத்துக்காட்டுகிறார். குடும்பம், பிள்ளைப்பேறு, பிள்ளை வளர்ப்பு, அதிகாரத்துவ உறவுடைய கணவனிடமிருந்து பெரிதும் விலகி இருத்தல் முதலிய ஆணாதிக்க வாழ்க்கை முறையில் அமுக்கப்பட்ட பெண்ணின் பாலியல், தன்அதிகாரத்துக்குட்பட்ட ஆண்குழந்தையின்பால் அன்பு எனும் பேரில் திருப்பிவிடப்படுகிறது. தாயின் இந்த அன்பு உணர்ச்சி வெளிப்பாடு தனது சுதந்திரத்தைத் தடுத்துத் திக்குமுக்காடச் செய்வதாக தன்னை விழுங்குவதாக உணரும் பிள்ளை, தனது சுதந்திரத்தைக் காப்பாற்றிக்கொள்ள பல சிரமங்களுக்குள்ளாகிறது. இந்தச் சிறுவயது சிக்கலே, பின்னாளில் அவன் வளர்ந்த பிறகு பெண்ணையே வெறுப்பதற்கு ஏதுவாகிறது என விளக்குகிறார். இவ்வாறு பழைய இலக்கியங்களைப் பெண்நிலை நோக்கின் அடிப்படையில் அணுகி எவ்வாறு கட்டுடைப்பது என்பதற்குச் சான்றுகளாக இவருடைய எழுத்துக்கள் அமைந்துள்ளன.

1966-இல் தெரசா மகளிர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, மதுரையில் "நடத்திய ‘‘பெண்கள் படைப்பில் பெண்கள்" என்ற கருத்தரங்க முயற்சி குறிப்பிடத்தகுந்த ஒன்றாகும். பெண்களின் படைப்புகளைக் குறித்து தி.லீலாவதி, மீனாட்சி முருகரத்னம், சேதுபதி மணியன், செண்பக ராமஸ்வாமி, லட்சுமி ஆகியோர் கட்டுரை வாசித்தனர். பெரும்பாலும் கல்வியாளர்களாகிய இவர் களின் கட்டுரைகள் ஒழுக்கப்பண்பாடு என்ற ஆணாதிக்கப் பார்வையிலேயே அமைந்திருந்தன என்றாலும் அக்காலச் சூழலில் இது ஒரு புது முயற்சி என்ற முறையில் பெரிதும் வரவேற்பைப் பெற்றது.

இது போலவே "விடுதலைக்கு முன் வந்த தமிழ்ப் புதினங்களில் பெண்கள்" என ஆராய்ந்துள்ள எம்.ஏ.சுசீலா எழுத்தும் பெண்நிலை நோக்கு அடிப்படையில் அமையவில்லை என்றாலும் புதிய முயற்சி என்ற வகையில் கவனிக்கத்தக்க ஒன்றாக விளங்குகிறது.

பெண்கள் தங்களுக்கான இலக்கிய வரலாற்றைப் புதிதாக எழுதிக்கொள்ள வேண்டும் என்பதே பெண்நிலை நோக்குத் திறனாய்வின் அடிப்படையான கருத்தாக்கமாகும். இந்த நோக்கிலும் தமிழில் சில முயற்சிகள் நடந்துள்ளன. இராஜம் கிருஷ்ணனின் ‘‘காலந்தோறும் பெண்மை", சாந்தி சச்சிதானந்தத்தின் ‘‘பெண்களின் சுவடுகளில்" பிரேமா அருணாசலத்தின் ‘‘பத்தினித் தெய்வங்களும் பரத்தையர் வீதிகளும்(தொல்காப்பியர் முதல் சித்தர் வரை) ர.விஜயலட்சுமியின் "தமிழக மகளிர் - தொடக்க காலம் முதல் 6ஆம் நூற்றாண்டு வரை ஆகிய நூல்கள் தமிழிலக்கிய வரலாற்றைப் புதிய கோணத்தில் எடுத்துக்காட்ட முயலுகின்றன. இன்னும் "பெண் என்னும் படைப்பு சில மானிடவியல் குறிப்புகள்" (மொழிபெயர்ப்பு)பெண் - மொழி புனைவு (பஞ்சாங்கம்) இந்துப் பெண்ணியம் (சு.பரிமளம்) "தலித் பெண்ணியம் (கட்டுரைத் தொகுப்பு தலித் ஆய்வு மையம் மதுரை ப.மருதநாயகம் எழுதிய "மேலைநோக்கில் தமிழ்க்கவிதை" முதலிய நூல்களும் குட்டி ரேவதியின்"பனிக்குடம்'' இலங்கையில் இருந்து வரும் பெண் முதலிய இதழ்களும். சிறுபத்திரிகைகளில் வெளிவரும். அம்பை, மங்கை, மைதிலி சிவராமன் கனிமொழி, மாலதி மைத்ரி க்ருஷாங்கினி,அமரந்தா வெண்ணிலா, சல்மா பத்மாவதி விவேகானந்தன் அரங்க

மல்லிகா முதலியோரின் கட்டுரைகளும் தமிழ்க்சூழலில் பெண்நிலை நோக்குச் சொல்லாடல்களை வளர்த்தெடுக்கப் பயன்பட்டுக் கொண்டிருக்கின்றன.

எழுத்துலகில்தான் ஆண்களின் ஆதிக்கம் நிகரற்றுக் கோலோச்சிக் கொண்டிருக்கிறது. எனவே பேனாவைத் தூக்கும் எந்த ஒரு பெண்ணுக்கும் கூடவே பெரிய ஒரு பொறுப்பும் சுமையாகவே வந்து சேருகிறது. படைப்பதோடு, படைப்புக்கள் பற்றிய கருத்தாக்கங்களையும் உருவாக்கும் மாபெரும் சுமை அது. இதற்குப் பெண் என்ன செய்ய வேண்டும்? அம்பை கீழ்க்கண்டவாறு எழுதுகிறார்.

> ”ஒவ்வொரு பெண்ணும். இன்னொருத்தியின் கண் அடியில் கருவட்டங்களைத் தடவ வேண்டும். பிரசவக்கோடுகளில் உள்ளங்கைகளை வைக்க வேண்டும் புடைத்த நரம்புகளில் விரலை வைக்க வேண்டும் வெடித்த கால்களைக் கைகளில் ஏந்த வேண்டும்”

இவ்வாறு பெண்நிலை நோக்குத் திறனாய்வு என்பது அடிப்படையில் கலகக்குணம் மிக்கதாகவும் அதிகாரத்திற்கு எதிரானதாகவும், தலைகீழாகப் புரட்டிப் போடுவதாகவும் செயல்பட்டு ஆண்-பெண் உறவில் ஒரு புதிய வெளிச்சத்தைக் கட்டமைக்கிற முயற்சியாக அமைந்துள்ளது.

## ஒ. தலித்தியத் திறனாய்வு

தொண்ணூறுகளில் அம்பேத்கரின் நூற்றாண்டு விழாவினை. இந்தியா முழுவதும் அரசாங்கமே முன்னெடுத்துக் கொண்டாடியது.அம்பேத்காரின் எழுத்துக்களையெல்லாம் தொகுத்து மாநில மொழிகளிலும் மொழிபெயர்த்து வெளியிட்டது. விடுதலைக்கும் பின்பு அம்பேத்காரின் போராட்டத்தில் கிடைத்த இட ஒதுக்கீட்டுக் கொள்கை மூலம் படிக்க தலித்துக்கள் உருவான சூழல், ஒரு நூற்றாண்டு காலமாகச் சீர்திருத்த இயக்கங்கள் கட்டியிருந்த தலித்துகளுக்கு ஆதரவான சொல்லாடல்கள் முதலிய பலவும் சேர்ந்து தலித்துகளுக்கான அரசியலைத் தலித்துகளே கட்டமைக்கின்ற ஒரு சூழலை ஏற்படுத்தின. இத்தகைய அரசியல் விளைவுகளின் ஒரு பகுதியாகத் ‘‘தலித் இலக்கியம்” என்கின்ற ஒரு கருத்தாக்கமும் உருவாகி வளர்ச்சியடைந்துள்ளது.

வரலாறு முழுக்கப் பெண்களைப் போல அடையாளம் இல்லாமல் ஒதுக்கப்பட்டவர்கள் தலித்துகள் ஆவர். தமிழில் திருக்குலத்தார். பழந்தமிழர், ஆதி திராவிடர், தாழ்த்தப்பட்டோர், தீண்டத்தகாதோர், பறையர், பஞ்சமர், அட்டவணை இனத்தவர், சண்டாளர், புலையர் அவருணத்தார் என்றெல்லாம் அழைக்கப்பட்டு இழிவுக்கு உள்ளான மக்கள், இன்று ‘‘தலித்” என்ற அடையாளத்தின் கீழ் ஒன்று திரண்டு தங்களுக்கான விடுதலையை நோக்கிப் போராட்டத்தைக் கட்டத் தொடங்கியுள்ளனர், பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலேயே அயோத்திதாச பண்டிதர், இரட்டைமலை சீனிவாசன், எம்.சி.ராஜா, பெரியசாமிப்புலவர், பண்டிட் முனுசாமி, ஜான்ரெத்தினம், முத்துவீரப்பாவலர், திருமதி கே. சொப்பனேஸ்வரி அம்மாள் முதலியோர் மாநாடுகள் நடத்தியும் புதிதாகத் தோன்றிய பத்திரிகை உலகத்தைப் பயன்படுத்தியும் ஒன்று

திரண்டு தங்கள் விடுதலைக்கான தாகத்தை வெளிப்படுத்தினர். 1869 - 1965 வரை 14 பத்திரிக்கைகளைத் தலித்துகள் நடத்தியுள்ளனர். சூரியோதயம் (1889), பஞ்சமர் (121), திராவிடப் பாண்டியன் (1885), ஆந்திரோர் மித்ரன் (1885) மகா விகட தூதன் (1888), பறையன் (1893), இல்லற ஒழுக்கம் (1898), பூலோக வியாசன் (1900), தமிழன் (1907), திராவிட கோகிலம் (1907), தமிழ்ப் பெண் (1916), ஆதி திராவிடன், (கொழும்பு 1919), தீனபந்து (1984), தமிழன் (ஜி. அப்பாதுரை - 1925), ஆதி திராவிட மித்திரன் (1933), சமத்துவம் (1945), முதலிய பத்திரிகைகள் மூலம் தலித்துகள் தங்கள் மேல் திணிக்கப்பட்ட இழிவினைத் துடைக்க முயன்றுள்ளனர். 1925-இல் பெரியார் சுயமரியாதை இயக்கத்தைத் துவங்குவதற்கு முன்பே ‘‘சுயமரியாதை’’ என்ற கருத்தாக்கத்தை இவர்கள்தான் உருவாக்கியுள்ளனர்.

அயோத்திதாஸ் பண்டிதர் (1845-1914) தமிழ், சமஸ்கிருதம், பாலி, ஆங்கிலம் எனப்பல மொழிகள் கற்றுள்ளார். கிறித்துவம், இஸ்லாம், குறித்தும் ஆராய்ந்துள்ளார். 1870-இல் நீலகிரியில் ‘‘அத்வைதானந்த சபாவை நிறுவியுள்ளார். 1881-இல் ‘‘திராவிட மகாஜன சபாவை’’ நிறுவியுள்ளார். 1898-இல்”சாக்கிய புத்தர்கள் சங்கம்” அமைத்துள்ளார். 1891-டிசம்பர் 1இல் ஊட்டியில் திராவிட மகாஜன சங்க மாநாட்டை நடத்திப் பல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளார். இத்தகைய போராட்டங்களின் மூலம் மக்களை ஒன்று திரட்டி, சக்தியை நிலைநாட்டித் தனது மக்களுக்கான இரண்டு அரசாணைகளை அன்றே பெற்றுள்ளார். இவ்வாறு திரண்ட தலித் மக்களின் எழுச்சி என்னவாயிற்று? இடையில் தோன்றிய இந்தியத்தேசிய இயக்கம், நீதிக்கட்சி (1916), தனித்தமிழ் இயக்கம் (1916) சைவ சமய எழுச்சி, இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி (1924) சுயமரியாதை இயக்கம். ம.பொ.சி.யின் ”தமிழ்த் தேசியக்கட்சி” கிறித்துவ, இஸ்லாம் ஆகிய மதங்களின் மதமாற்ற முயற்சி, பிராமணர் உட்பட அனைத்து மேல்சாதியினரும் கட்டிய சாதிச் சங்கங்கள் முதலிய எல்லாம் சேர்ந்து தலித்துகளுக்கான இயக்கத்தைச் சிதைத்துள்ளன. இத்தகைய வரலாற்று மோசடியில் இருந்து தொண்ணூறுகளில்தான் தலித்துகள் மீண்டும் தங்களுக்கான அரசியலைத் தாங்களே தீர்மானிக்கிற முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முயற்சிக்கேற்பத் தலித் இலக்கியம், சில குறிப்பிட்ட போக்கில் தன்னை ஒழுங்குபடுத்திக் கொள்கிறது.

1. அம்பேத்காரியத்தைத் தனது தத்துவத் தளமாகக்கொண்டுள்ளது.

2.இதுவரை புனிதம் எனக் கட்டமைக்கப்பட்டுள்ள அனைத்தையும் கேள்விக்குட்படுத்துவது.

3.அதிர்ச்சியூட்டுவது.

4.கலகக்குரலை வடிவமைப்பது.

5.மீறலை முன்நிறுத்துவது.

6.மகா எடுத்துரைப்புகளைத் தவிர்ப்பது.

7.நாட்டுப்புற மரபைப் பின்பற்றுவது.

8.தலித்மொழியை. பேச்சு மொழியை முன்நிறுத்துவது,

9. சுய வரலாற்றுக் குணம் கொண்டிருப்பது,

10. தலித் இலக்கியங்களைத் தலித்துகளே எழுதுவது.

இதே அடிப்படையில்தான் தலித் இலக்கியத் திறனாய்வின் தன்மையும் அமைந்துள்ளது. தலித் இலக்கியம் தோன்றியிருக்கிற அளவுக்குத் தலித் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியடைந்திருக்கிறதா என்றால் இல்லையென்றே கூறத் தோன்றுகிறது. பிற சாதியினர் தலித் இலக்கியங்களைக் குறித்து மௌனம் சாதிக்கின்றனர். ஒன்றிரண்டு தலித் ஆதரவாளர்கள் அங்கங்கே காணப்பட்டாலும் அவர்களும் “எதற்குப் பொல்லாப்பு?” என்ற மனப்பான்மையில் தலித் இலக்கியத்தை விமச்சிப்பதையும் தவிர்த்து விடுகின்றனர். எனவே, தலித் இலக்கியங்களைத் தலித்துகளேதான் திறனாய்வு செய்கின்ற சூழல் நிலவுகிறது. இராஜ் கௌதமனின் ”தலித் பண்பாடு”, ”தலித் பார்வையில் தமிழ்ப் பண்பாடு”, ”அறம்” “அதிகாரம்”, ரவிக்குமார் தொகுத்த ”தலித் கலை - இலக்கியம் - அரசியல்” முதலிய நூல்கள் தலித் இலக்கியத் திறனாய்விற்கு எடுத்துக்காட்டுகளாக அமைத்துள்ளன. இந்த நூல்களிலும் பழைய இலக்கியங்களைத் தனித் பார்வையில் கட்டுடைத்துப் பார்ப்பதற்குக் கொடுக்கிற முன்னுரிமை, சமகால இலக்கியங்களைத் திறனாய்ந்து மதிப்பிடுவதற்குக் கொடுக்கப்படவில்லையென்பது ஒரு உண்மையாக முன்நிற்கிறது. மேலும் இந்திரன், கே.ஏ. குணசேகரன், பிலவேத்திரன், தருமராஜன், ப்ரதிபா ஜெயச்சந்திரன், உஞ்சராஜன், ராஜமுருகு பாண்டியன், விழி பா. இதயவேந்தன், அன்பாதவன் முதலியோரும் தலித் இலக்கியச் சொல்லாடல் தமிழ்ச்சூழலில் பரவுவதற்கு உழைத்து வருகின்றனர். இதுபோலவே சிவகாமி, பாமா, அரங்க. மல்லிகா முதலியோர் தலித் பெண்ணியத் திறனாய்விற்குத் தங்களுடைய பங்களிப்பை வழங்கி வருகின்றனர். பொத்தாம் பொதுவான பெண்ணியத்தைத் தாண்டி தலித் பெண் என்பவள், உயர் ஜாதியினராலும், தன் ஜாதி ஆண்களாலும் இரண்டு முறையில் கொடுமைக்கு உள்ளாக்கப்படுகிறாள் என்பதை முன்நிறுத்தித் ”தலித் பெண்ணியம்” என்ற கோட்பாட்டைத்தமிழ்ச் சூழலில் உருவாக்கியுள்ளனர். உண்மையான தலித் விடுதலை, தலித் பெண் விடுதலையில்தான் அடங்கியுள்ளது என்பதை வலியுறுத்துகின்றனர். இன்னும் பத்மாவதி விவேகானந்தன்.(தலித் இலக்கியம் ). அ. மார்க்ஸ், அ-ராமசாமி, பழமலை, க.பஞ்சாங்கம், கவிதா சரண் முதலிய தலித் ஆதரவாளர்கள் சிலரும் இத்தகைய சொல்லாடல்களில் ஆர்வமுடன் பங்கெடுத்து வருகின்றனர்.

தமிழ்த் திறனாய்வுச் சூழல் இன்றைக்கு மேற்கண்ட மூன்று பெரும்போக்குகளின் அடிப்படையில் இயங்கிக் கொண்டிருக்கிறது என்றாலும், பொத்தம் பாதுவான சில புதிய போக்குகளும் தென்படுகின்றன. அவற்றுள் குறிப்பிடத்தக்க ஒன்று, ”புதுமைப்பித்தன் இலக்கியத்தடம்” போன்று குறிப்பிட்ட சில எழுத்தாளர்கள் குறித்த பழைய திறனாய்வுக் கட்டுரைகள் தொடங்கி, இன்று வரையிலான திறனாய்வுக் கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடும்

போக்கு வரவேற்கத்தக்க ஒன்றாக விளங்குகிறது. மற்றொன்று, சமீப காலத்தில் ”பின்காலனித்துவ இலக்கியப் போக்கு” என்ற புதிய சிந்தனைகளைத் தமிழில் அறிமுகப்படுத்தும் முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கவிதா சரண் ஜுன்-2004 இதழில் வெளிவந்துள்ள பின் காலனித்துவ இலக்கியம் குறித்த கட்டுரையை பா.ஆனந்தகுமார் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்.

இவ்வாறு தமிழிலக்கியத் திறனாய்வு காலத்தின் தேவைக்கேற்பத் தன்னைப் புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது.

## தமிழில் திறனாய்வு வளர்ச்சியும் வரலாறும் - ஒரு பார்வை

தமிழில் திறனாய்விற்கு அண்மைக்கால வரலாறு உண்டு என்றும், மேலும்,திறனாய்வு என்பதற்கு இலக்கியத்தை அறியச் செய்தல், புரியச்செய்தல், இலக்கியத்தைப் பிறருக்கு கொண்டு செல்லுதல், இலக்கியத்ற்கும் வாசகனுக்கும் நடுவே இடைவெளிகளைக்குறைத்தல் என்ற பொதுவான பொருளில் திறனாய்வை நாம் எடுத்துக் கொள்ளவேண்டும். தொடக்கத்தில் எல்லா மொழிகளிலும், இத்தகைய பொதுவான பொருளில்தான்,திறனாய்வு இருந்தது என்பதனை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அப்படி அறிந்துகொண்டால், தமிழில் திறனாவிற்கு நீண்ட வரலாறு இருந்தது என்றும் அதனளவில்அதுசிறப்பாகவே இருந்தது என்றும் புரிந்து கொள்ளலாம். மேலும், தமிழில் உரைகளின் மரபும் பணியும்,அன்றைத்திறனாய்வின் பணியைச் செய்தன. இருபதாம் நூற்றாண்டில் திறனாய்வு புதிய அறிவராய்ச்சிச் சூழ்நிலையில் ஆழமும் அகலமும் பெற்றுத் தனித்திறன்களோடும், பண்புகளோடும் இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற தோற்றத்தோடும் உணர்வோடும் வளாந்திருக்கிறது என்றால் அது மிகையாகாது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் தொல்காப்பியர் காலம் முதல் இன்று வரை பல்வேறு காலகட்டங்களில் திறனாய்வு தத்தித் தளிர்நடையிட்டு வளர்ந்து வந்துள்ளது. “மிகச் சிறந்த இலக்கியம் தோன்றி வளர்ந்த தமிழ் மொழியில் என்ன காரணத்தாலோ திறனாய்வு நூல்கள் தோன்றாமல் போய்விட்டன” என்று அ.ச. ஞானசம்பந்தன் வருந்திக் கூறுகிறார் (இலக்கியக்கலை, ப.133). எனினும் முற்றிலும் நம்பிக்கையற்றுப் போய் விடக்கூடிய அளவுக்குத் தமிழில் திறனாய்வு வறண்டு போய்விடவில்லை. தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் திறனாய்வுக்கு உரிய செய்திகள் காணப்படுகின்றன என்பதை எவரும் மறுக்கவியலாது. தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்கள் என்ற பாகுபாடும் ஒவ்வோர் அதிகாரத்திலும் இயல்கள் என்ற உட்பகுப்பில் செ ய்திகளை விளக்கும் முறையும் பகுப்புமுறைத் திறனாய்வின் பாற்பாட்டவைகள் என்று கூறலாம். திறனாய்வுகள் தமிழில் ‘திறனாய்வு’ என்ற பெயரில் எழுதப்படவில்லையே தவிர, உரைகள், இலக்கணங்கள் மூலமாகத் திறனாய்வு வளர்ந்து தான் வந்திருக்கிறது. தொல்காப்பியத்தில் காணப்படும் திறனாய்வு தொடர்பான எண்ணங்கள் முன்னர் எடுத்துக்காட்டப்பட்டன. சங்க கால இலக்கியங்களிலும் இவ்வாறு நூல்களை மதிப்பீடு செய்வது தொடர்பான குறிப்புக்கள் உள்ளன. நூல்களைப் புலவர் பலர் முன்னிலையில் அரங்கேற்றம் செய்யும் மரபு காணப்பட்டதாகச் செய்திகள் அமைந்திருக்கின்றன.பண்டைத் தமிழ் நூல்களில் அமைந்திருக்கின்ற.

பதிகங்கள்,பாயிரங்கள் போல்வனவும் திறனாய்வு போன்றவை. திருவள்ளுவமாலையில் இடம்பெற்றுள்ள திருக்குறள் பற்றிய கருத்துரைகள் சங்க இலக்கியங்கள் தொகுக்கப்பட்டுள்ள முறைகளில் பொதிந்து கிடக்கும் அளவைகள் காரணங்கள் - போன்றவை பண்டைக் காலத்தில் தமிழர்களிடம் திறனாய்வுச் சிந்தனைகள் பரவியிருந்தமையைக் காட்டுகின்றன.இடைக்காலத்தில் இலக்கண இலக்கியங்களுக்கு உரை வரைந்த பெருமக்களிடமும் திறனாய்வுப் போக்குக் காணப்பட்டது என்று துணிந்து கூறலாம். தமிழில் இலக்கியத் திறனாய்வு உரையாசிரியர்களின் காலம் தொட்டுத் தொடங்கியதாக சி.சு.செல்லப்பா கூறுவதும் கவனிக்கத்தக்க செய்தியாகும். உரையாசிரியர்களான இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், சேனாவரையர், அடியார்க்கு நல்லார் முதலியவர்கள் தங்கள் உரைகளின் மூலம் திறனாய்வு வளர்ச்சிக்கு உதவினர். இலக்கியங்களைப் புகழ்ந்து திறன்களை வியக்கும் பாராட்டு முறை தடைகளை எழுப்பி விடை கூறும் பண்பு நடுவுநிலைமையுடைமை நூலாசிரியர் உள்ளக் கிடக்கையை அறிதல் மூல நூலாசிரியரை மதித்தல் போற்றுதல் ஒப்பீட்டுப் பார்வை தேவையான இடங்களில் மூல நூலாசிரியர் கருத்தை நயமாக மறைமுகமாக மறுத்துரைத்தல். குறிப்பிடப்பட்டுள்ள இப்பண்புகள் அனைத்தும் திறனாய்வாளன் ஒருவரிடம் காணத்தக்க பண்புகள் ஆகும்.

தமிழ் இலக்கிய உரைகளை குறைகளைப் பேசுவதில்லை என்பதைக் காரணம் காட்டி-பாராட்டு முறைத் திறனாய்வுக்கு உதாரணமாகக் கூறுவதுமுண்டு. ஆயின், அவை அடிப்படையில் விளக்கமுறையாக அமைவனவேயன்றிப், பாராட்டுதல் அவற்றின் நோக்கமன்று. சிறப்புப் பண்புகளையே விதந்து பேசும் நிலையே பாராட்டுமுறையில் பரவலாகக் காணப்படுகிறது.இன்று இலக்கியச் சொற்பொழிவாளர்கள், கல்வியாளர்கள் முதலியவர்களிடமும் இந்தப் பாராட்டுமுறை, பரவலாகக் காணப்படுவதைப் பார்க்கலாம். சில வகையான மேடையுத்திகள் சில விருப்பங்கள் காரணமாகவும். பக்கச்சார்புகள் விருப்புகள் காரணமாகவும் இந்தப் பாராட்டுமுறை நிறையவே இடம்பெறுகிறது. தமிழ் இலக்கிய மரபில் உரையாசிரியர்களின் அணுகுமுறை பாராட்டு முறைத் திறனாய்வு ஆகும். மூலநூலாசிரியர்களிடம் அளவற்ற மதிப்பும், ஆர்வமும் கொண்டவர்கள்தாம் உரையாசிரியர்கள், மூல நூலின் சிறப்புக்கள் அனைத்தையும் பல கோணங்களில் மிக நுட்பமாக விளக்குவது இவர்களது முறையாகும். எடுத்துக் கொண்ட இலக்கியப் படைப்பில் குறைகள் காணாமல் அதன் நிறைகளை மட்டும் விதந்து பேசும் முறைதான் பாராட்டு முறை எனப் பார்த்தோம். திருக்குறளில் வாழ்நாள் முழுவதும் ‘‘இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல்’’ (குறள் : 314) என்ற குறட்பாவிற்கு இன்று தரப்படும் பல்வேறு விளக்கங்கள் குறிப்பிடத்தக்கன. உரையாசிரியர் பரிமேலழகர்,‘‘தமக்கு இன்னாதனவற்றைச் செய்தாரைத் துறந்தார் ஒறுத்தலாவது அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிய உதவிகளைச் செய்து அவ்விரண்டையும் மறத்தல். மறவாவழிப் பின்னும் வந்து கிளைக்கும் ஆதலின், மறக்கற்பாலவாயின. அவரை வெல்லும் உபாயம் கூறியவாறு இவை மூன்று பாட்டானும் செற்றம் பற்றிச் செய்தல் விலக்கப்பட்டது’’ என்று உரை கூறுகிறார். ஒரு துறவி, தனக்குத் தீமை செய்தவனுக்கும் நன்மை செய்வதன் மூலம் அவனைத் தண்டித்தல் தகும் என்பதும் பிறன் தனக்குத் செய்த தீமை, தான் பதிலுக்குச் செய்த நன்மை இரண்டையும் மறந்துவிடவேண்டும்

என்பதும் பாடலின் கருத்து. இதனை விளக்கும் இன்றைய பேராசிரியர்கள் பலர்,''நன்னயம் செய்து விடல்'' என்பதிலுள்ள இறுதிச் சீரான 'விடல்' என்பது விட்டுவிடுதல் என்ற பொருளைக் குறிப்பதாக விளக்குவர். இவ்விளக்கத்தினால் ''விடல்'' என்ற இறுதிச் சீர் அதிக முக்கியத்துவம் பெறுகிறது

ஒரு திறனாய்வாளனபடைப்பாளிகளின் சமூகப் பார்வை எவ்வகையில் தனது ஆய்வினால் மாற்றமடையக் கூடும் என்பது பற்றியெல்லாம் சிந்தித்து ஆய்வுக்குரிய இலக்கியப் படைப்பைத் தெரிவு செய்ய வேண்டும். சான்றாக, தமிழ்த் திறானாய்வுலகில் மாற்றங்களை உருவாக்கிய ஆய்வுகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் மொழி குறித்த சுய மேன்மை உணர்வுகள் தமிழக இலக்கிய, அரசியல் உலகில் நிலவிய போது கலாநிதி க.கைலாசபதியின் தமிழ் வீரயுகப் பாடல்கள் பற்றிய ஆய்வு வெளிவந்தது' இதன் பின்னர் சங்க இலக்கியங்களைக் கண்மூடித்தனமாகப் போற்றாமல், அறிவியல் வழிநின்று சங்க இலக்கியங்களின் மேன்மையை எடுத்துரைக்கும் போக்கு தமிழ் ஆய்வுலகில் தோன்றியது. நெடுநல்வாடையில் வரும் இப்பகுதி குளிர் காலத்தின் சிரமங்களை வருணனை செய்கிறது. குளிர்காலம் வந்துற்றது' உடன் மழைபெய்து வெள்ளம் பெருக, அதனைத் தாங்க இயலாத கோவலர்கள் தாங்கள் வளர்த்துவரும் ஆனிரைகளைப் பாதுகாப்பான வேற்றிடத்திற்குக் கொண்டு செல்கின்றனர். புதிய இடம் நோக்கிச் செல்வதால் ஏற்பட்ட வருத்தத்துடன், குளிரினால் ஏற்படும் சிரமத்தை நீக்க கையில் நெருப்புக் குச்சிகளை ஏந்திக் கொண்டு பற்கள் பறை கொட்டி நடுங்கிய நிலையில் துன்புற்றனர். விலங்குகள் மேய்தல் தொழிலை மறக்கின்றன . குரங்குகள் குளிரினால் விறைத்துப் போயின. பறவைகள் மரங்களினின்று கீழே விழுகின்றன. பசுக்கள், தம் கன்றுகள் பால் உண்பான் வேண்டி மடிகளில் வாய்வைத்ததும் அவற்றை உதைத்துத் தள்ளுகின்றன. மலையும் குளிரும் வண்ணம் அமைந்திருக்கும் கூதிர்காலம் என்று நக்கீரர் வருணனை செய்கின்றார். ஒரு பருவகாலத்தின் தொடக்கத்தைக் கண்ட புலவர் அதனை ஓர் ஒழுங்கு முறைக்குட்படுத்தி அழகிய சொல்லோவியமாகத் தீட்டியுள்ளார். இதே குளிர் காலத்தை நக்கீரருக்கு முன்னும் பின்னும் நக்கீரருடனும் எத்தனையோ கோடி மக்கள் அனுபவித்திருப்பார்கள். எனினும் ஒருவர் கூட, தாம் நுகர்ந்த இயற்கைச் செயல்களை இயற்கையனுவத்தை இவ்வாறு கவிதையாகத் தீட்ட முயற்சி செய்யவில்லை.நக்கீரர் ஒருவருக்கே இது இயன்றிருக்கிறது. திறனாய்வு பெரிதும் இலக்கியப் படைப்புக்களின் வடிவ நேர்த்தியை மட்டும் மையப்படுத்துவனாக அமைந்திருந்தன இலக்கியத்தில் எவ்வகையிலும் சமூக முன்னேற்றம், முற்போக்கு பற்றிய பிரச்சாரங்கள் இருக்கக்கூடாது என்று வற்புறுத்தினார்.அவ்வகையான முற்போக்கு இலக்கியங்களை இவர்கள் பெரிதும் ஊக்குவிக்கவில்லை.

உரையாசிரியர்களுக்கு அடுத்த நிலையில் சமயவாத நூல்களும் இலக்கணவிவாத நூல்களும் மிகுதியாகத் தோன்றி திறனாய்வுப் பண்புகளை வளர்த்தன. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இலக்கிய இலக்கணங்கள் தொடர்பான கட்டுரைகளை செல்வக்கேசவராய முதலியார் மறைமலையடிகள் போன்றோர் எழுதினர்.ஆங்கிலத் திறனாய்வுக்

கட்டுரைகளின் தாக்கத்தின் காரணமாகத் தமிழிலும் கட்டுரைகள் எழுதும் போக்கு வளர்ந்தமைக்கு இவை சான்றுகளாகும். தொடர்ந்து ஆறுமுக நாவலார், விபுலானந்த அடிகள், பரிதிமாற் கலைஞர் போன்றோர் திறனாய்வுக் கலையைப் பல போக்குகளில் வளர்த்தனர். இருபதாம் நூற்றாண்டில் அடிமைத்தளையால் பிணிக்கப்பட்டிருந்த பாரத நாட்டின் பிரதேச மொழிகள் குறித்த பெருமித உணர்வு அவ்வம் மக்களிடையே தோன்றியது. இதனால் திறனாய்வுகள் தோன்றி வளர்ந்தன. திறனாய்வுக்குரிய நூல்களைத் தேடிப்பிடித்து பதிப்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வகையில் தொன்மையான இலக்கண, இலக்கியங்களான சங்க இலக்கியங்கள், காப்பியங்கள், தொல்காப்பியம் போல்வன பதிப்பிக்கப்பட்டன.இப்பணியில் பலரும் பின்னத்தூர் நாராயணசாமி ஐயங்கார், பவானந்தம் பிள்ளை, உ.வே.சாமிநாதையர் போன்றோர் அவற்றுக்கு உரைவரையும் பணி தொடங்கியது. இதில் டி.கே.சி., ந.மு.வேங்கடசாமி நாட்டார், ஔவை சு.துரைசாமி பிள்ளை, பொ.வெ.சோமசுந்தரனார் முதலியவர்கள் அருந் தொண்டாற்றினர். இவர்களுடைய உரைகளும் ஒரு வகையில் திறனாய்வுகள் போல அமைந்திருந்தன. ஆங்கிலக் கல்வி முறை அறிமுகமான பிறகு கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் இலக்கியங்களைக் கற்பிக்கும் பணியின் விளைவாகத் திறனாய்வும் தோன்றியது. செல்வக்கேசவராய முதலியார், மறைமலையடிகள், பூரணலிங்கம் பிள்ளை போன்றோரும் தெ.பொ.மீ., மு.வரதராசன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி, அ.ச.ஞானசம்பந்தன், ந.சுப்புரெட்டியார், தமிழண்ணல் போன்ற பலர் சங்க இலக்கியங்கள் காப்பியங்கள் குறித்த ஆய்வுகளில் எண்ணத் தக்கவர்கள்.

பொதுவுடைமைச் சிந்தனைகள் அரசியல் உலகில் வேர் கொண்ட பின்னர், இலக்கியத் திறனாய்விலும் இடம் பெற்றது. பண்டைய,இடைக்கால, இக்கால இலக்கியங்களைச் சமூகவியற் கண்ணோட்டத்துடன் அணுகிப் புதிய வந்தனைகளை முன்வைத்தவர்கள் என்ற வகையில் ரகுநாதன், தி.க.சிவசங்கரன், எஸ்.ராமகிருஷ்ணன்,நா.வானமாமலை, க.கைலாசபதி, சிவத்தம்பி, கோ.கேசவன், அ.மார்க்ஸ் முதலியவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள். தமிழில் அண்மைக் காலத்தில் தலித்தியம், பெண்ணியம், அமைப்பியல்வாதம், பின்னைய அமைப்பியல்வாதம், பின்நவீனத்தவம் போன்ற கோட்பாடுகள் இலக்கியத் திறனாய்வுலகில் புகுந்துள்ளன.

### திறனாய்வின் பயன்

இலக்கியம் மனித வாழ்வின் அனுபவங்களிலிருந்து கிளைத்தெழுகிறது. வாழ்க்கை அனுபவங்களைக் கலையாகப் படைக்கும் படைப்பாளி இவ்வகையில் ஒரு கருவி மட்டுமே. அனுபவங்கள் படைப்பாளி எனும் கருவி அல்லது ஊடகத்தின் வழியாக, ஒரு படைப்பாளி உருமாறி, மீண்டும் வாசகனைச் சென்றடைகிறது. ஆதாவது வாசகனின் வாழ்க்கை அனுபவம் படைப்பாளியின் மூலமாக வாசகனையே மீண்டும் சென்றடைகிறது. எனவே இதில் படைப்பாளி வாசகன் தொடர்பும் புரிந்து கொள்ளுதலுமே இன்றியமையாததாகும். இதில் திறனாய்வின் பங்கு என்ன? என்ற வினா இயல்பாக எழுகிறது. திறனாய்வினால் எந்தப் பயனும் உடனடியாக வாசகனுக்கோ படைப்பாளிக்கோ ஏற்படப் போவதில்லை என்ற கருத்து பல்லாண்டுகளாக

இலக்கிய உலகில் நிலவி வருகிறது. திறனாய்வு தேவையற்றது என்றும் அதனால் எந்தப் பயனும் விளையப் போவதில்லை என்றும் கூறுவோர் பின்வரும் காரணங்கள் சிலவற்றை முன்வைக்கின்றனர். ஒரு வாசகன் தான் விரும்பும் இலக்கியங்களை. நேரடியாகவே பயின்று கொள்ளலாம். அது குறித்துப் பிறர் தரும் வழிகாட்டுதல்கள் இலக்கியச் சுவைப்புக்கு உதவப் போவதில்லை' ஏனென்றால் கூறப்படும் கருத்துக்கள் அவரது மனநிலைக்கு உகந்ததாக இருக்கும்' அது பிறிதொரு வாசகனுக்கு ஏற்புடையதாக இருக்க வேண்டுவதில்லை. ஓர் இலக்கிய நூல் பற்றிய திறனாய்வுகள் வாசகனை மூல நூலைக் கற்க விடாமல் செய்துவிடுகின்றன' மூல நூலினைப் படிக்காமலேயே திறனாய்வு நூல்களை மட்டும் படித்து மூல நூல் குறித்த தவறான கருத்தினை ஒரு வாசகன் ஏற்படுத்திக் கொள்ளக்கூடும். திறனாய்வுகள் நடுவுநிலையுணர்ச்சியுடன் பல நேரங்களில் செயல்படுவதில்லை' திறனாய்வாளன் தகுதியற்ற நூலினைச் சிறந்த நூலாக இனங்காட்டிவிட முயற்சி செய்வதும் உண்டு. எனவே திறனாய்வு நூல்களனைத்தும் நம்பகமானவை என்று கூறிவிட இயலாது. மேற்கூறப்பட்ட காரணங்களால் திறனாய்வு என்பது தேவையற்றது என்ற கருத்து நிலவுகிறது. திறனாய்வு என்பதே கட்டி முடிக்கப்பட்ட வீடு பற்றிக் கருத்துக் கூறுவதற்குச் சமமானது' கூறுபவரின் கருத்துக்கேற்றவாறு வீட்டைத் திருத்தியமைக்க வியலாது' அதே போல எழுதி முடிக்கப்பட்ட ஒரு புதினம் அல்லது காப்பியம் குறித்துத் திறனாய்வாளர்கள் கூறும் கருத்துக்களால் எவ்விதப் பயனுமில்லை' எழுதி முடிக்கப்பட்ட ஒரு நூலைக் குறித்துத்தான் திறனாய்வு செய்யவியலும்! அதே சமயம் எழுதி முடிக்கப்பட்ட நூலைக் குறித்துக் கூறப்படும் திறனாய்வுக்கு ஏற்றவாறு அதே நூலை மீண்டும் திருத்தி எழுத இயலாது: எனவே திறனாய்வினால் எவ்விதப் பயனுமில்லை என்பது பல இலக்கியப் படைப்பாளிகள் கூட அடிக்கடி கூறும் கருத்தாகும்' வாசகர்கள் பலருக்கும் அந்த எண்ணம் உண்டு. திறனாய்வு தேவையற்றது என்று கூறப்படுவதற்கு நுட்பமான பிறிதொரு மனநிலையும் காரணமாகும். பொதுவாக மனிதர்கட்கு அவரவர் கருத்துக்களே முதன்மையாகத் தோன்றுகின்றன' மற்றவர் கருத்தினைக் கேட்கவோ புரிந்து கொள்ளவோ நாம் பல சமயங்களில் தயாராக இருப்பதில்லை' திறனாய்வு தேவையில்லை என்று கூறுவதற்கு இதுவும் ஒரு இன்றியமையாத காரணமாகும். ஓர் இலக்கிய நூலைப் பற்றிய பிறிதொருவனின் கருத்தை விட, தன் கருத்தே சிறந்தது என்று ஒரு மனிதன் கருதுவதும் திறனாய்வு தேவையற்றது என்று கூறக் காரணமாகும். திறனாய்வினால் பயன் ஏதுவுமில்லை: எனவே அது தேவையற்றது என்று ஆயிரம் காரணங்கள் கூறி வாதிட்டாலும், திறனாய்வினால் விளைந்த நற்பயன்களை ஒரு போதும் மறுக்கவோ மறக்கவோ மறைக்கவோ இயலாது. திறனாய்வும் கலைப்படைப்புக்கு நிகரானது படைப்பிலக்கியம் வாழ்க்கை அனுபவங்களினின்று பிறக்கிறது என்பது உண்மையானால், திறனாய்வும் அதே போன்று வாழ்வு அனுபவத்தினின்றுதான் பிறக்கிறது.'' உண்மையில் திறனாய்வாளனும் இலக்கிய ஆசிரியனைப் போல வாழ்க்கையைப் பற்றியே விளக்கம் தருகிறான். திறனாய்வு ஏன் தேவை? அதன் பயன்கள்தாம் என்ன? பின்வரும் காரணங்களை நுணுகி நோக்கினால் திறனாய்வின் பயனை நன்கு உணர்ந்து கொள்ளலாம். ஒரு சாதாரண வாசகனுக்கு இலக்கியத்தைக் கற்றுணரவும் நுகரவும் வேண்டும் என்ற ஆர்வத்தைத் திறனாய்வு ஏற்படுத்துகிறது. ஒரு முறை படிப்பதில் அல்லது பார்ப்பதன் மூலம் ஓர் இலக்கியப் படைப்பின்

பல தனிச் சிறப்புக்கள் நமக்குப் புலனாகாமல் தவறிப் போய்விடக்கூடும்' ஆனால் திறனாய்வைப் படிப்பதன் மூலம் தவறவிட்டு விட்டதைத் திரும்பப் பெற்றுவிடலாம். இலக்கியத்தை நன்கு கற்றுத் திறனாய்வு செய்வதன் மூலம் குறிப்பிட்ட படைப்பாளியின் ஆளுமை எத்தகையது என்று உணர முடியும். திறனாய்வின் மூலம் மட்டுமே இது இயலும்' வெற்றுவாசிப்பில் ஒரு படைப்பாளியின் ஆளுமையை உணரவியலாது. ஒரு குறிப்பிட்ட நூலைப் பற்றி ஒரு திறனாய்வாளர் மதிப்பீடு செய்து கருத்துரை வழங்கும் போது, அவன் தன் கருத்தை நிறுவுவதற்குப் பல நூல்களிலிருந்து சான்றுகள் காட்டுவார்' இதனால் ஒரு திறனாய்வு நூலைப் படிக்கும் வாசகன் ஒரே சமயத்தில் பல நூல்களைக் கற்ற பயன்களை நுகர முடியும். இலக்கியப் படைப்புக்களில் சில செய்திகள் மறைமுகமாகக் கூறப்படுகின்றன' ஒரு வாசகன் தானே அவற்றைப் படித்து நுகர்வதைவிட, ஒரு திறனாய்வாளர் கூறும் கருத்துக்களின் வழியாக அதனை நுகரவியலும்' இதனால் இலக்கிய ரசனை அல்லது இலக்கியச் சுவையுணர்வு மேம்படும். திறனாய்வாளர் கூறும் கருத்துக்களின் மூலம் ஒரு வாசகன் , புதிய நூல்களைப் பற்றி அறிந்து கொள்ளவியலும். இவ்வகையில் இலக்கியப் படைப்புக்கள் வாசகனைச் சென்றடைவதற்கும் திறனாய்வு உதவுகிறது. திறனாய்வு நூல்களைப் படிக்கும் வாசகன் ஒருவன் புதிதாக வெளிவந்துள்ள புதினம், சிறுகதை அல்லது கவிதை நூலினைப் பற்றி அறிந்து கொண்டு, அதனைப் படிக்க முயற்சி செய்யலாம். ஒருவன் எல்லா நூல்களையும் தன் வாழ்நாளில் படித்து முடித்துவிட இயலாது. ஏனெனில் கல்வி கரையில்லாதது' கற்பவர் நாட்களோ சில. எனவே ஒருவன் தான் படிப்பதற்குரிய நூல்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளத் திறனாய்வு உதவுகிறது! கற்பவை கற்க என்று வள்ளுவர் கூறுவதற்கு ஏற்றவாறு நடக்கத் திறனாய்வு ஒருவகையில் உதவுகிறது என்றே கூறலாம். மேற்குறிப்பிட்ட நன்மைகள் இலக்கியத் திறனாய்வின் பயன் என்று கூறலாம். ஆயின் இவை அனைத்தையும் விட, மிக இன்றியமையாத நன்மை திறனாய்வினால் ஏற்படுகிறது. ஒரு நல்ல திறனாய்வாளனின் எழுத்துக்கள், கருத்துரைகள் அத்திறனாய்வாளன் சார்ந்த மொழியின் இலக்கியப் படைப்புச் சூழல் முதலியவற்றைச் சிறந்த முறையில் உருவாக்குகிறது என்று கூறலாம். ஒரு படைப்பாளியின் தனித் திறன்களை வெகு சிறப்பாக எடுத்துக் கூறி, படைப்பாளிக்காக வாதிடும் வழக்கறிஞனாகவும் திறனாய்வாளன் செயல்படுகிறான். படைப்பின் இயல்புகளைச் சீர்தூக்கிக் காட்டுவதன் மூலம், குறைகளைச் சுட்டிக் காட்டுவதன் மூலம் படைப்பாளியின் எதிர்காலத்தையும் நல்ல முறையில் திறனாய்வாளன் வடிவமைக்கிறான். .படைப்பாளிக்குத் திறனாய்வு ஓர் இன்பம். பல சமயங்களில் தோழன். வாசகனுக்குத் திறனாய்வு ஒரு பரிணாமம். அவனுக்கு இந்த உலகத்தைக் காட்டும் குரு வாசகனுக்குச்.சுகமான சுற்றுலா. திறனாய்வு ஒன்றுதான் ஒரு படைப்பின் சிறப்புக்களை எடுத்துக்காட்டி ஒளிபாய்ச்சுகிறது. படைப்பைப் புரிந்து கொள்வதில் வாசகனுக்கும் திறனாய்வுதான் உதவுகிறது

## திறனாய்வாளன்- தகுதிகள்

திறனாய்வாளன் ஒருநல்ல வாசகனாகவும் பொறுப்புள்ள மனிதனாகவும் இருக்கவேண்டும்.. தான் திறனாய்வின் நடைமுறையில் முதற்பணி, தகுதியான இலக்கியத்தைத் தேர்ந்தெடுத்துக்

கொள்வதாகும். ஒரு நல்லதிறனாய்வாளன், பொறுப்புள்ள இலக்கியவாதியாகவும் ஒரு திறனாய்வாளன் என்ற உணர்வுடனும் இருக்கவேண்டும். கலை, இலக்கியம் முதலியன என்று முதன் முதலில் தோன்றினவோ அன்றே அது குறித்த மதிப்பீடுகளை உரைக்கும் முறையும் தோன்றியது என்று கூறலாம். கவிஞர் ஒருவரைக் குறித்து மற்றொருவர் உயர்வாகக் கூறியுள்ளமைக்குச் சான்றுகள் மிகுதியாகக் காட்டலாம். சேரமான் மாந்தரருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னனின் வெற்றிச் சிறப்பைப் பாட முயற்சி செய்த புலவர் பொருந்தில்இளங்கீரனார் பாடிய புறநானூற்றுப் பாடலின் கருத்து இங்குக் குறிப்படத்தக்கது, சேர மன்னனின் பெருமைகளைத் தன்னால் முழுமையாகப் புனைந்து பாடிவிட இயலாது என்றும் அத்தகைய ஆற்றலுடையவர் கபிலர் என்ற புலவர்தான் என்றும் பொருந்தில் இளங்கீரனார் குறிப்பிடுகின்றார்' அப்பாடல் வரிகள் வருமாறு-

''செறுத்த செய்யுள் செய்செந்நாவின்

வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க்

கபிலன் இன்றுளனாயின் நன்றுமன் என்ற

நின் ஆடுகொள் வரிசைக்கு ஒப்பப்

பாடுவன் மன்னால் பரிகவரைக் கடர்பே'' (புறம் : 53)

இப்பாடல் வரிகளில் கபிலரின் கவிதைத் திறன் குறித்து சேரமான் கருத்தும், அதனை அவ்வாறே ஏற்றுக் கொண்டு வழிமொழியும் புலவரின் கூற்றும் எண்ணிப் பார்க்கத்தக்கவை. இருவரின் சிந்தனைகளும் கபிலரின் புலமைத்திறம் குறித்த மதிப்பீடு என்றால் மிகையாகாது. எனவே இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழில் திறனாய்வு தோன்றிவிட்டது என்றால் அது மிகையல்ல எனலாம். ஒரு புலவரால் அவரது கவிதையைக் குறித்து ஆய்வு செய்து கூறவியலாது என்பது சாக்ரடீஸ் கண்ட முடிவு. ஆனால் கவிதையைப் படிக்கும் அறிஞன் ஒருவனுக்கு அக்கவிதையின் நுட்பங்களை எளிதாக விளக்கிக் கூறிவிட இயலும். இவ்வகையில் நோக்கும்போது படைப்பாளியைவிட, திறனாய்வாளன் மிக இன்றியமையாதவனாக இருக்கின்றான் என்று கூறலாம். ஒரு படைப்பாளி மனித வாழ்க்கை தரும் அனுபவங்களைத் தன் போக்கில் விரித்துரைக்கிறான்.இன்னவகையில் தான் படைப்பாளி தன் கவிதையை உருவாக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இல்லை. படைப்பாளி சுதந்திரமானவன. அவனது மனோதர்மமே அவனுக்கு அளவுகோல். ஆனால் திறனாய்வாளன் ஒரு கோணத்தில் படைப்பாளி போல உணர்வுத் தளத்தில் இயங்குபவனாக இருக்க வேண்டும்' அதே சமயத்தில் உணர்வுத் தளத்தில் முற்றிலும் தன்னைக் கரைத்துக் கொள்ளாமல், ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட படைப்பை நடுவுநிலைமையுடன் நின்று அறிவாராய்ச்சிக்கு உகந்தவாறு திறனறிந்து மதிப்பிடவும் வேண்டும். திறனாய்வாளன் என்பவன் கலைஞனாகவும், கலைஞனை விட, மேம்பட்டவனாகவும், ஒரே சமயத்தில் திகழ வேண்டியனவனாகிறான். எனவே திறனாய்வாளன் பணி மிகவும்

கடுமையானதாக உள்ளதென்று கூறலாம். இத்தகைய கடுமையான பணிகளும் பொறுப்பும் மிக்க திறனாய்வாளனுக்குச் சில தகுதிகள் இன்றியமையாது இருக்க வேண்டும். அவை, சரியான படைப்புக்களைத் தெரிவு செய்யும் ஆற்றல்,நடுவுநிலைமை, பன்னூற்புலமை,நுண்ணியஅறிவு, துணிவுடைமை,நூலாசிரியரின் உணர்வுகளுடன் ஒத்திசைதல், நேரடி அனுபவம் உடைமை, அறிவியல் பார்வை, இலக்கியத்தின் மதிப்பை அளந்து கூறுந்திறன், கடுமையான பணிகளும் பொறுப்பும்மிக்க திறனாய்வாளனுக்கு இத்தகைய தகுதிகள் இன்றியமையாது இருக்க வேண்டும். பரந்துபட்ட வாசகர் உலகத்தை நோக்கிக் கொண்டு செல்லும் பணியைச் செய்கின்றவன். எனவே ஒரு திறனாய்வாளன், தன் கருத்துக்கள் சமூகத்திலும் இலக்கிய உலகிலும் சில மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியவை என்ற உணர்ச்சியுடன் செயல்பட வேண்டும். எனவே ஒரு திறனாய்வாளன் ஆய்விற்குரிய நூலினைத் தெளிவு செய்வதில் தகுந்த பயிற்சியுடையனாக இருத்தல் வேண்டும். ஒரு நூலினை ஏன் ஆய்வு செய்ய வேண்டும்? இதனால் சமூக வளர்ச்சிக்கும் இலக்கிய வளர்ச்சிக்கும் விளையக் கூடிய நன்மைகள் என்ன? படைப்பாளிகளின் சமூகப் பார்வை எவ்வகையில் தனது ஆய்வினால் மாற்றமடையக் கூடும் என்பது பற்றியெல்லாம் சிந்தித்து ஒரு திறனாய்வாளன் ஆய்வுக்குரிய இலக்கியப் படைப்பைத் தெரிவு செய்ய வேண்டும். சான்றாக, தமிழ்த் திறானாய்வுலகில் மாற்றங்களை உருவாக்கிய ஆய்வுகள் சிலவற்றைக் குறிப்பிடலாம். தமிழ் மொழி குறித்த சுய மேன்மை உணர்வுகள் தமிழக இலக்கிய, அரசியல் உலகில் நிலவிய போது கலாநிதி க.கைலாசபதியின் தமிழ் வீரயுகப் பாடல்கள் பற்றிய ஆய்வு வெளிவந்தது.இதன் பின்னர் சங்க இலக்கியங்களைக் கண்மூடித்தனமாகப் போற்றாமல், அறிவியல் வழிநின்று சங்க இலக்கியங்களின் மேன்மையை எடுத்துரைக்கும் போக்கு தமிழ் ஆய்வுலகில் தோன்றியது. திறனாய்வாளன் தனது ஆய்வுக்கு உரிய நூலினை முதற்கண் தெரிவு செய்வதில் உள்ள முக்கியத்துவத்தை நன்கு உணர்த்துகின்றன.

## திறனாய்வாளனின் தலையாய பணி

- ❖ **நடுவுநிலைமை**

இந்திய வரலாற்றில் குறிப்பாகத் தமிழக வரலாற்றில் மொழியுணர்வினால் ஏற்பட்ட போராட்டங்களும் விளைவுகளும் பலவாகும். எனவே எந்தத் தனிமனிதனுக்கும் அவனது தாய்மொழியும் இலக்கியமும் உயர்வானதுதான். ஆனால் ஒரு தனிமனிதன் திறனாய்வாளனாக உருமாறும்போது முதலில் அவன் தியாகம் செய்ய வேண்டியது விருப்பு வெறுப்புணர்ச்சியைத்தான் என்று கூறலாம். தனது தாய்மொழி இலக்கியம்தான் உயர்ந்தது என்றும் பிற தாழ்ந்தனவென்றும் எந்நாளும் ஒருவன் கருதிவிடலாகாது. அனைத்திலக்கியங்களும் மனித இனத்தின் முன் பொது என்ற உணர்வுடன்தான் திறனாய்வாளன் இலக்கியத்தை அணுக வேண்டும். ஒரு திறனாய்வாளனுக்கு எத்தனையோ வகையான கருத்துச் சார்பு நிலைகள் இருக்கக் கூடும்' அவையனைத்தையும் கொண்டிலங்குகின்ற இலக்கியங்கள் தான் உயர்ந்தவை என்றும் ஏனையவை தாழ்ந்தவை என்றும் கருதிக் கொண்டு திறனாயப் புகுதல் தவறு. தனது கருத்துச் சார்புக்கு மாறான கொள்கைகளை எடுத்துரைக்கும் நூல் எனினும், அதன்

சிறப்புக்களை மறைக்காமல் எடுத்துக் காட்டுவதுதான் திறனாய்வாளனின் தலையாய பணி. **நடுவுநிலைமை** என்பது திறனாய்வாளனின் அடிப்படைத் தேவையாகும்.

- ❖ **பன்னூற் புலமை**

திறனாய்வாளன் இலக்கியத்தில் மட்டுமின்றி, மனித இன வரலாறு, மனித உணர்வுகள், மனித ஆற்றல்கள் புலப்பட்டுத் தோன்றக் கூடிய பல துறைகளிலும் புலமை பெற்றவனாக இருத்தல் வேண்டும். பல நூல்களிலும் ஆழமான பட்டறிவு உடையவனாக இருத்தல் வேண்டும். திறனாய்வுக்கு எடுத்துக் கொண்ட இலக்கியத்தின் சிறப்பை, அதற்குள்ளேயே நின்று கொண்டு விளக்குவது சிறந்த முறைதான் எனினும் சிற்சில சமயங்களில் ஒரு நூலின் சிறப்புக்களை விளக்க பிற நூல்கள் பற்றிய ஆழமான அகலமான அறிவும் தேவைதான் என்பது திறனாய்வுலகில் நிலவும் பேருண்மையாகும். தமிழ்ச் சிறுகதைப் படைப்பாளி ஒருவர் மிகவும் சிறப்பான முறையில் சமூகச் சிக்கல்களைக் கையாண்டு சிறுகதைகள் புனைந்து வருகிறார் என்று கூற வருவதை மேலும் திருத்தமுறக் கூற வேண்டுமாயின், அவரை ஒத்த ஆற்றலும் புகழும் உடைய பிற மொழிப் படைப்பாளியுடன் இணைத்துக் கூற வேண்டும். இதற்குப் பன்னூற் புலமை தேவை. கவிதைத் திறனாய்வில் சில அரிய செய்திகளைத் தெளிவாக உணர்வதற்கும் விளக்குவதற்கும் பன்னூலறிவு அவசியம் தேவை.

- ❖ **ஆழமான அறிவு**

ஒரு திறனாய்வாளனுக்குப் பல் துறைகள், பல நூல்கள் குறித்த பரந்துபட்ட அறிவு எந்த அளவுக்குத் தேவையோ அதே அளவிற்கு நுண்ணிய அறிவும் இன்றியமையாதது. நுண்ணிய அறிவென்பது ஒரு துறை பற்றிய ஆழமான அறிவாகும். ஒரு துறை பற்றிய நுண்ணறிவு என்பது சமூகத்தின் பல துறைகளில் வளர்ந்து வரும் போக்காகும். முற்காலத்தில் பொது மருத்துவர் என்ற ஒருவரே பல நோய்களுக்கும் சிகிச்சை அளித்தார். இன்று சமூக வளர்ச்சியில் கண், காது, மூக்கு, தொண்டை, வயிறு, எலும்புகள், மூளை என்றுள்ளவாறு பல உறுப்புக்களுக்கும் தனித்தனி மருத்துவர்களும் மருத்துவ அறிவும் பெருகியுள்ளமை எதனைக் காட்டுகிறது. நுண்ணறிவின் தேவை உருவாகி இருப்பதைத் தானே. சிறுகதை, புதுக்கவிதை, புதினம், நாடகம், காப்பியம் போன்ற எந்த இலக்கிய வகையை ஆராயத் தலைப்படும். திறனாய்வாளன் முதற்கண் அவ்வவ் இலக்கிய வகையின் இயல்புகள், தோற்றம்,வளர்ச்சி, வரலாற்று நிலைகள், மாற்றங்கள் முதலிய கூறுகள் அனைத்தையும் ஆழமாகக் கற்றுணர வேண்டியது அடிப்படைத் தேவையாகும். ஐக்கூ கவிதை பற்றி ஆராயத்தலைப்படுபவன் அது தொடர்பான வரலாறு, சென் புத்த சமயக் கோட்பாடுகள் முதலிய அனைத்தையும் அறிந்திருக்க வேண்டும்.

- ❖ **துணிவுடைமை**

ஓர் இலக்கியத் திறனாய்வாளன் தான் எழுதிய படைப்பை மதிப்பிடும் பணியைச் செய்பவனல்லன. பிறர் ஒருவர் படைத்த இலக்கியத்தை மதிப்பிடுபவன. தனது மதிப்பீடுகளை அறிவியல் வழிநின்று நடத்துபவன் அறிவியல் வழிநின்று செய்யப்படும் திறனாய்வில் விளையும்

கருத்து அல்லது மதிப்பீடு அனைவருக்கும் உகந்ததாக இருந்தே தீர வேண்டும் என்பதில்லை. சில சமயங்களில் முரண்பட்ட முடிவுகள், எதிர்மறை முடிவுகள் கூட வெளிப்படலாம். எனினும் திறனாய்வாளன் தான் ஆய்ந்து கண்ட உண்மைகளைத் தெளிவுபடக் கூறத்தக்க துணிவுடையவராக இருக்க வேண்டும். மக்களின் ஒரு முகமான ஏற்பினைப் பெற்ற செவ்வியல் இலக்கியங்களை ஆராயும் போதும், சில சமயங்களில் இலக்கிய ரசிகர்கள் பொது மக்கள் விரும்பாத உண்மைகள் வெளிவரக்கூடும்' அத்தகைய சூழல்களிலும் ஒரு திறனாய்வாளன் 'மக்களின் ஒருமுக அங்கீகாரத்தைப் பெற்ற நூலாயிற்றே, நாம் மாறுபட்ட கருத்தைக் கூறலாமா' என்ற தயக்கத்தைக் காட்டக் கூடாது. துணிவுடன் தான் கண்டறிந்த உண்மைகளைக் கூற வேண்டும்.

### ❖ நூலாசிரியனின் உணர்வுகளுடன் ஒத்திசைவு

இலக்கிய ரசனைக்கும் ஆய்வுக்கும் முதற்படி உணர்ச்சியடிப்படையிலான ஒத்திசைவுதான். தனக்குப் பிடிக்காத இயலாத ஒன்றினை எவ்வாறு நுகர முடியும்? ஆராய முடியும். எனவே ஒரு திறனாய்வாளன் முதற்கண் ஆய்வுக்குரிய படைப்பை உருவாக்கிய புலவனின் உணர்ச்சிகளைப் புரிந்து கொள்ள வேண்டும். சங்கப் பாடல்கள் புலப்படுத்தும் உவகை, வீரம், காதல், பிரிவு, அவலம் முதலான உணர்ச்சிகளைத் திறனாய்வு அந்தப் புலவர்களின் உணர்ச்சிகளுடன் ஒத்திசைவு கொள்ள வேண்டும்.

### ❖ இலக்கிய அனுபவம்

இலக்கியக் கலை மனித வாழ்வின் அனுபவங்களிலிருந்து பிறக்கிறது என்பதே அதன் தனிச் சிறப்பாகும். எனவே முள்ளை முள்ளால்தான் எடுக்கவியலும் என்பதைப் போல, அனுபவத்தைப் பிறிதொரு அனுபவத்தின் மூலம் தான் விளக்கவும் ஆராய இயலும் என்பது உண்மை. எனவே ஒரு திறனாய்வாளன் பரந்துபட்ட வாழ்க்கையனுபவமும் இலக்கிய அனுபவமும் உடையவனாக இருத்தல் வேண்டும். உணர்ச்சிகளை உணர்ந்து கொள்ள இதயமும் ஆராய அறிவும் ஒரு திறனாய்வாளனுக்குத் தேவை என்பது திண்ணம்.

### ❖ அடிப்படை அளவுகோல்

ஒரு திறனாய்வாளனிடம் இருக்க வேண்டிய அடிப்படை அளவுகோல் அவனது அறிவியல் பார்வைதான். அறிவியல் பார்வை என்றால் என்ன? உண்மையைக் கண்டறியும் முயற்சிக்குப் பெயர்தான் அறிவியல் பார்வை ஏனைய ஆய்வுகளில் உண்மையைக் கண்டறியும் முயற்சிகள் இல்லையா? எனில் ஏனையவற்றிலும் உண்மை காணும் முயற்சி உண்டு' எனினும் அறிவியலில் ஆய்வுக்குரிய வழிமுறையாகும் அறிவியல் அறிஞனைப் பொருத்தவரை எத்தகைய முடிவுகள் தனக்கு மகிழ்ச்சி தரக்கூடியவை என்று எதிர்பார்த்துக் கொண்டு ஆய்வைத் தொடங்க மாட்டான்' முடிவுகள் பற்றி அவனுக்கு அக்கறையில்லை. ஆராய்ச்சி முறையே அவனுக்கு முக்கியம். சோதனையின் போது அறிவியல் அறிஞன் எவ்விதமான விருப்பு வெறுப்புக்கும் தன்னை

உட்படுத்திக் கொள்வதில்லை’ அவன் நடுவுநிலையில் இருக்கிறான். இதே போல் ஓர் இலக்கியத் திறனாய்வாளனும் நடுவுநிலையில் நின்று, விருப்பு வெறுப்புகட்கு இடம் தராமல் தெளிவான ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி உண்மையைக் கண்டறியும் முயற்சியில் இலக்கியத் திறனாய்வாளன் கண்டறிந்து கூறும் மெய்ம்மைகளும் சமுதாயத்திற்குப் பயன்படக்கூடியவை தான. எனவே திறனாய்வாளனும் அறிவியல் பார்வை உடையவனாக இருக்க வேண்டும்.

### ❖ அறிவியல் பார்வை

அறிவியல் பார்வையின் கூறுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- தற்சார்பின்மை - ஆய்வு முறைகட்கு முதன்மை தருதல்
- உண்மை தேடல்
- முடிவுகள் குறித்த விருப்பு வெறுப்பின்மை
- திறந்த உள்ளம்
- தனது முடிவே இறுதியானதென்று பிடிவாதம் செய்யாமல்
- தருக்க ரீதியாக உணரும் போது மாற்றுக் கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளுதல்
- தனது சோதனை முடிவுகள் தவறென்று தெரிய வரும் சூழ்நிலைகளில் அவற்றை மாற்றிக் கொள்ளத் தயங்காமை.

இக்கூறுகள் ஓர் அறிவியல் ஆய்வாளனிடம் காணப்படுகின்றன. இவற்றை இலக்கியத் திறனாய்வாளனும் பெற்றிருக்க வேண்டும்.

### ❖ இலக்கிய மதிப்பை அளந்து கூறுதல்

இலக்கியத்தைப் பரவலாக வாசகர் மட்டத்திற்குக் கொண்டு செல்ல விரும்பும் ஒரு திறனாய்வாளர், குறிப்பிட்ட இலக்கியப் படைப்பில் மதிப்பினை உணர்ந்து எடுத்துக் கூற வல்லவனாக இருக்க வேண்டும். மேலை இலக்கியத் திறனாய்வாளரான ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் ஒரு திறனாய்வாளன் மதிப்பிடுவதில் வல்லவனாக இருக்க வேண்டும் என்பதை வற்புறுத்துகின்றார். “மதிப்பை அளந்து கூறுதல் என்றால் என்ன? இலக்கியத்தின் கற்பனை எத்தகையது உணர்ச்சி எத்தகையது, அமைந்த சொற்களும் ஒலி நயமும் எத்தகையன என்பனவற்றை ஆய்ந்து மதிப்பிடல் வேண்டும்” என்று மு.வரதராசனார் கூறுகிறார். சுருங்கக் கூறுவதாக இருந்தால், ஓர் இலக்கிய ஆசிரியன் தான் கூற விழைந்த செய்தியை அப்படைப்பில் திறம்படக் கூறியுள்ளாரா என்று காணுவதே மதிப்பிடுதலின் அடிப்படைக் கூறாகும். சிறுகதை, கவிதை, புதினம், நாடகம் என்ற எந்த வடிவத்தில் ஒரு படைப்பு அமைந்திருந்தாலும், அது உணர்த்த விரும்பிய செய்தியை வாசகனுக்கு உணர்த்தி விட்டால் போதும்’ அது வெற்றிகரமான இலக்கியப் படைப்பு என்று கூறலாம் என்று ஜெயகாந்தன் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ள செய்தியும் இங்கு எண்ணத்தக்கது. ஒரு திறனாய்வாளன் தன் சார்பு நிலைக்கு மாறான கருத்தை ஒரு படைப்பில் காணநேர்ந்தாலும், அதனையும் மதிப்பிட்டு விளக்குவதே அவன் கடமை’ தனக்குப் பிடிக்காத கருத்து என்று

அதனை ஒதுக்கிவிடக் கூடாது' அக்கருத்தையும் அப்படைப்பாளி தக்க உவமை, உருவகங்கள், சொல்வளம் முதலியவற்றைப் பயன்படுத்தி ஆற்றலுடன் கூறி இருக்கிறாரா என்பதைத் தான் அளந்து மதிப்பிட்டுக் கூற வேண்டும். இதனை, "குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல்" (குறள், 504) என்ற குறட்பாவும் இதே கருத்தை நமக்கு உணர்த்துகிறது. ஒரு நல்ல திறனாய்வாளன் என்பவன் இலக்கியத்தைத் தேர்வு செய்வதில் ஆற்றலுடைமை, நடுவுநிலைமை, பன்னூற்புலன், பிற துறையறிவுடைமை, நுண்ணிய அறிவுடைமை, துணிவுடைமை, உணர்ச்சி ஒத்திசைவு, அனுபவமுடைமை, அறிவியல் பார்வை, இலக்கியத்தை அளந்து மதிப்பிடும் திறன், வலிந்து கருத்துக்களைத் திணித்துக் கூறாமை, இலக்கியப் படைப்பை அதன் சூழலில் வைத்துக் காணுதல் பகுத்தறிவும் திறனுடைமை முதலான பண்புகளும் தகுதிகளும் உடையவனாக இருத்தல் வேண்டும்.

## திறனாய்வின் பயன்

மதிப்பின் விளக்கம் உணர்த்துதல் விளக்கம் ஆகிய இவ்விரண்டை ஒட்டி திறனாய்வு அமைவதாகும். இவ்விரண்டையும் திறனாய்வுக் கொள்கையின் இரண்டு தூண்கள் என்பார் ஐ.ஏ.ரிச்சர்ட்ஸ் இலக்கியத்திற்கும் அதன் திறனாய்வுக்கும் அடிப்படையில் வேற்றுமை இருப்பது போலத் தோன்றலாம். ஆனால் கூர்ந்து ஆராயின் இரண்டிற்கும் அடிப்படையில் வேறுபாடின்மையை உணரலாம் இலக்கியம் வாழ்க்கையில் நம்மை கவருகின்றவற்றில் இருந்து தோன்றுகிறது. மனிதனின் ஆளுமை (Personality) வாழ்வில் முக்கியமான ஒன்றாகும். அவ்வாளுமையே நம்மைப் பெரிதும் கவர்கின்றது. ஓர் இலக்கியத்தை ஆய்வு செய்யும் திறனாய்வாளன் அவ்விலக்கியத்தைப் பல கோணங்களில் ஆய்ந்து அவற்றினின்றும் அவ்விலக்கிய ஆசிரியனின் ஆளுமையைப் புலப்படுமாறு செய்கிறான். எனவே உண்மையில் திறனாய்வாளனும் இலக்கிய ஆசிரியனைப் போலவே வாழ்க்கையைப் பற்றிய விளக்கம் தருகிறான். நாம் வாழ்நாளில் சிறந்த இலக்கியங்கள் அனைத்தையும் படிப்பதென்பது இயலாததாகும். இந்நிலையின் அச்சிறந்த இலக்கியங்களைப் பற்றித் திறனாய்வாளர்கள் தரும் சுருக்கமான விளக்கங்களைப் படித்துணர்வது நமக்குப் பெரும் பயன் அளிக்கும். பத்தாயிரம் பாடலுக்கு மேற்பட்ட கம்பராமாயணம் முழுமையும் பலராலும் படிக்க இயலாது. அதற்குப் பதிலாக வா.வெ.சு.ஐயர் எழுதிய கம்பராமாயண ஆராய்ச்சியைப் படித்தால் கம்பராமாயணம் முழுமையும் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். எனவே கவிஞனைப் பற்றியும் அவர்களின் 18 இலக்கியத்தைப் பற்றியும் அறிந்து கொள்வதற்குத் திறனாய்வு நூல்களை கற்பதால் பயனில்லை என்பது பொருத்தமாகாது. திறனாய்வின் உண்மையான பயனை நாம் மறக்க இயலாது. திறனாய்வின் பணியினை மறுப்பதென்பது மற்றவருடைய ஆழ்ந்த அனுபவமும் உயர்ந்த அறிவும் நமக்குப் பயன்படாது என்பதற்கு ஒப்பாகும். ஓர் இலக்கியத்தைப் பற்றி அறிவினை ஒட்டி உணர்ச்சி வயமாக்குவது திறனாய்வின் தலை சிறந்த பணியாகும். உண்மையான திறனாய்வாளன் தான் திறனாயும் இலக்கியத்தைப் பற்றிய ஆழ்ந்த அகன்ற அறிவு சான்றவன். அவனுடைய அறிவும் அனுபவமும் பன்மடங்கு மிகுதியானவை அவன் இலக்கியத்தை ஊடுருவி நோக்கும் திறனும் அவ்விலக்கியத்தின் நுட்பமான பொருளை ஓர்ந்துணரும் பான்மையும்

உடையவன். இலக்கியத்திற்கு விளக்கம் தரப்புகும் திறனாய்வாளனின் முயற்சிகள் பலவாகும் அவை

1.ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூலினை அவன் ஊடுருவி நோக்க வேண்டும்.

2.இலக்கியத்தின் ஆற்றல், அழகு ஆகிய முதன்மையான தன்மைகளைப் பிரித்தெடுத்து விளக்க வேண்டும்.

3.இலக்கியத்தின் நிலையான கூறுகளையும், நிலையற்ற கூறுகளையும் பாகுப்படுத்தி உணர்த்துதல் வேண்டும்.

4.இலக்கியத்தின் பொருளை தெளிவாக விளக்குதல் வேண்டும்.

5.இலக்கிய ஆசிரியனுக்குத் தெரிந்தும் தெரியாமலும் அவன் இலக்கியத்துள் அமைந்துள்ள இலக்கிய விதிகளையும் நீதிகளையும் திறனாய்வாளன் தெளிவுப்படுத்துதல் வேண்டும்.

6.இலக்கியத்தில் குறிப்பாக உள்ளவற்றை திறனாய்வாளன் விளக்கமாக எடுத்துரைத்தல் வேண்டும்.

7.இலக்கியத்தின் பல பகுதிகளிடையே ஒன்றுக்கொன்றுள்ள தொடர்பையும் ஒவ்வொரு பகுதியும் முழுமையான இலக்கியத்தோடு கொண்டுள்ள தொடர்பையும் தெளிவுப்படுத்த வேண்டும்.

8.இலக்கியத்தில் அங்குமிங்கும் உள்ள கூறுகளைத் தொகுத்து அக கூறுகளுக்குரிய வாயில்களைக் கண்டு படித்து அவற்றின் தனித் தன்மைகளை விளக்குதல் வேண்டும்.

இவ்வாறு திறனாய்வாளன் பல வகையாக இலக்கியத்தை விளக்கி அதன் பொருள், உணர்ச்சி, கலைத்திறன் ஆகியவைகளைப் புலப்படுத்தி அவ்விலக்கியமே அதன் தரத்தை உணர்த்துமாறு செய்தல் வேண்டும். அவன் அந்நூலின் தரத்தையோ, மதிப்பையோ எடுத்துக் கூறுதல் கூடாது. மேலும் திறனாய்வாளன் தன் பணியில் தனக்கேயுரிய விளக்க நெறியாக

1.தன் ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட நூலியேயே தன் ஆய்வு முழுமையும் செலுத்தி அந்நூலின் தன்மைகளை விளக்கலாம்.

2.இலக்கிய ஆசிரியனின் ஏனைய நூல்களோடு தொடர்புபடுத்தி விளக்கலாம்.

3.ஆய்வு செய்யும் இலக்கியத்திற்கும் மற்ற இலக்கியங்களுக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை ஆய்ந்து விளக்கம் கூறலாம்.

4.வரலாற்று முறை விளக்க விதிகளுக்கேற்ப இலக்கியத்தை ஆய்வு செய்யலாம்.

எந்த முறையை மேற்கொண்டாலும் படிப்பவர்க்கு இலக்கியத்தை நன்கு உணர்த்துவதற்குத் தான் உதவி செய்ய வேண்டும் என்பதை அவனுடைய முக்கிய நோக்கமாகக் கொள்ள

வேண்டும். திறனாய்வாளன் தன்னுடைய கருத்துக்கும் சுவைக்கும் ஏற்ப இலக்கியத்தைப் பற்றிய திட்டமான முடிவினைக் கூறுதல் கூடாது

## பயிற்சி வினாக்கள்

### குறுவினாக்கள்

1.இலக்கியத் திறனாய்வு வரையறுக்க.

2.திறனாய்வின் வகைகளை எடுத்துரைக்க.

3.விதிமுறை திறனாய்வு விளக்குக.

4.விளக்க முறைத் திறனாய்வு விளக்குக

5.மதிப்பீட்டு முறைத் திறனாய்வு விளக்குக

6.வரலாற்றுமுறைத் திறனாய்வு விளக்குக

7.படைப்பு முறைத் திறனாய்வு விளக்குக

8.செலுத்து நிலை திறனாய்வு விளக்குக

9.திறனாய்வின் பயன் குறித்து எழுதுக.

10.மூல பாடத் திறனாய்வு விளக்குக.

### கட்டுரை வினாக்கள்

1.திறனாய்வாளனின் தலையாயப் பணியை எடுத்துரைக்க.

2.திறனாய்வாளனின் தகுதிகளை எடுத்துரைக்க.

3.உரையாசிரியர்களின் திறனாய்வு பங்களிப்பை விவரி.

4.ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு விளக்குக.

5.வாழ்க்கை வரலாற்றுமுறைத் திறனாய்வு விளக்குக.

6.பாராட்டு முறைத் திறனாய்வு விளக்குக.

7.அறிவியல் முறைத் திறனாய்வு விளக்குக.

8.சமுதாயவியல் திறனாய்வு விளக்குக.

9.இக்காலத் திறனாய்வு குறித்து கட்டுரை வரைக.

10.இடைக்காலத்தில் திறனாய்வு நிலையினை எடுத்துரைக்க.

அலகு:4

# இலக்கியத் திறனாய்வு - விளக்கமும் வகைகளும்

## இலக்கியத்திறனாய்வு - விளக்கம்

திறனாய்வு, விமரிசனம் என்னும் இரு சொற்களும் இலக்கிய ஆய்வில் பயன்படுத்தப்படுகின்றன. இலக்கியத் திறனாய்வு என்பது இலக்கியத்தின் திறனை ஆய்தல் என்னும் பொருளில் பயன்படுத்தப்படுகிறது. இந்தச் சொல்லை முதன்முதலாகக் குறிப்பிட்டவர் பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தம். அவர் தம்முடைய “இலக்கியக் கலை“ என்னும் நூலில் இச்சொல்லைப் பயன்படுத்தி இருக்கிறார்

ஆங்கிலத்தில் Critie, Criticism என்னும் இருசொற்கள் பயன்படுத்தப்படுகின்றன, பிரான்சிஸ்பேக் (Francis Faccon 1605) என்பவர் தம்முடைய கட்டுரை ஒன்றில் Critic என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளார். அதுபோல ஊசவைைஉைைஅ என்பது ஜான்டிரைடன் (John Dryden) என்னும் கவிஞரால் பயன்படுத்தப்பட்டுள்ளது. தமிழில் விமரிசனம் என்ற சொல்லை 1944 இல் ஆ.முத்துசிவன் முதலில் பயன்படுத்தினார் ஆங்கிலேயர்கள் தம்முடைய இலக்கியச் சிறப்பை வெளிப்படுத்தக் கையாண்ட முறைகளுள் இது முக்கியமானதாகும்.கிரேக்கச் சொல்லான கிரிட்டிகோஸ் (Kritikos) என்னும் சொல்லிலிருந்து Criticism என்னும் சொல் ஆங்கிலத்தில் உருவாக்கப்பட்டது. Kritikos என்பதன் பொருள் முடிபு கூற முடிந்த ஒன்று எனபர். ஒன்றை நடுநிலையோடு கவனித்துக் கூறப்படும் அமைத்தும் திறனாய்வு என்றும் அதனைச் செய்யும் அவர்களைத் திறனாய்வாளர்கள் என்றும் கூறுவர். (The word Criticism has been derived from the Greek word Kritikos" which means able to discern and judge and whoever does the act of judeging is called a critic).இலக்கியம் பற்றிய நடுநிலைப் பதிவை வழங்கும் ஓர் இலக்கியம் தான் திறனாய்வு என்று ஹட்சன் கூறுகின்றார்.

திறனாய்வு என்று ஹட்சன் கூறுகின்றர். திறனாய்வு என்பது குற்றம் காண்பதோ, உண்மை, பொய் என்பதை அறிவதோ, கறார்த்தன்மையாகப் பேசுவதோ அன்று. எடுத்துக் கொள்ளப்பட்ட கருத்தை அல்லது தகவலைப் பகுத்துப் பார்ப்பது ஆகும். தமிழ் உரையாசிரியர்கள் நல்ல திறனாய்வாளர்களே என்பர். கவிதைக்கு உள்ளே வெளிப்படுத்துவதுதான் திறனாய்வின் மறைந்து வேலை. கிடப்பதை 1948-களில் தொ.மு.சி.ரகுநாதன் “இலக்கிய விமரிசனம்“ என்ற நூலை எழுதினார். க.நா.சு. விமரிசனக் கலை என்னும் நூலை எழுதினார். இவர்கள் இருவரும் கவிதைக் கருத்துக்களை விளக்குவது திறனாய்வு எனக் குறிக்கின்றனர்.” இலக்கிய ஆராய்ச்சி, “இலக்கியத் திறனாய்வு“ என்ற பெயரில் இப்போது எங்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மு.வ.என்ற நூலை

40-களில் எழுதியுள்ளார். பதினெட்டு, பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைத் திறனைய்வுக் காலம் என்பார்-இலக்கியத் திறளாய்வு என்பது பின்வருமாறு விளக்கப்படுகிறது, 1.இலக்கியங்களில் காணும் உவமை, உணர்ச்சி, கற்பனை, வடிவம். பொருள் முதலியவற்றைக் கொண்டு இலக்கியக் கொள்கைகளை உருவாக்குவது. 2. இலக்கியத்தின் பொது மற்றும் சிறப்பைக் காணுவது. 3.இலக்கியம் வாழ்க்கைகாகவா? கலை இன்பத்திற்காகவா என்றாய்வது. 4. இலக்கியத்தை நுகரும் முறை கூறி நுகர்வோனுக்குரிய அடிப்படைத் தகுதிகளை வகுத்தல். 5. படைப்போன் நுகர்வோன் இருவருக்குமுள்ள இடைவெளி குறைவு என்பதை உணர்த்தல், 6. இலக்கியங்களை மேலும் படைக்கத் தூண்டுதல் ஆகியன ‘இலக்கியத் திறனாய்வு“ என்பதற்கு விளக்கமாகஅமைகின்றன.இலக்கியம் சிறந்ததா? சிறப்பற்றதா எனக் கண்டறிவதும் இலக்கியத் திறனாய்வு என்றும் கூறலாம். மிகச் சிறந்த இலக்கியங்களை அறிந்து கொள்ளத் திறனாய்வு வழி செய்கிறது. வ.வே.சு. ஐயர் எழுதிய ”கம்பராமாயண ரசனை“ (Kanbaramayanam - A study) அந்த வகையில் குறிப்பிடத்தக்க நூல்,

## திறனாய்வுகளின் வகைகள் (Methods of Criticism)

இலக்கியத்திறனாய்வில் முறைகள் பல மேற்கொள்ளப்படுகின்றன. இவை யாவும் மேலைநாட்டுத் திறனாய்வு முறைகளாக அமைகின்றன. அவையாவன: 1. விதிமுறைத் திறனாய்வு 2.விளக்கமுறைத் திறனாய்வு 3. மதிப்பீட்டு முறைத் திறனாய்வு (முடிவு முறைத் திறனாய்வு) 4. வரலாற்றுமுறைத்திறனாய்வு 5. படைப்பு வழித்திறனாய்வு 6. மரபு வழித் திறனாய்வு 7. முருகியல்முறைத் திறனாய்வு (அழகியல்) 8. மூலபாடத் திறனாய்வு 9. ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு 10. வாழ்க்கை வரலாற்றுத் திறனாய்வு 11. பாராட்டு முறைத் திறனாய்வு 12. ரசனை முறை அல்லது அழகியல் திறனாய்வு 13. அறிவியல் முறைத் திறனாய்வு 14. சமுதாயவியல் திறனாய்வு 15, உளவியல் அணுகுமுறை 16. மொழியியல் அணுகுமுறை 17. உருவவியல் திறனாய்வு 18. அமைப்பியல் திறனாய்வு 19. அறநெறி அணுகுமுறை 20. மார்க்சியத் திறனாய்வு 21. தொல் படிமவியல் அணுகுமுறை 22. இலக்கியவகை -ஆய்வு 23, தத்துவநெறி ஆய்வு 24. தலித்திய ஆய்வு 25, பெண்ணியத் திறனாய்வு முதலான பல திறனாய்வு முறைகள் காணப்படுகின்றன.

## விதிமுறைத் திறனாய்வு (**Inductive criticism**)

விதிகள் சிலவற்றை வைத்துக் கொண்டு அவற்றின் அடிப்படையில் இலக்கியத்தைத் திறனாய்வு செய்வது விதிமுறைத் திறனாய்வாகும். ஆங்கிலத்தில் “ஐனெரஉவளைந உசவைைஉளைஅ“ என்று இதனைக்குறிப்பிடுவர். இது பகுப்பு முறைத் திறனாய்வு (Analytical criticism),அறிவியல் முறைத் திறனாய்வு (Scientific criticism) விஞ்ஞான முறைத் திறனாய்வு என்னும் பெயர்களால் குறிப்பிடப்படுகின்றது. அறிவியலைப் போல இலக்கியமும் பகுத்தாய்ந்து செய்யப்பட்ட வேண்டும் என்று இக்கொள்கையினர் கூறுகின்றனர்.இக்கால விஞ்ஞான வளர்ச்சியின்

பயனாக இம்முறை தோன்றியது. இலக்கியத்தின் தன்மைகளை அறிவியல் ஆய்வினைப் போல உள்ளதைப் உள்ளபடிக் கூறுவது இது. இலக்கியம் தோன்றுவதற்கான விதிமுறைகளைக் கண்டறிவதும் இதுவாகும்.

அகநானூற்றை ஆய்வு செய்யும் ஒருவர் ஏற்கெனவே சமூகத்தில் உள்ள கற்புநெறிக்கோட்பாடுகளை அல்லது தொல்காப்பியர் சமூக நெறிமுறைகளை வைத்துக் கொண்டாராய்தல் இம்முறையாகும். ”சங்க இலக்கியத்தில் தோழி“ என்னும் பொருளில் ஆய்வு மேற்கொள்ளும் ஒருவர் தோழிக்குரிய பண்புகளாகத் தொல்காப்பிய விதிமுறைகள் அல்லது இயல்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு செய்வதாகும். இதனை Perspective criticim' என்றும் கூறுவர். இதனை ‘‘இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் காணல்“ என்ற மனப்பான்மை கொண்டது இது என்றும் இது உரையாசிரியர்களிடம் பரவலாகக் காணப்படுகிறதென்றும் கூறுவர் தூது இலக்கியம் படைக்கும் ஆசிரியர் தூது செய்யப் பயன்படுத்தப்பட்டபொருள்களையே தம் இளக்கியத்தில்பாசன்படுத்த வேண்டும். புதிதாக ஒன்றைக் கூறக்கூடாது.

இத்திறனாய்வு காலத்தால் முந்தியது. இங்கிலாந்தில் எலிசபெத் ராணியார் காலத்தில் வெகுயாகப் பரவியது. இலக்கியம் படைப்பது கூட விதிகளுக்கு உட்பட்டு அமைய வேண்டும் என்பது இது. யாப்பிலக்கணத்தில் பாடல் செய்வதும் கோவை இலக்கணத்தில் அடிப்படையில் தஞ்சைவாணன் கோவை பாடியிருப்பதும் இவ்விதியில் அடங்கும். இதில் இலக்கியப் படைப்பாளி முதன்மை பெறுவதில்லை. படைப்பே முதன்மை பெறுகிறது.

செலுத்து நிலைத் திறனாய்வும் (Inductive criticism) விதிமுறைத் திறனாய்வே ஆகும். இம்முறையில் உயர்வு தாழ்வு எதையும் கற்பிக்கக் கூடாது. “பெரியோரை வியத்தலும் இலமே. சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே” என்பது போல நடுவு நிலையுடன் உள்ளதை மட்டுமே கூறுவது இத்திறனாய்வாகும். அரிஸ்டாட்டில் வகுத்த காப்பியஇலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு பின்னர் வந்த காப்பியங்களை மேலைநாட்டினர் ஆய்ந்தனர். இலக்கியம் புதிது புதிதாகத் தோன்றுகிறது. இவற்றை ஆராயும் போது பழைய விதிகளைப் பயன்படுத்துவது தவறு என்று சிலர் இதனை எதிர்த்தனர். டாக்டர் ஜாண்சன் (Johnson), மில்டன் (Milton) எழுதிய சொர்க்கநீக்கத்தை (Paradaise lost) குறை கூறினார். இது பழைய விதிகளைக் கொண்டு அமைக்கப் பெற்றது என்றார் அவர்.சுயமாக எதையும் செய்யாமல். ஒரு விதியைப்பற்றிக் கொண்டிருக்கும் இறுக்க மனப்பான்மையை இது உண்டாக்குகிறது. என்பது சிலர் கருத்து.

## விளக்கமுறைத் திறனாய்வு (Descriptive Criticism)

ஆய்விற்கு எடுத்துக்கொண்ட இலக்கியத்தில் காணப் பெறும் பல்வேறு கூறுகளைத் தனித்தனியே எடுத்துத் தொகுத்து அவற்றை விளக்குவது விளக்கமுறைத் திறனாய்வாகும். இம்முறையில் இலக்கியச் சுவையும் நயமும் விளக்கப்படுகின்றன. சுவை என்பது நகை முதலிய மெய்ப்பாடுகளைக் குறிக்கும். திருக்குறளை ஆய்வு செய்யும் ஆய்வாளர் அதன்கள்

இடம்பெற்றுள்ள உவமைகள், அணிகள். உருவக முறைகள், உணர்ச்சிப்பாடு, கருத்து வெளியிடப்பட்டுள்ள முறை இயக்கிய நயம் எனப் பலவகைப் போக்குகளையும் விளக்குதல் வேண்டும். இலக்கியத் திறனாய்வில் அதிகம் பின்பற்றப்படும் முறை இது. இதன் அடிப்படையில் இலக்கண நூல்களையும் ஆய்வு செய்யலாம். இலக்கிய உத்தி உருவம் (வடிவம்) போன்றவைகளும் இம்முறையில் ஆராயப்படுகின்றன. சொல்லாட்சிகள், வருணிப்பு முறைகள், பின்னணிகள் எனப் பல இலக்கியக் கூறுகளும் இத்திறனாய்வின் மூலம் விளக்கப்படுகின்றன. ஆய்வுமுறையில் இது எளிதானதாக உள்ளது.

இதன் அடிப்படை, இலக்கியத்தை வாசகன் நன்கு புரிந்து கொள்ள வேண்டும் என்பது புரிந்து கொண்டால்தான் அதனை விளக்க முடியும். திருக்குறள் போன்ற நூல்களுக்கு உரை எழுதுவோர் இலக்கியத்தை நன்கு புரிந்து கொண்டு எந்தெந்த இடங்கள் வாசகர்கட்குப் புரியாமல் ஐயமளிக்குமோ அந்த இடங்களில் அதிக விளக்கம் தருகின்றனர். உரையாசிரியர்களில் பல விளக்கமுறைத் திறனாய்வை அடிப்படையாகக் கொண்டுள்ளனர். ஏனெனில் அவர்கள் புரிந்து கொண்டதை மற்றவர்களுக்குச் சரியாக விளக்க வேண்டும் என்ற உணர்ச்சி அவர்களிடம் உள்ளது. இக்கால எம்.ஏ., எம்..ஃ.பில்., முனைவர் பட்ட அமைகின்றன.

இலக்கியத்தைப் புதிய சூழலுக்கேற்றவாறு விளக்க வேண்டியுள்ளது. எனவே இதனால் இது இப்பொருள் உடையது எனக் காரணமும் விளக்கப்பட வேண்டியுள்ளது. ஒரு பொருளைச் சரியாகப் புரிந்து கொள்ளவோ அல்லது மேலும் அதனைக் கூடுதலாக அறிந்து கொள்ளவோ உதவுகிற வகையில் அந்தப் பொருளை வேறு சொற்களில் (Rc.Phasing) மீளவும் சொல்லுதல் இம்முறையாகும். இதுவே விளக்கமுறை (Interpretation) ஆகும். இதனைப் புலப்பாட்டுத் திறனாய்வு என்றும் கூறுவர். விளக்கமுறை ஆளுக்கு ஆள் மாறுபடுவது. ஓர் இலக்கியத்திற்குப் பலரும் பலவிதமான விளக்கத்தைத் தருவர், எனினும் அது பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். குறிப்பாகவும், படிமமாகவும் சொல்லப்பட்டுள்ள கருத்தைத் திறனாய்வாளன் இதில் அரிது முயன்று விளக்குகிறான். இதனால் படைப்பாளனுக்கும் வாசகனுக்குமுள்ள இடைவெளி குறைகிறது. விளக்கமுறைத் திறனாய்வாளரின் அறிவாற்றல், மொழிப்புலமை, நுணுகிப் பார்க்கும் தன்மை ஆகியவை புலனாகின்றன. தமிழிலும் ஆங்கிலத்திலும் இம்முறை அகமாகப் பின்பற்றப்படுகிறது.

ஆங்கில இலக்கியத் திறவாய்வாளர் டிரைடன் (Dryden) விளக்கமுறைத்திறனாய்வின் தந்தை என்பர். உளவியல் பகுப்பாய்வில் விளக்கமுறைத்திறனாய்விற்கு.ஃபிராய்டு (Frcnud) அதிக முதன்மை தந்து பேக்கிறார். விளக்கமுறைத் திறனாய்வு இலக்கியத்தின் பொருளை இலக்கியத்தின் பல்வேறு பட்ட பண்புகளைத் தெளிவுபடுத்துகிறது. இது வெறுமனே பதவுரை, பொழிப்புரை மாதிரியான விரியுரையன்று, புதியன தோற்றுவிக்கும் ஆற்றல் படைத்ததாகவும் குறிப்பிட்ட இலக்கியத்தின் தன்மைகளையும் வெளிப்படுத்துகின்ற திறன் பெற்றதாகவும் அமைகிறது. விளக்கமுறையின் தன்மைகளும் பாணியும் இலக்கிய அணுகு முறைகளின்

தன்மைகளுக்கு ஏற்பட அமையவதுண்டு. இவ்வாறியறிப் பொத்தாம் பொதுவான முறையிலும் இலக்கிய விளக்கம் அமையக் கூடும்

## மதிப்பீட்டு முறைத் திறனாய்வு (Evaluative criticism)

இலக்கியச் சிறப்பையும் நுண்மையையும் கண்டறிய இம்முறை பயன்படுகின்றது. குறிப்பிடத்தக்க மதிப்புகள் (Values), சிறப்புக்கள் (Distinction) இலக்கியத்தில் எந்நிலையில் அமைத்துள்ளது எனக் கண்டறிய இது உதவுகிறது. இலக்கியத்தின் அழகியல் தன்மை (Aesthetic quality) இதன்மூலம் கண்டறியப்படுகிறது. இலக்கியத்தில் எவை சிறந்த கருத்துக்களோ அவற்றை வெளிப்படுத்திக் கூறுவது இம்முறையாகும். ஒழுக்கம் (Morality) முதலிய தனி மனித உணர்வுகள் இம்முறையில் விளக்கப் பெறுகின்றன. திறனாய்வு என்பது மதிப்பீடு எனக்கூறப்படினும் ஒரு கலைப்படைப்பின் தகுதியையும் குறிப்பிடத்தக்க சிறப்பியல்புகளையும் ஆராய்ந்து மதிப்பிடு செய்வது எனக் கொள்ளல் வேண்டும்.

இலக்கண விதிகளை மட்டும் கொண்டு மதிப்பிடாமல் தனிமனித ஒழுக்கம் சொ்ந்த உணர்வுகள் ஆகியவை. இதன்கன் அடிப்படையாகக் கொள்ளப்பட்டு ஆராயப்படுகின்றன. இதன் முக்கிய அம்சம் ஒருகலைப்படைப்பின் தகுதியையும் குறிப்பிடத்தக்க சிறப்பையும் மதிப்பீடு செய்வதாகும்

பாரதியார் பாடல்களில் தேசியச்சிந்தனைகளை மதிப்பீடு செய்தல், பெண்கள் குறித்த சிந்தனைகளை ஆய்தல் போன்றவை இதில் அடங்கும். அழகியல் உணர்ச்சிகள் எவ்வாறிருக்கின்றன என்று மதிப்பீடுவது மதிப்பீட்டுத் திறனாய்வு என்கிறார் வு.ளு.எலியட் ” (The function of literary critic in the evaluation of what has been written in terms of aesthetic principles appropriate to literature) இம்மதிப்பீடு மிகவும் கூர்மையற்றது. பொதுவாகச் சொல்லப்படுகிற அபிப்ராயம். பல இலக்கியம் பற்றியும் இலக்கியக் கர்த்தாக்கள் பற்றியும் க.நா.சு கூறியுள்ளவை. இதிலடங்கும். ஒரு வயலின் விளைச்சலைப் பார்த்து மாவிற்கு இத்தனை கலம் அல்லது மூட்டை நெல் கிடைக்கும் என்று கூறுவது போலக் கூறுவது இது.

**“உடையார் முன்இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்**
**கடையரே கல்லா தவர்”**

என்னும் குறட்பாவில் கல்வி கற்கும் சிறப்புக் கூறப்பட்டுள்ளது. செல்வந்தர்கள் முன் ஏழைகள் தமக்குக் காரியம் ஆக வேண்டும் என்பதற்காகப் பணித்தும் நயந்தும் நிற்பது போல விரும்பிக்கற்க வேண்டும் என்கிறார் வள்ளுவர். இக்குறட்பா அக்காலச்சமூகத்தின் கல்விச்சூழலையும் இருப்போர் இல்லாதவர் பற்றிய நிலையையும் குறிக்கிறது. இது ஒரு சமூகக்கண்ணோட்டமாகும். இதுபோன்ற பொதுப்பண்புகளை மதிப்பீடு செய்வது இத்திறனாய்வாகும். இது விளக்க முறைத்திறனாய்வு போல அதிகம் நீளாது. இலக்கியத்தில்

குறிப்பிட்ட ஒரு சிறப்பின் தன்மை மட்டும் ஆராயப்படுவது இத்திறனாய்வில் அடங்கும். பாரதியாருடைய குயில்பாட்டு தான் அவரைக் கவிஞரும் மிகச் சிறந்தவராகக்காட்டுகிறது எனக் கூறி அதற்குரிய காரணங்களைக் கூறுதல் இவ்வகையில் அடங்கும். திருக்குறள் மட்டுமே உலகப்பொதுமறை எனத்தமிழில் வழங்கப்படுகிறது என்று கூறிச் சான்று தருதலும் அது,அரசன் முறைபிறழ்ந்தால் அவனது அரசாட்சி வீழும் என்று சிலப்பதிகாரம் மட்டுமே கூறுகிறது என்பன போல ஒன்றின் தரத்தை ஆய்ந்து வெளியிடுதல், இது ஒப்பீட்டு முறை போலத் தோன்றும், எனினும் அதனின்றும் வேறுபட்டது.

## வரலாற்றுமுறைத் திறனாய்வு (Historical criticism)

ஆங்கிலத்தில் Historical criticism என்பது தமிழில் வரலாற்றுமுறைத் திறனாய்வு எனப்படுகிறது. இலக்கியம் படைப்போரும் இலக்கியங்களில் அவர்கள் வாழ்ந்த கால சமூக அரசியல் பொருளாதாரம் குறித்த பிரச்சினைகளை ஏதோ ஒரு வகையில் பதிவு செய்கின்றனர். அத்தகைய இலக்கியங்களை ஆராயும் போது அவ்வக்கால அரசியல் நிலை, பொருளாதார நிலை, சாதி, சமயம் முதலியவை ஆராயப்படுகின்றன. இவ்வாறு சமுதாயம் வளர்ந்து வந்துள்ள வரலாற்றுப் போக்கை ஆய்வது வரலாற்று முறைத்திறனாய்வாகும். சமுதாய அரசியல் பொருளாதாரக் கண்ணோட்டத்துடன் இலக்கியத்தை ஆராய்வது இது. இதன் மூலம் அறியப்படுவன படைப்பாளியின் காலம், காலச்சூழல், அரசியல் நிலை, சாதி, மதம், கடவுள் முதலிய சமுதாயப் பிரச்சினைகள் ஆகும். கலைஞன் சமகால அரசியல் சூழ்நிலைகளால் அல்லது சாதிசமயச் சடங்குகள் போன்ற சமுதாயக் கேடுகளால் அல்லது பொருளற்ற கண்மூடிப்பழக்கவழக்கங்களால் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளால் தாக்குண்டு ஓர் இலக்கியத்தைப் படைக்கலாம். அப்படிப் படைக்கப்பட்ட இலக்கியத்தில் அழகியல், கலை நுணுக்கத்திறன்களும் அமைந்திருக்கும். அவற்றுடன் அவன் காலத்து அரசியல் சமுதாயப் பொருளாதார நிலைகளைக் காட்டக்கூடிய பகுதிகளும் இருக்கும். பின்னைய இப்பகுதிகளை ஒரு படைப்பிலிருந்து பிரித்துக்காட்டுவதே வரலாற்று முறைத்திறனாய்வாகும். வெளியுலகத்து தகவல்களையும் நூலினுள் காணும் தகவல்களையும் இணைத்துக் கூறுவது இது. இதனைச் ‘சரிதமுறைத் திறனாய்வு“ எனவும் கூறுவர்.” இது சமூக நிலைத்திறனாய்வில் அடங்கும் புறநிலைத் திறனாய்வு (Objective cniticisim) எனவும் கூறுவர், வரலாற்றில் காலம் இடம் மிகமுக்கியமானவை. நிகழ்வுகள் அத்துடன் இணைகின்றன. ஒரு கொள்கை காலந்தோறும் எவ்வாறு பின்பற்றப்பட்டுள்ளது என்று பார்ப்பதும் இது ஜனநாயகப் பண்புகள் “மானுடம் வெல்லும்’’ எழுதிய பிரபஞ்சன் வரை எவ்வாறு இடம் பெறுகிறது எனக் காண்பதற்கு இம்முறை பயன்படுகிறது. இது போலவே எல்லாக் கொள்கைகளையும் காலந்தோறும் ஆராயலாம். சு.மு.நாராயணல் தொடங்கி (Waiting for Mahathma) கமலா மார்க்கண்டேயா (A Handful of Rice) வரை தனி மனித ஒழுக்கத்தைக் காலந்தோறும் இந்திய ஆங்கில எழுத்தாளர்கள் (Indian Writers in English) எப்படிச் சித்திரிக்கிறார்கள் என்பதை அறிய இக்கொள்கை பயன்படுகிறது. வரலாற்றுக் கண்ணோட்டம் காலந்தோறும் மாறக் கூடியது. வீரநாயகர்களும்

அவர்கள் நிகத்திய பெரும் நிகழ்ச்சிகளுமே வரலாறு என்பது மாறி மக்களில் வாழ்நிலையும் நிகழ்வுகளுமே வரலாறு என்னும் கருத்தும் தற்போது தோன்றியுள்ளது,

திருவள்ளுவரின் அரசியல் , பொருளாதாரம், பண்பாடு, ஒழுக்கம் பற்றிய கருத்துக்களை இவ்வகையில் ஆராயலாம்.. திருவள்ளுவர், கம்பர் முதலியோரின் கடவுள் கருத்துக்கள் அவ்வக்காலத்தோடு தொடர்புடையவை. இலக்கியத்தை வரலாற்றின் அடிப்படையில் பார்த்தல், இலக்கிய வரலாறு அமைத்தல், இலக்கியத்தை வரவாற்று மூலமாகக் கொள்ளுதல், இலக்கியத்தின் கால ஆய்வுகள், புலவர்களின் காலம் பற்றிய ஆய்வுகள் முதலியன ,திலஞ அடங்கும். இலக்கியத்தின் நடை உத்தி, வகைமை முதலியவை அமைவதற்கு அவ்வக்காலச் சூழல் காரணமாய்அமைகிறது. ஹோமர், ஷேக்ஸ்பியர், கதே (Gathe), பால்.ஃ.ஜாக் முதலிய பலரின் கருத்துக்களைக் காரல்மார்க்சும், எங்கெல்சும் அவ்வக் கால்ச்சூழல் நிலைகளிலிருந்து ஆய்வு செய்கின்றனர்.இலக்கிய வரலாறு அமைவும் இதில் அடங்குகிறது. ஈழத்தைச் சேர்ந்த சைமன்காசிச் செட்டி, (Simon casiechetty) என்பவரின் ஆங்கில நூலான The Tamil Plutarch என்பது 1859இல் வெளிவந்தது. இதுவே முதல் தமிழ் இலக்கிய வரலாறு. இதன்கண் அகர வரிசையில் 196 புலவர்களில் வாழ்க்கை, பணி முதலியன சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன. அதன்பின் மற்றோர் ஈழ அறிஞர் அ.சதாசிவம் பிள்ளை (J.R.Amold) “பாலவர் சரித்திரதீபிகம்” என்றொருநூலை முதல் நூலைப் பின்பற்றி 1866இல் வெளியிட்டார். இதனுள் 216 புலவர்கள் இடம் பெற்றுள்ளனர்

## படைப்பு முறைத் திறனாய்வு அல்லது செலுத்துநிலைத் திறனாய்வு

ஓர் இலக்கியப் படைப்பை அதன் அடிப்படை அமைப்பைக்கொண்டே ஆராய வேண்டும் என்பது இத்திறனாய்வின் முடிபு. இது ஆங்கியத்தில் ஐனெரஉவளைந உசவைஉைளைஅ எனக்கூறப்படுகின்றது. ஒவ்வொரு இலக்கியத்திற்கும் தனித்த அமைப்பு உண்டு என்றும் அதனை அந்த அமைப்புடன் பொருத்திப் பார்க்க வேண்டும் என்றும் இது கூறுகிறது. சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க்காப்பியத்தைத் தண்டியலங்காரம். கூறும் காப்பியஇலக்கணத்தில் பொருத்திப் பார்த்து அதனுடன் பொருந்தாத சில கூறுகளை வைத்துக் கொண்டு அக்காப்பிய இலக்கணத்துக்குப் பொருந்தவில்லை எனக்கூறக் கூடாது. சிலப்பதிகாரத்தின் தொடக்கம் முடிபு தலைவன், தலைவி, வருணனை முதலியவற்றை அதில் கூறியுள்ளவாறே பதிவு செய்து கொண்டு விளக்க வேண்டும் புதுக்கவிதையின் ஆய்வை மரபு வழி இலக்கணத்துடன் பொருத்திப்பார்க்கக் கூடாது. புதுக்கவிதைகளைத் தனியே பிரிந்து பார்த்து அவற்றிற்கெனத் தனி அமைப்பை மேற்கொண்டு ஆராய வேண்டும். படைப்பு வழித்திறனாய்வில் நூல் முழுவதையும் கற்க வேண்டும். இதனை எல்லோராலும் எளிதில் செய்துவிட முடியாது பிற பொதுவிதிகளின்றி அந்தந்த இலக்கியத்திற்கெனத் தனித்த விதி அமைப்பதை இது வலியுறுத்துகிறது. முடிபுமுறை ,ஒப்பீட்டு முறை ,மதிப்பு முறை ஆகிய திறனாய்வுகளையும் இது மறுக்கிறது.

## மரபுவழித் திறனாய்வு (Conventional Criticiam)

சமுதாயத்தில் இதற்கு முன் தோன்றியுள்ள இலக்கிய மரபுகளை அடிப்படையாகக் கொண்டு இலக்கியங்களை ஆய்வது இம்முறையாகும். “கோவை“ என்னும் இலக்கியத்தில் “தழையுறை தருதல்“ என்றொரு துறை உள்ளது. இது பழைய மரபு- தலைவியைச் சந்திக்கும் தலைவன் பசுந்தழைகளைக் கொடுத்து மகிழ்கிறாள். இன்றைய நாளில் அது வழக்கமில்லை. வேறு பொருள்களைப் பரிசாகத் தருவது வழக்கமாக உள்ளது. ஆனால் இன்று “கோவை“ பாடுகிறவர் “தழையுறை தருதல்“ என்ற துறை அமைத்து எழுத வேண்டும் என்பது கோவையின் மரபு. இது உலா. தூது. கலம்பகத்திற்கும் பொருந்தும். அது பாடுவதற்கும் கலம்பகம் பாடுவதற்கும் பின்பற்றப்படும் மரபின் வழியில் பிற தூது உலா போன்ற இலக்கியங்களை ஆராய்வது. ஆனால் கால வளர்ச்சியில் இம்மரபுகள் மாறக் கூடும் அதை ஏற்றுக்கொள்ளுவதே நல்லது. தூது விடுவதற்குரிய பொருள்கள் இன்னின்ன என மரபு ஒன்று உள்ளது. இதை மீறி வேறு பொருள்களைத், தூதாக விடுப்பது மரபைமீறுவதாகும். தூதிற்குப் பின்பற்றி வரும் மரபு இருக்கிறதா எனக்காண்பது இம்முறையாகும். மரபு வழித் திறனாய்வாளர்கள் பழமைவாதிகள் எனக்கூறப்படுகின்றனர்.ஆங்கிலத்தில் Conventional Criticism என்று இதனைக் கூறுவர்.

## முருகியல் திறனாய்வு (அல்லது) அழகியல் திறனாய்வு

ஆங்கிலத்தில் Theoretical criticism, Aesthetic criticism என்று இதனை வழங்குவர். இது “ரசனைமுறைத் திறனாய்வு“ எனவும் கூறப்படும். எண்சாண் உடம்புக்கு சிரசே பிரதானம்“ என்பது போலக்கவிதைக்கு அதன் வடிவமே முக்கியம் என்று இத்திறனாய்வில் கூறப்படுகிறது. இலக்கியத்தின் உருவம் உள்ளடக்கம் என்பனவற்றுள் உருவமே முதன்மையாகும். உருவமே கலையழகைத் தருகிறது. ரசனை - கவிதையின் உயிர், இந்த ரசனை அதன் வடிவத்தில் இருக்கிறது. ஓசை, உவமை, உருவகம், தொனி, உணர்ச்சி முதலியலன ரசனையை உண்டாக்குவன, உள்ளடக்கம் பற்றி இது அக்கறை கொள்வதில்லை டி.கே.சியின் கம்பராமாயண அணுகுமுறை இதுவே, ’ரசிகமணி” என்ற பட்டம் அவருக்கு இருப்பது இக்கொள்கையாளர் அவர் என்பதை உணர்த்துகிறது. கவிதை எளிமையாக இருக்க வேண்டும். புரிய வேண்டும் என்று இம்முறை வற்புறுத்துகிறது.

> **“பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவ மனுங்க**
> **செஞ்செவிய கஞ்சநிகர் சீரடிய ளாகி**
> **அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்**
> **வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்”**

எனப் பாடுகிறார் கம்பர்.

கவிதையை எழுதுவது போலவே கவிதையை ரசிப்பதும் ஒரு கலையாகும். இப்பாடலில் அழகான-காதுக்கினிமைதரும் ஒலிநயம் அமைந்துள்ளது. சூர்ப்பணகையின் வருகையை மானிடஉலகம் வியந்து போற்றுமாறும் கேட்டு இன்புறுமாறும் பாடல் அமைந்துள்ளது. ரசனை முறையில் கவிதையை அனுபவிக்கவில்லையெனில் வேறு எந்த லகையிலும் அனுபளிக்க இயலாது. பாட்டை மீண்டும் மீண்டும் சொல்லிப் பார்க்க வாசகனைத் தூண்டுவது ரசனையாகும். “செம்பஞ்சுக்குழம்பே வருந்தும்படியாக சிவந்தும் தாமரை மலர் போல மென்மையாய்யும் உள்ள சிறியஅடிகளை எடுத்து வைத்து அழகிய சொற்பேசி அன்னம் போலவும். வஞ்சிக்கொடிப் போலவும் போல வஞ்சனையுடைய பெண் வத்தாள்“ என்னும் பாடலின் கருத்தை வாசிப்போரை மயக்குவது சொற்களும், ஓசை நயமுமே ஆகும். இவ்வாறு கவிதையின் வடியம் கண்டு ரசிப்பது ரசனைமுறைத் திறனாய்வாகும். ஓரளவு கருத்தும் ரசணைக்கு உட்படுகிறது. இரட்டுற மொழிதல் போன்ற பாடல்களில் இருபொருளில் சொல் விளையாட்டு நடக்கும் போது வடிவமும் உள்ளடக்கமும் ரசிப்புத்தன்மைக்கு உள்ளாகின்றன.

## மூலபாடத் திறனாய்வு

மூலபாடம் என்பது நூலாசிரியன் எழுதியுள்ள பாடல்களைக் குறிக்கிறது. ஓர் இலக்கிய நூலை எடுத்து ஆராயும் போதோ அல்லது உரையெழுத முற்படும்போதோ ஆசிரியன் எழுதிய சொல் அல்லது சொற்றொடர் முதலியன பொருந்துமாறு உள்ளனவா என்று ஆய்வது மூலபாடத் திறனாய்வாகும்.. ஆங்கிலத்தில் இதனை Textual criticism' எனக்கூறுவர். திருக்குறன். சங்க இலக்கியங்கள், கம்பராமாயணம் போன்ற பல இலக்கியங்களில் பல பதிப்புகள் வந்துள்ளன. இப்பதிப்புகளில் காணப்படும் சொற்கள் சில பாடல்களில் மாறிக் காணப்படுகின்றன. இதற்குப் பாடவேறுபாடுகள் (variations) எனப் பெயர். இவற்றுள் எது ஆசிரியரால் எழுதப்பட்டிருக்க முடியும் என்று அணுகி ஆய்ந்து உரிய சொல்லைக் கொண்டு நூலை அமைக்கும் முயற்சியே இம்முறையாகும்.

**“இருள்சேர்இருவிளையும் சேரா இறைவன்**

**போருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டும்”**

என்னும் குறளில் உள்ள “இருவினையும் சேரா’ என்னும் தொடர் மாறி வந்துள்ளது. இருள்சேர் இருவினையும்சேரா என்பது பெரும்பாலோர் கொண்டுள்ள பாடம். ஆனால் தஞ்சை சரசுவதி மகால் பதிப்பில் (1986) “இருள் சேர் இருவினையும் சேராது“ என வந்துள்ளது. அதுபோல ”பிறவிப் பெருங்கடல் நீந்துவர்’ என்பது “பிறவிப்பெருங்கடலை. நீந்துவர்“ என உள்ளது. இப்பாடவேறுபாடுகளுள் எது சரியானது எனக் காண்பது மூலபாடத் திறனாய்வாகும். இதனைப் பாடபேதங்கள் எனவும் கூறுவர். பாடவேறுபாடுகள் தோன்றுவதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவை:

1,சொல்லும் போது பிறழக் கேட்டு எழுதுதல்,

2.படியெடுக்கும் போது தவறுதல்,

3.வேண்டுமென்றே திருத்துதல்,

4.உடல் உள்ளச்சோர்வால் தவறி எழுதுதல்

5.அச்சுப்பிழைகள்

எனக்கூறப்படுகின்றன. இலக்கியச்சிறப்போ, அழகோ, ரசனையோ இங்குப் பார்ப்பதில்லை. மூல ஆசிரியரின் எழுத்தைச் சரிபார்த்தல் இதன் அடிப்படையாகும். இப்பாட வேறுபாடு சொல், தொடர், ஓர் எழுத்து ஆகியவற்றில் அமையும், நன்னூல் பதினான்கு வகை உரைகளை, ‘‘பாடம் கருத்தே பதப்பொருள் ...’’ என்னும் நூற்பாவில் கூறுகிறது. இவற்றுள் ”பாடம் என்பது பாடவேறுபாடுகளைச் சரி செய்தல் சொற்களைப் பொருளமையப் பிரித்தல் என்னும் பொருளில் கொள்ளப்படுகின்றது.

## ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு (Comparative criticism)

இலக்கியங்களையோ இலக்கியங்களின் பகுதிகளையோ ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பார்த்துப் பொதுத்தன்மையையும் சிறப்பையும் கண்டறிதல் இத்திறனாய்வாகும். 'Comparative criticism” என. ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. ஒரே மொழியில் எழுந்த பாடல்களையோ, வெவ்வேறு மொழி இலக்கியங்களையோ ஒப்பிடலாம், சிறுகதை, நாவல், கவிதை முதலியனவும் இம்முறையில் திறனாய்வு செய்யப்படுகின்றன. இலக்கணத்தையும் இவ்வாறு ஒப்பிடுகின்றனர். “திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்’ (A comparative grammar of Dravidian Langunges) என்ற நூலைக் கால்டுவெல் எழுதியுள்ளார். பாரதி பாடல்களைக் கீட்ஸ் (Keats) பாடலுடன் ஒப்பிட்டுள்ளனர். பாரதிதாசன், பாரதி கவிதைகள் ஒப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. ஓர் இலக்கியத்திலுள்ள ஒரு சிறுகூறு இன்னொரு இலக்கியத்தின் சிறுகூறுடன் ஒப்பிடவும் பிடலாம். வெவ்வேறு காலகட்டங்களில் எழுந்த நூல்களை ஒப்பிடலாம். பல்வேறு காலக்கட்டங்களில் எழுந்த சமய இலக்கியங்களை ஒப்பிட்டும். எழுதலாம். மு.அருணாசலம் அவர்கள் நூற்றாண்டு வாரியாக எழுதிய இலக்கிய வரலாறு இதற்கு மிகவும் பயன்படும். தனித்தனி ஆசிரியர்களின் கருத்துக்கள் (Ideologies) ஒப்பீடு செய்யப்படுகின்றன. குழந்தைப் பாடல்கள், பெண்கள் சிந்தனை. யாப்பு அமைதிகள் முதலியனவற்றை ஒப்பிடுவதும் இதன்கண் அடங்கும். இலக்கியங்களிடையே காணப்படும் இயக்கிய உத்திகளும் ஒப்பிடப்படுகின்றன. பாவகைகள், நடை முதலியன ஒப்பிடப்படலாம்.

## வாழ்க்கை வரலாற்றுமுறைத் திறனாய்வு (Biographical criticism)

இலக்கியப் படைப்பாளியின் படைப்புக்களிலிருந்து அவரது வாழ்க்கை வரலாற்றை ஆராய்வதும் அவரது வாழ்க்கை வரலாற்றைச் கொண்டு அவர்தம் படைப்புக்களை ஆய்வதும் வாழ்க்கை முறைத் திறனாய்வு ஆகும். டீழைபசயிாஉையட உசவைஉைளைஅ என இதனைக்

கூறுவர். பாரதியாரின் கவிதைகள். கட்டுரைகள் ஆகியவற்றிலிருந்து அவருடைய வாழ்க்கை வரலாற்றை ஆய்வு செய்யலாம். அதே வேளையில் படைப்புக்கள் தவிரப் பிறவற்றின் வழியாகவும் அவரை பற்றித் தெரிந்து வைத்துக் கொண்டு ஆராய முற்படவேண்டும். இது அகவய முறை (Subjective) புறவயமுறை (Objective) ஆகிய இருவழியிலும் செய்யப்பட வேண்டும். அகவய முறை என்பது ஆசிரியரின் படைப்புக்கள் மூலம் அறிவது. புறவயமுறை என்பது அவரைப் பற்றிய பிற தகவல்களைக் கொண்டு ஆராய்வதாகும். இராமனைப் பிரிந்த தசரதனின் துயரத்தைக் கம்பர் பகரும்போது தன் மகள் அம்பிகாபதியின் இழப்பை எண்ணிப் பாடினார் என்று கப்பராமாயணப் பாடல்வரில் கூறலாம். ஆனால் இதனை செய்யப் புறச்சான்றுகளும் தேவை.பாரதியார் தன் காதல் தோல்வியைக் குயில் பாட்டில் கூறுகிறார் இதற்கும் புறச் சான்றுகள் தேவை அவரே தம் சுயசரிதையிலும் இதைக்குறிக்கிறார். அதைக் கொண்டு முடிபு எடுப்பதற்கும் தேவைப்படுகின்றன. இவ்வாறு இரண்டின் அடிப்படையில் பார்க்காமல் கிடைத்த ஒன்றைக் கொண்டு வாழ்க்கை வரலாற்றை எழுத முற்படுவது தவறாகப் போய்விடும். இது ஆபத்தாது. இலக்கியம் ஆசிரியரையும் அவரின் இலக்கியத்தையும் தொடர்புபடுத்தப் பார்ப்பதே வாழ்க்கை வரலாற்று வழி திறனாய்வாகும். பாரதியாரின் தேசியப்பாடலகள் பல அவரது தேசியப் போராட்ட வாழ்க்கைக் குறிப்பிடுவனவாயுமுள்ளன.

## பாராட்டுமுறைத் திறனாய்வு (Appreciative criticism )

ஆங்கிலத்தில் இதனை Appreciative criticim' எனக்கூறுவர். ஓர் இலக்கியம் படைப்பை எடுத்துக் கொண்டு அதன் வடிவம், உள்ளடக்கம் ஆகியவற்றின் சிறப்புக்கள் உத்திகளின் சிறப்புக்கள் ஆகியவற்றை மட்டுமே எடுத்துக் கூறுவது இது. இலக்கியத்தில் காணப்படும் குறைகள் இதில் பேசப்படுவதில்லை. படைப்பையும் படைப்பாளியையும் சில காரணங்களைக் காட்டிப் பாராட்டிக் கூறுவதே இத்திறனாய்வாகும். ஆனால் இதனை அவ்வளவு சிறப்பாகக் கொள்வதில்லை. குறைகளையே காணத்துடிப்பதும் குறை காணாமல் பாராட்டியே பேசுவதும் திறனாய்வுக்குப் பொருந்தாது. பாராட்டு முறைத் திறனாய்வு போல “குத்தங்காணும் திறனாய்வு“ என்று ஒன்று இன்னும் உருவாகவில்லை. பாராட்டு முறைத் திறனாய்வில் விளக்கமுறைத் திறனாய்வுக்கூறுகள் காணப்பெறும் .தமிழ்ச்குழலில் தற்காலத்தில் இத்தகையத் திறனாய்வு முறையே பின்பற்றப்படுகிறது.

## அறிவியல் முறைத் திறனாய்வு

வாழ்க்கை நிகழ்ச்சிகள் அறிவியலுக்கு உட்பட்டவை. உண்ணுவது, உறங்குவது, சிந்திப்பது. உழைப்பது யாவும் அறிவியலுடன் தொடர்புடையவை. வாழ்க்கை நிகழ்ச்சிகள் சித்திரிக்கப்படும் போது அறியியலும் அவற்றுள் இடம்பெறுகின்றன. அறிவியல் முறைத்திறனாய்வை மேற்கொள்ளும் திறனாய்வாளனுக்கு இலக்கியமும் அறிவியலும் தெரிந்திருக்க வேண்டும். இலக்கியப் பதிவுகளை அறிவியல் நெறிமுறைகளுடன் பொருத்திப் பார்த்து உண்மையைக் கண்டறிதல் அறிவியல் திறனாய்வாகும். பெருங்கல்லையே புரட்டிக் கொண்டு வரும் ஆற்றுநீரில் ஓடம் அமைதியாகத்

தவழ்ந்தது என்று பாடமுடியாது. ரஷ்யாவின் பனிப்பாறைப் பகுதியில் தாமரைப்பூத்தது என்றும் எழுதமுடியாது. இவை அறிவியலுக்குப் பொருந்தாதவை. திறனாய்வானன் இதனைக்ஸ்ண்டு எழுத வேண்டும். வரலாற்று நாவல்களில் சொல்லப்படும் கதை நிகழ்வுகள் பல ஆண்டு இடைவெளிகளில் நிகழ்பவை, காலம், வெளி (Time and Phase) ஆகியவை அறிவியலில் அடங்கும். "குடும்பவிளக்கு' கவிதைகளில் சொல்லப்படும் நிகழ்ச்சிகள் பல ஆண்டுகளில் நிகழ்ந்தவை.

**"கிட்டரிய காதற் கிழத்தி இடும்வேலை**

**விட்டெறிந்த கல்லைப்போல் மேலேறிப் பாயாதோ".**

என்கிறார் பாரதிதாசன், விசையின் தன்மை இங்குச்சுட்டப்படுகிறது. தான், கோள், விண்மீன்கள் முதலியன சங்க இலக்கியங்களில்சொல்லப்படுகின்றன. இளவவாள்வெளிஆய்வுக்குட்படுவர். தீர்சூச் சேகரிப்பு, தீர்த்தேக்கம், விவசாயம் முதலியன அறிவியல் பாடப்படுகின்றன. முலை முகஞ்சிவந்தன...?" என்னும் அகப்பாடல் ஒரு பெண் சிறுவயதிலிருந்து வளர்ந்து பூப்பெய்தி உரிய பருவம் அடைவதைச்சித்திரிக்கிறது. உடலியல் வளர்ச்சி (Biological Changes) என்னும் பகுதியில் இது அமைகிறது.

இவ்வாறு அறிவியலுக்குட்பட்டவற்றை இலக்கியமாகச் சீத்திரித்திருப்பதைக் கண்டறியும் முறை அறிவியல் முறைத்திறனாய்வாகும். புதினங்களில் சில அறிவியல் புதினங்கள் (Science Fic tions Novels) கூறப்படுகின்றன. பெர்ட்ரண்ட்ரசல் (BertrantRussel) எழுதிய "கால எந்திரம்" (Time Machine) ஒரு அறிவியல் புனைகதையாகும். தமிழில் சுஜாதா அறிவியல் கதைகளைத் தொடராகவே எழுதியுள்ளார். பாரதியாரின் ஞானரதமும் ரசலின் கால எந்திரமும் ஒப்புநோக்கத் தக்கவை. சிறார்களுக்கான ரஷ்யமொழி அறிவியல் கதைகள் பல தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. இத்திறனாய்வு முறை 'Scientific Criticism' என ஆங்கிலத்தில் கூறப்படுகிறது. நெல்லைக.முத்து "அறிவியல் கவிதைகள்" என்னும் நூலை எழுதியுள்ளார். தொட்டனைத்தூறும் மணற்கேணி, மூங்கில் இலைமேலே தூங்கும் பனி நீரே என்பவை அறிவியல் செய்திகளைத் தருகின்றன

## சமுதாயவியல் திறனாய்வு

'Sociological: Criticism' என்பது தமிழில் சமுதாயவியல் திறனாய்வு அல்லது சமூகவியல் திறனாய்வு எனக் கூறப்படுகிறது. சமுதாயத்தில் வாழும் மனிதனின் வாழ்க்கையின் வெளிப்பாடுதான் இலக்கியம் என்பர். இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கண்ணாடி (Literature in the Mirror of Life) என்பர். இலக்கியம் சமுதாயத்தின் புலப்பாடு (Literature is the Expiression of Society) எனக்கூறுவர். ஆகவே மனிதன் வாழும் சமுதாயக் கூறுகள் இலக்கியத்தில் பதிவாகின்றன. அப்பதிவுகளை ஆராய்ந்து தொகுப்பது சமுதாயவியல் திறனாய்வு

ஆகும். இலக்கியப் படைப்பில் காணப்படும் வாழ்க்கை பழக்கவழக்கம், சாதி முறைகள் கடவுள் நம்பிக்கை, உழைப்பு, தொழில், மதம், கடவுள் முதலியள பற்றி ஆய்ந்து கூறுவது சமூகவியலாய்வாகும். சமுதாயக்கூறுகளுள் சமுதாயப் பின்னணி களம், சமுதாய நிறுவனங்கள், குடும்பம் அதன் வகைகள், சமூக உறவுகள், கிராம நகர வாழ்க்கை, குலம், சாதி, தேசிய இளங்கள், பிற சாதிப்பிரிவுகள், நம்பிக்கைகள், சமூக மதிப்புகள் (Social Vilues), சமூக மதிப்பு மாற்றங்கள் (Changes of Social Values), நல்ல கெட்ட பழக்கவழக்கங்கள், கற்பு. ஒழுக்கம். சமுதாயச் சிக்கல்கள் (Social Problems), சமூக மாற்றங்கள் (Social Changes) முதலியவற்றை ஆராய்வது. சமுதாயவியல் திறனாய்வு முறையாகும்.

## உளவியல் அணுகுமுறை (Psychological Aproach)

ஓர் இலக்கியப் படைப்பாளியின் படைப்பின் வழி அவரின் உள்ளக் கருத்தைக் காண முயலுவது உளவியல் அணுகுமுறை எனப்பெயர். 'Psychological Aproach என் இதனை வழங்குகின்றனர்.பாத்திரங்களின் செயற்பாடுகளின் மூலமும் படைப்பாளியின் எண்ணத்தைக் காண முடியும். “தாய்“ நாவலில் வரும் “பாவெல்“ என்னும் கதாநாயகனின் இயக்கம் படைப்பாளராகிய மார்க்சிம் கார்க்கியின் புரட்சிகரச் சிந்தனையையும் சமூக நோக்கத்தையும் வெளிப்படுத்துகிறது. பிராய்டு போன்ற உளவியலாளர்களின் கொள்கைகளைப் பயன்படுத்தி அவற்றின் அடிப்படையில் முடிவுகளைக் கூறுவது இவ்வணுகுமுறையாகும். மகன் தந்தையிடம் நெருக்கமாக இருப்பது “பாலியல் அடிப்படை“ என்கிறார் ஃபிராய்டு, குழந்தை, பெற்றோரை விலகி அழுவது தான் பாதுகாப்பின்றி இருப்பது தெரிந்த உணர்வு எனக் கூறுகின்றனர். இது மாதிரி நிகழ்வுகள் படைப்புகளில் வரும் போது இக்கொள்கைகளை (Theories) பயன்படுத்தி (Applied) முடிபு கூறுவது உளவியல் அணுகுமுறையாகும். இது குழந்தை உளவியல் (Childrens' Psychology), மிகை உளவியல் (Abnormal Psychology), தொழிற்சாலை உளவியல் (Industrial Psychology) எனப் பல வகைப்படும். இவையனைத்தும் மனித உளவியல் (Human Psychology) என்பதனுள் அடங்கும். இலக்கியத்தில் உளவியல் ஆய்வு பின்வருமாறு பயன்படுகிறது.

1.இலக்கியம் படைக்கப்பட்ட காரணம் அறிதல்

2.படைப்பாளியின் உள்ளம் அறிதல்

3.பாத்திரங்களின் நடத்தை அறிதல்

4.கதைமாந்தர்களின் உணர்வு அறிதல்

5.வாசகனுக்கும் படைப்பிற்கும் உள்ள உறவையும் அதன் இறுக்கத்தையும் அறிதல்

6.படைப்பாளரின் முழுவரலாற்றை ஆய்தல்

7.கனவு போன்றவற்குக் காரணம் அறிதல்

8.நிறைவேறாத ஆசைகளைக் கண்டறிதல்

9.உணர்வு நிலைகளைக் கொண்டு உண்மையை உணர்தல்

என்பன உளவியல் திறனாய்வின் பயன்களாகும்.

## மொழியியல் அணுகுமுறை

மொழி கருத்தை விளக்கும் கருவியாகிறது. மனித சிந்தனைகள் செயல் வடிவம் கொள்வதற்கு அதுவே துணை செய்கிறது. இலக்கியம் மொழியால் ஆன கலைவடிவம், மொழியில் அமைப்புதான் இலக்கியத்திற்கு வடிவ அழகைத் தருகிறது. உள்ளடக்கச் சிறப்புடையதாக இலக்கியம் அமைவதற்கும் மொழியே அடிப்படை எனவே இலக்கியச சிறப்பிற்கு மொழியின் பங்கு பற்றி (Role of the Ianguage) ஆய்வது மொழியியல் அணுகுமுறையாகும். இதனை Linguistic Criticism எனக்கூறுவர். இதனை நடையியல்திறனாய்வு (Stylistics Criticism) என்றும் கூறுவர். கீழ்க்கண்டவை மொழியியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.இலக்கியத்தில்

1.மொழிநடை

2.வருணனை (செய்யுள் மற்றும் உரைநடை)

3.உவமை

4 உருவகம்

5.இறைச்சி

6.உள்ளுறை

7.வாக்கிய அமைப்புகள்

8.இலக்கியமொழிதடை

9.வழக்குச்சொல் பதிவு

10.இணையொலிகள் (தண்ணிகிண்ணிகிடைக்குமா?)

11.ஒளியியல்

12.உருபனியல் (சொற்கள்)

13.தொடரியல் (வாக்கியம்)

14.உரையாடல்

15.அடுக்குத் தொடர் / அடுக்கு மொழி

16.எதுகை, மோவை போன்ற வடிவங்கள்

17.அணி / ஆகு பெயர்

முதலிய கூறுகள் அமைந்துள்ளன.இக்கூறுகள் யாவும் இலக்கியத்தில் எவ்வாறு பதிவாகி உள்ளன. என்றும் இவை கருத்துப் புலப்பாட்டிற்கு எப்படி உதவுகின்றன என்றும் ஆராய்வது மொழியியல் அணுகுமுறை ஆகும். இவ்வாய்வு செய்யுள், கவிதை, பாட்டு, உரைநடை முதலியவற்றில் செய்யப்படுகிறது. 18 ஆம் நூற்றாண்டிற்குப் பின் நாவல், சிறுகதை, கட்டுரை, புதுக்கவிதை முதலியவற்றிலும் செய்யப்பட்டது.

## உருவவியல் அணுகுமுறை

∴பார்ம்லிசம் (Formalism) என்பது இம்முறையின் ஆங்கிலப் பெயர். ஓர் இலக்கியப் படைப்பில் சொல், தொடர் அடங்கிய நடை, வருணனை, வளர்ச்சி, உவமை, உருவகம், ஓசை, ஒலி, சந்தம் முதலிய பல்வேறு உறுப்புக்கள் அடங்கியுள்ளன. இவ்வுறுப்புக்கள் அடங்கிய முழுப்பகுதியே முழு உருவமாகும். உருவவியல் திறனாய்வு என்பது ஒரு கலைப்படைப்பில் அடங்கியுள்ள அதன் உறுப்புக்களின் செயற்பாடு அல்லது சிறப்பியக்கம் எவ்வாறு அமைந்துள்ளது எனக் காண்பதாகும். அதாவது இலக்கியத்தில் உறுப்புக்களின் பங்களிப்பு என்ன என்பதைக் காண்பது. “ஒரு படைப்பினுடைய பல்வேறு உறுப்புக்களின் ஒன்றிணைந்த ஒரு முழுமையே உருவம் என்பது இக்கொள்கையின் மையமாகக் கருதப்படுகிறது. இவற்றுள் எந்த உறுப்பு அல்லது பண்பு அதனை இலக்கியமாக்கியிருக்கிறது எனக்காணுவது இவ்வாய்வு முறையின் அடிப்படை. துக்கு தொடை பாவண்ணம் முதலியனவும் இதில் சேரும். செய்யுளுறுப்புக்களுள் எவ்வூறுப்பால் பாடல் சிறப்பும் முழுமையும் அடைகிறது என்பது இந்திறனாய்வில் முக்கியமாகும். இவ்வணுகுமுறை ரஷ்ய நாட்டில் முதற்கண் தோன்றிற்று.

## அமைப்பியல் திறனாய்வு

அமைப்பு என்ற சொல் இலக்கியத் திறனாய்வுத் துறையில் முக்கியக் கலைச்சொல்லாக மாறிவிட்டது. இது ளுவசரஉவரசயடளைஅ என ஆங்கிலத்தில் குறிக்கப்பெறுகிறது. அமைப்பு (Structure) என்ற சொல்லடியாக இச்சொல் ஆக்கப்பட்டுள்ளது. ஓர் அமைப்பு என்பது பல பகுதிகளை உடையது. அப்பகுதிகள் ஒவ்வொன்றும் சக்தியும் திறனும் உடையது. அமைப்பின் உறுப்புக்கள் சிதையுமானால் அமைப்பே சிதையும். எனவே சிதையாத அமைப்புக்குப் பலம் வாய்ந்த உறுப்புக்கள் தேவைப்படுகின்றன. அமைப்புக்குக் காரணமாக அமைவது இந்தப்

பகுதிகள் தாம். அதே சமயத்தில் முழுமையைச் சிதைக்காமல் அப்பகுதிகளைப் பிரித்து விட முடியாது.

இலக்கியத்தை உருவவியல் ஆய்வில் எடுத்துக் கொள்ளும் போது இலக்கியத்திலுள்ள பல உறுப்புக்களையும் தன்னகத்துக் கொண்ட ஒரு முழுமைப் பொருளாக இலக்கியம் விளங்குகிறது. இந்த முழுமை அதன் ஒவ்வொரு உறுப்போடும் இணைந்திருக்கிறது. ஒரு நாவலில் இடம்பெறும் கதைப்பிளவை இதற்கு எடுத்துக் காட்டலாம். கதைப்பின்னல் பல நிகழ்ச்சிகளைக் கொண்டுள்ளது.இந்நிகழ்ச்சிகள் கதைப்பின்னலுக்குத் துணைக்கருவிகளாக அமைகின்றன. ஒவ்வொரு இணைக்கருவியும் முழுமைப்பகுதிக்குத் தன்னாலான உதவியைச் செய்கிறது. கதையமைப்பைத் தீர்மானிக்கிற ஒரு சக்தியாக இப்பின்னல் விளங்குகிறது. சிலப்பதிகாரத்தின் மையக்கருத்துக்களாக (Kernals) மூன்றைக்கூறுவர். 1. அரசு பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். 3. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர் 3, ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பன அவை. இதுபோன்ற மையக் கருத்துக்கள் ஒரு படைப்பில் பல வரலாம். நிகழ்ச்சிப் புனைவுகள் யாவும் இம்மையக் கருத்தைச்சுற்றியே அமைகின்றன. இதனால் மையக் கருத்து முழுமையும் சிறப்பும் அடைகிறது.

புதுமைப்பித்தனின் பொன்னகரம் என்ற கதையை எடுத்துக் கொள்வோம். இதில் இரண்டு மையக் கருத்துக்கள் இருக்கின்றன. 1, அம்மாளுவின் கணவன் சைக்கிள் ரிக்ஷாவுடன் அடிபட்டு வேலைக்குப் போக முடியாமல் நோய்ப்பட்டுக் கிடத்தல், அதாவது அவன் வேலைக்குச் செல்ல முடியாமல் குடும்பப்பட்டினி. 2. அவன் பசியைப் போக்க அவன் மனைவி அம்மாளு தன்னையே விற்றால் இந்த இரண்டு மையங்களையும் ஒட்டிப் பல சித்திரிப்புகள் அமைந்துள்ளன. அந்தச் சிந்திரிப்புகள் இல்லையெனினும் இந்த இரு முக்கிய மையங்கள் முறையாதனவாய் நிற்கும். மையங்கள் பல கதைப்பின்னல்களால் சிறப்படைகின்றன. இந்த இரு கருத்துக்கள் கதையை ஒட்டியவை, கதைக்கு நல்ல உருவம் அளிப்பவை. இவ்வாறு கதைக்கு உருவம் அளிக்க அடிப்படையாய் இருக்கும் மையங்களுக்கும் கதைக்கும் உள்ள உறவை ஆய்வது அமைப்பியல் அணுகுமுறையாகும்.

கதைப்பின்னலையும் கதைக்கூறுகளையும் ஆராய இவ் அணுகுமுறை பயன்படுகிறது. நிகழ்ச்சிகளிலும், நிகழ்ச்சிக் கோர்வைகளிலும் உள்ள ஒருமித்த முழுமையைப்பகுத்து அதன் உருவாக்கத்திற்குக் காரணமாகவும் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பாகவும் இருக்கும் பண்புகளை இது எடுத்துக் கூறுகிறது. கதைப்பின்னல் முதற்கொண்டு பல்வேறு அமைப்பியல் கூறுகளை விளக்குவதே அமைப்பியலின் பணியாகும். இலக்கியத்திலுள்ள உறுப்புக்கள் அவ்இலக்கியம் சிறப்படைய எவ்வாறு உதவுகின்றன எனக்காண்பது இது.

## மார்க்சியத் திறனாய்வு

காரல்மார்க்ஸ் உருவாக்கிய தந்துவங்களின் அடிப்படையில் இலக்கியத்தை விளக்குவது அல்லது புரிந்துகொள்வது மார்க்சியத்திறனாய்வாகும். மார்க்சின் கொள்கையுடன் எங்கல்ஸ்

குறிப்பிடும் கருத்துக்களும் இதில் அடங்கும். இவ்விருவரின் கொள்கைகளை மார்க்சியக் கொள்கை என்பர் இத்தத்துவங்களுக்கு ஆணிவேராக இருந்தவர் மார்க்ஸ். அதனால் அவர் பெயராலேயே அது வழங்கப்பட்டுவீட்டது. மார்க்சியம் அரசியல், பொருளாதாரம், சமூகம் முதலியவற்றிற்கான தத்துவத்தை விளக்குவதாகும். இவற்றுள் இலக்கியம் குறித்த தனிக்கொள்கைகள் இல்லை. ஆனால் இப்பேராசான்கள் இலக்கியம் மற்றும் அதன் உற்பத்தி, சமூகத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள உறவுகள் குறித்து ஆங்காங்கே கூறிச்சென்றுள்ளனர். சமூக யதார்த்தவியல் சார்ந்த தாய் போன்ற நாவல்களை அவர்கள் பாராட்டியுள்ளனர். பல இலக்கியக் கர்த்தாக்களைப் புகழ்த்துள்ளனர். ஷேக்ஸ்பியர் போன்றோரின் இலக்கியச் செழுமைகளை எடுத்தாண்டுள்ளனர். எங்கல்ஸைக் காட்டிலும் மார்க்சின் போதனைகளில் இலக்கியச் செழுமை காணப்படுகிறது எனக் கூறுகின்றனர். கலை, இலக்கியம் பற்றிய ஆழ்ந்த ஞானமுடையவர்களாக இப்பேராசான்கள் இருந்தனர். இலக்கியம் சமுதாயத்தின் உற்பத்தி, சமூக உணர்வுகளின் வெளிப்பாடு. இது மற்றச் சமூக வெளிப்பாடுகளான சட்டம், நீதி, மதம் முதலியவற்றோடும் தொடர்புடையது. இவ்வுணர்வுகளை அழகியலாகச் சித்திரிப்பது இலக்கியம் என்பதுதான் மார்க்சிய அறிஞர்கள் இலக்கியம் பற்றிக்கொண்டுள்ள கருத்தாகும். இலக்கியம் என்னும் கலைப்பொருள் சமுதாயத்தின் மற்றச் சட்டம், நீதி, சாதி, மதம், கடவுள் போன்ற உறுப்புக்களையும் பாதிக்கிறது. மற்றவற்றைச் சுவைப்பது போலவே அழகினைச் சுவைக்கும் திறனையும் கலையைப் புரிந்துகொள்ளும் திறனையும் கொண்ட மக்கள் திரளைக் கலைப்படைப்பு உருவாக்குகிறது.

இலக்கியத்தை மக்களுடன் இணைத்துப்பார்ப்பது மார்க்சியத்திறனாய்வாகும். ஒரு உள்ளடக்கத்திற்குப் பல வேறுபட்ட வடிவங்கள் இருப்பதை இது ஏற்கிறது. மகாபாரதக்கதையைப் புதிய பாடல் வடிவத்தில் பாரதி பாடியுள்ளார். புதிய உள்ளடக்கங்கள் வரும்போது உருவத்திலும் மாற்றம் உண்டாகும். சங்க காலத்திலிருந்து சிலப்பதிகாரம் வரை அனைத்திற்கும் அகவற்பா என்றிருந்த நிலை மாறிப் பிற்காலத்தில் இராமாயணம் மகாபாரதம் முதலிய தமிழ்க்காப்பியங்களில் விருத்தப்பா செல்வாக்குப் பெறுகிறது, படைப்பு யதார்த்தம் படிந்ததாயீருக்க வேண்டும் என்பது மார்ச்சியக் கருத்து. எழுத்துக்குப் பயன், நோக்கம், லட்சியம் இருக்க வேண்டும். ஆனால் அதேபோது, இது கலைத்தன்மைக்கு முரண்பட்டு விடாமல் கலையியல் முழுமை பெற்றதாக விளங்க வேண்டியிருக்கிறது என்பதை மார்க்சியம் வற்புறுத்துகிறது. யதார்த்தவியல் படைப்பாளர்கள் சமூகத்திற்கு அதிகம் பங்காற்றியிருப்பதாக மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். வரலாற்றாசிரியர்கள். பொருளாதார அறிஞர்கள். புள்ளியியல் அறிஞர்கள் ஆகியவர்களிடமிருந்து அறிந்துகொண்டதை விட 19 ஆம் தூற்றாண்டுப் படைப்பாளர் பால்ஜாக்கின் நாவலிலிருந்து தாம் அதிகம் கற்றுக் கொண்டதாக மார்க்ஸ் குறிப்பிட்டுள்ளார், உண்மைகள் என்பதற்காக வெறும் விவரங்களை மட்டும் தரக்கூடாது. அது கலையின் எதார்த்தமாகவே புலப்பட வேண்டும் என்பது மார்க்சியத்தின் அடிப்படை. மார்க்சியத்திறனாய்வுக்கு அடிப்படை மார்க்சியரித்தாந்தமாகும். ஒரு இலக்கியப் படைப்பில்மனிதத் தேவைகளை மார்க்சியம் அலசிக் கண்டுபீடிக்க முயல்கின்றது. உழைப்புப் பற்றிய அழகியலை-அதன் சிறப்பை

வெளிக்கொணர எத்தனிக்கிறது. கலைப்படைப்புக்களில் முரண்பாடுகள் இருப்பின் எந்தவித இரக்கமும் காட்டாமல் விமரிசனம் செய்வதுடன் கலைநுணுக்கச் சிறப்புக்கள், அவற்றின் மீது படைப்பாளியின் மேதைமை முதலியவற்றைப் பாராட்டவும் மார்ச்சியத்திறனாய்வு முறை வழிகாட்டுகிறது. இலக்கியப் படைப்புத்தோன்றிய காலமும் அக்காலச் சமூக அமைப்பும் மக்களின் உற்பத்தி உறவுகளும் இத்திறனாய்வு முறையில் ஆராயப்படுகின்றன. மார்ச்சியத் திறனாய்வு ஒரு நடுநிலையான மனிதநேயத்துடன் கூடிய அணுகுமுறையாகும்.

## பயிற்சி வினாக்கள்

### குறுவினாக்கள்

1.இலக்கியத் திறனாய்வு விளக்கம் தருக

2.திறனாய்வின் வகைகளை எடுத்துரைக்க

3.விதிமுறை திறனாய்வு விளக்குக

4.விளக்க முறைத் திறனாய்வு விளக்குக

5.மதிப்பீட்டு முறைத் திறனாய்வு விளக்குக

6.வரலாற்றுமுறைத் திறனாய்வு விளக்குக

7.படைப்பு முறைத் திறனாய்வு விளக்குக

8.முருகியல் திறனாய்வு விளக்குக

9.அழகியல் திறனாய்வு விளக்குக

10மூல பாடத் திறனாய்வு விளக்குக

### கட்டுரை வினாக்கள்

1.ஒப்பீட்டுமுறைத் திறனாய்வு விளக்குக

2.வாழ்க்கை வரலாற்றுமுறைத் திறனாய்வு விளக்குக

3.பாராட்டு முறைத் திறனாய்வு விளக்குக

4.அறிவியல் முறைத் திறனாய்வு விளக்குக

5.சமுதாயவியல் திறனாய்வு விளக்குக

6.உளவியல் அணுகுமுறை விளக்குக

7.மொழியியல் அணுகுமுறை விளக்குக

8.உருவவியல்அணுகுமுறையைவிளக்குக

9.மார்க்சியத் திறனாய்வு விளக்குக

10.செலுத்து நிலை திறனாய்வு விளக்குக

அலகு :5

# பகுப்பு முறைத் திறனாய்வு

இருபதாம் நூற்றாண்டு தமிழ் இலக்கிய வகையான கவிதை , சிறுகதை, நாவல், நாடகம், உரைநடை முதலியவற்றில் ஏதாவது ஒன்றைப்பற்றி பகுப்பு வகை திறனாய்வுக் கட்டுரை எழுதும் மாதிரியை அறியத் தருவது இப்பகுதியின் நோக்கமாக அமைகிறது. திறனாய்வு செய்யும் ஆய்வு மாணவர்க்கு அதன் முறைகளைக் கற்பிக்கவும் அறிவுறுத்திப் பயிற்றுவிக்கும் பாங்கில் இப்பகுதி அமைகிறது. இலக்கியத் திறனாய்வுக் கோட்பாடுகளைப் பற்றிய தெளிவினையும் திறனாய்வு அணுகுமுறைகளைக் கொண்டு தமிழ் இலக்கியங்களை ஆய்வு செய்து உண்மைகளைக் கண்டறியும் முறைகளையும் விளங்கிக்கொள்ளலாம். திறனாய்வு அணுகுமுறைகளுக்கும் இலக்கிய வகைமைகளுக்கும் உள்ள தொடர்பினை இனம் காண்பது அவசியம். இதனால் இலக்கியத் திறனாய்வு மேற்கொள்ளும் ஆய்வாளனுக்குப் பலவகையில் தெளிவும் பயிற்சியும் கிடைக்க வாய்ப்புள்ளது. அதோடு இலக்கியத் திறனாய்வுப் பின்புலத்தையும் அணுகு முறைகளை இலக்கிய வகைப்பாட்டிற்குள் அடக்கும் பாங்கினையும் அறிந்து கொள்ள முடிகிறது. திறனாய்வுக் கட்டுரை எழுதும் பயிற்சிக்காகத் தெரிந்து கொள்ள வேண்டிய பண்புகளாக, 1. திறனாய்வுக் கட்டுரை எழுதும் முறை பற்றிய தெளிவு 2. திறனாய்வுக் கட்டுரை எழுதும் பொழுது கடைபிடிக்க வேண்டியவை 3. திறனாய்வாளான் கவனிக்க வேண்டியவை 4. மாதிரி ஆய்வுக் கட்டுரை முதலிய கூறுகளைக் குறிப்பிடலாம்.

**திறனாய்வாளன் கவனிக்க வேண்டியவை (**எழுதும் முன்)

ஆய்வுக்கட்டுரை எழுதும் முன் ஆய்வாளர்கள் கடைபிடிக்க வேண்டியவை மட்டுமல்லாது திறனாய்வுக் கட்டுரை எழுதுபவர்கள் திறனாய்வு செய்யும் முன் கவனிக்க வேண்டிய கூறுகள் சில உள்ளன. அவற்றை அறிந்து செயல்படுவது திறனாய்வுக் கட்டுரை எழுதும் பணிக்கு அவசியமாகும்.

**சான்றாதாரம்**

சான்றுப்பதிவின் பங்கு (சுழடநந ழக னுழஉரஅநவெயவழைெ) மிக முக்கியமானது .திறனாய்வுக் கட்டுரையில் சான்றாதாரம் காட்டுவது முக்கியமான பணியாகும். இதனைப் பார்வைக் குறிப்புகள் (சுநகநசநஉந) என்றும் மேற்கோள் என்றும் புள்ளிவிவரம் (னுயவய) என்றும் பலவாறு அழைக்கின்றனர். எனவே தாம் எழுதும் திறனாய்வுக் கட்டுரை ஆதாரப் பூர்வமானது என்பதை நிருவுவதற்காகப் பிற அறிஞர்கள் கூறிய கருத்துக்களை எடுத்து காட்டி எழுதும் தன்மை மிக முக்கியமான பணியாகும். மேலும் ஒர் திறனாய்வாளர் தாம் பிற திறனாய்வாளர்களைப் பின்பற்றியிருப்பதைச் சுட்டிக்காட்டுவதற்குப் பயன்படுகிறது. பிறருடன் திறனாய்வாளர் ஒன்றுபடுவதையும் வேறுபடுவதையும் மேற்கோள்கள் மூலமே அறிய முடிகிறது.

வாசகர்கள் மேலும் பல புதிய தகவல்களை அறிந்து கொள்ள உதவுகிறது. சான்றாதாரங்கள் மூலம் திறனாய்வாளர்கள் தம் கருத்துக்ளைச் சரிபார்த்துக் கொள்ள முடிகிறது. அடிக்குறிப்புகளாலும் பின்னிணைப்புகளாலும் திறனாய்வுக் கட்டுரைக்கு வலுவூட்டக் கூடிய பல புதிய தகவல்களைத் தருவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது.

**திறனாய்வுக் கட்டுரை அடிக்குறிப்புகள்**

திறனாய்வுக் கட்டுரை எழுதும் பொழுது திறனாய்வாளன் அடிக்குறிப்புக்குள் (குழழவ ழேவநள) அமைத்துக் கொள்வது இன்றியமையாத பணியாகும். திறனாய்வுக் கட்டுரைக்கு பயன்பட்ட கருத்துக்கள் யாருடையவை? எந்த நூலிலிருந்து எடுக்கப்பட்டவை? என்பதை அடிக்குறிப்புக்குள் வழியாக அறிந்து கொள்ளலாம். அடிக்குறிப்பு எழுதுவதே ஆராய்ச்சிக்கு அழகாகும்.

**எடுத்துக் காட்டுகள்**

திறனாய்வுக் கட்டுரைக்குத் தேவையான எடுத்துக் காட்டுகளை (ருநெ வழ உவைந) எந்த இடத்தில் பயன்படுத்துவது என்பதை அறிந்து அந்த இடத்தில் எடுத்துக் காட்டுகளைத் தர வேண்டும். எடுத்துக்காட்டின் அளவு எவ்வாறு இருக்க வேண்டும்? அவற்றை எவ்வாறு இணைக்க வேண்டும்? என்னும் முறையை நன்கு தெரிந்து அதனை திறனாய்வுக் கட்டுரையில் பயன்படுத்த வேண்டும்.

**துணைநூற்பட்டியல்**

திறனாய்வுக் கட்டுரைக்குப் பயன்பட்ட நூல்களைப் பற்றிய அட்டவணைகளை அகர நிரல்படுத்தி முடிவில் தருதல் வேண்டும். இதனை ஆய்வடங்கல் அல்லது துணை நூற்பட்டியல் என்பர். திறனாய்விற்குப் பயன்பட்ட நூல்கள், ஆய்வேடுகள், இதழ்கள், ஆவணங்கள் பற்றிய குறிப்புகளை முழுமையாக வெளிவந்த ஆண்டுடன் இணைப்பது அவசியம். அதோடு ஆய்வுக்கட்டுரை தொடர்பான பிற தகவல்கள் தந்தால் அதனையும் தகவலாளர் பட்டியலில் இணைப்பது இன்றியமையாதது.

திறனாய்வுக் கட்டுரையின் இறுதியில் இதுவரை கூறிய கருத்துக்களின் தொகுப்பையோ அல்லது ஆய்வாளர்கள் கண்ட ஆய்வு முடிவுகளையோ தொகுப்புரை, முடிவுரை, முடிவுகள் என அமைத்தல் வேண்டும்.

**கட்டுரை எழுதும் பொழுது**

திறனாய்வாளன் திறனாய்வுக் கட்டுரை எழுதும் பொழுது கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்கள் சில உள்ளன. 1. திறனாய்வாளன் இலக்கியத்தை திறனாய்வு செய்யும் பொழுது அதற்கான நோக்கம் என்ன என்பதை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். 2. திறனாய்வு பற்றி ஆய்வாளன் ஒரு கருதுகோளை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். 3. ஆய்வுக்

கட்டுரை எழுதுவதற்குரிய ஆய்வு நெறி முறைகளை மனதில் கொள்ள வேண்டும். அதிலிருந்து தவறாமல் ஆய்வு செய்வது கடமையாகிறது. 4. உண்மையைத் தேடும் முயற்சியில் சிறு சிறு உட்தலைப்புகள் இட்டு எழுதுவது அவசியம். 5.அனைவருக்கும் புரியும் வகையில், ஆர்வத்தைத் தூண்டுவதாக, புதுமையை அறிய தருவதாக, மூலநூலைப் பற்றிய தேடல், உழைப்பு ஆகிய பண்புகளை ஆய்வாளன் கடைப்பிடித்தல் அவசியம்.6.பிறர் கருத்தைத் தம் கருத்து போல் கூறும் செயலை மறந்து பிற நூலாசிரியர்களையும் முதல் நூலாசிரியர்களையும் மதித்துப் போற்றுமாறு ஆய்வு நாகரிகத்தைக் கடைபிடிக்க வேண்டியது திறனாய்வாளனின் தலையாய கடமையாகும்.

**கட்டுரை எழுதும் முறை**

ஆய்வுக் கட்டுரை எழுதும் முறையும் திறனாய்வாளர் ஒரு திறனாய்வுக் கட்டுரை எழுதும் பொழுது மேற்கொள்ள வேண்டிய செயல்முறைகளும் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும் ஒன்றே. திறனாய்வாளர் ஆய்வறிக்கை எழுதும் முறை பற்றி தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும் அந்த வகையில்

1.பண்பும் பயனும் வடிவமும் (Written Report), பொதுமக்களுக்கான அறிக்கை (Popular Report) நிர்வாகத்திற்கு என எழுதும் அறிக்கை (Report for Administrator) துறை சார்பு அறிக்கை (Technical Report) ஆகியன எழுதுவதற்கான அடிப்படைகளைத் தவறாமல் கடைபிடித்தல் வேண்டும். திறனாய்வுக் கட்டுரை எழுதும் பணியில் முதலாவதாக ஆய்வறிக்கையின் பல்வேறு பண்புகளையும் தெரிந்து அவற்றைத் தயாரிக்கும் பணியில் நல்ல பயிற்சி பெறுதல் வேண்டும்.

2.வரையறைத் திட்டம் (Organisation) பற்றிய திட்டமிடல் கண்டிப்பாக அவசியம். அந்த வகையில் தன்மையும் பயனும் (Meaning and Role) முன்னுரை (Introduction) ஆய்வுரை வாசகம் (Statement of the Problem) ஆய்வுநெறி விளக்கம் (Methodology) திட்டமிடல் மிகமுக்கிய சான்று மூலங்களைத் தொகுக்கும் உத்திகள் (The date collection Techniques) மெய்மைகள் (Facts) கண்டுபிடிப்புகள் (Findings) சம்பந்தப்பட்ட விளைவுகள் (Implication) முடிவுகள் (Circulation) ஆய்வுச் சுருக்கம் (Sammary) ஆய்வுரை முதலியன எழுதும் பொழுது நல்ல அமைப்புமுறையினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும்.

3.திறனாய்வுக் கட்டுரை எழுதும் ஒருவர் மேற்குறித்த பண்புகளைத் தவறாது கடைபிடித்து ஒழுக வேண்டும். அப்பொழுதுதான் நல்ல திறனாய்வுக் கட்டுரை எழுதுவதற்கான வாய்ப்பு கிட்டும். அதோடு அவர் குறிப்புகளை ஆளும்திறன் பெற்றவராக இருத்தல் வேண்டும் (Control overmotes). சிந்தனையில் இன்றியமையாத தன்மை (Role of Thought) மன நிறைவு தரும் வடிவ முறை (Formation of a satisfactory outline) வரையறை வகைகள் (வுலிந ழக ழரவடைநௌ) முதலிய கூறுகளை நன்கு அறிந்து தெளிய வேண்டும்.

4.ஆய்வறிக்கையை விரித்து எழுதும் முறை (Write up) தெளிவாகத் தெரிந்திருப்பது அவசியம். அந்த வகையில் எழுத்து நிலைகளில் உள்ள குறைகள் தெரிந்து இருக்க வேண்டும். இவ்வாறு விரித்து எழுதும் பொழுது மூன்று முறை (Three Drafts) எழுதி பிழை நீக்கி வைத்துக் கொள்ள வேண்டும். முதற்படி (First Draft) எடுப்பது தொடங்கி இரண்டாவது படி (Second Draft) எடுத்தல் முதலிய திறனாய்வுக் கட்டுரை தயாரிக்கும் பணி பற்றிய முழுமையான அறிவு பெற்றிருத்தல் வேண்டும். ஆய்வேட்டில் செம்மையை அறிய உதவும் வினாக்களைக் கேட்டுப் பார்த்து வினாவங்கியை உருவாக்கிக் கொள்ள வேண்டும். பின்பு மூன்றாவது படியை (Third Draft) திட்டமிட்டு பிழையின்றி தெளிவாக எழுதக் கற்றுக் கொள்ள வேண்டும்.

5.திறனாய்வு செய்யும் கட்டுரையாளர் மேற்குறித்த திறனாய்வுக்கட்டுரை கோட்பாடுகளைத் தெளிவாக அறிந்து பின்பற்றுதல் வேண்டுவது அவசியமாகும்.

## பகுப்பு முறைத் திறனாய்வு (Analytical Criticism)

மனித அறிவுகளில் அடிப்படையானது பகுத்தலும் தொகுத்தலும் ஆகிய அறிவு உலகத்துப் பொருள்களை ஒற்றுமை கருதியும், அவற்றிற்கிடையேயுள்ள சிறப்புப் பண்புகள் கொண்டு வேற்றுமை கருதியும். பகுத்தும் தொகுத்தும் பார்ப்பது அறிதலின் பண்பு இலக்கியத் திறனாய்விற்கும். இது மிகவும் வேண்டப்படுகிற பண்பாகும்.பகுப்பு முறைத் திறனாய்வு (Analytical Criticism) என்பது குறிப்பிட்ட. இலக்கியத்தின் பண்புகள் அல்லது கூறுகளை, யாதாயினும் ஓர் அளவுகோல் அல்லது நோக்கம் கொண்டு பகுத்துக் காண்பது ஆகும். ஆனால் இவ்வாறு பகுப்பது என்பது அவற்றின் முழுமை அல்வது தொகுதிக்கு முரணானதாகவோ, சிதைப்பதாகவோ இருக்கக்கூடாது. உண்மையில், முழுமையின் சிறப்பினை அல்லது பண்பினை அதன் கூறுகளையும் உட்கூறுகளையும், கொண்டு ஆராய்வதே பகுப்புமுறைத் திறனாய்வாகும். ஒன்றுபட்டும். வேறுபட்டும் இருக்கிற தன்மைகளைக் கொண்டு பகுத்தாய்வதன் வாயிலாக அந்தக் கூறுகளின் சிறப்புப் புலப்படுகிறது அதே நேரத்தில், அவற்றைத் தன்னகத்துக் கொண்டதும் அவற்றால் ஆனதும் ஆன முழுமையின் சிறப்பும் புலப்படுகின்றது. இத்தகைய பகுப்புமுறை, அடிப்படையான ஒரு வழிமுறையாதலால் எந்தத் திறனாய்வுக்கும் வேண்டப்படுகின்ற ஒரு வழிமுறையேயாகும்.

### கல்வியியல் சார்ந்த ஆராய்ச்சிகளில

திறனாய்வாளர்களில் சி.சு.செல்லப்பாவிடம் இத்தகைய திறனாய்வு காணப்படுகிறது. “மௌனியின் மனக்கோலம்“ என்ற தலைப்பில் “எழுத்து“ வில் (1950-61) வந்த அவருடைய கட்டுரைகள். மௌனி சிறுகதைகளிலுள்ள உத்திகளையும் உணர்வுநிலைகளையும் விவரிக்கின்றன. இவை, சிறு கதைகளின் பண்புகளைப் பகுத்து வேறுபடுத்தி. அவற்றின் பண்புகளையும் சிறப்புக்களையும் ஆராய்கின்றன. இதனை “அலசல் முறைத் திறனாய்வு” என்று

அன்றைய திறனாய்வாளர்கள் அழைத்தனர் மேலும், அவருடைய “தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது“ (1974) எனும் நூல். வ.வே.சு ஐயரின் “குளத்தங்கரை அரசமரம்“ முதற்கொண்டு பல சிறுகதைகளை - எப்படி அவை ஒன்றன்பின் ஒன்றாக - கதைகூறும் பண்புகளில் மாற்றமும் வளர்ச்சியும் பெற்றிருக்கின்றன என்று விவரிக்கின்றது.

1.உருவக் குறை 2,தேர்ந்தகையும் புதுக்கையும் 3,கைவன்மைக் குறைவு 4.நிறையும், குறையும் 5,தனிரகம் என்ற தலைப்புகளில் கதைகளின் பண்புகளைக் கொண்டு பகுத்து ஆராய்ந்துள்ளார் செல்லப்பா..ஆனால், இத்தகைய பகுப்புமுறை, கல்வியியல் சார்ந்த ஆராய்ச்சிகளில் - ஆய்வேடுகளில் - வசதி கருதிப் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது. எடுத்துக்காட்டாக . ஒரு படைப்புதனில்,

1.புனைகதை உத்திகள் 2.பாத்திரப் படைப்பு 3.நோக்குநிலை 4.கதைப்பின்னல் 5.தொடக்கம், முடிவு 6.வருணிப்பு என்ற நிலைகளில் பல பகுப்புகளையும், உட்பகுப்புகளையும் பெற்று வரும்.

ஒரு படைப்பாளியின் புனைகதை உத்திகள் என்றால் பாத்திரப் படைப்பு, நோக்குநிலை, கதைப்பின்னல் ,தொடக்கமும் முடிவும், வருணிப்பு, மொழிநடை என்று மேல் அளவில் பல பகுப்புக்களையும, அவற்றின் உள்ளே. உதாரணமாகப் பாத்திரப்படைப்பு என்பதைப் பொறுத்த அளவில், ஒரு நிலைப்பாத்திரம், மாறுநிலைப்பாத்திரம் தலைமை, துணைமைப் பாத்திரங்கள். உடனிலை எதிர்நிலைப் பாத்திரங்கள், ஆண், பெண் இளையோர் - முதியோர் என்ற வகையில் உட்பகுப்புகளையும் செய்கின்றனர். இது பல சமயங்களில் மிகையாகவும், இயந்திரப் போக்காகவும் அமைகின்றபோது சலிப்பும் விரயமும் உடையதாக ஆகிவிடுகிறது. இருப்பினும் தேவையறிந்து அளவறிந்து பயன்படுத்துகிறபோது, திறனாய்வுக்கு அணிசேர்க்க வல்லது: இந்தப்.பகுப்பு முறைத் திறனாய்வு ஆறறிவுக் கொண்ட மானுட வர்க்கத்தில் தொகுத்தல், பகுத்தல் என்ற அடிப்படை சிந்தனையாக இருந்து வருகிறது. உலகத்தில் உள்ளப் பொருட்களை ஒரேத் தன்மையுடையதாக இருந்தால் அதனை தொகுத்தும், சிறப்புப்பண்புகளைக் கொண்டிருந்தால் அதனை வேற்றுமைப்படுத்தியும், பகுத்துப் பார்ப்பது இலக்கியத் திறனாய்விற்கு வேண்டப்பட்ட ஒன்றாகும்.

மொழிநடை என்ற நிலைகளில் பல பகுப்புகளையும் உட்பகுப்புகளையும் பெற்று வலம்வரும் பகுப்புமுறை திறனாய்வு ஏனைய திறனாய்வுக்கு அணி சேர்ப்பதாக அமைந்துள்ளது.இத்திறனாய்வு முறை நூலின் ஒவ்வொரு பகுதியையும் ஆராய்ந்து நூலின் பகுதிகள் ஒன்றோடொன்று பொருந்தும் வகையினைக் காண்பது. ஓர் இலக்கியத்தைப் படைப்பவன் பொருளுக்கு ஏற்பவும், பொருள் தொடர்ச்சிக்கு ஏற்பவும் தம் படைப்பைப் பாகுப்படுத்தி அமைத்துக் கொள்கிறான், திருக்குறள் பொருளுக்கு ஏற்ப அதிகாரங்களாகப் பாகுப்படுத்தப்பட்டுள்ளது. சிந்தாமணி இலம்பகங்களாகப் பகுக்கப்பட்டு உள்ளது. இத்தகைய அமைப்பினையும் தொடர்பினையும் ஆராய இப்பகுப்புப் முறையைத் திறனாய்வு பயன்படுகிறது.

## இலக்கிய வரலாற்றுப் பகுப்பு

இலக்கிய வரலாற்றுப் பகுப்பு முறைகள் அடிப்படையில் தமிழ் இலக்கிய வரலாற்றைப் பகுத்துரைக்கும் இலக்கிய வரலாற்று நூலாசிரியர்கள் பல நிலைகளில் இலக்கிய வரலாற்றைப் பகுத்து உரைக்கின்றனர். 1. சங்க கால இலக்கியங்கள் 2. சங்கம் மருவிய கால இலக்கியங்கள் 3. பல்வர் கால இலக்கியங்கள் 4. சோழர் கால இலக்கியங்கள் 5. நாயக்கர் கால இலக்கியங்கள் 6. ஐரோப்பியர் கால இலக்கியங்கள் 7. இக்கால இலக்கியங்கள். என்ற பகுப்பு இலக்கியம் தோன்றிய காலப் பின்னனியில் அமைந்த குறிப்பிட்ட கால மன்னராட்சியை அடிப்படையாகக் கொண்டு பகுக்கப் பெற்றது. இப்பகுப்பிற்கு மாறாக 1. சங்க இலக்கியங்கள் 2. அற இலக்கியங்கள் 3. காப்பிய இலக்கியம் 4. பக்தி இலக்கியம் 5. சிற்றிலக்கியம் 6. சமய இலக்கியம் 7. இலக்கிய உரைகள் 8. கவிதையில் நூல்கள் 9. உரைநடை நூல்கள் 10. இக்கால இலக்கியம், என்ற பகுப்பில் அமைந்த இலக்கிய வரலாறும். இது போன்று வேறு சில மாற்றங்களுடன் அமைந்த இலக்கிய வரலாற்று நூல்களும் தமிழில் மிகுதியாக வெளிவந்துள்ளன.

## சமூகவியலில் பகுப்பு முறை

இலக்கியம் தனிமனிதனின் அனுபவ உணர்ச்சி தந்த சிந்தனையினால் தோன்றுகிறது. ஆனால் அம்மனிதனின் மனத்தை இயங்கச் செய்யும் ஆற்றல் சமூகச் சூழ்நிலையிலிருந்தே உருவாகிறது. ஆகவே இலக்கியத்தை அது தோன்றிய சமுதாயச் சூழல், பொருளாதார நிலை, அரசியல் பின்னணி முதலியவற்றின் அடிப்படையில் ஆராய்ந்தால் புதிய செய்திகள் கிடைக்கும். இத்தகைய ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளன் இலக்கியச் சமூகவியலாளன் (டுவைநசயசல ளுழஉழைடழபளைவ) என அழைக்கப்படுகிறான். சமூகக் கூட்டமைப்பினால் தனிமனிதன் தாக்கப்படுவது படிப்படியாகவோ, திடீரெனவோ ஏற்பட்டு சமூக மாற்றம் நிகழ்வது உள்ளிட்ட பல கூறுகளைக் கண்டறிவது சமூகவியல் அணுகுமுறையின் அடிப்படை இயல்பாகும். இதனைப் பின்வருமாறு பிரித்துப்பார்க்கலாம். அவை, 1.இலக்கியத்தை அது தோன்றிய சமூகச் சூழல், அது வெளிப்படுத்தும் சமூகஅமைப்பு, சமூக, உறவு எனப்பகுத்து ஆராய்தல். 2.படைப்பாளியின் சமுதாயச் சூழல், படைப்பை அது எவ்வாறு பாதித்தது எனக் கண்டறிதல். 3.குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலில் குறிப்பிட்ட இலக்கியப் படைப்பு குறிப்பிட்ட சமுதாயப் பிரிவினரால் எவ்வாறு வரவேற்கப்பட்டது என ஆராய்தல். என்பவையாகும். சமூகவியல் அணுகுமுறை என்பது, பொழுது (Moment), இனம் (Race) , சூழல் (Milen), ஆகிய மூன்று கூறுகளின் சேர்க்கை அடிப்படையில் ஆராயப்படும் என பிரெஞ்சு ஆய்வாளர் தாயின் (Taine) குறிப்பிடுகிறார். இலக்கியமானது தோற்றம், பொருள், பயன்பாடு ஆகிய மூன்று நிலைகளிலும் மனிதகுலத் தொடர்புடையதாக விளங்குகின்றது. இது இயல்பாக நிகழ்வதாகும். இலக்கியம், சமுதாயம் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள உறவு, புலனறிவு (Sensory Perception) போன்று மிக இயல்பானவைவ் எளிமையானவை துலாம்பரமானவை. தே பொனால்ட் (De Bonald) எனும் பிரான்சு நாட்டு அறிஞர்

இலக்கியம் என்பது, சமுதாயத்தின் புலப்பாடு (Literature is The Expression of Society) என்கிறார். ஒப்பிலக்கிய அறிஞர் ஹேரி லெவின் (Harry Levin) இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் இடையேயுள்ள உறவுகள் பரஸ்பரமானவை என்றும் இலக்கியம், சமுதாயக் காரணங்களின் விளைவு மட்டுமல்ல சமுதாய விளைவுகளின் காரணம் என்றும் கூறுகின்றார். ரேனி வெல்லக் (Rene Wellek) தன்னுடைய இலக்கியக் கொள்கை எனும் நூலில் இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளை விளக்கிக் கூறியிருக்கிறார். வடிவமைப்பில் அக்கறை கொண்ட டி.எஸ்.எலியட் கூட காலங்களின் மாறுதல்களுக்கு ஏற்ப சமுதாய மதிப்புகள் மாறுகின்றன என சமயமும் இலக்கியமும் என்னும் கட்டுரையில் வாதிடுகின்றார். மார்க்சீய அறிஞர்கள், ஏனையவர்களைவிட இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்குமுள்ள உறவுகளை மிக ஆழமாகவும் விரிவாகவும் பேசுவார்கள். அடிப்படையான பொருளியல் (Material) வாழ்க்கையைச் சமுதாய இருப்பு (Social Being) என்றும் அதன் காரணமாக வெளிப்படுவன மற்றும் தீர்மானிக்கப்படுபவற்றை சமுதாய உணர்வுகள் குறிப்பிடுகின்றன. மார்க்சீயத் திறனாய்வு சமுதாயவியல் திறனாய்வாகப் பல சமயங்களில் பொருள் கொள்ளப்படுவதுமுண்டு. சமுதாயவியல் திறனாய்வு இலக்கியவுலகில் மிகவும் செல்வாக்கு பெற்ற ஒன்றாக விளங்குகின்றது. இவற்றிற்கு சில அடிப்படைகள் உள்ளன, அவை

1.இலக்கியத்தின் உருவாக்கம்

2.அதன் பொருள் அமைவு

3.மக்கள் மத்தியில் அதன் நடமாட்டத்தில் சமுதாயத்திற்கு முக்கியமான இடம் பங்கு என்பனவாகும். இவற்றைக் கருதுகோளாகக் கொண்டு சமுதாயவியல் அணுகுமுறை அமைகின்றது. சமுதாயவியல் திறனாய்வாளன், உண்மைப் பொருள்களை ஆராயவும், அழகியல் நிலையில் அவை இலக்கியத்தின் பாடுபொருள்களாகக் கிடக்கும் வழிமுறைகளை ஆராயவும் கவனம் செலுத்துகிறான். இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள உறவுகளையும் அவற்றைப் புரிந்து கொள்வதற்கான வழிமுறைகளையும் அடிப்படையாகக் கொண்டு, சமுதாயவியல் அணுகுமுறைக்குத் துணை செய்யக்கூடிய அதன் அடிப்படைகளைப் பின்வருமாறு பகுப்புக்கலாம் அவை, 1. சமுதாயப் பின்னணி அல்லது களம் (Social Context / Background) 2. எதிர்கோள் அல்லது ஏற்பு (Social / Readers Response) 3. சமுதாயக் சித்திரிப்பு (Social Content) 4. சமுதாய மதிப்புகள் (Social Values) 5. சமுதாயச் சிக்கல்கள் (Social Problems) 6. சமுதாய மாற்றங்கள் (Social Changes) என்பனவாகும். படைப்புலகின் இக்கோணங்களும் சரி, அவை உணர்த்துகின்ற சமுதாய அமைப்பின் கூறுகளும் சரி, தனித்தனியானவை அல்ல, அவை காரணகாரியத் தொடர்புடையவை. திறனாய்வாளனுக்கு இலக்கியக் கொள்கை பற்றிய அறிவுடன் சமுதாயவியல் பற்றிய அறிவும் தேவைப்படுகிறது. அடிப்படைக் கோட்பாடின்றி எந்தத் திறனாய்வாளனும் சரியான திறனாய்வாளனாக இருக்க முடியாது. பண்பையும் படைப்பாளனையும் குறிப்பிட்ட சமுதாயச் சூழல் உருவாக்கியிருக்கின்றது. எனவே அவ்வக்காலச் சமுதாயச் சூழலின்

பின்புலத்தினைப் புரிந்துகொள்வது சமுதாயவியல் திறனாய்விற்கு அவசியம். ஏனெனில் படைப்பு, படைப்பாளன், சமுதாயம் எனும் இவை, தமக்குள் நெருக்கமுறப் பிணைப்பு கொண்டவை என்று சமுதாயவியல் திறனாய்வு சொல்கிறது. இலக்கிய அரங்கத்துள் இருக்கும் உண்மைகள், அன்றைய சமுதாயத் தளத்தில் வைத்துக் காணுகிறபோதுதான் அம்பலத்துக்கு வருகின்றன. சான்றாக, தேவார இருவராகிய சம்பந்தரும் அப்பரும் பாடிய பாடல்களில் அரசு நிறுவனங்களுக்கு எதிரான ஒருவகையான எதிர்ப்புக்குரல் கேட்கின்றது. இந்த எதிர்ப்புக்குரலைப் புரிந்துகொள்ள வேண்டுமாயின் அவர்கள் காலத்திய சமுதாயப் பின்புலத்தை அறிந்து கொள்வது அவசியமாகி விடுகிறது. குறிப்பிட்ட படைப்பினை வாசகர்கள் எவ்வாறு எதிர் கொள்கிறார்கள் என்பது பல முனைகளில் ஆராய வேண்டிய ஒரு சிரமமான காரியம். இந்தக் காரியத்தில் பிரெஞ்சு இலக்கிய அறிஞர், ஹென்னக்யுன் (E. Hennequin) ருசிய அறிஞர் பொதப்னியா (A. Potebnya) முதலியவர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். கியூ.டி.லீவிஸ் இந்த அடிப்படையில் விரிவாக முயற்சி மேற்கொண்டுள்ளார் ( Fiction and the Reading Public). மேலும் ஒப்பிலக்கியம், ஏற்றல் கொள்கை (Reception Theory) என்பதன் மூலமாக ஒரு நாட்டு இலக்கியம் இன்னொரு நாட்டில் அல்லது இன்னொரு மொழியில் எவ்வாறு ஏற்றுக்கொள்ளப்படுகிறது, அதன் தடயங்களும் தாக்கங்களும் எத்தகையன என்பது பற்றிப் பேசுகிறது. அன்று ஒட்டக்கூத்தரைத்தான் சோழப்பேரரசு பாதுகாத்துப் போற்றியது. கம்பனை அல்ல. அதுபோல நாயக்கர் காலத்துப் பாளையங்கள் கூளப்பன் காதல்களையும் விறலியின் தூதுக்களையும் தான் ஆதரித்தன. சைவ மடங்கள் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையை ஆதரித்தன. ஆனால் இருக்கிற காலங்களில் பாரதியார் போன்று உதாசீனப்படுத்தப்பட்ட சிலர், மறைவுக்குப்பின்பு நீண்ட காலவெளியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளனர். பாரதிக்குக் கிடைத்த ஏற்பு பல கோணங்களைக் கொண்டது. சுவாராசியமானது. இதனைக் கா. சிவத்தம்பி அ. மார்க்ஸ் எழுதிய பாரதி மறைவு முதல் மகாகவி வரை என்னும் நூல் அழகாக விவரிக்கிறது. இலக்கியத்தில் சமுதாயம் (அல்லது சிலவற்றில் தனிமனித வாழ்வு) சித்திரிக்கப்பட்டிருப்பது என்பது, அவ்விலக்கியத்தின் பொதுவான தளமேயாகும். அது, அவ்விலக்கியத்தின் பல்வேறு கூறுகளிலும் பல்வேறு முறைகளிலும் பல்வேறு நிலைகளிலும் வெளிப்படுகிறது. சமுதாயத் தேவை எதிர்கோள் ஆகிய நிலைகளுடன் தொடர்புடைய நான்கு நிலைப்பாடுகள் இருக்கின்றன. அவை,1.சமுதாயத்திலுள்ள பிரச்சினைகளையும் துன்ப துயரங்களையும் எதிர்கொண்டு காட்டவிரும்பாமல், ஒன்றில் மிகையான கற்பனையுடன் புனைந்துரைத்தல் அல்லது பழைய வாழ்க்கையைப் பொன்னுலகமாகக் காட்டி அதனைத் திரும்பக் கொண்டு வர விரும்புதல். 2. வாழ்க்கையையும் அனுபவங்களையும் மற்றும் சுற்றியிருப்பவற்றையும் நுணுக்கமான விவரங்களுடன் இயல்பு நவிற்சியாகச் சித்திரித்தல். 3. சமுதாயத்தையும் வாழ்க்கையனுபவங்களையும் அப்படியே சொல்லுவது மட்டுமின்றி அவற்றை எள்ளுதலும், விமரிசித்தலும் - சொல்கிற செய்திகளுடன் இழையோடுவது. சமுதாய நிலைகளையும் போக்குகளையும் காரண காரிய முறையில் கண்டு, அவற்றில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை இலக்கியப் பொருளாக எடுத்தாளுதல் என்பனவாகும். தமிழிலக்கியத்தில் கிராமப்புறச் சித்திரிப்பு எவ்வாறு அமைந்துள்ளது என்று காண்பது (நகர்ப்புறச் சித்திரிப்பு,

வட்டாரச் சித்திரிப்பு முதலியனவும்தான்) சமுதாயவியல் திறனாய்விற்கு ஒரு சிறந்த தளமாகும். நிலவுடைமையமைப்பு இன்னும் இறுகிக் கிடக்கின்ற இடம், கிராமம் சாதியமைப்பு, வறுமை, சுரண்டல், நிலவுடைமைக்குரிய கௌரவங்கள், காதல்-திருமணம், உறவுகள் கோபதாபங்களுக்கிடையே மனிதநேய உணர்வுகள், முரண்பாடுகள், மாற்றங்கள் முதலியவற்றைக் காண்பதற்கு இத்தளம் இடம் தருகிறது. சமுதாயத்திலுள்ள இனக் குழுக்களையும் அவற்றின் நம்பிக்கைகள், சடங்குகள் முதலியவற்றையும் ஆராய சமுதாய மானுடவியல் (Social/Cultural Anthropolory) நன்குதவும். மானுடவியல் என்பது ஒருவகையில் சமுதாயவியலே. இருப்பினும் தற்காலப் புனைகதையிலக்கியத்திலும் தனித்தனிக் குழுக்களும் அவர்களின் பழமையான சடங்குகளும் மரபுகளும் இடம்பெறுவதால் மானுடவியலின் ஆய்வுமுறைகள் பயனுடையனவாக உள்ளன. பழந்தமிழ் இலக்கியங்களை ஆராய்வதற்கு இவ்வணுகுமுறை பெரிதும் பயன் தருகின்றது. நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியில் நா. வானமாமலை மிகப் பெரும் பங்கு வகிக்கின்றார். இத்தகைய ஆராய்ச்சியில் அவர் மிகப்பெரும் வெற்றி பெற்றுள்ளார். நாட்டுப்புற இலக்கியங்களை அணுகுவதற்கு இத்தகைய அணுகுமுறை சிறந்த வழிகாட்டியாகும். பழக்கவழக்கங்கள் சடங்குகள் முதலியவற்றறையும் இன்றும் நிலவுகின்ற பழைய மரபுகளின் எச்சங்களையும் அவற்றின் உண்மையான பொருளில் விளங்கிக் கொள்வதற்கு வரலாற்றிய உணர்வோடு சமுதாய மானுடவியல் துணை செய்கின்றது. சமுதாயவியல் அணுகுமுறையில் அதிகம் கவனத்தைப் பெறுவது சமுதாய மதிப்பு அல்லது விழுமியம் ஆகும். இது சமுதாய உறவுகளின் பிணைப்பில் தோன்றும் சமுதாய உணர்வு வடிவங்களில் ஒன்று. இதனை மேலும் பின்வருமாறு வரையறை செய்யலாம். சமுதாயம் முழுமைக்கோ அதன் குறிப்பிட்ட ஒரு பிரிவு அல்லது வர்க்கத்திற்கோ உள்ள பொதுவான மனித நடத்தைகளின் நியதிகள் மற்றும் (Rules & Standards) தகவுகளின் தொகுதியே சமுதாய மதிப்புகள் ஆகும். இதனடிப்படையில் இலக்கியங்களில் கலையுருவம் பெற்றுள்ள அவ்வக்காலத்தின் சமுதாய மதிப்புகள் ஆராயத்தக்கன. சமுதாயச் சிக்கல்கள் என்பவை மாறிவரும் அரசியல் பொருளாதார நிலைகளின் காரணமாகச் சமுதாய உறவுகள் மத்தியிலும் மதிப்புகள் மத்தியிலும் காணப்படுபவை. உண்மையில் சமுதாயம் என்பது ஒரே சீரான வளர்நிலையைக் கொண்டதல்ல. அடிப்படையில் சமுதாயம் என்பது அதன் அமைப்பிலேயே சில முரண்பாடுகளைக் கொண்டிருக்கின்றது. இதன் காரணமாக அதில் சிக்கல்கள் தோன்றுகின்றன. இவ்வாறு தோன்றுகின்ற சிக்கல்கள் சில மங்கிப் போகலாம். சில புதிய வடிவங்கள் கொள்ளலாம். சில புதியனவாகத் தோன்றலாம். இது குடியாட்சியும் விஞ்ஞான, தொழில் நுணுக்கமும் மலர்ச்சி பெற்றுள்ள இக்காலத்தில் கவனிக்கத்தக்க ஓர்அம்சமாகும். புண்ணியம், தலித்தியம் ஆகிய கோணங்கள் சமுதாயவியல் திறனாய்வின் புதிய பரிமாணங்கள் ஆகும். சமுதாய மாற்றம் என்பது, இலக்கியத்தைப் பொறுத்த அளவில் படைப்பாளனுடைய சமுதாயவுணர்வினையும் உலகக் கண்ணோட்டத்தினையும் பொறுத்தே அமைகின்றது. பொதுவாகச் சமுதாயம் என்பதே அதன் தன்னிலைகளினாலும் புறவயத்தாக்கங்களினாலும் மாறுதலுக்குரியது. இம்மாற்றம் முன்னோக்கி அமைவது. நல்ல இலக்கியம் என்பது சமுதாய மாற்றத்தை உள்வாங்கியிருக்கும். அவ்வழி நிகழ்கின்ற சமுதாய

மாற்றத்தைக் காரணகாரியங்களுடன் சித்திரிப்பது ஒருவகை, படைப்பின் திறத்தோடு இணையச் சமுதாய மாற்றத்தை முன்மொழிவது இன்னொருவகை. இவையல்லாமல் முன்னோக்கிய மாற்றத்தை எதிர்கொள்ளக் கசந்து வக்கிரமாகக் காட்டுவதும் உண்டு. (சான்று: சுஜாதாவின் சொர்க்கத் தீவு) எவ்வாறாயினும் தனிநிலைக்கவிதைகளில் சமுதாய மாற்றத்திற்கு அறைகூவல் விடுவதை எளிதாக அனுமானிக்க முடியும். சமுதாயத்தின் ஒரு வெளிப்பாடாகிய இலக்கியம், சமுதாயத்தை ஒரு தளத்திலிருந்து சித்திரிப்பதோடு அந்தச் சமுதாயத்தில் செயல்பாட்டுடன் கூடிய ஒரு சக்தியாகவும் விளங்குகிறது. இவ்வாறு சமுதாயவியல் அணுகுமுறை விசாலமான எல்லைப் பரப்புடன் பல சாதனைகளையும் பெற்றுள்ளது. இலக்கியத்தில் கலையுருவாக்கம் பெற்றுள்ள உள்ளடக்கத்தில் அக்கறை காட்டும் இத்திறனாய்வு உண்மையில் ஒரு கலைப்படைப்பின் பாத்திரத்தையும் பங்கினையும் அளவிடுவதோடு படைப்பாளியின் உலகக் கண்ணோட்டத்தினையும் வெளிப்படுத்துகின்றது. எனவே சமுதாயவியல் அணுகுமுறை மிகப் பல திறனாய்வாளர்களால் போற்றப்பட்டும் பின்பற்றப்பட்டும் வருகிறது. பகுப்புமுறை, அடிப்படையான ஒரு வழிமுறையாதலால் எந்தத் திறனாய்வுக்கும் வேண்டப்படுகின்ற ஒரு வழிமுறையாகிறது.கோட்பாட்டாய்வுகள், அணுகுமுறை ஆய்வுகள் என எல்லா ஆய்வுகளிலும் பகுப்பு முறை திறனாய்வை பயன்படுத்தலாம்.

### பயிற்சி வினாக்கள்

1.திறனாய்வாளன் திறனாய்வு செய்யும் முன் கவனிக்க வேண்டியவை எவை எவை விளக்குக

2.திறனாய்வு கட்டுரை எழுதும் முறை குறித்து விளக்குக

3.பகுப்பு முறை திறனாய்வு எடுத்துக்காட்டுடன் விவரிக்க

4.கல்விகள் சார்ந்த ஆராய்ச்சிகளைபகுப்புமுறை திறனாய்வு குறித்து விவரிக்க

5.பகுப்பாய்வு முறை அடிப்படையில் சிசுசெல்லப்பாவின்பங்களிப்பைவிளக்குக

6.இலக்கியவரலாற்றில்பகுப்புமுறை திறனாய்வு விவரிக்க.

7.சமூகவியல் பகுப்பு முறையை எடுத்துக்காட்டுடன் விளக்குக

8.சமுதாயவியல்அணுகுமுறைக்கு துணை செய்யக் கூடிய பகுப்புகள் எவை எவை விவரிக்க.

9.உளவியல் அணுகுமுறையில் செய்யக் கூடிய பகுப்புகள் விவரிக்க.

10.மொழியியல் அணுகுமுறையில் செய்யக் கூடிய பகுப்புகள் விவரிக்க.

11.உருவவியல் அணுகுமுறையையில் செய்யக் கூடிய பகுப்புகள் விவரிக்க.

12.மார்க்சியத் திறனாய்வு அணுகுமுறையையில் செய்யக் கூடிய பகுப்புகள் விவரிக்க.

## பாடநூல்கள்

1.க. பஞ்சாங்கம், 2007. தமிழில் இலக்கியத்திறனய்வு வரலாறு, அகரம் வெளியீடு, தஞ்சாவூர்

2.அரங்க சுப்பையா. 2007 இலக்கியத் திறனாய்வு, இசங்கள், கொள்கைகள், பாவை பப்ளிகேஷன்ஸ், சென்னை.

## பார்வை நூல்கள்

1.தி.சு. நடராசன், 2006 திறனாய்வுக் கலை, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை.

2.எஸ்.ஸ்ரீகுமார். 2012 - தமிழில்திணைக் கோட்பாடு, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை

3.க.பஞ்சாங்கம், 2012 - இலக்கியமும் திறனாய்வுக் கோட்பாடும், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்,

4.சு.பாலச்சந்திரன், 2009 இலக்கியத்திறனாய்வு, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், சென்னை.

5.ஜவஹர், 2012 - திணைக்கோட்பாடும், தமிழ்க்கவிதையியலும், காம்யா வெளியீடு, சென்னை.

6.இ.எஸ்..டி (தொ.ஆ) 1994 - இலக்கியஇசங்கள், அன்னம் வெளியில், தஞ்சாவூர்:

7. அ.ச.ஞானசம்பந்தம்.1979 இலக்கியக் கலை, சைவ சித்தாந்தம், சென்னை

8..தா.ஏ ஞானமூர்த்தி, 1986 இலக்கியத் திறனாய்வியல், சென்னை.

**முனைவர் ப.அலிஸ் ராணி**

**தமிழ்த்துறை,உதவிப்பேராசிரியர்**

**சாராள் தக்கர் கல்லூரி,**

**திருநெல்வேலி-627007**

**∴போன் - 9442492029**